# பள்ளு இலக்கியமும் பாமரர் வாழ்வியலும்

கலாநிதி துரை. மனோகரன்

வெளியீடு :
இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-11-17
LIBRARY.

570250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளு இலக்கியமும் பாமரர் வாழ்வியலும்

கலாநிதி துரை.மனோகரன்
முதுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

*வெளியீடு:*
**இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்,**
**98, வோட் பிளேஸ்,**
**கொழும்பு - 07.**

570250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற் பதிப்புத் தரவுகள்

| | | |
|---|---|---|
| நூல் | : | **பள்ளு இலக்கியமும் பாமரர் வாழ்வியலும்** |
| நூலாசிரியர் | : | கலாநிதி துரை மனோகரன் |
| முதற்பதிப்பு | : | 1999, அக்டோபர் |
| பதிப்புரிமை | : | இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் |
| வெளியீடு | : | இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்<br>98, வோட் பிளேஸ், கொழும்பு - -07 |
| அச்சுப்பதிப்பு | : | கார்த்திகேயன் பிறிண்டஸ் (பிறைவேட்) லிமிடட்,<br>இல. 501/2, காலி வீதி,<br>வெள்ளவத்தை, கொழும்பு - 06. |
| பக்கங்கள் | : | 16 + 338 |
| பிரதிகள் | : | 1000 |
| நூல் அளவு | : | 1/8 |
| விலை | : | ரூ.150/- |
| கடதாசி | : | 80 கிராம் வெள்ளை அச்சடித்தல் கடதாசி |

## Bibliographical Data

| | | |
|---|---|---|
| Title | : | **Pallu Ilakkiyamum Pamarar Valviyalum** |
| Author | : | Dr. Thurai Manoharan |
| First Edition | : | October 1999 |
| Copy right | : | Dept. of Hindu Religious & Cultural Affairs |
| Published by | : | Dept. of Hindu Religious & Cultural Affairs<br>98, Ward Place, Colombo - 07. |
| Printers | : | New Karthikeyan Printers (Pvt) Ltd.,<br>No. 501/2, Galle Road, Colombo - 06. |
| No. of pages | : | 16 + 338 |
| No. of copies | : | 1000 |
| Size | : | 1/8 |
| Paper Used | : | 80 GSM. White printing |
| Price | : | Rs:150/- |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையல்

எனது எழுத்து முயற்சிகளுக்கு
எப்போதும் பின்னணியில் நின்று
ஊக்கமுட்டி உற்சாகமளிக்கும்
துணைவி

**கனகாம்பிகைக்கு**

UNIVERSITY OF PERADENIYA
2004-11-17
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-11-17
LIBRARY.

# வெளியீட்டுரை

பல்வேறு இலக்கிய முயற்சிகளுக்கு முடிந்தளவு ஆதரவு நல்கிவரும் இந்துசமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், அவ்வப்போது பெறுமதிமிக்க அருமையான நூல்களையும் ஆய்வு நூல்களையும் வெளியிட்டு வருகின்றது. சிற்றிலக்கிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அத்தகைய ஆய்வுகள் போதியளவு நூலுருவம் பெறவில்லை. பட்டங்களைப் பெறும் நோக்கோடு சமர்பிக்கப்படும் ஆய்வேடுகளும் ஆய்வாளர்களின் பொருளாதாரம், அருந்தலான சந்தை வாய்ப்புக்கள் காரணமாக அச்சேறாதிருப்பதையும் பரவலாக வாசகர்களைச் சேராதிருப்பதையும் உணர்ந்த திணைக்களம், சிறந்த ஆய்வேடுகளை நூலாக்கி வெளியிட முயன்றபோது பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி துரை மனோகரன் அவர்களது 'பள்ளு இலக்கியமும் பாமரர் வாழ்வியலும்' என்னும் ஆய்வேட்டைப் பார்வையிட்டது.

ஒரு காலகட்டத்தில் குறித்து இனங்காணப்பட்ட மக்களின் சமூக நிலை, பொருளாதார நிலை, தொழில்முறை, குடும்ப உறவுகள், சமூகநோக்குகள் போன்றவை ஓசை நயமிக்க செய்யுள்களாகவும் சுவையான உரையாடல்களாகவும் அமைந்த பள்ளு இலக்கியங்களாகப் படைக்கப்பட்டிருந்தன. பல்வேறு சிறப்பு அம்சங்கள் நிறைந்த பள்ளு இலக்கியங்கள் இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கவையாக விளங்குகின்றன. பெரும்பாலும் அடிமட்ட மக்களைக் கதைமாந்தராகக் கொண்ட பள்ளு இலக்கியத்தின் பாத்திரப் படைப்புகள், அக்கால மக்களின் வாழ்வு முறைகள், அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியவை.

நாட்டார் பாடல்களின் செல்வாக்கு நிறைந்ததாகவும், பரிகாசப்பாடல் இடையிடையேயுள்ளதாகவும் அமையப்பெற்ற பள்ளு இலக்கியங்களைத் தேடிப்பிடிக்க வழிகாட்டியாகவும் எளிய நடையிலமைந்த இனிய பள்ளு இலக்கியங்களின் சிறப்புகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிப்பதாகவும் எழுதப்பெற்ற இந்நூலை யாவருக்கும் பயன்பட வேண்டுமெனும் எண்ணத்துடன் திணைக்களம் வெளியிடுகின்றது.

இந்நூலின் பதிப்புப் பணியில் சிறப்புறப் பணி செய்த திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம், தகவல் உத்தியோகத்தர், திரு.ம.சண்முகநாதன் ஆகியோருக்கு எமது பாராட்டுக்கள் உரியன.

இந்நூலின் பதிப்புப் பணியில் சிறப்புறப் பணிசெய்த திணைகளத்தின் உதவிப் பணிப்பாளர் திரு.எஸ். தெய்வநாயகம் தகவல் உத்தியோகத்தர் திரு.ம. சண்முகநாதன் ஆகியோருக்கு எமது பாராட்டுக்கள் உரியன.

நூலை வெளியிட அனுமதி தந்த கலாநிதி துரை மனோகரன், சிபார்சு செய்த நூல் வெளியீட்டுக் குழுவினர், அச்சிட்ட நியூ கார்த்திகேயன் நிறுவனத்தினர் ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதோடு அறிஞர்கள், வாசகர்களினது அபிப்பிராயங்களையும் வரவேற்கின்றோம்.

**உடுவை எஸ். தில்லைநடராஜா**

பணிப்பாளர்,

இந்துசமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இன்றைய தமிழ் இலக்கிய ஆய்வுப் பரப்பில், சிற்றிலக்கியங்கள் பற்றிய ஆய்வுகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அவை பற்றிப் போதிய ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டும் என்ற ஆர்வம் இலக்கிய ஆய்வாளரிடையே மேலோங்கியுள்ளது. மேலும், சிற்றிலக்கிய ஆய்வுகள் பெருகுவது, தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய முழுமையான பார்வையை இலக்கிய ஆர்வலருக்கு ஏற்படுத்தும். இவ்வாறு, சிற்றிலக்கிய ஆய்வுகள் பற்றிய ஆர்வமும் தேவையும் இத்துறையிற் புதிய முயற்சிகளுக்கு அடிப்படைகளாக அமைகின்றன. இவ்வகையில், பள்ளு இலக்கியம் தொடர்பாகவும் ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும், இன்றைய ஆய்வு நிலையில் மேலும் ஆழமாகப் பள்ளு இலக்கியத்தை நோக்குவது பயனுடையதாகும்.

தமிழ் இலக்கிய ஆய்வுலகில் நிலவிய குறைபாடுகள் காரணமாக, அண்மைக்காலம் வரை பெரும்பாலான தமிழ் இலக்கிய ஆய்வுகள், குறிப்பிட்ட இலக்கியங்களின் சுவையைப் புலப்படுத்துவனவாகவே நடைபெற்றுள்ளன. பள்ளு இலக்கியத்துக்கும் இது பொருந்தும். ஆயினும், அவ்வப்போது – குறிப்பாக அண்மைக்காலத்தில் – சமுதாயப் பார்வையுடன் சில முயற்சிகள் பள்ளு இலக்கியம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, ஜி.குளத்தூரான், கோ.கேசவன், அ.மார்க்ஸ் ஆகியோரின் முயற்சிகள் இவ்வகையிற் குறிப்பிடத்தக்கவை. இந்நூலும் சமுதாயப் பார்வையையே முதன்மையாகக் கொண்டுள்ளது.

தமிழகத்துக்கு அடுத்த நிலையில், தமிழ் இலக்கியத்துக்குப் பெரும் பங்களிப்பினை ஈழம் செய்துவந்துள்ளது. ஈழத்தின் தொடக்கக்கால இலக்கிய வளர்ச்சி தெளிவற்றதாக இருப்பினும், கி.பி. பதினான்காம் நூற்றாண்டு முதலாக ஈழத்திலே தொடர்ச்சியான வகையிலே தமிழ் இலக்கியம் வளர்ச்சிபெற்று வந்துள்ளது. குறிப்பாக, சிற்றிலக்கிய வளர்ச்சிக்கு இயன்றளவில் பங்களிப்பினை ஈழம் வழங்கியுள்ளது. இவ்வகையில், ஈழத்திலும் வளர்ச்சி பெற்ற ஒரு சிற்றிலக்கியமாகப் பள்ளு இலக்கியம் விளங்குகின்றது. இந்நூலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்தவரையில், தமிழகப் பள்ளு நூல்களுடன், ஈழத்துப் பள்ளு நூல்களையும் இணைத்து நோக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சமூகத்தின் அடிமட்டத்தினரைச் சித்திரிக்கும் பொதுமக்கள் இலக்கியங்களாகப் பள்ளு, குறவஞ்சி, நொண்டிநாடகம் ஆகியவை விளங்குகின்றன. இவற்றுட் பள்ளு இலக்கியம் தனிச்சிறப்பு வாய்ந்தது. பிற சிற்றிலக்கியங்களைப் போன்றே இவ்விலக்கியமும் பாட்டுடைத்தலைவரைச் சிறப்பிப்பதையே நோக்கமாகக் கொண்டிருப்பினும், முதன்முதலாகத் தமிழ் இலக்கியத்திலே வேளாண்மைத் தொழிலாளரான பள்ளர் என்னும் சமூகத்தை அது அறிமுகப் படுத்தியமை, அதன் தனித்துவத்தை இனங்காட்டுவதாக உள்ளது. இச்சமூகத்தினர் தமிழகத்திலும் ஈழத்திலும் வாழ்ந்துவருகின்றனர். பள்ளு இலக்கியம் அறிமுகப்படுத்திய அச்சமூகத்தைச் சார்ந்த பாத்திரங்களின் வாயிலாக, இடைக் காலத்தில் வாழ்ந்த அம்மக்களின் சமூகநிலை, பொருளாதார நிலை, தொழில் முறைகள், குடும்ப உறவுகள், சமய நோக்குகள், நம்பிக்கையுணர்வுகள் முதலானவை பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது. இவை, சமுதாயத்தோடு இலக்கியத்தைப் பொருத்திப்பார்ப்பதற்கு வழிவகுக்கும் என்ற எதிர்பார்ப்பே இந்நூலின் அடிப்படையாகும். வேளாண்மைத் தொழிலாளரான பள்ளர் சமூகத்தின் வாழ்வியல் தொடர்பான விடயங்கள் இவ்விலக்கியத்திற் பிரதிபலிக்கப்படுமாற்றினை எடுத்துக்காட்டுவதாக இந்நூல் அமைந்துள்ளது. பள்ளு இலக்கியத்தில் இடம் பெறும் அச்சமூகத்தின் வாழ்வியல் தொடர்பாக, ஆழமான முயற்சிகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையாதலால் (கோ.கேசவனும் பள்ளு இலக்கியத்தின் தோற்றம் தொடர்பான புறக்காரணங்களை ஆராய்வதிலேயே அதிக கவனம் செலுத்தியிருந்தார்), இந்நூல் அதனை இயன்றவரை நிறைவு செய்வதாக அமைகின்றது.

மேலும், இம்முயற்சி பள்ளு இலக்கியத்தின் உள்ளார்ந்த இயல்புகளைக் கண்டுகொள்வதற்குப் பெரிதும் துணையாக அமைந்துள்ளது எனலாம். இலக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு சமூக ஆய்வு நடத்தவியலும் என்பதற்குப் பள்ளு இலக்கியம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. ரெனிவெல்லாக், ஒஸ்ரின் வாரன் ஆகியோர் கூறுவதைப் போன்று, "இலக்கியத்தைச் சமுதாயச் சான்று நூலாகப் பயன்படுத்தும்போது, அது சமுதாய வரலாற்றிற்குரிய புற அமைப்பை அளிக்க இயலும்" என்பதைப் பள்ளு இலக்கியம் உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளு இலக்கியத்தைப் பொறுத்தவரையில், 69 நூல்களைப் பற்றிய செய்திகள் தெரியவருகின்றன (அவை பற்றிப் பின்னிணைப்பிற் குறிப்பிடப்பட்டுள்ளது). ஆயினும், அவற்றுட் சிலவே கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றுள்ளும், பெரும்பாலான பள்ளு நூல்கள் ஒரேவகை அமைப்பினைக் கொண்டிருப்பதனால், ஆய்வின் ஆழம் கருதி, அவற்றிற் பன்னிரண்டு முக்கிய நூல்கள் மட்டுமே ஆதார நூல்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பாட பேதங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக நூல் வடிவிற் பிரசுரமானவற்றிலிருந்தே இவ்வாறு ஆதார நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. முக்கூடற்பள்ளு, திருவாரூர்ப்பள்ளு, குருகூர்ப்பள்ளு, திருமலைமுருகன் பள்ளு, கண்ணுடையம்மன் பள்ளு, செண்பகராமன் பள்ளு, பொய்கைப் பள்ளு. செங்கோட்டுப்பள்ளு, கதிரைமலைப்பள்ளு, ஞானப்பள்ளு, பறாளைவிநாயகர் பள்ளு, தண்டிகைக்கனகராயன்பள்ளு ஆகியவை ஆதார நூல்களாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

இவற்றில், முதல் எட்டு நூல்களும் தமிழகத்துப் பள்ளு நூல்களாகவும் இறுதி நான்கும் ஈழத்துப் பள்ளு நூல்களாகவும் விளங்குகின்றன. சமய அடிப்படையில் நோக்குமிடத்து, முக்கூடற்பள்ளும் குருகூர்ப்பள்ளும் வைணவச் சார்பானவையாகவும், ஞானப்பள்ளும் செண்பகராமன் பள்ளும் கிறித்துவ சமயச் சார்பானவையாகவும் மற்றவை சைவச் சார்பானவையாகவும் காணப்படுகின்றன (இஸ்லாமியச் சார்புடையதாகத் திருமக்காப்பள்ளு என்னும் நூல் விளங்குகிறது). பாட்டுடைத்தலைவர்களின் அடிப்படையில் நோக்குமிடத்து, முக்கூடற்பள்ளு திருமாலையும், திருவாரூர்ப்பள்ளும் செங்கோட்டுப்பள்ளும் சிவனையும், திருமலைமுருகன் பள்ளும் கதிரைமலைப்பள்ளும் முருகனையும், பறாளை விநாயகர் பள்ளு விநாயகரையும், கண்ணுடையம்மன் பள்ளு அம்மனையும், குருகூர்ப்பள்ளும் ஞானப்பள்ளும் சமயத் தலைவர்களையும், பொய்கைப் பள்ளும் செண்பகராமன் பள்ளும் தண்டிகைக்கனகராயன் பள்ளும் நிலப்பிரபுக்களையும் பாட்டுடைத்தலைவர்களாகக் கொண்டுள்ளன.

பள்ளு நூல்கள் பள்ளர் சமூகத் தலைவனைக் குறிப்பிடுமிடத்து, குடும்பன் என்ற பெயரைச் சூட்டினும், பெரும்பாலான இடங்களிற் பள்ளன் என்றே கூறுவதனால், இந்நூலிலும் அப்பெயரே எடுத்தாளப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பள்ளு நூல்களின் பெயர்கள் இறுதியிற் பள்ளு என அமையாமல், பள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளன. கண்ணுடையம்மன் பள், மாந்தைப் பள் என்பவை இத்தகையவை (சில பள்ளு நூல்களின் பெயர்கள் வித்தியாசமாகவும் அமைந்துள்ளன. ஏழுநகரத்தார் பேரிற் பள்ளு நாடகம், வடகரைத்துரையவர்கள் பேரில் பட்பிரபந்தம் ஆகியவை அத்தகையவை). ஆயினும், பள்ளு என்ற வழக்கு வேரூன்றிவிட்டமையால், வசதி கருதி, பள்ளு என்றே இந்நூலிற் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், உசாத்துணை நூற்பட்டியலிலும், பின்னிணைப்பிலும் நூல்களிற் பிரசுரிக்கப்பட்டுள்ளவாறே அவற்றின் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

இந்நூல், எனது கலாநிதிப் பட்ட ஆய்வேட்டை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. நூலின் அமைப்புக் கருதி, சிற்சில மாற்றங்களை இதிற் செய்துள்ளேன். இந்நூலின் பின்னிணைப்பில் இடம்பெற்றது போன்ற பள்ளு நூல்கள் பற்றிய பட்டியலொன்றை, நான் பதிப்புரை எழுதி, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 1996 இல் வெளியிடப்பட்ட கதிரைமலைப்பள்ளு புதிய பதிப்பிலும் கொடுத்துள்ளேன். ஆயினும், மேலதிகமாகத் தெரியவந்த ஒரு பள்ளு நூலின் பெயரை இந்நூலின் பின்னிணைப்பிற் சேர்த் துள்ளேன். அத்தோடு, தெளிவான ஆண்டு விபரங்கள் கிடைக்கப்பெற்ற பள்ளு நூல்கள் சிலவற்றுக்கு, அத்தகைய ஆண்டு விபரங்களையும் இந்நூலின் பின்னிணைப்பிற் சேர்த்துள்ளேன்.

கதிரைமலைப்பள்ளு புதிய பதிப்பிலே, எனது பதிப்புரையில் இடம்பெற்ற சில விடயங்களைத் தேவை நோக்கியும் வாசகரின் தெளிவு நோக்கியும் இந்நூலின் முதலாம், இரண்டாம் இயல்களிற் சில இடங்களிற் பயன்படுத்தியுள்ளேன்.

இந்நூல் முதல்நிலையில் கலாநிதிப் பட்ட ஆய்வேடாக எழுதப்பட்டபோது, அதனைப் பார்வையிட்டு நெறிப்படுத்தி, போதிய ஆலோசனைகளும் வழங்கிய பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.தில்லைநாதன் அவர்கட்கு நான் மிகுந்த நன்றிக்கடன் பட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், ஆய்வுநிலையில் பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய காலஞ்சென்ற பேராசிரியர் ஆ.சதாசிவம், பேராசிரியர்கள் பொபூலோகசிங்கம், ஆ.வேலுப்பிள்ளை, சி.பத்மநாதன், அ.சிவராஜா, கலாநிதி வ.கணபதிப்பிள்ளை ஆகியோருக்கும் எனது நன்றியுரித்தாகுக. இவர்களோடு, அவசியமானபோ தெல்லாம் ஆலோசனைகள் வழங்கி, ஆய்வு முயற்சி செம்மையுறப் பலவகை யிலும் உதவிய பேராசிரியர் க.அருணாசலம் அவர்களும் எனது பெரு நன்றிக்கு உரியவர்.

இந்நூலுக்கு முன்னோடியாக அமைந்த ஆய்வு தொடர்பாகத் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்து ஆய்வாளராக அமர்ந்து பணிசெய்ய வாய்ப்பு நல்கிய, அதன் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வி.ஐ.சுப்பிரமணியம் அவர்கட்கும் எனது நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். நான் அங்கு ஆய்வு மேற்கொண்டபோது, தமது ஆலோசனைகளை மனமுவந்து நல்கிய அப்பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பேராசிரியர்கள் இரா.சாரங்கபாணி, எஸ்.தேக்கமலை, இராம.சுந்தரம், ஆய்வாளர்களான கலாநிதிகள் ஜி.குளத்தூரான், ஆறு.இராமநாதன், து.சீனிச்சாமி, புலவர் செ.இராசு முதலானோருக்கும் எனது நன்றி உரியதாகும்.

இந்நூலுக்கு வேண்டிய தகவல்களைத் திரட்டுவதற்கு உதவிய பேராதனைப் பல்கலைக்கழக நூலகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம், தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகம், சென்னைப் பல்கலைக்கழக நூலகம், சென்னை மறைமலையடிகள் நூலகம், சென்னை உ.வே.சாமிநாதையர் நூலகம், சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், அண்ணாமலைப் பல்கலைக்கழக நூலகம், மதுரை காமராசர் பல்கலைக்கழக நூலகம் ஆகியவற்றின் நூலகர்களுக்கும் ஊழியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதற்கு இது பொருத்தமான சந்தர்ப்பம் எனக் கருதுகின்றேன்.

மேலும், தேவையானபோது நூல்களைக் கொடுத்துதவிய பேராசிரியர் க.அருணாசலம், கலாநிதிகள் திருமதி ம.தியாகராஜா, பா.சிவகடாட்சம், ஜி.குளத்தூரான், புலவர் செ.இராசு ஆகியோருக்கும் எனது நன்றி உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை வெளியிடுமாறு கூறி, ஊக்கப்படுத்திய பேராசிரியர்கள் சி.பத்மநாதன், கா.சிவத்தம்பி ஆகியோருக்கு எனது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோன்று, இந்நூல் வெளிவரவேண்டுமென்ற தமது விருப்பத்தை வெளியிட்ட நண்பர் பூ.சோதிநாதனுக்கும் (பேராதனைப் பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரையாளர்) எனது நன்றிகள் உரியன.

இந்நூலுக்குப் பதிப்புரை அளித்த எஸ்.தில்லைநடராஜா அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலைத் தமது திணைக்களத்தின் சார்பில் வெளியிட முன்வந்த இந்துக் கலாசாரத் திணைக்களத்தைச் சார்ந்த பணிப்பாளர் எஸ்.தில்லைநடராஜா, பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) எஸ்.தெய்வநாயகம் ஆகியோருக்கும், மற்றும் அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

வழக்கம்போல் இந்நூலையும் நான் எழுதுவதற்கு, என் பின்னால் நின்று ஊக்கி உதவிய துணைவி கனகாம்பிகைக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலினை முதல்நிலையில் தெளிவுறக் கணனியில் அச்சமைப்புச் செய்து உதவிய செல்வி ந. கமலினிக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த கார்த்திகேயன் அச்சகத்தாருக்கும் எனது நன்றிகள் உரியன.

இறுதியாக, இந்நூலின் வாசகர்களாக விளங்கப்போகின்ற அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள்.

**துரை மனோகரன்**

தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை,
இலங்கை.
12.7.1999.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுருக்க விளக்கக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| அடி.நல்.உரை | – | அடியார்க்கு நல்லார் உரை |
| க.அ.ப. | – | கண்ணுடையம்மன் பள்ளு |
| க.ம.ப. | – | கதிரைமலைப்பள்ளு |
| கு.ப. | – | குருகூர்ப்பள்ளு |
| சிலப். | – | சிலப்பதிகாரம் |
| செ.கோ.ப. | – | செங்கோட்டுப்பள்ளு |
| செ.ரா.ப. | – | செண்பகராமன் பள்ளு |
| ஞா.ப. | – | ஞானப்பள்ளு |
| த.க.ப. | – | தண்டிகைக்கனகராயன் பள்ளு |
| தி.ப. | – | திருவாரூர்ப்பள்ளு |
| தி.மு.ப. | – | திருமலை முருகன் பள்ளு |
| தொல். | – | தொல்காப்பியம் |
| பரி. | – | பரிபாடல் |
| ப.வி.ப. | – | பறாளை விநாயகர் பள்ளு |
| புறம். | – | புறநானூறு |
| பு.வெ.மா. | – | புறப்பொருள் வெண்பாமாலை |
| பொ.ப. | – | பொய்கைப்பள்ளு |
| மு.கூ.ப. | – | முக்கூடற்பள்ளு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை

**வெளியீட்டுரை** v

முன்னுரை vi

சுருக்கவிளக்கக் குறிப்புகள் xi

**முதலாம் இயல்:** 1

***தோற்றுவாய்***

(அ) பள்ளு இலக்கியத்தின் தோற்றம்

(ஆ) பழந்தமிழ் நூல்களும் பள்ளு இலக்கியமும்

(இ) பள்ளு இலக்கியமும் பிறதுறைத் தொடர்புகளும்

(ஈ) பள்ளு இலக்கியத்தின் வளர்ச்சியும் தேக்கமும்

**இரண்டாம் இயல்:** 54

***பள்ளு இலக்கியத்தின் அமைப்பு***

(அ) பள்ளு–அமைப்புக் கூறுகள்

(ஆ) பள்ளு இலக்கியமும் பாட்டுடைத் தலைவர்களும்

(இ) பள்ளு இலக்கியத்திற் பாத்திர அமைப்பு

(ஈ) பள்ளு இலக்கியமும் சில தனித்துவக் கூறுகளும்

(உ) பள்ளு இலக்கியமும் புலப்பாட்டுத் திறனும்

(ஊ) ஈழத்துப் பள்ளு நூல்களும் இலக்கியப்போக்குகளும்

(எ) தமிழக–ஈழத்துப் பள்ளு நூல்கள்: பொது ஒப்பீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூன்றாம் இயல்:** **88**

***பள்ளரின் சமூகநிலையும் பள்ளு இலக்கியத்தில் அதன் புலப்பாடும்***

(அ) சாதியும் கிராமிய அமைப்பும்

(ஆ) பள்ளர்–பெயர்க்காரணமும் பிரிவுகளும்

(இ) பள்ளரின் தோற்றம் பற்றிய கருத்துகள்

(ஈ) பள்ளரின் சமூகத்தரம்

(உ) ஈழத்திற் பள்ளர் சமூகம்

(ஊ) பள்ளரின் குடியிருப்புகள்

(எ) பள்ளரின் அடிமைநிலை

(ஏ) உணவுப் பழக்கங்கள்

(ஐ) பள்ளரும் வேளாண்மைத்தொழிலும்

(ஒ) பள்ளரின் கூட்டுணர்வு

(ஓ) பள்ளர் சமூகமும் பாத்திர வருணிப்பும்

(ஔ) பள்ளர் சமூகம்மீதான அனுதாப உணர்வு

**நான்காம் இயல்:** **143**

***பண்ணைக்காரர்-பள்ளர் உறவுகள்***

(அ) பண்ணைக்காரரின் பாத்திரச் சித்திரிப்பு

(ஆ) பண்ணைக்காரரின் கடமைகளும் அதிகாரங்களும்

(இ) பண்ணைக்காரர் மனப்பாங்கும் பண்ணை அடிமைகளின் சார்புநிலையும்

(ஈ) பண்ணைக்காரரின் முறைகேடுகள்

(உ) பண்ணையடிமைகளின் எதிர்ப்புணர்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐந்தாம் இயல்:** 181

***பள்ளு இலக்கியத்திற் பள்ளரின் குடும்ப உறவுகள்***

(அ) பள்ளு இலக்கியம் காட்டும் குடும்ப அமைப்பு

(ஆ) குடும்ப உறுப்பினரின் நிலைப்பாடுகள்

(இ) சக்களத்திப் போராட்டம்

(ஈ) சக்களத்திப் போராட்டத்திற் கணவனின் நிலைப்பாடு

(உ) சக்களத்திப் போரராட்டம்–படிமுறை வளர்ச்சி

(ஊ) சக்களத்திப் போரராட்டம் இடம்பெற்றமைக்கான காரணங்கள்

**ஆறாம் இயல்:** 241

***பள்ளு இலக்கியத்திற் சமய வழிபாடுகளும் சமூக நம்பிக்கைகளும்***

(அ) பள்ளு இலக்கியமும் சமயச்சார்பும்

(ஆ) பள்ளு நூல்கள் காட்டும் பெருந்தெய்வ–சிறுதெய்வ வழிபாடுகள்

(இ) பள்ளு நூல்கள் காட்டும் சமூக நம்பிக்கைகள்

(ஈ) வேளாண்மையும் நம்பிக்கையுணர்வும்

(உ) குடும்பம் தொடர்பான நம்பிக்கைகள்

(ஊ) தனிமனிதர் தொடர்பான நம்பிக்கைகள்

***உசாத்துணை நூற்பட்டியல்*** *307*

***பின்னிணைப்பு*** *335*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-11-17
LIBRARY.

# முதலாம் இயல்

# தோற்றுவாய்

## (அ) பள்ளு இலக்கியத்தின் தோற்றம்

இலக்கியம் காலச் சூழலுக்கேற்பவே தோன்றுவது என்பது, இலக்கிய வரலாறு உணர்த்தும் செய்தியாகும். தனக்குப் பொருத்தமுற அமையக்கூடிய காலகட்டத்திற் குறிப்பிட்டவோர் இலக்கியம் தோன்றி வளர்ச்சி பெறுவதைத் தடுப்பதற்கு இயலாது. இவ்வகையில், "காலத்திற்கேற்றவகைகள் அவ்வக் காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும்" என மகாகவி பாரதி கூறியிருப்பது இவ்விடத்து நினைவுகூரத்தக்கது. தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கும் இதற்கு விதிவிலக்காக அமையவில்லை. ஒவ்வொரு காலகட்டமும் தனக்கெனத் தனிப்பண்புகள் கொண்டதாகி, வெவ்வேறுபட்ட இலக்கியங்களின் தோற்றத்துக்கு வழியமைத்து உள்ளது. முடிமன்னராட்சி தோற்றம்பெறத் தொடங்கிய காலத்திற் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் பாடப்பட்டன. அக்காலகட்டம் மாற்றம் பெற்று, சமண, பௌத்த சமயங்கள் எழுச்சி பெற்ற காலத்தில் அறநெறி நூல்கள் தழைத்தன. வைதீக சமயங்களின் எழுச்சியின் பயனாக ஏற்பட்ட பக்தியியக்கத்தின் விளைவாகப் பக்திப் பாசுரங்கள் பல்கிப் பெருகின. சோழப் பெருமன்னரின் பேரரசு ஓங்கிய காலத்தில், பேரரசின் போக்கினைப் பிரதிபலிக்கும் வகையிற் பேரிலக்கியங்களாகக் காவியங்கள் இயற்றப்பட்டன. தமிழகம் பண்டைப் பெருமையை இழந்து, தமிழர் அல்லாதாரின் கைகளிற் சிக்கி அவதியுற்றபோது, சமயவழிப்பட்ட பல்வேறு சிற்றிலக்கியங்கள் பெருக்கமுற்றன. ஐரோப்பியரின் வருகையையும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட நாட்டு விடுதலையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டிப் புதுவகை உரைநடை இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. கவிதையும் புதிய வழியிற் செல்ல ஆரம்பித்தது.

பெருவலி பெற்றிருந்த சோழப் பேரரசு கி.பி. 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து தன் பெருமை குறைந்து நலிவடையத் தொடங்கியது. சோழப் பேரரசன் 3ஆம் குலோத்துங்களின் ஆட்சிக் காலத்திலே (கி.பி. 1178 1218) சோழப் பேரரசுக்கு ஏற்படத் தொடங்கிய நலிவு, 3ஆம் இராசேந்திரன் (கி.பி. 1246–1279) காலத்தில் அப்பேரரசு வீழ்ச்சியுறுவதற்கு வழிகோலியது. சோழப்பெருமன்னரின் வீழ்ச்சியுடன், அவர்களின் பரம்பரையே தமிழ்நாட்டில் இருந்து தலைமறைவாகி விடுவதனைக் காணலாம். 3ஆம் குலோத்துங்கன் ஆட்சியினை அடுத்து, அதுவரை சோழப் பேரரசுக்கு அடங்கியிருந்த பாண் டியர்கள் தலையெடுக்கத் தொடங்கினர். தென்னிந்தியாவின் பல பகுதிகளையும் வென்றடக்கி, இரண்டாவது முறையாகத் தமது பேரரசு ஒன்றினை அவர்கள் நிறுவினர். ஆயினும், 1ஆம் மாறவர்மன் குலசேகரபாண்டியனின் (கி.பி. 1268 1308) மறைவோடு இரண்டாம் பாண்டியப் பேரரசு நிலைகுலைந்தது. ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலம் சிறப்புற்று விளங்கிய இரண்டாம் பாண்டியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர், சிறிது காலம் தமிழகத்தில் முஸ்லிம்களின் ஆட்சி நிலவியது. முஸ்லிம்களின் படையெடுப்புகள் தமிழகத்தில் பாண்டியர் ஆட்சியை அழித்தமை மாத்திரமன்றி, அந்நாட்டின் சமயம், பண்பாடு, மற்றும் உள்ளூர் நிறுவனங்களையும் சீர்குலைத்தன. அரண்மனைகளிலும் கோயில்களிலும் கொள்ளைகள் நிகழ்ந்தன.[1] இத்தகைய படையெடுப்புக்களால் ஏற்பட்ட சீரழிவுகள், இந்து சமயத்தைப் பாதுகாக்கவேண்டுமென்ற ஆர்வம் இயல்பாகவே மக்களிடம் ஏற்படக் காரணமாக அமைந்தன. தமிழ்நாட்டில் மட்டுமன்றி, தென்னிந்தியாவின் பல இடங்களிலும் நிலைமை இவ்வாறாக விளங்கியது. இத்தகைய நிகழ்வுகளின் விளைவாக, பொதுவாகத் தென்னிந்தியா முழுவதிலும் இந்துக் கோயில்களும் இந்துப் பண்பாடும் சீர்குலைந்த நிலையிற் காணப்பட்டன. இத்தகைய சீர்குலைவு நிலையை மாற்றியமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒருவகையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய முயற்சிகள் இந்துப் பண்பாட்டினைப் பாதுகாக்க அவாவுற்ற இயக்கம் போன்றே அமைந்தன எனலாம். இத்தகைய இயக்க முறையிலான செயற்பாடுகளுக்குத் தென்னிந்திய மன்னரும், மக்களும், வீர சைவ சமயத்தின் ஆதரவாளரும் பேராதரவினை நல்கினர். இதன் விளைவாக ஹரிகரன், புக்கன் ஆகிய இரு சகோதரர்கள் துங்கபத்திரை ஆற்றங்கரையினை அடுத்த நாடுகளைக் கைப்பற்றி, விஜயநகரம் என்னும் இடத்தினைத் தலைநகராகக் கொண்டு, கி.பி.1336இல் விஜயநகரப் பேரரசுக்கு வித்திட்டனர். காலப்போக்கிலே இவர்கள் தொடக்கிவைத்த அரசு வளர்ச்சி பெற்று, பலம் மிக்க தென்னிந்தியப் பேரரசாக விரிவாக்கம் பெற்றது.[2] ஹரிகரன் (கி.பி. 1336–1357) விஜயநகரத்தை ஆட்சி செய்த முதல் மன்னனாகவும், புக்கன் (கி.பி. 1357–1377) விஜயநகரப் பேரரசினை, தென்னிந்தியாவின் பெரும்பகுதியை உள்ளடக்கி ஆட்சி செய்த பேரரசனாகவும் விளங்கினர். புக்கனின் ஆட்சியின்போதே அவனது மகனும், அப்பேரரசின் இளவரசனுமான குமாரகம்பணனால் மதுரைச் சுல்தானியரின் ஆட்சி அகற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் விஜயநகரப் பேரரசின் மேலாண்மைக்கு உட்பட்டது. அத்தோடு, குமாரகம்பணன் விஜய நகரப் பேரரசின் பிரதிநிதியாகத் தமிழகத்தினை ஆட்சி செய்தான்.

விஜயநகரப் பேரரசர்களிற் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்த கிருஷ்ணதேவராயனின் (கி.பி.1509–1529) ஆட்சியின்போது, விஜயநகரப் பேரரசு மிக உன்னத நிலையை அடைந்தது. இப்பேரரசின் ஆட்சியில் விசுவநாதநாயக்கன் (கி.பி.1529–1564) என்பவன் பேரரசின் பிரதிநிதியாகப் பாண்டிய நாட்டில் நியமிக்கப் பட்டான். அக்காலகட்டத்தில், அந்நாட்டில் அடிக்கடி இடம் பெற்றுவந்த குழப்பங்களும், கொந்தளிப்பான நிலையும் அகற்றப்பட்டு, அமைதி பேணப் பட்டது. விஜயநகரப் பேரரசனான கிருஷ்ணதேவராயனின் காலத்துக்குப் பின், மதுரை, தஞ்சை, செஞ்சி ஆகிய இடங்களில் நாயக்க அரசுகள் நிறுவப்பட்டன.

கி.பி.1565இல் தக்கணத்து முஸ்லிம் அரசுகளுக்கும், விஜயநகரப் பேரரசுக்கும் இடையில் நிகழ்ந்த போரில், இப்பேரரசு வலுவிழந்தது. அக்காலகட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்திலிருந்து, மதுரை நாயக்க அரசு, எஞ்சியிருந்த விஜயநகர மேலாண்மையை எதிர்ப்பதிலும், தஞ்சை நாயக்க அரசு அதனை ஆதரிப்பதிலும் ஈடுபாடு காட்டின.

மதுரை நாயக்க மன்னரின் ஆட்சி, மீனாட்சி அரசியின் (கி.பி.1732 1736) ஆட்சியுடன் முடிவுற்றது. தமிழகத்தில் நாயக்கராட்சி சீர்குலைந்தமையை அடுத்து, தஞ்சையில் மராட்டியரின் ஆட்சி கி.பி.1676இல் தோன்றியது.

கி.பி.17ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஔரங்கசீப்பின் படைத்தலைவனான சுல்பிர்கான் செஞ்சிக்கோட்டையைக் கைப்பற்றியதிலிருந்து, தமிழ்நாட்டினது வரலாற்றின் போக்கு திசை மாறியது. அதனைத் தொடர்ந்து, ஆர்க்காட்டு நவாபுகளின் ஆட்சியும், அவர்களையடுத்து, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனியாரின் மேலாண்மையும் தமிழகத்தில் ஏற்பட்டன.

இதுவரை நோக்கியவற்றினின்றும், சோழராட்சியின் மறைவுக்குப் பின்னர், தமிழகத்தில் ஏற்பட்டிருந்த குழப்பமான அரசியல் நிலை தெளிவாகின்றது. மதுரை நாயக்கரின் ஆட்சி சமயத்துறை சார்ந்த பண்பாட்டுக் கூறுகளைப் பேணி, ஓரளவாயினும் நல்லாட்சிக்கு வித்திட்டது என்பது உண்மையே. ஆயினும், இரண்டாம் பாண்டியப் பேரரசின் பின்னர், தமிழகத்தில் வலிமையான அரசு ஏற்படக் கூடிய வாய்ப்பு நிகழவில்லை. குழப்பங்களும், உட்பூசல்களும் மிகுந்து காணப்பட்டன. கி.பி. 17ஆம் நூற்றாண்டினைத் தமிழகத்தின் போர்க் காலம் என்று கூறத்தக்க அளவுக்குத் தொடர்ச்சியான போர்கள் நடைபெற்றன. இத்தகைய போர்கள் தமிழக மக்களின் வாழ்நிலையைப் பாதித்தன. மேலும், படையெடுப்பாளராலும் ஆட்சியாளராலும் கோயில்கள் கொள்ளையடிக்கப்பட்டதோடு, கொடும் பஞ்சங்களும், குழப்பங்களும் அந்நூற்றாண்டிற் பெரிதும் இடம்பெற்றன. வெளி நாடுகளினின்றும் அக்காலத்திலே தமிழகத்துக்கு வருகை புரிந்தோர் எழுதிய கடிதங்கள், தமிழகத்தின் இந்நிலையைத் தெளிவாக உணர்த்துகின்றன.[3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அரசியல் நிலையில் உறுதிப்பாடு இன்றித் தமிழகத்திலே அமைதியற்ற நிலை அவ்வப்போது காணப்பட்டது. பொருளாதார நிலை சிறப்பற்றுக் காணப்பட்டமையால், நாட்டிற் பஞ்சமும், வறுமையும் தலைதூக்கின. அக்கொடும் துன்பங்களை மக்கள் அனுபவிக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

கி.பி. 16 முதல் 18ஆம் நூற்றாண்டு வரை கொடும் பஞ்சங்கள் ஏற்பட்டு, பெருந்தொகை மக்களைப் பலிகொண்டும், ஏராளமான மக்களை வருத்தியும் தமிழ்நாட்டைச் சீர்குலைத்தன. மக்கள் தம் இருப்பிடங்களை விட்டுக் குடிபெயரத் தொடங்கினர். உணவுக்காகத் தம்மையோ, குழந்தை களையோ விற்கவும் அவர்கள் தயங்கவில்லை. அதேவேளை, ஆட்சியாளரும் அதிகாரிகளும் வேளாண்மை உழைப்பாளர்களை வருத்தித் தமது வசதிகளைப் பாதுகாத்துக்கொண்டனர்.

அதேவேளையில், இந்து சமயத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு பொதுவாகவே அக்காலகட்டத்திற் சகல மட்டங்களிலும் காணப்பட்டது. இத்தகைய உணர்வினைப் பிரதிபலிக்கும் முறையில் அமைந்த விஜயநகரப் பேரரசின் மேலாண்மை நிலவிய காலத்திலும், நாயக்க மன்னரின் ஆட்சியின் போதும் தமிழகத்தில் இந்துசமயம் புத்துயிர் பெறத் தொடங்கியது.

இத்தகைய அம்சத்தைத் தமிழ் இலக்கியத்தோடு தொடர்புபடுத்தி நோக்குதல் வேண்டும். தமிழ் இலக்கியம் சங்ககாலம், இருபதாம் நூற்றாண்டு ஆகிய காலப்பகுதிகளைத் தவிர்த்து, ஏனைய காலகட்டங்களில் சமயச்சார்புடனேயே வளர்ந்துவந்துள்ளது. களப்பிரர் காலத்திலேயே (சங்கமருவிய காலம்) இவ்வாறு சமயச்சார்பு தமிழ் இலக்கியத்தில் புகலிடம் பெறத் தொடங்கிவிட்டதாயினும், பல்லவர் காலத்திலிருந்தே முழுமையான அளவுக்கு இத்தகைய பண்பு வளர்ச்சிபெறத் தொடங்கியது. இத்தகைய வளர்ச்சி நிலை விஜயநகர–நாயக்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால இலக்கியங்களில் உச்சநிலையைப் பெற்றிருப்பதனைச் சிறப்பாகக் காணமுடிகிறது. தமிழ் இலக்கியத்தில் இவ்வாறு சமயச்சார்பு காலந்தோறும் வளர்ச்சிபெற்று வந்திருப்பதற்கு முக்கியமான காரணம், பல்லவர் காலத்திலிருந்து மக்கள் வாழ்வின் ஒவ்வோர் அம்சத்திலும் சமயம் பின்னிப் பிணைந்து வளரத்தொடங்கியமையேயாகும். பல்லவர் காலத்திலே நாயன்மார்கள், ஆழ்வார்களால் வளர்க்கப்பட்ட பக்தி இயக்கம், மக்கள் வாழ்வோடும் தொடர்புடையதாக விளங்கியது. சோழர் காலத்திலே கோயில்கள் முதன்மைநிலை பெற்று, மக்கள் வாழ்க்கையோடு பெரும் தொடர்பு கொண்டவையாக விளங்கின. தமிழகத்தில் விஜயநகரப் பேரரசின் மேலாண்மை நிலவிய காலத்திலும், நாயக்க மன்னரின் ஆட்சியின் போதும் இந்துசமயம் புத்துயிர் பெற்றமையினால், தமிழ் இலக்கியம் முன்னரை விடவும் இந்து சமயத்தின் பெரும் செல்வாக்குக்கு உட்படத் தொடங்கியது. வைதீக சமயங்களின் வளர்ச்சியோடு, அவை சார்ந்த தத்துவ நூல்களும் அக்காலகட்டத்திற் பெருகின. இந்துசமயத்தை வளர்க்குமுகமாகத் தமிழகத்தில் மடங்களும், ஆதீனங்களும் அதிகரித்தன. இத்தகைய காரணங்களால், அக்காலகட்டத்துத் தமிழ் இலக்கியமும் சமயக்கணக்கர்தம் வழியிற் சென்றதில் வியப்பதற்கு எதுவும் இல்லை. சோழர் காலத்தை விட அதிகமான அளவுக் குச் சமயச்சார்பு கொண்டவையாக அக்காலப் பகுதியிலே தோன்றிய சிற்றிலக் கியங்கள் விளங்கின.

இதேவேளை, இன்னோர் அம்சத்தையும் மனங்கொள்ள வேண்டியுள்ளது. சோழப் பெருமன்னர் காலத்தில் பரந்த அளவில் தேசிய உணர்வு காணப்பட்டது. ஆனால், நாயக்கர் ஆட்சிக் காலத்தில் இத்தகைய நிலை மாறி, பிரதேச உணர் வுகள் முதன்மையான இடத்தைப் பெறத் தொடங்கின. இதன் பிரதிபலிப் புக்களாகப் பிரதேச நோக்குடன் தோன்றிய தல புராணங்கள் விளங்குகின்றன. பரந்த அளவில் தேசிய உணர்வு எழுச்சி பெறும் காலகட்டங்களில், பிரதேச உணர்வுகள் மழுங்கிய நிலையிலேயே காணப்படுவதுண்டு. ஆயினும், பல்வேறு காரணங்களினால் தேசிய உணர்வு மந்தநிலை அடையும்போது, பிரதேச உணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுகள் எழுச்சி பெறுகின்றன. சோழப்பெருமன்னர் காலத்தில் ஒரே பேரரசின் கீழ் தமிழ்நாடு முழுவதிலும் ஆட்சி நடைபெற்றதனால், சமுதாயத்திற் பரந்த அளவில் தேசிய உணர்வு காணப்பட வாய்ப்பு இருந்தது. ஆனால், ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கால இரண்டாம் பாண்டியப் பேரரசுக்குப் பின் தமிழ்நாடு இருந்த சூழ்நிலையில். தேசிய உணர்வு மக்களிடம் எழுச்சிபெற வாய்ப்பின்றி இருந்தது. எப்போதுமே பேரரசுகளின் காலத்தில் இத்தகைய தேசிய உணர்வு அதிகமாகவும், சிறுசிறு அரசுகள் காணப்படும் காலகட்டங்களில் அவ்வுணர்வு குறைவாகவும் காணப்படுவது இயல்பானதாகும். இவ்விடத்தில், "பேரரசுகளின் காலத்தை விட சிறு ராஜ்யங்களின் காலத்தில் உள்ளூர்ப் பண்பாடு முக்கியத்துவம் பெறு கின்றது"[4] என்று ரொமிலா தாப்பர் கூறிய கருத்து மனங்கொளத்தக்கது. அதேவேளை, தமிழர் சமுதாயத்தோடு தொடர்புபட்ட பிறிதோர் அம்சமும் கருத்திற் கொள்ளத்தக்கது. களப்பிரர் காலத்திலிருந்து (சங்கமருவியகாலம்) நால்வகை வருணப் பாகுபாடு தமிழர் சமுதாயத்திற் புகத்தொடங்கிவிட்டது. பிறப்பின் அடிப்படையைக் கொண்டதாகவும் அத்தகைய பாகுபாடு அமையத் தொடங்கியது. பல்லவர் காலத்தில் பக்தி இயக்கம் செயற்கை அளவிலேனும் சாதீரீதியான உணர்வுகளை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. தெய் வத்தின் முன்னர் மக்கள் அனைவரும் சமமானவரே என்ற உணர்வு மிகுந்து காணப்பட்டது. ஆனால், சோழர் காலத்தைப் பொறுத்தவரையில், இந்நிலைக்கு மறுதலையாகக் கிளைச்சாதிகள் பல்கிப் பெருகத் தொடங்கின.[5] ஒவ்வொரு சாதியினரும் தத்தம் சாதிப் பெருமைகளைப் பேண முற்பட்டனர். அதன் விளைவாகப் பலவகைகளிற் கிளர்ச்சிகளும் ஏற்படத் தொடங்கின.[6] இக்கால கட்டத்திலேயே இடங்கை–வலங்கை என்ற பிரிவுகளும் சாதியமைப்பிலே தோன்றின என்பதும் குறிப்பிடத்தக்கது.[7] சோழப்பெருமன்னர் காலம் முதலாகத் தமிழர் சமுதாயத்திற் சாதியமைப்பு மேலும் இறுக்கம்பெறத் தொடங்கியது. விஜயநகரப் பேரரசின் காலத்தில் இந்நிலை சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓரங்கமாகி விட்டது. அக்காலகட்டத்துச் சாதியமைப்புப் பற்றி கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடும்போது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜாதிப்பிரிவினை அடிப்படையில் அமைந்த சமுதாய அமைப்பு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அந்த அமைப்பின் சமூக, பொருளாதார அம்சங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன அரசாங்கமும் இந்த அமைப்பை அங்கீகரித்திருந்தது."[8]

எனக் கூறியுள்ளார். இதிலிருந்து, சாதி முறைமை அக்கால கட்டத்துச் சமுதாய அமைப்பின் பிரிக்கவியலாத அம்சமாக விளங்கியமையை உணர்ந்துகொள்ளலாம். "இந்நிலையின் உச்சமாக, தமிழ் எழுத்துக்களிலும் பாவகைகளிலும் கூட வருணங்கள் பிரிக்கப்படும் கொடுமை நிகழ்ந்தது."[9] இதனைப் பாட்டியல் நூல்களிற் காணமுடிகிறது.[10]

சோழப் பெருமன்னர் காலத்திலே இடம்பெற்ற இன்னோர் அம்சமும் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது. அடிநிலை மக்களின் கிளர்ச்சிகள் அக் காலகட்டத்தில் இடம்பெறத் தொடங்கின. சோழமன்னர் காலத்தில் சிலவகை நிலங்களுக்கு வரிவிலக்கு வழங்கப்பட்டிருந்தது.[11] இத்தகைய வரிவிலக்குகள் இயல்பாகவே சோழப் பேரரசுக்குக் கிடைக்கவேண்டிய வருமானத்தைக் குறைத் தமையால், அதனை ஈடுசெய்வதற்குக் கிராமம், அல்லது ஊர் செலுத்தவேண்டிய மொத்த வரிகளை நிர்ணயித்திருந்தனர். இத்தகைய வரிவிதிப்புகளுக்கு ஏற்ப, கிராம மக்கள் தமது நிலங்களுக்கான வரிகளைப் பகிர்ந்து செலுத்தக் கடமைப்பட்டிருந்தனர். மேலும், ஊர்கீழ் இறையிலி என்ற பெயரில் கோயில் நிலமொன்றுக்கு வரிவிலக்கு வழங்கப்பட்டால், அதனை ஈடுசெய்வதற்கு, குறிப்பிட்ட அக்கிராமத்தைச் சேர்ந்த மக்கள் வரிகளைத் தமக்குள் பகிர்ந்து செலுத்தவேண்டிய நிலையில் இருந்தனர். இத்தகைய முறையற்ற வரிச்சுமைகள் ஏழை மக்களைப் பெரிதும் பாதித்தன. அதனால், ஏழை உழைப்பாளி மக்கள் சோழப் பேரரசு விதித்த வரிகளைச் செலுத்த முடியாமல் அவலமுற்றனர். அதேவேளையில், அவர்களது எதிர்ப்புணர்வும் பல்வேறு வழிகளில் வெளிப்பட்டன. இதுபற்றி ஆய்வாளர் ஒருவர் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இத்தகைய கூடுதல் வரிகளின் கொடுமைகளைத் தாங்க இயலாமல் மக்கள் பெரிதும் துயரடைந்தனர். தங்கள் குறைகளை வெளிக்காட்டவோ, எதிர்ப்புணர்வை அல்லது கருத்து வேறுபாட்டை எடுத்துக்கூறவோ அக்காலத்தில் அமைப்புகள் எதுவும் இருக்கவில்லை. மன்னனிடம் முறையிடுவதைத் தவிர வேறு வழியும் இல்லை. மன்னர்கள் மக்களுடைய முறையீடுகளை ஏற்றுக் கொள்ளவேண்டிய தேவை இல்லை என்பதால் மக்கள் தங்கள் எதிர்ப்புணர்வைப் பல்வேறு வடிவங்களில் வெளிக் காட்டினார்கள். வரிகொடா இயக்கம், வரி எதிர்ப்பு இயக்கம், வரி குறைப்பு இயக்கம், தாங்களே வரி நிர்ணயித்துக் கொள்ளுதல், ஒத்துழையாமை இயக்கம், அறப்போராட்டம் என்ற வடிவங்களில் மக்கள் தங்கள் உணர்வினை வெளிப்படுத்திய நிகழ்ச்சிகளும் போராட்டங்கள் நடத்திய நிகழ்ச்சிகளும் கல்வெட்டுகளில் இடம் பெற்றிருக்கின்றன."[12]

இதன் வாயிலாக, சோழர் காலத்தில் நிலங்களில் உழைத்துவந்த விவசாயி கள்மீது விதிக்கப்பட்ட கடும் வரிகளை அம்மக்கள் எதிர்க்கத் துணிந்தமை தெரியவருகின்றது. அம்மக்களது இத்தகைய எதிர்ப்புணர்வுகள் சோழப் பேரரசால் கடுமையாக அடக்கப்பட்டன. ஆயினும், அடிநிலை மக்களின் மனோநிலையில் இவை கடுமையான பாதிப்பினை ஏற்படுத்தின. இத்தகைய ஏழை விவசாயிகளின் உள்ளக்கொதிப்புகளைச் சோழர்கால இலக்கியவாதிகள் கவனத்திற்கொள்ளத் தவறிவிட்டனர். ஆயினும், பிற்கால இலக்கியவாதிகள் இத்தகைய ஏழை விவசாய உழைப்பாளரின் பிரச்சினைகளின்மீது ஓரளவாயினும் கண்ணோட்டம் செலுத்தத் தொடங்கினர். அதன் பயனாக, அடிநிலை மக்களான ஏழை விவசாயிகள் பிற்கால இலக்கியவாதிகளின் கரங்களிற் பாத்திரங்கள் ஆகும் வாய்ப்பினை முதன்முதலாகப் பெற்றனர். அதற்கான காரணமும் இருக்கவே செய்கிறது.

தமிழ்நாட்டில் நாயக்கரின் ஆட்சி உறுதிபெற்றவேளையில், தமிழ்மக் களுக்குப் பரிச்சயமான முறையில் அமைந்திருந்த உள்ளூராட்சி முறையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. விஜயநகரப் பேரரசுக் காலத்தில் நிகழ்ந்த இடையீடு அற்ற போர்களும், ஐரோப்பியரின் வருகை வெளிநாட்டு வாணிபத்தைப் பாதித்தமையும் பொருளாதார நிலையிலே தடுமாற்றத்தை ஏற்படுத்தின.[13] சோழர் காலத்தில் ஊர்மன்றங்கள் நிலங்களை உடைமையாகக் கொண்டிருந்தன. இவை கணபோகம் எனப்பட்டன. இவை தவிர, ஏகபோகம் என்ற பெயரில் தனிப் பட்டவர்கள் தேவையான உரிமைகளைக் கொண்டிருந்த நிலங்களும் காணப் பட்டன. ஆனால், நாயக்கர் காலத்தில் இத்தகைய நில உரிமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. கணபோகக் கிராமங்கள் எனப்பட்டவை படைத்தலைவர்களுக்கு மானியமாக வழங்கப்படத் தொடங்கின. சோழப்பெருமன்னர் காலத்திற் பிராம ணர்களுக்கு அளிக்கப்பட்ட கிராமங்களான சதுர்வேதி மங்கலங்கள், நாயக்கர் ஆட்சியின்போது நாயக்கர் மங்கலங்கள் எனப்பட்டன. மேலும், சோழப்பெருமன்னர் காலத்தில் ஊர்ச் சபையினர் பல்வேறு துறை சார்ந்த பணிகளை நிறைவேற்றும் பொருட்டுப் பல குழுக்களாகப் பிரிந்து செயலாற்றுவர். இத்தகைய ஊர்ச் சபைகளுக்குத் தெரிவு செய்யப்படுவோருக்குச் சில தகுதிகள் தேவையான வையாகக் கருதப்பட்டன. இவற்றுக்குத் தெரிவு செய்யப்படுவோர் பற்றி தி.நா.சுப்பிரமணியன் பின்வருமாறு குறிப்பிடுவர்:

"கிராமச்சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் தாங்கள் ஏற்று நடத்தும் காரியங்களைச் செவ்வனே முடிக்கக் கூடியவர்களாக இருக்கவேண்டும். அதற்காக அவர்கள் சில தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என நிர்ணயித்திருந்தனர். சொத்துரிமை, கல்வி, வயது, ஒழுக்கம் ஆகிய நான்கு வகையிலும் அவர்கள் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்."

மேலும் அவர் குறிப்பிடும் போது,

"கிராமத்திலே சொத்துரிமை உடையவர்களே அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்படுவர். அந்தக் கிராமத்திலே விளைநிலமும் வீடும் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நிரந்தரமாக உள்ளூரிலேயே வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும். குறைந்த பட்சம் ஒரு பங்கு நிலம் உடையவராய் இருத்தல் வேண்டும்.[14]

சோழப்பெருமன்னர் காலத்தில் ஊர்ச்சபைகளில் உள்ளூர்ப் பிரமுகர்களுக்கு முதன்மை இடம் அளிக்கப்பட்டிருந்தது. இத்தகைய முறை விஜயநகரப் பேரரசுக் காலத்திலும் வழக்கில் இருந்ததாயினும், காலப்போக்கில் மத்தியவரசு வலிகுன்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால், நாட்டில் அமைதி குலைய வேண்டிய சூழ்நிலை காணப்பட்டது. தமிழ்நாட்டில் நாயக்கமன்னர் தமது ஆட்சியைப் பயன்படுத்த முயற்சித்த வேளையில், சில மாற்றங்களை ஏற்படுத்த முனைந்தனர். படைத்தலைவர்களை அடிப்படையாகக் கொண்ட நாயக்கர் ஆட்சிமுறையும், வரிகளை அறவிடுவோரைக் கொண்ட ஆயக்கார முறையும் அவர்களாற் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டது. ஆயக்காரர் முறை கரணம், மணியம், தலையாரி முதலான பணியாளரை உட்படுத்திய புதிய அலுவலரைக் கொண்ட அமைப்பாகக் காணப்பட்டது. இத்தகைய புதிய அமைப்பு, பழைய உள்ளூராட்சி அமைப்புக்களைக் குலைத்து நிராதரவாக்கிவிட்டது. இதன் காரணமாக, புதிய உள்ளூராட்சி அமைப்பிலே புதுமுகங்கள் புகத்தொடங்கின. முன்னர் இருந்த உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு இருந்து வந்த தகுதிகள் பின்பற்றப்படவில்லை. தமிழ்நாட்டு ஊராட்சி அமைப்பின் பழைய ஒழுங்குமுறை சீர்குலைய ஆரம்பித்தது. இவற்றினைப் பற்றிப் பேராசிரியர் க.கைலாசபதி பின்வருமாறு திரட்டிக் கூறுவன மனங்கொள்ளத்தக்கன:

"முன்பின் தெரியாதவர்கள், ஊரவர்களால் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள், வரி வசூலிப்பதொன்றையே பிரதான நோக்கமாகக் கொண்டவர்கள், தெலுங்கு மொழி பேசுபவர்கள் ஆகியோர் ஆட்சிக்கு வந்ததும் பழைய ஊராட்சி மன்றங்களிற் குடிகொண்டிருந்த "புராதன ஜனநாயகப்" பண்பு மறைந்து, ஒற்றுமை உணர்வு குன்றி, மோசமான பொருளுறவுகள் தலைதூக்கின. நிலமானிய அமைப்பின் கேடுகெட்ட அம்சங்கள் அத்தனையும் இக்காலப்பகுதியில் வெளித்தோன்றின."[15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் ஏற்படத்தொடங்கிய இவ்வாறான புதிய நிலை, உள்ளூர்ப் பிரமுகர்கள் மத்தியில் விரக்திநிலையை ஏற்படுத்தியது. தாம் பெற்றிருந்த பழைய அதிகாரம், செல்வாக்கு என்பவற்றைப் பறிகொடுத்து, புதியவர்களால் அவை கைப்பற்றப்பட்டமையை அவர்களால் அங்கீகரிக்க இயலவில்லை. இதன் காரணமாக, புதிய அதிகாரமும், செல்வாக்கும் பெறத்தொடங்கிய புதியவர்கள்மீது அவர்களுக்கு இயல்பாகவே வெறுப்பு ஏற்பட ஆரம்பித்தது. நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் இலக்கியவாதிகளும் நிலக்கிழார்களோடு தொடர்பு கொண்டவர்களாகவே விளங்கிவந்துள்ளனர். இத்தொடர்பு காரணமாக, புதிய அதிகாரங்களைத் தம்வசப்படுத்தியவர்கள்மீது உள்ளூர் நிலக்கிழார்களுக்கு ஏற்பட்ட விரக்தி, வெறுப்பு ஆகியவை, அவர்களைப் பொருளாதாரரீதியிற் சார்ந்திருந்த அக்கால இலக்கியவாதிகளையும் பாதித்திருக்கவியலும் என்று கருதுவதற்கு இடமுண்டு. பள்ளு இலக்கியத்தில் வேளாண்மை உழைப்பாளராற் கேலியும் கிண்டலும் செய்யப்படும் பண்ணைக்காரர் இத்தகைய பின்னணியிலேயே நோக்கப்பட வேண்டும். அவர்களைக் கேலி செய்வதன் வாயிலாக, தமிழ்ச் சமுதாயத்தில் நிர்வாகரீதியாகப் புகுந்த புதுமுகங்களையும், தமிழ்மக்களின் உணர்வுகளை மதிக்காமற் செயலாற்றிவந்த புதிய அதிகாரிகளின் போக்குகளையும் இழிவுபடுத்தி, வெறுப்புணர்வைப் புலப்படுத்துவதும் அக்கால இலக்கியவாதிகள் சிலரின் நோக்காக இருந்துள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. இவ்வாறு, நிலக்கிழார்களதும் தமதும் அதிருப்திகளை வேளாண்மை உழைப்பாளரான பள்ளர் வாயிலாக இலக்கியவாதிகள் மறைமுகமாக உணர்த்த முயன்றுள்ளனர் என்று கருத இடமுண்டு. தாழ்த்தப்பட்ட வேளாண்மை உழைப்பாளரைப் பாத்திரங்களாகக் கொண்டு, புதியதோர் இலக்கியம் படைப்பதற்கு இதுவுமொரு காரணமாக இருந்திருக்க வேண்டும்.

இவ்வாறு, அடிநிலை மக்களான பள்ளர் சமூகத்தைப் பாத்திரங்களாகக் கொண்டு பள்ளு இலக்கியம் தோன்றியமைக்குப் பிறிதொரு காரணத்தையும் குறிப்பிடலாம். பல்வேறு வகையிலும் குழப்பம், சீரழிவு எனச் சிதைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த சமுதாயச் சூழலில், தமது உணர்வுகளைப் பொதுமக்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டும் என்ற உணர்வு ஓரளவேனும் இலக்கியவாதிகளிடம் ஏற்பட ஆரம்பித்தது. பள்ளு இலக்கியத்திற் காணப்படும் நாட்டார் இலக்கியத்தின் பாதிப்பு இதனை உணர்த்துகிறது. நிலப்பிரபுத்துவச் சமுதாய அமைப்பினைத் தொடர்ந்து பேணுவதே அக்கால இலக்கியவாதிகளினதும் நோக்கமாக இருந் துள்ளபோதிலும், ஓரளவாயினும் பொது மக்களைச் சார்ந்ததாகத் தமது கருத்து களைப் புலப்படுத்துவதும் அவர்களது அவாவாக இருந்துள்ளது. இவ்வாறு, பொதுமக்களையும் கருத்திற்கொண்டு இலக்கியம் படைப்பதற்கு, அரசியற் சமூகக் குழப்பங்களுக்கு மத்தியில் பொதுமக்களே ஓரளவாவது நம்பிக்கையுடனும் உழைப்புறுதியுடனும்[16] வாழ்ந்தமை முக்கிய காரணமாகும். பொதுமக்களிடம் காணப்பட்ட நம்பிக்கையுணர்வு, உழைப்பார்வம் ஆகியவை, அவர்களைப் பாத்திரங்களாகக் கொண்டு இலக்கியம் படைக்கும் தூண்டுதலை இலக்கியவாதிகளுக்கு ஏற்படுத்தியிருந்தன. அவை அம்மக்களின் வாழ்வியல் பற்றி ஓரளவாயினும் அவர்களைச் சிந்திக்கத் தூண்டியது எனலாம்.

அதேவேளை, பள்ளு இலக்கியத்தின் தோற்றத்தினை இன்னொரு கோணத்திலிருந்தும் நோக்க முடிகிறது. சோழப் பேரரசுக் காலம் தொடக்கம், ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பனியாரின் வருகை வரையும் தமிழ்நாட்டில் நிலப்பிரபுத்துவம் முக்கியத்துவம் பெற்று விளங்கியது. அது நிலத்தை அடிப் படையாகக் கொண்ட அரசியல் நிர்வாக அமைப்பினையும், வேளாண்மைத் தொழிலை ஆதாரமாகக் கொண்ட நிலையினையும், பண்ணையடிமை முறை யைக் கொண்ட பொருளாதாரச் சார்பினையும் உள்ளடக்கியதாக விளங்கியது.[17] எப்போதுமே நிலப்பிரபுத்துவத்தின் வலு மிகுந்த நிறுவனமாகச் சமயம் விளங் கிவந்துள்ளது. சோழப்பெருமன்னர் காலத்தின் பின்னர் தமிழ்நாட்டில் ஏற்படத் தொடங்கிய பல்வேறு அரசியல், பொருளாதார, சமய, சமுதாய நெருக்கடிகளின் காரணமாக நிலப்பிரபுத்துவ அமைப்புச் சீர்குலைந்துபோகாமற் பாதுகாக்க வேண்டுமென்ற பொறுப்பினை, உள்ளூர் நிலக்கிழார்களுடன் சமய நிறுவனங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றிருந்தன. நிலப்பிரபுத்துவத்தைப் பேண வேண்டுமாயின், சாதியமைப்பினைப் பாதுகாப்பதும் அவர்களது பொறுப்பாக அமைந்தது. சாதியமைப்பினைப் பாதுகாக்க வேண்டுமாயின், அடிநிலை மக்களது மனநிறைவு பற்றியும் கவனம் செலுத்தவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. நிலப்பிரபுத்துவச் சமுதாய அமைப்பு, அடிப்படையில் வேளாண்மைப் பொருளாதாரத்திலேயே தங்கியிருந்தமை காரணமாக, வேளாண்மையோடு இரண்டறத் தொடர்பு கொண்ட பள்ளர் சமூகத்தைப் பாத்திரங்களாகக் கொண்டு இலக்கியவாதிகள் பாடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தமிழ்நாட்டிலே நிலப்பிரபுத்துவ நிறுவனமாக விளங்கிய சமயத்துக்குத் தூல வடிவம் கொடுத்து நிலைநிறுத்தியது கோயிலே. இதன் காரணமாகவே, நிலப்பிரபுத்துவச் சமுதாய அடிப்படையைக் கொண்டதாக விளங்கும் பள்ளு இலக்கியமும் கோயில் சார்ந்த சூழலைத் தனது களமாகக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

மேலும், பள்ளு இலக்கியத்தின் தோற்றம் தொடர்பாக இன்னோர் அம்சமும் மனங்கொள்ளத்தக்கது. கி.பி.16ஆம் நூற்றாண்டு முதல் அடிநிலை மக்கள் மத்தியிற் கிறித்துவ மதமாற்ற முயற்சிகளும் இடம்பெறத்தொடங்கின. அதிகார வர்க்கத்தின் கெடுபிடிகளினாலும், பஞ்சம், வறுமை என்பவற்றாலும், சமூக இழிநிலையினாலும் கிறித்துவ மதத்தைத் தழுவி, ஓரளவாயினும் தம்மை ஈடேற்றிக் கொள்ளப் பள்ளர் சமூகத்தினர் விரும்பினர். நிலங்களை விட்டு வெளியேறலும், கிறித்துவ மதத்துக்கு மாறத்தொடங்கலுமான அவர்களது முயற்சிகளினால், நிலப்பிரபுத்துவ வர்க்கம் அவர்களையிட்டுச் சிந்தனை செய்யத் தொடங்கிற்று.

இச்சந்தர்ப்பத்தில் அக்காலகட்டத்து இலக்கியச் சூழலையும் விளங்கிக் கொள்ளவேண்டியது அவசியமாகிறது. சோழ, பாண்டியப் பேரரசுகளின் பின்னர், அரசியல் உறுதிப்பாடு குன்றிச் சீர்குலைந்திருந்த தமிழ்நாட்டிற் குறுநில மன்னரும், தனிப்பட்ட வள்ளல்களும், செல்வாக்கு மிகுந்த தனிமனிதரும் இலக்கியவாதிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுடைத் தலைவராகும் போக்கினை அக்காலகட்டத்திலே காணமுடிகிறது. சோழர்காலத்துச் சிற்றிலக்கியங்களின் போக்கினின்றும், அக்காலகட்டத்து இலக்கியங்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு வேறுபட்ட தன்மை கொண்டவையாக விளங்கின. சோழர்காலத்தைவிட அதிகமான அளவுக்குச் சமயச்சார்பும் அக்காலச் சிற்றிலக்கியங்களிற் காணப்படுகின்றது.

இத்தகைய சூழலிலேயே பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் முதலான புதிய இலக்கிய வடிவங்கள் பற்றியும் நோக்குதல் வேண்டும். பிற சிற்றிலக்கியங்களிற் காணத்தகும் முறையிலே தெய்வங்களையோ, சிறுதலைவர்களையோ பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு, அவர்களது புகழ்பேசுதல், சமயச்சார்பு கொண்டிருத்தல் ஆகிய கூறுகளைக் கொண்டிருப்பினும், இம் மூன்று சிற்றிலக்கியங்களும் தம்மளவிலே தனித்துவம் மிக்கவையாக விளங்குவதைக் காணலாம். இவற்றிற் காணத்தகும் இத்தகைய தனித்துவக் கூறுகளைத் திரட்டி, பேராசிரியர் சி.தில்லைநாதன் பின்வருமாறு குறிப்பிடுவர்:

> "தன்னேரில்லாத் தலைவர்களை நம்பி வாழ்ந்த நிலைமாறி, தம் உலகியல் வாழ்வை ஊர்க்கோயில்களோடு இணைத்துக்கொண்ட மக்கள் வாழ்வின்பால் புலவர் கவனம் திரும்பியபோது, கிராமிய வாழ்வை அடித்தளமாகக் கொண்ட எளிய இனிய நாடக வடிவினதாக பள்ளுக்களும் குறவஞ்சிகளும் நொண்டிகளும் தோன்றின. ஆலயங்களிலே நடிக்கப்பட்ட இவை சமயத்தையும் இலக்கியத்தையும் பொதுமக்கள் சொத்தாக்கின. உலகியல் வாழ்விற் கலகலப்பை ஏற்படுத்துவதோடு சாதாரண மக்களுக்குச் சமய ஈடுபாட்டினை ஏற்படுத்தும் அம்சங்களை இவை கொண்டிருந்தன."[18]

இவ்விலக்கியங்களிற் கிராமிய வாழ்வும், பொதுமக்கள் சார்பும், உலகியல் நோக்கும், சமய ஈடுபாடும் ஒருங்கு காணப்பட்டமை, பிற சிற்றிலக்கியங்களினின்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் தனித்துவ இயல்பினை உணர்த்தி நிற்கின்றது. இவற்றுள், பள்ளு இலக்கியம் நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் வேளாண்மை உழைப பாளர்களை முக்கிய பாத்திரங்களாகக் கொண்டு விளங்குகிறது. வேளாண்மைத் தொழிலே நாட்டின் பொருளாதாரத்துக்கு அச்சாணியாக விளங்குகின்றமையால், அத்தொழில் தொடர்பான புதிய இலக்கியம் படைக்கும் சிந்தனை, அவ்விலக்கியத் தோற்றத்துக்கு ஒரு காரணமாக அமைந்தது எனலாம்.

மேலும், சோழர் காலத்திலே தோன்றிய சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் இவ்விடத்து நினைவுகூருவதற்கு உரிய "நம். அந்நூலில் இடையர், ஏகாலியர், குயவர், சாலியர், சான்றார், செக்கார், நுளையர், பாணர், புலையர், வேடர் ஆகிய அடிநிலைச் சமூகப் பாத்திரங்களும் காணப்படுகின்றன. எனினும், பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் என்பவற்றுக்கும், திருத்தொண்டர் புராணத்திற் காணப்படும் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சார்ந்த அடியார்களின் கதைகளுக்கும் இடையே ஒரு முக்கிய வேற்றுமையைக் காணலாம். திருத்தொண்டர் புராணத்திற் பாத்திரங்களாகப் படைக்கப்பட்ட அத்தகைய அடியார்கள், சேக்கிழாருக்கு முன்னரே புகழ்பெற்றவர்களாக விளங்கினர். சமய அடிப்படையில் சமுதாய ஒருமைப்பாட்டைத் தமது நூலிற் பிரதிபலிக்கச் சேக்கிழார் முயன்றார். ஆனால், பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் ஆகியவை, தாம் தோன்றிய காலத்துச் சமய அடிப்படையைப் பிரதிபலிக்கின்ற அதே வேளையில், திட்டமிட்ட முறையிலே அடிநிலை மாந்தரைப் பாத்திரங்களாகக் கொண்டுள்ளன. எனினும், தமிழ் இலக்கியம் அடிநிலை மக்களையும் பாத்திரங்களாகக் கொண்டு தோற்றம் பெறும் போக்குக்கு அத்திபாரமிட்டதாகத் திருத்தொண்டர் புராணம் விளங்கியது என்பது உண்மையே.

பள்ளு இலக்கியத்தின் தோற்றம் குறித்த இத்தகைய விடயங்களைத் தொகுத்து நோக்குமிடத்து, இது தொடர்பாகக் கலாநிதி ஜி.குளத்தூரான் தமது ஆய்விலே தெரிவித்த சில கருத்துகளைப் பரிசீலனை செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியுள்ளது. நிலப் பிரபுக்களினதும், நிலப்பிரபுத்துவப் பண்பாட்டினதும் அழிவினைப் பள்ளு இலக்கியங்கள் காட்டுகின்றன என்றும், அக்காலத்து மக்கள் நிலவுடைமை அமைப்பை மாற்றவேண்டும் என விரும்பினர் எனவும், நிலவுடைமையினின்றும் விடுதலையைப் பள்ளு இலக்கியம் வற்புறுத்துவதாகவும், பள்ளு நூலாசிரியர் ஆட்சியாளரையும் ஆட்சித் தலைவர்களையும் தண்டிக்க விரும்பியதோடு, ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான நலன்களை விளக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிடுவர்.[19] ஆயினும், ஜி.குளத்தூரான் கருதுவது போன்று, பள்ளு இலக்கியம் நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராகத் தோன்றிய இலக்கியமன்று. மாறாக, நிலப்பிரபுத்துவத்தை நிலைநிறுத்தத் தன்னளவிற் பங்களிப்புச் செய்த இலக்கியமாகவே அது விளங்குகின்றது. பள்ளு இலக்கிய ஆசிரியர்களின் முழு மனச்சார்பும் நிலவுடைமைச் சமுதாய அமைப்புக்குச் சார்பாகவே இருந்துள்ளது. பள்ளு நூல்களில் இடம்பெறும் குயில் கூவுதல் என்ற பகுதி இதனைத் தெளிவுற எடுத்துக்காட்டும்.[20] நிலப்பிரபுத்துவத்தின் கொடுமைகள் வேளாண்மை உழைப்பாளரைப் பாதித்தபோதும், அத்தகைய சமுதாய அமைப்புக்குட் பழக்கப்பட்ட அவர்களினால், அதற்கு வெளியே ஒரு புதிய அமைப்பினைப் பற்றிச் சிந்திக்க முடியும் எனக் கருதுவதற்கில்லை. ஆயினும், பொதுமக்கள் சார்பான நோக்கு ஓரளவாயினும் தரம் வாய்ந்த இலக்கிய ஆசிரியர்களைப் பாதிக்கத் தொடங்கியிருந்தமையினால், அவர்கள் மனிதாபிமான நோக்கிற் சமுதாயத்தின் அடிநிலை மக்களை நோக்கத் தலைப்பட்டனர். அதேவேளையில், நிலப்பிரபுத்துவத்தின் ஓரங்கமான பண்ணை யாளர்களின் கொடுமைகளை உழைப்பாளர் சார்பில் கண்டிப்பதற்கும், தமது வெறுப்புணர்வைக் காட்டுவதற்கும் அவர்கள் முயன்றுள்ளனர். இத்தகைய அம்சம், நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான இலக்கியவாதிகளின் குரல் போன்ற பிரமையை ஏற்படுத்தினும், உண்மையில் அவ்வமைப்புக்குள்ளேயே சீர்திருத்தத்தை மேற்கொள்ளும் அவர்களது ஒருவகை முயற்சியாகவே காணப்படுகின்றது. சமுதாய மாற்றம் பற்றிய கருத்துகள் வேரூன்றாத் அக்காலகட்டத்தில், நிலப் பிரபுத்துவத்துக்கு எதிராக இலக்கிய ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் எழுப்பினர் எனக் கருதுவது வரலாற்று முரணாகும். பள்ளு நூல்களை நிதானமாக நோக்குகின்றபோது, மனிதாபிமான அடிப்படையிலான சீர்திருத்த நோக்கு அவற்றிற் காணப் படுகின்றது எனக் கொள்வது பொருத்தமானது. மேலும், நிலப்பிரபுத்துவ அமைப்பின் ஓரங்கமாக விளங்கும் சாதியமைப்பினையும் பள்ளு நூலாசிரியர்கள் கண்டித்தவர்களல்லர். அதேவேளை, பள்ளரின் வேளாண்மை உழைப்பினைச் சில பள்ளு நூலாசிரியர்கள் பாராட்டிக் கூறத் தயங்கியவர்களுமல்லர். சுருங்கக் கூறுவதாயின், பள்ளு இலக்கியங்கள் நிலப்பிரபுத்துவ அமைப்புக்குள்ளேயே ஓரளவு சீர்திருத்தப் போக்கினையும், மனிதாபிமான நோக்கினையும் வற்புறுத்திநின்றன எனக் கொள்ளல் பொருந்தும்.

## (ஆ) பழந்தமிழ் நூல்களும் பள்ளு இலக்கியமும்

எந்தவோர் இலக்கியமும் தான் தோன்றும்போது, தனக்கு முன்பிருந்த பல்வேறு இலக்கியங்களினின்றும் தனக்குத் தேவையான அம்சங்களைப் பெற்று வளர்ச்சி பெறுவது இயல்பானதாகும். பள்ளு இலக்கியமும் இதேபோன்று, தனக்கு முந்திய இலக்கியங்களினின்றும் தனக்கு வேண்டிய பல அம்சங்களைப் பெற்றுள்ளது.

பள்ளு இலக்கியத்தின் தோற்றம் தொடர்பான முன்னோடிக் கூறுகளை மனங்கொள்ளும்போது, தொல்காப்பியம் பற்றியும் கருத்துச் செலுத்த வேண்டியுள்ளது. அது எவ்வகையிலும் பள்ளு இலக்கியத்தின் தோற்றத்துக்குக் காரணமாக அமைந்த நூலன்று. ஆயினும், தொல்காப்பியத்திற் குறிப்பிடப்படும் வாகைத்திணைத் துறைகளுள் அடங்கும் ஏரோர் களவழி, தேரோர் களவழி என்னும் துறைகள் இவ்விலக்கியம் தொடர்பாகக் கருதத்தக்கவை. ஏர்க்களத்தில் உழவர் ஆற்றும் பணிகளைக் கிணைப்பொருநர் பாராட்டுவதாக அமைவது, ஏரோர் களவழி எனப்படும். போர்க்களத்தில் இடம்பெறும் மன்னனின் வீரச்செயல்களை, ஏர்க்களத்தில் உழவுத்தொழில் செய்பவரின் செயல்களோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவமித்து, மன்னனின் சிறப்பைப் பாராட்டுவதாகத் தேரோர் களவழி அமையும். இவற்றுள், ஏரோர் களவழியைப் பாடுபவர் கிணைப்பொருநராவர். தேரோர் களவழியைப் புலவர் பாடினர். களம் பாடுதல் என்ற முறையில் ஏர்க்களம் பாடுதல், போர்க்களம் பாடுதல் மரபாக இருந்துள்ளன. எனினும், காலப்போக்கில் இவையிரண்டும் ஒன்றுடனொன்று இணைந்துவிட்டதாகத் தெரிகிறது. இதற்குச் சான்றாகப் புறநானூற்றுச் செய்யுட்கள் சிலவற்றைக் காட்டலாம்.[21] அவற்றில் ஏர்க்களத்தின் உருவகமாகப் போர்க்களம் சித்திரிக்கப்படுகிறது. ஆரம்பத்தில் ஏர்க்களத்தையும், உழவுத்தொழிலையும் புகழ்ந்து பாடும் மரபு காணப்பட்டது. அம்மரபிலிருந்து போர்க்களத்தையும், போர்த் தொழிலையும் புகழ்ந்து பாடுகின்ற வேறொரு மரபு தொடர்ந்திருக்கலாம் என்று கருதமுடிகிறது. புறநானூற்றிற் காணப்படும் வாளேருழவ"[22] "வில்லேருழவ நின் னல்லிசை யுள்ளி"[23] முதலான தொடர்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இவ்வாறு, ஏர்க்களம் பாடுதல் என்ற துறையிலிருந்து தோன்றிய இன்னொரு துறையாகப் போர்க்களம் பாடுதல் விளங்கியது எனக் கருதலாம். இத்தகைய ஒரு நிலையில், உழவினையும் போரினையும் இணைத்து உருவகித்துக் காட்டுவதற்குப் புறநானூற்றுப் பாடல்கள் சில முயன்றன.

தொல்காப்பியத்திற் குறிப்பிடப்பட்ட ஏரோர் களவழி, கி.பி. 9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய புறப்பொருள் வெண்பாமாலையில்[24] கிணைநிலை என்னும் பெயரிற் கூறப்பட்டுள்ளது.[25] வயலில் உழும் உழவனைக் கலைஞன் பாராட்டுவதாக இத்துறை அமைந்துள்ளதைக் காணலாம். உழவனது உழைப்பின் பயன் கலைஞனுக்கும் கிடைப்பதை இத்துறை குறிப்பாக உணர்த்துவதாக இதனைக் கருதலாம். இத்துறைக்கு விளக்கமளிக்குமுகமாக நூலிற் கொடுக்கப் பட்டுள்ள உதாரணச் செய்யுளில்[26] ஏர்த்தொழில் வாழ்த்தப் படுகின்றது.

தொல்காப்பியத்தில் ஏர்க்களத்துச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு ஏரோர் களவழி என்றும், புறப்பொருள் வெண்பாமாலையிற் கிணைப்பொருநர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்வது என்ற அடிப்படையிற் கிணைநிலை எனவும் பெயர் வந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது. ஆயினும், இரு நூல்கள் கூறும் துறைகளிலும் ஏர்க்களத்து நிகழ்ச்சிகளே கிணைப் பொருநராற் பாராட்டப்படுகின்றன. எனவே, தொல்காப்பியத்தில் இடம்பெறும் ஏரோர் களவழியே பெயர் மாற்றம் பெற்று, புறப்பொருள் வெண்பாமாலையிற் கிணைநிலையென அமைந்தது என்பதனை உணரலாம்.

இச்செய்திகள் தொடர்பாகச் சிலப்பதிகாரத்து நாடுகாண்காதையில், "தெண்கிணைப் பொருநர் செருக்குடனெடுத்த மண்கணை முழவின் மகிழிசை யோதையும்"[27] என்ற அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் கூறும் உரை நோக்கத் தக்கது. மேற்கண்ட அடிகளுக்கு விளக்கம் கொடுக்குமிடத்து, "இது களவழி வாழ்த்து"[28] என்று கூறி, புறப்பொருள் வெண்பா மாலையில் வாகைப்படலத்துக் கிணைநிலை பற்றிய நூற்பாவையும், அதற்கான உதாரண விளக்கச் செய்யுளையும் காட்டுகிறார். புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் கிணைநிலையைக் களவழி வாழ்த்து என அடியார்க்கு நல்லார் குறிப்பிடுவதால், தொல்காப்பியம் குறிப்பிடும் ஏரோர் களவழியினின்றே புறப்பொருள் வெண்பாமாலை கூறும் கிணைநிலையின் தோற்றம் அமைந்தது என்பது உறுதியாகின்றது.

இவற்றினின்றும் புறநானூறு, தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவற்றில் ஏர்த்தொழிலைப் புகழ்ந்துரைக்கும் நோக்குக் காணப்பட்டமையை உணரமுடிகின்றது. திருக்குறளும் ஏர்த்தொழிலைப் புகழ்ந்துரைத்துள்ளது. இவை நேரடியாகப் பள்ளு இலக்கியத்தினைப் பாதிக்காதுவிடினும், இவை காலப்போக்கில் வளர்ச்சி பெற்று, உருமாறியும் புதுப்பொலிவு பெற்றும் பள்ளு இலக்கியத்தின் தோற்றத்துக்கு ஊற்றுக் கண்ணாக விளங்கின எனலாம்.

மேலும், பள்ளு நூல்களில் இடம்பெறும் நாட்டுவளம், நகர்வளம் முதலானவை, காவியங்களிற் காணப்படும் நாட்டு, நகர வர்ணனைகளை நினைவூட்டும் முறையில் அமைந்துள்ளன.[29]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க இலக்கியங்களில் ஒரு பகுதியாகிய ஆற்றுப்படை நூல்களில் ஐவகை நிலவருணனை தந்ரூபமாக அமைந்துள்ளதைக் காணலாம். பள்ளு இலக்கியத்திலும் ஐவகை நிலவருணனை இடம்பெறுகின்றது. மழை பெய்து ஆற்றில் வெள்ளம் பெருகி, அவ்வெள்ளம் ஐவகை நிலங்கள் ஊடாகவும் பாய்வதைப் பள்ளு நூல்கள் சித்திரிக்கின்றன. பெரும்பாலான பள்ளுகள், மழைநீர் ஆறாகப் பெருகி ஐவகை நிலத்திலும் செல்லுவதைக் காட்டும்போது ஐந்திணையின் உரிப்பொருளையும் பாடுகின்றன[30] என ச.வே.சுப்பிரமணியன் கூறுவதும் மனங்கொள்ளத்தக்கது. வேளாண்மைக்கு நீர் இன்றியமையாததாக விளங்குவதால், அதனைச் சிறப்பித்துக் கூறுவதற்காக ஆற்று வெள்ளம் பாய்வதைப் பள்ளு நூலாசிரியர்கள் விரிவாக வருணிக்கின்றனர் எனலாம். மேலும், பள்ளு நூல்களிற் காணப்படும் ஐவகை நில வருணனை, ஆற்றுப்படை நூல்களில் இடம்பெறும் ஐவகை நிலவருணனையின் தொடர்ச்சியாகவே விளங்குகிறது எனலாம். அத்துடன், சிலப்பதிகாரக் கானல்வரியிற் காணப்படும் ஆற்றுவரிப் பாடல்கள் காலப்போக்கிற் பொருள் விரிவு பெற்று, பள்ளு நூல்களில் ஆற்றில் வெள்ளம் வருதல் என்னும் பகுதியாக அமைந்ததாகவும் கொள்ளலாம்.[31]

பள்ளு இலக்கியம் தொடர்பாக நோக்குமிடத்து, பழந்தமிழ் நூலான பரிபாடலில் இடம்பெறும் சக்களத்திப் போராட்டம் தொடர்பான விடயமும் மனங்கொள்ளத்தக்கது.[32] முருகனின் மனைவியரான வள்ளி, தேவசேனை ஆகிய இருவருக்கும் இடையே நடைபெற்ற சக்களத்திப் போராட்டத்தைக் குன்றம்பூதனார் புனைந்துரைத்துள்ளார். முருகன் வள்ளியைக் களவாகத் திருமணம் புரிந்தபோது தேவசேனை சீற்றங் கொண்டமை, முருகன் சீற்றத்தைத் தணிக்க முயன்றமை, தேவசேனை ஊடல் நீங்கியமை, அச்செயலில் வள்ளி சினங் கொண்டமை, இரு மனைவியரதும் தோழியர் தம்முட் பகைமை பாராட்டியமை, அவர்களைச் சார்ந்த மயில்கள், கிளிகள், வண்டுகள் ஆகிய அஃறிணைப் பொருட்களும் போரிட்டமை, இறுதியிற் குறமகளிர் வெற்றி கொண்டமை ஆகியவை பரிபாடலிற் சித்திரிக்கப்பட்டுள்ளன. பரிபாடலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும் வள்ளி, தேவசேனை ஆகியோருக்கிடையிலான இத்தகைய கற்பனைப் போராட்டம், உலகியலிற் காணக்கூடிய சக்களத்திப் போராட்டத்தின் பிரதிபலிப்பாகவே விளங்குகிறது.

சக்களத்திகளுக்கு இடையிலான இத்தகைய போராட்ட உணர்வே, பள்ளு இலக்கியத்தின் முக்கிய அம்சங்களுள் ஒன்றாகவும் அமைந்துள்ளது. பரிபாடலில் இடம்பெறும் வள்ளி–தேவசேனை ஆகியோருக்கிடையிலான சக்களத்திப் போராட்டம் பற்றிய விடயம், பள்ளு இலக்கியத்திற் காணப்படும் மூத்தபள்ளி இளையபள்ளி ஆகியோருக்கு இடையிலான போராட்ட உறவு பற்றிய புனைவுக்கு ஒருவகையில் அடிப்படையாக அமைந்திருக்கலாம்.

பள்ளு இலக்கியத்தில் அகப்பொருட் சார்பான சில கூறுகளும் இடம் பெறுவதைக் காணலாம். இவை சங்ககாலத்திலிருந்து ஓரளவு தொடர்ந் துகொண்டிருந்த அகத்திணை மரபின் மிச்சசொச்சங்கள் எனலாம். எனினும், பல்லவர் காலத்திலிருந்து வளர்ந்துவந்த கோவை இலக்கியத்தின் பாதிப்பினைப் பள்ளு நூல்களில் தரிசிக்கத்தக்கவாறு உள்ளது. கோவை இலக்கியத்திற் பாட்டுடைத் தலைவன் பெயர் மாத்திரம் சுட்டப்பட்டு, கதாபாத்திரங்களின் பெயர்கள் குறிப்பிடப்படுவதில்லை. இதனைப் போன்றே பள்ளு இலக்கியத்திற் பாட்டுடைத் தலைவன் பெயர் மாத்திரம் குறிப்பிடப்பட்டு, கதாபாத்திரங்களின் இயற்பெயர்கள் வழங்கப்படுவதில்லை.[33] பிற்காலத்தில் தோன்றிய பள்ளு நூல்களில் இடையிடையே இடம்பெறும் அகத்துறை சார்பான செய்யுள்கள், கோவை போன்ற இடைக்கால அகத்துறை இலக்கியங்களின் செல்வாக்கினால் அமைந்தவையே எனலாம்.

இவற்றுக்கு அடுத்ததாக, கி.பி. 10ஆம் நூற்றாண்டின் இறுதியிலே தோன்றிய பன்னிருபாட்டியல்[34] நோக்கத்தக்கது. இந் நூலே முதன்முதலாக உழத்திப்பாட்டு என்னும் ஓர் இலக்கியம் பற்றி அறிமுகம் செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புதிய இலக்கியம் பற்றிய வரைவிலக்கணத்தைப் பன்னிருபாட்டியல் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

"புரவலற் கூறி அவன்வா ழியவென்
றகல்வயல் தொழிலை ஒருமை உணர்ந்தனள்
எனவரும் ஈரைந் துழத்திப் பாட்டே."[35]

பன்னிருபாட்டியலில் இடம்பெறும் உழத்திப்பாட்டுக்குரிய இலக்கணத்தை நோக்கும்போது, புரவலன் பற்றிய வாழ்த்து, வயல்தொழில் வருணிப்பு ஆகிய உள்ளடக்கக் கூறுகளையும் உழத்தியின் கூற்றாக அமைதல், பத்துப்பாடல்களைக் கொண்டிருத்தல் ஆகிய வடிவக் கூறுகளையும் அது கொண்டமைந்தமையை அறிய முடிகிறது. உழத்திப்பாட்டின் இயல்பினைப் பன்னிருபாட்டியல் வாயிலாகவே உணரமுடிகிறது.

பன்னிருபாட்டியல் குறிப்பிடும் உழத்திப்பாட்டில் உள்ளடங்கிய கூறுகளை, பழந்தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களோடு ஒப்பிடும்போது, அவ்விலக்கியத்தின் வளர்ச்சி பற்றிய தெளிவு ஏற்பட வாய்ப்புண்டு. மன்னர் ஆட்சி நிலைபெற்றிருந்த காலகட்டங்களில் தோன்றிய இலக்கியங்களில், மன்னனை வாழ்த்துவது பொதுவான பண்பாகக் காணப்படுகிறது. உழத்திப் பாட்டிலும் அந்நிலையைக் காணலாம். தொல்காப்பியத்தில் கூறப் படும் ஏர்க்களம் பாடுதல் (ஏரோர் களவழி), இவ்விலக்கியத்திலே உழவுத்தொழில் பற்றிய வருணனை முயற்சிக்கு முன்னோடியாக விளங்கியிருக்கக்கூடும். அதனால், உழத்திப்பாட்டில் புதிய கூறுகளாக விளங்குபவை, உழத்தியின் கூற்றாக விளங்குவதும், பத்துப்பாடல்களால் அமைந்திருப்பதுமான வடிவம் தொடர்பான கூறுகளே எனக்கொள்வது பொருத்தமானதாகும். இன்னொரு வகையிற் கூறுவதாயின், உழத்திப்பாட்டின் உள்ளடக்கக் கூறுகள் பழையவையாகவும், வடிவக் கூறுகள் புதியவையாகவும் விளங்கின. பன்னிருபாட்டியல் கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பின்னணியில் பார்க்கும்போது, அது குறிப்பிடும் உழத்திப் பாட்டு, அதற்கு முன்னரே தோன்றிவிட்டது என்பது தெளிவு. அத்துடன், இவ்விலக்கியம் பத்துப்பாடல்களால் ஆகியது என்று பன்னிருபாட்டியல் குறிப்பிடும் செய்தி மனங்கொளத்தக்கது.

இக்குறிப்பின் அடிப்படையில் நோக்கும்போது, பத்துப் பாடல்களைக் கொண்டமைந்த பதிகங்கள் பெருமளவுக்குத் தோற்றம் பெற்ற பல்லவர் காலத்தில் இவ்விலக்கியத்தின் தோற்றம் அமைந்திருக்கலாம் எனக் கருதமுடிகின்றது. எனினும், பல்லவர் காலத்தில் முக்கியத்துவம் பெற்றுவிளங்கிய பக்தியுணர்வும், சோழப்பெருமன்னர் காலத்தில் முதன்மை பெற்றிருந்த மன்னர் புகழ்பாடும் போக்கும் இவ்விலக்கியத்தின் வளர்ச்சிக்குத் தடையாக விளங்கின எனக் கருத இடமுண்டு. புரவலனைப் புகழ்வது இவ்விலக்கியத்தின் ஒரு கூறாக விளங்கியபோதிலும், சோழர் காலத்தில் பெருமதிப்புப் பெற்றிருந்த மன்னர் புகழ்பாடும் போக்கு இதில் இடம்பெறாமை குறிப்பிடத்தக்கது. அதனால், காலப்போக்கில் இவ்விலக்கியம் வளர்ச்சி குன்றி மறைந்து விட்டது எனலாம். ஆயினும், உழத்திப்பாட்டு பள்ளு இலக்கியத்துக்கு முன்தோன்றி, ஒருவகையில் அதற்கு முன்னோடியாகவும் அமைந்தது.

முன்னர் தோன்றிய உழத்திப்பாட்டுக்கும், பின்னர் தோன்றிய பள்ளு இலக்கியத்துக்கும் இடையிலான உறவினைப் பற்றிக் கலைக்களஞ்சியம் கூறுவன கருத்திற்கொள்ளத்தக்கவை:

"மேற்காட்டிய உழத்திப்பாட்டு என்ற வழக்காறு, பாட்டும் கூத்துமாய் அமைந்துள்ள பள்ளுப் பிரபந்தம் பிற்காலத்தில் தோன்றுவதற்கு வழி செய்தது எனலாம். மிகப் பழைய காலத்தே உழவுத்தொழிலில் ஈடுபட்ட பள்ளர் பள்ளியர் வாழ்க்கையையொட்டிய கூத்து வகைகள் பாட்டும் தாளமும் பொருந்திப் பாமர மக்களால் விரும்பிப் பாடப்பட்டு வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாட்டத்துக்கான பாட்டை அனுபவித்த கவிஞர்கள் இதற்கு இலக்கிய நிலை தந்தபோது இது பள்ளுப் பிரபந்தமாகிவிட்டது என்று கருதலாம்.[36]

கலைக்களஞ்சியம் மேற்கண்டவாறு கூறுவதன் வாயிலாகச் சில அம்சங்களைப் புரிந்துகொள்ளலாம். பிற்காலத்தில் தோன்றிய பள்ளு இலக்கியத்துக்கு உழத்திப்பாட்டு முன்னோடியாக அமைந்தமையும், பழங்காலத்திற் பள்ளர் சமூகத்தவரின் வாழ்வியலோடு இணைந்துபிணைந்திருந்த கூத்துவகைகள் இலக்கிய நிலை பெற்றமையும் குறிப்பிடத்தக்கன. உழத்திப்பாட்டின் வளர்ச்சி நிலை பள்ளு இலக்கியமாக அமைந்து, பள்ளர் சமூகத்தவரின் வாழ்க்கையம்சங்களோடு தொடர்புடைய பண்பாட்டு அம்சங்கள் அவ்விலக்கியத்தில் இலக்கிய நிலை பெற்றன எனக் கருத முடிகிறது.

பள்ளு இலக்கியத்தில் சமூகத்தரத்திலே தாழ்த்தப்பட்ட சமூகத்தைப் பிரதிபலிக்கும் பாத்திரங்கள் புனையப்படுவதற்கு முன்னோடியாகச் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணமே விளங்குகின்றது. அந்நூலில் இடம்பெற்றுள்ள திருநாளைப் போவார் நாயனார் புராணம், நந்தனார் என்னும் தாழ்த்தப்பட்ட சமூகம் சார்ந்த அடியார் ஒருவரின் வாழ்வை விபரித்துள்ளது. அதில், தாழ்த்தப்பட்ட சமூகத்தவரான புலையரின் சேரி பற்றிச் சித்திரிக்கப்பட்டுள்ளது. மருதநில வளமும், ஊர், சேரி பற்றிய சித்திரிப்புகளும் சிறப்பாக அமைந்துள்ளன. சோழர் காலத்துச் சேரி மக்களின் வாழ்நிலை, சேக்கிழாரால் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. உழவுத்தொழிலில் அம்மக்கள் ஈடுபட்டமை பற்றியும் திருநாளைப் போவார் புராணம் தெரிவிக்கின்றது. ஊரின் புறம்பாகச் சேரி அமைந்துள்ளமை பற்றியும், நிலக்கிழாருக்குரிய வயல்களில் உழைக்கும் உழைப்பாளராகப் புலையர் சமூகத்தவர் விளங்கியமை பற்றியும் அப்புராணம் தெளிவுறுத்துகின்றது. சேக்கிழாரின் இத்தகைய சித்திரிப்புகள், பிற்காலத்தில் தோன்றிய பள்ளு இலக்கியத்தில் வேளாண்மை உழைப்பாளரான பள்ளர் சமூகத்தவரைப் பாத்திரங்களாகப் படைப்பதற்கும், அவர்களின் வாழிடங்களான சேரிகளைச் சித்திரிப்பதற்கும் முன்னோடிகளாக விளங்கின எனலாம்.

570250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை, கி.பி. 17ஆம் நூற்றாண்டில் தோன்றிய திருவிளையாடற் புராணத்தில் சிவபிரான் பாமர மட்டத்துக்கு இறங்கிவந்து திருவிளையாடல் புரிவது கூறப்படுகின்றது. கச்சியப்ப முனிவரின் பேரூர்ப் புராணத்தில் சிவனும் உமையும் பள்ளன், பள்ளியாகத் தோன்றுவதாகக் காட்டப்படுகின்றது. கோயில் ஒழுகு என்னும் நூலில் பள்ளரின் சேரிப்பாட்டில் திருவரங்கநாதர் மனத்தைப் பறிகொடுத்ததாகச் சித்திரிக்கப்படுகின்றது.[36]

சோழர் காலத்தில் உழவரைச் சிறப்பிக்கும் நூல்களான ஏர்எழுபது, திருக்கைவிளக்கம் முதலானவையும் தோன்றின. அவை பிற்காலத்தில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு பள்ளு நூல்கள் தோன்றுவதற்கு ஓரளவாயினும் முன்னோடிகளாக விளங்கியிருக்கலாம்.

அதேவேளை, மூன்றாம் குலோத்துங்கனின் இருபத்து நான்காவது ஆட்சியாண்டிற் (கி.பி.1199) பொறிக்கப்பட்ட சாசனம் ஒன்றிலே[37] பள்ளுப் பாடல் என்னும் குறிப்புக் காணப்படுகிறது. சாசனத்திற் குறிப்பிடப்படுகின்ற பள்ளுப் பாடலுக்கும், பள்ளு இலக்கியத்துக்கும் தொடர்புள்ளதா என்பது தெரியவில்லை. எனினும், கி.பி. 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் பள்ளு என்ற சொல் பயன்படுத்தப்படத் தொடங்கிவிட்டது என்பது மட்டும் உறுதி.

## (இ) பள்ளு இலக்கியமும் பிறதுறைத் தொடர்புகளும்

பள்ளு இலக்கியம் பற்றி நுனித்து நோக்குமிடத்து, அது பல்துறைத் தொடர்புகளையும் தன்னகத்தே கொண்ட இலக்கியமாக விளங்குவதைக் காணலாம். நாட்டார் இலக்கியம், நாடகம், இசை முதலான பிற துறைகளின் சங்கமத்தோடு வளர்ச்சி பெற்ற பொதுமக்கள் சார்பு இலக்கியமாக அது அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு மொழி இலக்கியங்களின் வரலாற்றிலும் செந்நெறி இலக்கியமும், நாட்டார் இலக்கியமும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டு வளர்ச்சியெய்திய நிலையையே காணமுடிகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றிலும் இதே நிலையினைக் காணமுடியும். நாட்டார் இலக்கியங்கள் பாமரமக்களின் உள்ளத்து உணர்வுகளை உள்ளது உள்ளவாறே புலப்படுத்துகின்றன. பாமர மக்களின் உள்ளத்திலும், நாவிலும் உருவாகி, அவர்களாலேயே பேணப்பட்டும் வந்துள்ளன. பேச்சுவழக்குச் சொற்கள் இடம்பெறுவதும், எளிமைத்தன்மை காணப்படுவதும், இசையினிமை துலங்குவதும், பாடலடிகள் திரும்பத் திரும்ப வருவதும் அவற்றின் இயல்பான பண்புகளாக விளங்குகின்றன.

செந்நெறி இலக்கியம் பற்றிய செய்திகள் பலவற்றைத் தெரிவிக்கும் தொல்காப்பியம், நாட்டார் இலக்கியம் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளது. தொல்காப்பியர் புலன் என்பது பற்றிக் கூறுவன, நாட்டார் இலக்கியத்தோடு தொடர்புபடுத்தக்கூடியனவாக விளங்குகின்றன. அது தொடர்பாக இளம்பூரணர், பேராசிரியர் ஆகியோர் கூறிய உரைவிளக்கங்களும்[38] தொல்காப்பியர் காலத்திலும், அதற்கு முன்னரும் நாட்டார் இலக்கியங்கள் வழக்கில் இருந்துள்ளன என்பதை உணர்த்துகின்றன.

நாட்டார் இலக்கியங்கள் செந்நெறி இலக்கியங்களைப் பாதிப்பதும், செந்நெறி இலக்கியங்கள் நாட்டார் இலக்கியங்களைப் பாதிப்பதும் இலக்கிய வரலாறுகள் தெரிவிக்கின்ற செய்திகளாகும். தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரையிலும், நாட்டார் இலக்கியத்தின் செல்வாக்கு காலந்தோறும் செந்நெறி இலக்கியங்களைப் பாதித்து வந்தமைக்குச் சான்றுகள் பல காணப்படுகின்றன.[39]

மேலும், கலித்தொகைப் பாடல்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூரலாம். அப்பாடல்கள் தாழ்நிலையிலுள்ள மாந்தரையும் பாத்திரங்களாகக் கொண்டுள்ளதோடு, நாட்டார் பாடல்களின் எளிய அமைப்பையும், பேச்சுவழக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களைப் பயன்படுத்தும் போக்கினையும் கொண்டவையாகவும் விளங்குகின்றன. கலித்தொகைப் பாடல்கள் நேரடியாகப் பள்ளு இலக்கியத்தின் தோற்றத்துக்குப் பணிசெய்தன அல்ல. ஆயினும், தாழ்நிலைப் பாத்திரங்கள் படைக்கப்படவும், நாட்டார் இலக்கிய அமைப்புப் பின்பற்றப்படவும் அவை தம்மளவில் முன்மாதிரியாக விளங்கின எனலாம்.

பழந்தமிழ் இலக்கியங்களில் சிலப்பதிகாரம் நாட்டார் இலக்கியக்கூறுகளை அதிகமாகத் தன்னகத்தே கொண்டு அமைந்துள்ளது. அதில் இடம்பெற்றுள்ள சில நாட்டார் இலக்கியக் கூறுகள், பிற்காலத்திற் பள்ளு இலக்கியக்கூறுகள் சிலவற்றுக்கு முன்மாதிரியாக விளங்கியிருக்கலாம் எனவும் கருதமுடிகிறது. சிலப்பதிகார நாடுகாண்காதையிற் குறிப்பிடப்படும் விருந்திற்பாணி, ஏர்மங்கலம், முகவைப்பாட்டு ஆகியவற்றை இவ்வகையில் தொடர்புபடுத்தி நோக்கலாம்.[40] இவை சிலப்பதிகாரக் காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கிய உழவுத்தொழிலுடன் தொடர்பான நாட்டார் பாடல் வடிவங்கள் எனத் தெரிகின்றது.

பள்ளு என்ற பெயருடனும் சில நாட்டார் பாடல்கள் வழக்கில் இருந்துள்ளன. பண்டிப்பள்ளு, குருவிப்பள்ளு, கடல்நாச்சியம்மன் பள்ளு முதலானவை பள்ளு என்ற பெயரில் இலங்கையில் நாட்டார் பாடல்களாக வழங்கிவந்துள்ளன.

பொதுவாக, இலக்கியகர்த்தாக்கள் மக்கள் தொடர்பை அதிகம் அவாவிய காலகட்டங்களில் நாட்டார் இலக்கியங்கள் முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம். பக்தி இயக்க காலத்திலும் இதே நிலையைக் காணமுடிகிறது. அதன்பின்னர். பள்ளு இலக்கியங்கள் தோன்றிய காலத்திலும் இதேபோன்ற நிலையை அவதானிக்க முடிகிறது. நாட்டுப் பாடல்களின் செல்வாக்கு மேல்நிலைப்பாடல்களில் ஊடுருவிப் பாய்கிறது என்றால், ஏதோ ஒரு வகையில் சமூகத்தின் மேல்தள அம்சங்களிடையே ஒரு நெருக்கடி உருவாகியிருப்பதைப் பொதுவாகக் காணலாம் என்பர், கோ.கேசவன்.[40அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் பாடல்களின் பல்வேறு அமைப்பு முறைகளும் பள்ளு இலக்கியத்தில் நேரடியாகப் பாதிப்புச் செலுத்தியுள்ளமையையும் காணமுடிகிறது. மழைபெய்ய ஆயத்தமாகும்போது பாடப்படும் நாட்டார் பாடல்கள் எவ்வாறு பள்ளு இலக்கியத்தினைப் பாதித்துள்ளன என்பதைப் பின்வரும் பாடல் காட்டுகின்றது:

"படபடத்து பூமியெல்லாம் பதறமழை வருகுது
கடகடன்னு வானமெல்லாம் கரியநிற மாகுது
இடியிடித்து மின்னல்மின்ன எங்கும்மழை பெய்யுது
துடிதுடித்து வானமெல்லாம் கடுகடுத்து நிக்குது"[41]

இதேபோன்று, பள்ளு நூல்களிலும் மழைக்குறி தோன்றுவது பற்றிய பாடல்கள் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, முக்கூடற் பள்ளில் இடம்பெறும் பாடலொன்றை நோக்கலாம்:

"ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்று தேகுறி - மலை
யாள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே
நேற்று மின்றுங் கொம்பு சுற்றிக்
காற்ற டிக்குதே - கேணி
நீர்ப் படு சொறித்த வளை
கூப்பிடு குதே
சேற்று நண்டு சேற்றில் வளை
ஏற்ற டைக்குதே - மழை
தேடி யொரு கோடி வானம்
பாடி யாடுதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்று திரு மாலழகர்க்
கேற்ற மாம்பண்ணைச் – சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப் பாடித்
துள்ளிக் கொள்வோமே."[42]

வயல் வேலைகளில் நாற்றுநடுகையும் முக்கியத்துவம் வாய்ந்தது. பெண்கள் வயலில் உழைக்கும்போது, தமது களைப்பை மறப்பதற்காகப் பாடிக்கொண்டு செயற்படுவது வழக்கமாகும். நாற்றுநடுகையின்போதும் அவர்கள் பாடிக்கொண்டு செயற்படுவர். அவ்வாறு நாற்றுநடும்போது பாடப்படும் நாட்டார் பாடல்களும் பலவுள்ளன. உதாரணமாகப் பின்வரும் பாடலை நோக்கலாம்:

"மயிலை எருது பூட்டி – அண்ணன்
வயலை உழுதிட்டான்
வயலை உழுதிட்டான்
வாழை சம்பா நாத்தெடுத்து
வகையா நடுங்கோடி
வகையா நடுங்கோடி." [43]

பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் பெண்கள் நாற்று நடும் பகுதியில் நாட்டார் பாடல்களின் செல்வாக்கைக் காணமுடிகிறது.

நாட்டார் பாடல்கள் சக்களத்திகளுக்கிடையில் நடைபெறும் போராட்டங்களையும் சுவையாக எடுத்துக்காட்டும். இதற்கு எடுத்துக்காட்டாக, இரு நாட்டார் பாடல்களைக் குறிப்பிடலாம்:

"சண்டையின்னா சண்டைங்க – இது
சக்களத்தி சண்டைங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்களத்தி சண்டையில – நான்
திங்கபோறேன் கொட்டைங்க."[44]

"சக்களத்தி கட்டபுட்டு ஏலேலம்படி ஏலம் அது
சாக்கடத்தான் சோறுபோல ஏலேலம்படி ஏலம்
அல்லாருஞ் கட்டபுட்ட ஏலேலம்படி ஏலம்
ஏத்தி இறக்குங்கடி ஏலேலம்படி ஏலம்
சக்களத்தி கட்டபுட்ட ஏலேலம்படி ஏலம்
சாக்கடைலே கொட்டுங்கடி ஏலேலம்படி ஏலம்."[45]

முதற்பாடல், தனது இரு மனைவியருக்கிடையே பிரச்சினைகள் ஏற்பட்டபோது, ஒரு கணவன் பாடுவதாக அமைந்தது. மற்றப் பாடல், சக்களத்திகளுக்கு இடையேயுள்ள பிரச்சினையால், ஒருத்தி மற்றவளைப் பரிகாசம் செய்வதாக அமைந்தது. பள்ளு இலக்கியத்தில் மூத்தபள்ளி – இளையபள்ளி ஆகியோருக்கு இடையிலான சக்களத்திப் போராட்டம்124563 முதன்மைபெற்று விளங்குகிறது. இத்தகைய சக்களத்திப் போராட்டம் தொடர்பான சித்திரிப்புக்கு நாட்டார் இலக்கியங்களே அடிப்படையாக அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டார் இலக்கியங்களிற் பிறிதொரு செய்தியையும் காணலாம். பெண்கள் சிலர் மருந்திட்டு ஆண்களை மயக்குவர் என்றும், அவ்வாறு மயக்குபவர் பெரும்பாலும் பொதுமகளிரே எனவும் அவற்றிற் கூறப்படுகிறது. "தாசி வச்ச கைமருந்து தலையிலே தாவிடிச்சு",[46] "தாசி மருந்தாலே பெத்த தாயை மறந்தானே"[47] என்பன போன்ற நாட்டார் பாடல் அடிகள் இதனை உணர்த்து கின்றன. பொதுமகளிர் வசியக்கலையில் வல்லவர்களாகவும், வசிய மருந்து கொடுத்து ஆண்களைத் தமது வலையிற் சிக்கவைப்பவர்களாகவும் நாட்டார் பாடல்கள் குறிப்பிடுகின்றன.[48] பள்ளு இலக்கியத்தில், தனது கணவனுக்கு வசிய மருந்து கொடுத்து இளையபள்ளி மயக்கி, தன்னிடமிருந்து பிரித்து விட்டாள் என மூத்தபள்ளி கோபிப்பதாகச் சித்திரிக்கப்படுவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தமனைவியின் நோக்கில், தனது கணவனின் இளையமனைவி, வசிய மருந்து கொடுத்து மயக்கும் பொதுமகளாகவே தென்படுகிறாள். இவ்வாறு, பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் இத்தகைய அம்சத்திற்கு நாட்டார் இலக்கியங்களே அடிப்படையாக விளங்குகின்றன.

நாட்டார் இலக்கியத்திற் பரிகாசப் பாடல்களும் இடம்பெறுவதைக் காணலாம். பெரும்பாலும் திருமணச் சடங்குகளில் மாப்பிள்ளையைப் பெண்கள் பரிகாசம் செய்து பாடுவதாக அவை அமைந்துள்ளன. இத்தகைய திருமணப் பரிகாசப் பாடல்கள் பற்றிக் குருவிக்கரம்பை சண்முகம் குறிப்பிடுமிடத்து,

"ஆரம்பகாலத்தில் இப்பரிகாசப் பாடல்கள் ஆடவரும் பெண்டிரும் ஒருவரையொருவர் கேலி செய்து பாடும் போக்கில் தோன்றியிருக்கலாம். காலப்போக்கில் திருமண விழாவில் சடங்குகள் இடம்பெற்றபோது இப்பாடல்களைப் பாடுவதும் ஒரு சடங்காகவே ஆகிவிட்டது எனலாம்"[49]

என்று கூறுகின்றார். இத்தகைய பரிகாசப் பாடல்களை ஆண்களும் பெண் களுமாகப் பாடியிருக்கக் கூடும். அல்லது, உழைத்துக் களைத்திருக்கும் வேளைகளில் பொழுது போக்குக்காக ஆண்கள் மாத்திரமோ, அல்லது பெண்கள் மாத்திரமோ தம்போக்கிற் பாடியிருக்கலாம். பின்னர், குருவிக்கரம்பை சண்முகம் குறிப்பிட்டுள்ளமை போன்று, திருமணச் சடங்குகளில் பயன்படுத்தப்படத் தொடங்கியிருக்கக் கூடும். இவ்வாறான பரிகாசப் பாடல்கள் இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் காணப்படும் நாட்டார் பாடல்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் நாட்டார் பாடல்களில், ஆணைப் பெண் பரிகாசம் செய்யும் பாடலொன்றை நோக்கலாம்:

"முப்பத்தி ரெண்டிலே
மூணுபல்லுத் தான்மீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகக் கறுப்புநிறம் - ஒரு
காலுமல்லோ முடமவர்க்கு."[50]

தமிழ்நாட்டில் மாப்பிள்ளை ஏசலாக விளங்கும் திருமணப் பரிகாசப் பாடலொன்று பின்வருமாறு அமைந்துள்ளது:

"அரிசி அரிச்சாப் போல
அஞ்சாறு பல்லுகளாம்
பருப்பு கடைஞ்சாப் பல
பல்நிறைய பாசைகளாம்."[51]

பள்ளு நூல்களில் பண்ணைக்காரன் பற்றிய வருணனை தொடர்பான பாடல்களோடு இத்தகைய பாடல்களைத் தொடர்புபடுத்தி நோக்கும்போது, இவை அவற்றுக்கு முன்னோடியாக விளங்கியுள்ளமையை உணர்ந்து கொள்ளலாம்.[52]

கணவனிடம் காணப்படும் குறைகளை மனைவி கூறுவதாக அமைந்த நாட்டார் பாடல்களும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம்:

"நத்தையின்னா சட்டி திம்பான்
நாத்துகட்டு தூக்க மாட்டான்
கூளுன்னா கொடம் குடிப்பான் - என் தங்கமே
குமிஞ்ச வேலையைச் செய்ய மாட்டான்."[53]

பள்ளு இலக்கியத்திலும் பள்ளனின் நடத்தை பற்றி மூத்தபள்ளி பண்ணைக்காரனிடம் முறையிடும்போது, அவனைப் பற்றிய பல குறைகளையும் எடுத்துச்சொல்வாள். இவ்வாறு அமைந்த பாடலொன்றை இவ்விடத்து நோக்கலாம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கட்டின மாட்டைத் – தொட்டவி ழான்ஒருக்
காலுந்தான் உழக் – கோலுங்கை தீண்டான்
தொட்டியர் காளை – மட்டிபோல் வெந்துநான்
சோறிட் டாலுங்கண் – ஏறிட்டும் பாரான்
வட்டில் வாய்வைக்கில் – சட்டிகொண் டோங்கும்
மருதூர ராளை – விருதுக்கே வைத்தான்
பெட்டியால் வாரிப் பட்டடை நெல்லெலாம்
பேய்த்தண் ணீருக்குத் – தேய்த்தான்கா ணாண்டே."[54]

இவற்றின் வாயிலாக, கணவனைப் பற்றி மனைவி குறை கூறுவதாக விளங்கும் நாட்டார் பாடல்களுக்கும், மூத்தபள்ளி பள்ளனைப் பற்றிக் குறைகூறும் பள்ளுப் பாடல்களுக்கும் இடையிலான நெருக்கமான தொடர்பினை அறிந்துகொள்ளலாம்.

வேளாண்மையோடு தொடர்புடைய ஒரு நிகழ்ச்சியாக விளங்குவது, கும்மி கொட்டிப் பாடுதலாகும். மழை பெய்ய வேண்டுமெனத் தெய்வங்களை வேண்டிக் கும்மிப் பாடல்கள் பாடப்படுவதுண்டு. பள்ளு நூல்களிலும் மழைவேண்டிப் பள்ளியர் கும்மிப் பாடல்கள் பாடியாடித் தெய்வத்தை வழிபடுவதாகக் காட்டப்படுகின்றது.[55]

ஏலவே நோக்கியவாறு, பல வகையில் நாட்டார் இலக்கியங்களைத் தழுவிப் பள்ளு இலக்கியம் அமைந்துள்ளது. "ஏனெனில், நாட்டார் பாடல்களில் கூட்டு வாழ்க்கையினதும் கூட்டு முயற்சியினதும் உணர்வு உள்ளூர இருக்கின்றது."[56] வேளாண்மை உழைப்பாளரான பள்ளர் சமூகத்திடமும் இத்தகைய கூட்டுணர்வு இயல்பாகக் காணப்பட்டது. இதனால், நாட்டார் இலக்கியங்களோடு நெருக்கமான தொடர்புகொண்ட பள்ளு இலக்கியத்திலும் கூட்டு வாழ்க்கை, கூட்டு முயற்சி பற்றிய அம்சங்கள் இயல்பாகவே இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளு இலக்கியத்திற் பயன்படுத்தப்பட்ட யாப்பு வகைகளிலும் நாட்டார் இலக்கியப் பாதிப்பினைக் காணமுடிகிறது. சிந்து, கண்ணிகள், கும்மி முதலான நாட்டார் இலக்கியம் தொடர்பான யாப்புகள் பள்ளு இலக்கியத்திற் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாட்டார் இலக்கியங்கள் பாமர மக்களின் வாழ்வியல் நிலைகளை எடுத்துக் காட்டுவனவாக விளங்குகின்றமையால், எளிமையான யாப்புகளே பயன்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம். பள்ளு இலக்கியத்திலும் சமுதாயத்தின் அடிநிலை மக்களான பள்ளர் சமூகத்தின் வாழ்வியல் அம்சங்கள் புனைந்துரைக்கப்பட்டுள்ளன. அதனால், அவற்றை இயல்புடன் எடுத்துக்காட்டும் முறையில் நாட்டார் இலக்கிய யாப்பமைதிகளும் அவ்விலக்கியத்திற் பயன்படுத்தப் பட்டுள்ளன.

நாட்டார் இலக்கிய அடிப்படைகளையும் தன்னகத்தே கொண்டு தோற்றம் பெற்ற பள்ளு இலக்கியத்தின் இயல்பு பற்றிப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை பின்வருமாறு குறிப்பிடுவர்:

"உழவருழத்தியரது வாய்ப்பாட்டாக நின்றுவிடாது புலவர்களாலியற்றப்பெற்ற பிரபந்தவடிவாயமைந்ததாலே இந்நூற் பொருளுக்கு நூதனமான இயல்புகள் சில ஏற்பட்டன. முதலாவது கொச்சைத்தன்மை நீங்கி ஓரளவிலே நாகரிகத்தை இது பெற்றது. இரண்டாவதாக பிரபந்தவிலக்கணத் திற்கேற்பக் குறிப்பிட்டவொரு நெறியை மேற்கொண்டு தொடங்கி இடைநிகழ்ந்து சென்று, முடிவுபெற்று அமைந்தது. மூன்றாவதாக, தமிழ்மக்களுட் பெரும்பாலாரிடையே இது பரவத் தொடங்கியது. இப் பிரபந்தவகையினை மக்கள் கற்றுப் பாடி இன்புறத் தொடங்கினர். நான்காவதாக, பிரபந்தவமைப்பிலே நாடகச் சுவை பலபடியாகப் பெருகுவதாயிற்று. இதனாலே இப் பிரபந்தம் நடித்துக் காட்டத்தக்கதாய் முடிந்தது. ஆகவே, இதனைக் கற்றுப் பாடியின்புற்று தமிழ் மக்கள் நடித்துக் கண்டும் இன்புறுவாராயினர். 'பள்ளு நாடகம்' என்ற வழக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது எழுந்தது. மேற்கூறிய நல்லியல் புகளால் பள்ளுப்பிரபந்தம் தமிழ்நாட்டிற் பெரிதும் பிரசாரம் எய்துவதாயிற்று."[57]

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் கூற்றின் வாயிலாக, நாட்டார் இலக்கிய அடிப்படையில் தோன்றிய பள்ளு இலக்கியம், நாட்டார் பாடல்களுக்குரிய கொச்சைத்தன்மை நீங்கிப் புதுமெருகு பெற்று, சிற்றிலக்கிய வடிவம் பெற்று, நாடகச்சுவை பெற்று மக்களைச் சென்றடைந்தமை பற்றி உணரமுடிகின்றது.

இதுவரை நோக்கியவற்றின் வாயிலாக, நாட்டார் இலக்கியக் கூறுகள் பள்ளு இலக்கியத்தின் தோற்றத்துக்கு ஆதாரமாக இருந்துள்ளன என்பதை அறியலாம். மேலும், பல்வேறு நாட்டார் வழக்காற்றியல் அம்சங்களும் பள்ளு இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சிறுதெய்வ வழிபாடு, பாமர மக்களின் நம்பிக்கையுணர்வுகள், சடங்குகள், கலைகள், பழக் கவழக்கங்கள் முதலியவை அவ்வாறு அமைந்துள்ள நாட்டார் வழக்காற்றியல் அம்சங்களாக விளங்குகின்றன.

பள்ளு இலக்கியத்தின் தோற்றத்துக்கு ஆதாரமாக அமைந்தவற்றுள், அது பயன்படுத்திக்கொண்ட நாடகக் கூறுகளும் அடங்குகின்றன.

சிலப்பதிகார அரங்கேற்றுகாதையின் உரையில் அடியார்க்கு நல்லாரால் குறிப்பிடப்படும் பழம்பாடலில், "ஐயனுக்குப் பாடும் பாட்டாடும் படுபள்ளி"[58] என்ற தொடர் இடம்பெற்றுள்ளது. மு.அருணாசலம் அவர்கள் இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போது, "இவற்றுள், ஆடும்படுபள்ளி என்பது பள்ளியரும் பள்ளரும் சேர்ந்து ஆடும் கூத்தெனக் கொள்ளலாம்"[59] என்று குறிப்பிடுகின்றார். அதேவேளை, மிகப் பழைய காலத்தே உழவுத் தொழிலில் ஈடுபட்ட பள்ளியர் பள்ளர் வாழ்க்கையையொட்டிய கூத்துவகைகள் பாட்டும் தாளமும் பொருந்திப் பாமர மக்களால் விரும்பி ஆடப்பட்டு வந்தன"[60] என்று கலைக்களஞ்சியம் தெரிவிப்பதும் இங்கு நினைவுறுத்தற்குரியது. இவற்றினின்றும், வேளாண்மைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலில் ஈடுபட்டிருந்த பள்ளர் சமூகத்தினர், தமது உழைப்பினால் ஏற்பட்ட களைப்பை நீக்குவதற்காக ஆடல்பாடல்களில் ஈடுபட்டு வந்துள்ளமை தெளி-வாகிறது. பள்ளர் சமூகத்தினர் முன்னர் ஆடிய கூத்து, மேலும் மெருகுபெற்றுப் பள்ளு இலக்கியத்தின் தோற்றத்துக்கு அடிப்படையாக அமைந்தது என்று கருதலாம்.

மேலும், பள்ளு இலக்கியத்துக்கும், தெருக்கூத்துக்கும் இடையே காணப்படும் ஒற்றுமைகளும் கவனத்திற்கு எடுக்கப்படக்கூடியவை. பாத்திரங்கள் தம்மைத் தாமே அறிமுகப்படுத்தல், ஏசல் அமைப்பு முதலியவை, இவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டுகின்றன. பாத்திர அறிமுகத்தைப் பொறுத்தவரையில், தெருக்கூத்தின்போது அரங்கிலே தோன்றுகின்ற பாத்திரங்கள், தம்மைப் பற்றிய விபரங்களைத் தெரிவித்துத் தம்மைத் தாமே அறிமுகப் படுத்துவது வழக்கமாகும். இதே தன்மையினை, நாடகச் சார்பு கொண்ட பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் ஆகியவற்றிலும் காணமுடிகின்றது.[61]

தெருக்கூத்திற் காணப்படும் ஏசல் தொடர்பான அம்சங்கள் பற்றி அ.அறிவுநம்பி கூறுவனவும் மனங்கொள்ளத்தக்கன:

"தெருக்கூத்தில் தர்க்கப் பாடல்கள் இடம்பெறுவது பொதுவான கூறாகும். நடைபெறும் கதை நிகழ்ச்சிகளில் எவ்வாறேனும் இரண்டு முரண்பட்ட பாத்திரங்கள் சந்தித்துத் தங்களுக்குள்ள கருத்து மோதல்களை இவ்வாறு தர்க்கம் செய்வது கூத்திற்கு விறுவிறுப்பை உண்டுபண்ணும். தர்க்கம், ஏசல், சம்வாதத்தரு, பிரதியுத்தரத்தரு போன்ற தலைப்புக்களில் விவாதப் பாக்கள் தெருக்கூத்திலிடம்பெறும். இத்தகைய ஏசற் பாட்டுக்களே தனியொரு நாடகங்களாக வளர்ந்தன எனலாம்."[62]

பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் மூத்தபள்ளி - இளையபள்ளி ஏசல் அமைப்புக்குத் தெருக்கூத்தில் இடம்பெறும் தர்க்கப் பாடல்கள் முன்னோடியாக அமைந்தன எனக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சில அம்சங்களும் பள்ளு இலக்கியம் தொடர்பாக நோக்கத்தக்கவை. குறிப்பாக, பரதர் நாட்டியம் பற்றித் தெரிவிக்கும்போது கூறுகின்ற பத்துவகை ரூபங்களில் ஒன்றான வீதி என்பதில், இரு பாத்திரங்களே இடம்பெறும். தெலுங்கிலே அமைந்துள்ள கோலாகலாபம் என்னும் வடிவத்தில், ஓர் அந்தணனுக்கும், இடையர்குலப் பெண்ணொருத்திக்கும் இடையிலான உரையாடல் அமைப்பு இடம்பெறுகின்றது. தமிழில் தத்துவராயரும் இருவர்க்கு இடையிலான உரையாடற் போக்கிற் புதிய சிற்றிலக்கியங்களைப் பாடியுள்ளார்.[63] இவையும் பள்ளு இலக்கியத்தின் நாடகத்தன்மைக்கு ஒருவகையில் முன்னோடி களாக விளங்கியிருக்கலாம்.

மேலும், தமிழ்நாட்டில் மராட்டியரால் அறிமுகப்படுத்தப் பட்ட இலாவணி என்னும் விவாத நிகழ்ச்சியும் இங்கு நோக்கத்தக்கது. இதுவும் பள்ளு இலக் கியத்தில் இடம்பெறும் பள்ளியர் ஏசலுக்கு ஒருவகையில் அடிப்படையாக இருந்திருக்கலாம்.[64] இந்நிகழ்ச்சியின்போது, எரிந்த கட்சி—எரியாத கட்சி என இரு பிரிவுகளாகப் பிரிந்துநின்று விவாதம் செய்வர். எரிந்த கட்சியினர் சிவனைப் புகழ்ந்து, மன்மதனை இகழ்ந்துரைப்பர். எரியாத கட்சியினர் மன்மதனைப் புகழ்ந்து, சிவனை இழித்துரைப்பர். இலாவணியின் இத்தகைய அம்சங்கள் பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் பள்ளியர் ஏசல் பகுதிக்கு ஓரளவு முன்னு தாரணமாக விளங்கியிருக்கலாம். பள்ளு நூல்களில் மூத்தபள்ளி, இளையபள்ளி ஆகியோர் தத்தம் தெய்வத்தைப் புகழ்ந்து, மற்றவரின் தெய்வத்தைப் பழித்துரைப்பன, எரிந்த கட்சி- எரியாத கட்சி விவாதத்தை ஒத்துள்ளன.

பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் உரையாடல்களும் நாடகப்பாங்கில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பள்ளு இலக்கியத்தில் இயல்பாகவே இணைந்துள்ள நாடகப்பாங்கு, அதற்கு ஒரு தனிப்பொலிவினை ஏற்படுத்து கின்றது. அதனால், பிற்காலத்தில் இவ்விலக்கியத்தைத் தழுவி நாடகங்களும் இயற்றி நடிக்கப்பட்டன. இதற்குச் சான்றாக, என்னயினாப் புலவர் இயற்றிய முக்கூடற்பள்ளு நாடகம் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை நோக்கியவற்றினின்றும், பல்வேறு நாடகக் கூறுகளும் பள்ளு இலக்கியத்தின் தோற்றத்துக்குத் துணையாக அமைந்துள்ளன என்பது தெளிவாகின்றது.

பள்ளு இலக்கியம் தனக்கு முன்னையவும், தன்காலத்தனவுமாகிய இயல், நாடகம் சார்ந்த கூறுகளைக் கொண்டு விளங்குகின்றமை போன்றே, இசை சார்ந்த கூறுகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இதனால், முத்தமிழ்க் கூறுகளையும் கொண்டமைந்த சிற்றிலக்கியமாகப் பள்ளு தோற்ற மளிக்கின்றது. பள்ளு இயல்பாகவே இசையுடன் தொடர்பு கொண்ட இலக்கியமாகும். பள்ளு நூல்களில் இடம்பெறும் கூற்றுக்கள் இதனை உறுதிசெய்கின்றன.[65] சிந்து, கண்ணிகள், கும்மி முதலான இசைத்தொடர்புடைய யாப்புக்கள் பள்ளு நூல்களிற் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில பள்ளு நூல்களில் இடை யிடையே கீர்த்தனங்களும் இடம்பெற்றுள்ளன.[66] பள்ளு இலக்கியத்திற் கர்நாடக இசை, அவ்விலக்கியத்தின் இசைப் பண்புக்குத் துணையாக அமைந்துள்ளவாற்றினைக் கலாநிதி ஏ.என்.பெருமாள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> "கர்நாடக இசையமைப்பு தமிழ்நாட்டில் புகழ் பெற்றபின் இவை பாடப்பெற்றுள்ளதினால் பாடலிசையமைப்பு அதன்படி அமைந்துள்ளது. சுவைகளுக்கு ஏற்ற ராகங்களைக் கொண்டு பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. இசையின் உருவாகப் பள்ளு இயன்றுள்ளது." [67]

இதன் மூலம் கர்நாடக இசை எந்த அளவுக்குப் பள்ளு இலக்கியத்தின் இசையமைதிக்குத் துணையாக அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது. இவ்விலக்கியத்தில் நாடகக் கூறுகளை உயிரோட்டமுறச் செய்வதில், அதன் இசையமைதி முதன்மைப் பங்கு வகிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஈ) பள்ளு இலக்கியத்தின் வளர்ச்சியும் தேக்கமும்

தமிழ்நாட்டுப் பள்ளு இலக்கியங்களைப் பொறுத்தவரையில், தஞ்சாவூர், திருநெல்வேலி மாவட்டங்களிலேயே பெரும்பாலான பள்ளு நூல்கள் தோன்றியுள்ளன. கிறித்துவ மதத்தின் பரம்பல் வேகமும் இம்மாவட்டங்களிலேயே அதிகமாகக் காணப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. திருவாரூர்ப்பள்ளு, மன்னார் மோகனப்பள்ளு, சீர்காழிப்பள்ளு, திருவிடைமருதூர்ப் பள்ளு போன்றவை தஞ்சாவூர் மாவட்டத்திலும், முக்கூடற்பள்ளு, குருகூர்ப்பள்ளு, வை கரைத் துரையவர்கள் பேரில் பட்பிரபந்தம், திருமலை முருகன் பள்ளு, திருச்செந்திற் பள்ளு, குற்றாலப் பள்ளு முதலானவை திருநெல்வேலி மாவட்டத்திலும் தோன்றியுள்ளன. [68]

புவியியல் அமைப்பின் காரணமாகவும், ஒத்த பண்பாட்டுக் கூறுகளினாலும் தமிழகத்தோடு ஈழம் நெடுங்காலத் தொடர்புகளைக் கொண்டுள்ளது. இதன் காரணமாகத் தமிழ் மக்கள் நீண்ட காலமாக ஈழத்தில் வாழ்ந்துவரும் வாய்ப் பினைப் பெற்றுள்ளனர். இதுமாத்திரமன்றி, தமிழகத்திலிருந்து அவ்வப் போது ஈழத்திற் குடியேற்றங்களும் ஏற்பட்டன. இத்தகைய காரணங்களினால், தமிழகத்துச் செந்நெறி இலக்கியங்களும், நாட்டார் இலக்கியங்களும் ஈழத்திலும் அறிமுக மாவதற்குப் பெருவாய்ப்பு ஏற்பட்டது.

பள்ளு இலக்கியம் தொடர்பான தமிழகத்தின் அரசியல், பொருளாதார, சமுதாய நிலைமைகள் முற்றுமுழுதாக ஈழத்துக்கும் பொருந்தும் எனக் கூறமுடியாவிடினும், சில பொதுக்கூறுகள் இவ்விலக்கியம் ஈழத்திலும் கால்கொள்வதற்குத் துணையாக அமைந்தன. கி.பி. 13ஆம் நூற்றாண்டின் பின்னர், தமிழக அரசியல் நெருக்கடிகளினால், அங்கிருந்து ஈழத்துக்கு வந்து குடியேறிய பல சமூகத்தினருள் வேளாளரும் அடங்குவர். ஈழத்தின் தமிழ்ப் பகுதிகளில் அவர்கள் குடியேறியபோது, தமது வயல்களில் உழைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளர்களையும் அழைத்துவந்து குடியேற்றி, இங்கும் தமது வேளாண்மைப் பொருளாதார மேம்பாட்டிற்கு அவர்களைக் கருவியாகப் பயன்படுத்தத் தொடங்கினர். பள்ளு இலக்கியம் ஈழத்திலே தோன்றுவதற்குப் பள்ளர் சமூகத்தினர் இங்கு குடியேறியமை முதன்மையான காரணமாகும். மேலும், கி.பி. 16ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் ஐரோப்பியரின் தலையீட்டுக்கு இடமளித்தன. அந்நூற்றாண்டு முதல் பிற இனத்தவர், பிற சமயத்தவரின் தலையீடுகள், உள்ளூர்ப் பண்பாடு போற்றப்படவும், பிரதேச உணர்வு சிறப்பிடம் பெறவும் அடிப்படையாக அமைந்தன. ஈழமும் அடிப்படையில் தமிழகத்தைப் போன்று வேளாண்மைப் பொருளாதாரத்தைச் சார்ந்த நாடாகவே விளங்குவது குறிப்பிடத்தக்கது. அதற்கேற்ப, நிலப்பிரபுத்துவச் சமுதாய அமைப்பே இங்கும் நிலவியது. தமிழக நிலப்பிரபுத்துவ அமைப்பின் தூல நிறுவனங்களாக விளங்கிய கோயில்கள் பெற்ற அதேயளவு சிறப்பிடத்தினை ஈழத்தில் அவை பெறவில்லையாயினும், அவற்றின் செல்வாக்கு மக்களிடத்துப் பாதிப்பினை ஏற்படுத்தவே செய்தது. இவற்றின் அடிப்படையில் நோக்குமிடத்து, பள்ளு இலக்கியம் ஈழத்திற் காலூன்ற முடிந்தமையை விளங்கிக்கொள்ள முடிகிறது.

கி.பி. 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகள் பள்ளு இலக்கியத்தின் வளர்ச்சிக் கட்டமாக விளங்கின. நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு, நிலப்பிரபுக்கள், குறுநிலத் தலைவர்கள் பாட்டுடைத் தலைவர்களாகும் நிலை, சமய நிறுவனங்களின் வளர்ச்சி, அதன் விளைவாக ஏற்பட்ட சமய உணர்வு, சாதியமைப்புப் பெற்றிருந்த முக்கியத்துவம், வேளாண்மை உழைப்பாளரான பள்ளர் சமூகத்தின் நிலை முதலானவை பள்ளு இலக்கியத்தின் வளர்ச்சிக்கு புறநிலைக் காரணங்களாக அமைந்தன.

பள்ளு இலக்கியம் அடிப்படையில் நிலப்பிரபுத்துவ அமைப்பைப் பேணும் இலக்கியமாகவே விளங்குகிறது. ஆயினும், நிலப்பிரபுத்துவ அமைப்புக்குள் இயன்றவரையில் மக்கள் சார்பு இலக்கியமாகவும் அது தன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்காட்டிக்கொள்கிறது. ஆங்கிலேயர் வருகையினால் தமிழ்நாட்டில் புகத் தொடங்கிய புதிய பொருளாதார அமைப்பு, பண்பாட்டுத் தாக்கங்கள் முதலியவை வேரூன்றும் வரையும் பள்ளு இலக்கியம் வளர்ச்சிபெற்று வந்தது. பெரும்பாலான சிற்றிலக்கியங்கள் நிலவுடைமைக்குச் சார்புடையனவாக விளங்கியபோது, பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் முதலியவை இயன்றவரையில் தமது மக்கள் சார்பினை வெளிப்படுத்தின. பள்ளு இவற்றுட் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இவ்விலக்கியம் மக்கள் சார்பினைக் கொண்டிருந்தமையாலேயே இருபதாம் நூற்றாண்டின் யுகக்கவியாக விளங்கிய சுப்பிரமணிய பாரதியையும் அது கவர்ந்து, சுதந்திரப்பள்ளினைப் பாடவைத்தது.

பாமர மக்களான பள்ளரைப் பாத்திரங்களாகக் கொண்டிருக்கும் அதே வேளை, சிருங்காரரசம் பொருந்தியதாகவும் பள்ளு இலக்கியம் விளங்கியதால், நிலப்பிரபுக்கள், குறுநிலத் தலைவர்கள் முதலியோரும் இவ்விலக்கியத்தின்பால் ஈடுபாடு காட்டினர். இத்தகையோரைப் புகழ்ந்து, அவர்களின் பொருளாதார நிழலில் வாழக்கூடிய நிலையைக் கவிஞர்களும் எதிர்பார்த்தனர். எடுத்துக்காட்டாக, செண்பகராமன் பள்ளு, பொய்கைப் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு, கட்டிமகிபன் பள்ளு, கஞ்சமி செட்டியன் பள்ளு, சாமத்தூார் மாவாணராய சுப்பேந்திரன் பள்ளு, வடகரைத்துரையவர்கள் பேரில் பட்பிரபந்தம் போன்றவற்றில் நிலப்பிரபுக்களே பாட்டுடைத்தலைவர்களாக விளங்குகின்றனர். பாட்டுத்தலைவர்களாக மாத்திரமன்றி, இத்தகைய சிறு தலைவர்கள் பள்ளு நூல்களில் ஆங்காங்கு புகழப்படுவதையும் காணலாம். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக முக்கூடற்பள்ளைக் குறிப்பிடலாம். இந்நூலில் ஆறை அழகப்ப முதலியார், திருமறைக்கொழுந்துப் பிள்ளையன், காவை அம்பலவாணர், காவை வடமலையப்ப பிள்ளையன், சாத்தூார் பெரியநம்பி ஐயங்கார், தாண்டவராயன், மகராசன் ஆகியோர் புகழ்ந்துரைக்கப்படுவதனைக் காணலாம். பள்ளு இலக்கியத்தின் வளர்ச்சியில் நிலப்பிரபுக்களின் பங்கும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், சமய நிறுவனங்களான கோயில்களின் வளர்ச்சிநிலையும் பள்ளு இலக்கியத்தின் வளர்ச்சியோடு தொடர்புகொண்டதாக அமைந்திருந்தது. பெரும் பாலான பள்ளு நூல்கள் கோயில்களைச் சார்ந்த பின்னணியைக் கொண்டுள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலும் தமிழ் இலக்கியத்திலும் சமயச் சார்பு முதன்மைபெற்று விளங்கியது. இத்தகைய சூழ்நிலை பள்ளு இலக்கியம் வளர்ச்சிபெறத் துணைபுரிந்தது. சாதியமைப்புத் தமிழர் சமுதாயத்திற் பெற்றிருந்த முக்கியத்துவமும் இவ்விலக்கிய வளர்ச்சிக்கு ஒருவகையிற் காரணமாயிற்று. பள்ளு நூலாசிரியர்கள் அனைவரும் சாதியமைப்பின் உறுதிப்பாட்டைப் பேண வேண்டும் என்ற நிலைப்பாடு கொண்டவராக ஒருபுறத்திலும், அடிநிலை மக்களின் வாழ்நிலையை இலக்கியத்திற் பயன்படுத்தவேண்டும் என்ற சிந்தனை கொண்டவராக மறுபுறத்திலும் விளங்கினர்.

ஆயினும், கி.பி. 19ஆம் நூற்றாண்டின் பின்னர், பள்ளு இலக்கியத்தின் வளர்ச்சியில் தேக்கநிலை ஏற்படத்தொடங்கியது. அவ்வாறான நிலைமை ஏற்பட்டமைக்குரிய காரணங்களைப் பேராசிரியர் ஆ.சதாசிவம் பின்வருமாறு விளக்குவர்.

"பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னர் பள்ளு நூல்கள் தோன்றாமைக்குப் பல காரணங்கள் உள. அவற்றுள் முக்கியமானது, மக்கள் வாழ்க்கை முறைகளில் ஏற்பட்ட பெரும் மாறுதல்களின் பயனாய்ச் சாதிப்பிரிவினையை வலியுறுத்தும் கோட்பாடுகளைக் கொண்ட இலக்கிய வகைகளை மக்கள் எழுதுவதற்குச் சமுதாயத்தின் ஆதரவு கிட்டாமையாகும். இரண்டாவதாக சமுதாயச் சீர்திருத்தத்தின் கருவியாக இலக்கியச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் இந்நாளில் கணவன் மனைவியிருவரின் கைப்பட்டுத் திண்டாடும் வாழ்க்கை முறையைச் சித்திரிப்பது ஓர் இலட்சிய நெறியாகாது என நூலறிபுலவர் கருதிப் பள்ளு முதலிய பிரபந்த வகைகளைப் பாடத் தலைப்பட்டிலர் எனக் கூறலும் பொருந்தும்." [69]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை மாத்திரமன்றி, ஆங்கிலேயரின் வரவின் பின்னர், நிலப்பிரபுத்துவ முறையிலிருந்து சமுதாயம் முதலாளித்துவ முறைக்கு மாற்றமுற்றுச் சென்றமையும், கி.பி. 19ஆம் நூற்றாண்டிலிருந்து தோன்றத் தொடங்கிய அரசியல் சார்ந்த விடுதலையுணர்வும், பெண்விடுதலை முதல், அதனோடு தொடர்புபட்ட சமுதாய முன்னேற்ற நோக்கங்களும், முன்னர் இருந்த முதன்மை நிலையிலிருந்து சமயம் பின்னடைந்தமையும், பழையமுறையில் அமைந்திருந்த வேளாண்மையமைப்பு கைவிடப்பட்டு, நவீன தொழில் நுட்பங்கள் மேற்கொள்ளப்படத் தொடங்கியமையும் பள்ளு இலக்கியம் தனது வளர்ச்சி நிலையினின்றும் தளர்ச்சியடைவதற்குக் காரணங்களாக அமைந்தன.

## *சான்றாதாரம்*


1. Krishnaswami, A. (1964) **The Tamil Country under Vijayanagar,** Annamalai Nagar, Annamalai University. pp. 98-106.

2. நீலகண்ட சாஸ்திரி, K.A. (1966) **தென் இந்திய வரலாறு** (தமிழாக்கம்: அரசாங்க பாஷைப்பகுதி) கொழும்பு, அரசாங்க பாஷைப்பகுதி வெளியீட்டுப் பிரிவு. பக். 263–269.

சத்தியநாதய்யர், R., பாலசுப்பிரமணியன், D. (1960) **இந்திய வரலாறு (இரண்டாம் பாகம்),** அண்ணாமலைநகர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம். பக். 157–160, 162–165.

கிருஷ்ணசாமி, அ. (1977) **விஜயநகரப் பேரரசின் வரலாறு (கி.பி. 1565 வரை),** சென்னை, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம். பக். 19–41.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nilakanta Sastri , K.A., Venkataramanayya, N. (1946) **Further Sources of Vijayanagara History,** Madras. University of Madras. pp. 9-54.

3. Vide: Sathyanathaier, R. (1956) **Tamilaham in the 17th Century,** Madras, University of Madras.

4. தாப்பர், ரொமிலா (1973) **வரலாறும் வக்கிரங்களும்** (தமிழாக்கம் : நா. வானமாமலை), சென்னை, நியூசெஞ்சரி புக் ஹவுஸ். பக். 103.

5. பிள்ளை, கே.கே. (1958) **தென்இந்திய வரலாறு (முதற் பகுதி),** சென்னை, பழனியப்பா பிரதர்ஸ். பக். 192,197.

6. சதாசிவபண்டாரத்தார், தி.வை. (1974) **பிற்காலச் சோழர் வரலாறு,** அண்ணாமலைநகர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம். பக். 561, 562, 568, 569

பிள்ளை, கே.கே. **மேலது,** பக். 192–195.

7. இடங்கை – வலங்கைப் பிரிவுகள் தொடர்பான விரிவான விளக்கத்துக்குக் காண்க:

Stein Burton (1980) **Peasant State and Sociaty in Medieval South India.** Delhi, Oxford University Press. pp.173-215.

8. நீலகண்ட சாஸ்திரி, க.அ. (1965) **தமிழர் பண்பாடும் வரலாறும்** (தமிழாக்கம்: "சிட்டி"), சென்னை, வாசகர் வட்டம். பக். 136.

9. மார்க்ஸ், அ. (1983) **சிற்றிலக்கியங்கள் சில குறிப்புகள்,** குடந்தை, சிலிக்குயில் வெளியீடு. ப. 34.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பாட்டியல் நூல்கள் கூறும் பொருத்தங்களில் ஒன்றாக வருணப் பொருத்தம் என்பது அமைந்துள்ளது. இப்பொருத்தம் பற்றி ந.வீ.செயராமன் பின்வருமாறு குறிப்பிடுவர்: "மனித குலத்திற்குச் சாதி வகுத்த மரபினைப் பின்பற்றி எழுத்துக்கும் சாதி வகுத்து அவற்றைப் படைத்த தெய்வங்களின் பெயர்களையும் கூறி விளக்குவதே வருணப்பொருத்தம் எனப்படும்." காண்க: ந.வீ.செயராமன் (1977) **பாட்டியல் திறனாய்வு,** சிதம்பரம், மணிவாசகர் நூலகம். ப.40.

11. இவ்வாறு வரிவிலக்கு அளிக்கப்பட்ட நிலங்களாகச் சோழர் காலத்திலே தேவதானம், பிரம்மதேயம், கோயில் நிவந்தங்கள் எனக் குறிப்பிடப்பட்ட நிலங்கள், ஆண்டார்களைக் காக்க ஒதுக்கப்பட்ட நிலம், பிராமணர்களுக்குச் சோறிடுவதற்கு அளிக்கப்பட்ட நிலம் முதலானவை காணப்பட்டன. சில இடங்களில், மக்கள் வாழும் நிலத்துக்கும் தனிப்பட்ட நிலவுடைமை யாளர்களுக்கு உரிய நிலங்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. வேறு சில நிலங்களைப் பொறுத்தவரையில், இறைகாவல், இறைதிரவியம் என்ற பெயர்களிற் குறிப்பிட்ட அளவு வரியினை முன்வைப்பாகப் பெற்று, அந்நிலங்களை இறையிலி நிலங்களாக மாற்றியமைத்ததும் உண்டு. காண்க: மே.து. ராசுகுமார் (1975 அக்டோபர்) "சோழர் காலத்தில் வரி எதிர்ப்பு இயக்கம்", **ஆராய்ச்சி,** மலர் 4, இதழ் 1, பாளையங்கோட்டை. ப. 67.

12. **மேலது.** ப. 69. மே.து. ராசுகுமாரின் கட்டுரையிற் சோழர் காலத்தில் இடம்பெற்ற வரி எதிர்ப்பு இயக்கம் பற்றிய முழு விபரங்களும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

13. Krishnaswami, A. **op.cit.** p. 103.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. சுப்பிரமணியன், தி.நா. (1968) "கல்வெட்டுக்களில் கண்ட நாடு, ஊர் ஆட்சிமுறை", **கையேடு** (இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு), சென்னை. ப.176.

15. கைலாசபதி, க. (1979) **அடியும் முடியும்,** சென்னை, பாரி நிலையம். ப. 309.

16. கைலாசபதி, க (1979) **சமூகவியலும் இலக்கியமும்,** சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். ப. 140,141.

17. நிலப்பிரப்புத்துவம் தொடர்பான பொதுவிளக்கத்துக்குக் காண்க: **International Encyclopedia of the Social Sciences** (Ed. David L. Sills) Vol.5 (1968) United States of America, The Macmillan Company& The Free Press, pp, 393- 402.

18. தில்லைநாதன், சி. (1979) "தமிழ் இலக்கிய வடிவங்கள்", **இளங்கதிர்** பேராதனை, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம். ப. 29.

19. Kulathuran, G. (1980) **Folk influence in Tamil Literature with special reference to Pallu, Kuravanchi and Nondi Natakam,** Unpublished Ph.D.Thesis submitted to the University of Kerala. pp.254,270.

20. மார்க்ஸ், அ. **மு.கு.நூா.** பக். 47,48.

21. **புறம்.** செய். 369, 373.

22. **மேலது.** செய். 368.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. **மேலது.** செய். 371.

24. அருணாசலம், மு. (1975) **தமிழ் இலக்கிய வரலாறு (ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பாகம்),** மாயூரம், காந்தி வித்தியாலயம். ப. 282.

25. **பு.வெ.மா.,** வாகைப்படலம்: நூ. 32.

26. **மேலது.** உதாரணச் செய்யுள்.

27. **சிலப்.** நாடுகாண் காதை. வரி: 138, 139.

28. **மேலது.** அடி. நல். உரை.

29. சுப்பிரமணியன், ச.வே. (1984) **தமிழ் இலக்கிய வகையும் வடிவும்,** சென்னை, தமிழ்ப் பதிப்பகம். ப. 390.

30. **மேலது.** ப. 391.

31. **ஞானப்பள்ளு** (1968) ஆ. சதாசிவம் பதிப்பு, கொழும்பு, அரசு வெளியீடு. ப.XVi.

32. **பரி.** செய். 9.

33. **முக்கூடற்பள்ளு** (1940) மு.அருணாசலம் பதிப்பு, சென்னை, ப.II.

34. அருணாசலம், மு. (1972) **தமிழ் இலக்கிய வரலாறு (பத்தாம் நூற்றாண்டு),** மாயூரம், காந்தி வித்தியாலயம். ப.233.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. **பன்னிருபாட்டியல்.** நூா. 216.

36. **கலைக்களஞ்சியம் (தொகுதி இரண்டு)** (1955), சென்னை, தமிழ் வளர்ச்சிக் கழகம். ப. 363.

36அ. கேசவன், கோ. (1981) **பள்ளு இலக்கியம் – ஒரு சமூகவியல் பார்வை,** சிவகங்கை, அன்னம் வெளியீடு. பக். 38–40.

37. **S.I.T.I.** (1955) Vol. III, Part 1, No. 1190.

38. **தொல்.** செய்யுளியல், நூா. 233, இளம்பூ. உரை; நூா. 241. பேரா. உரை.

39. காண்க: ஜகந்நாதன், கி.வா. (பதிப்பு) (1958) **மலையருவி,** தஞ்சாவூர், தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு. பக்.12–22.

அழகப்பன், ஆறு. (1980) **நாட்டுப்புறப்பாடல்கள்–திறனாய்வு,** மறுபதிப்பு, சென்னை, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். பக். 170–182.

சண்முகசுந்தரம், சு. (1980) **நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு,** இரண்டாம் பதிப்பு, சிதம்பரம், மணிவாசகர் நூலகம். பக். 1–50.

40. **சிலப்.** நாடுகாண் காதை. வரி: 127–137.

40அ. கேசவன், கோ., **மு.கு.நூா.** ப. 34.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. நாசீர் அலி, மீஅமு. (1979) "திருச்சி மாவட்டம்," **தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு,** ச.வே. சுப்பிரமணியன் பதிப்பு, சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். ப.56.

42. **மு.கூ.ப.** செய். 35.

43. அய்யாசாமி, ர. "சென்னை," **தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு,** ப.22.

44. இராமநாதன், ஆறு. (1982) **நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்,** சிதம்பரம், மணிவாசகர் நூலகம். பக். 270, 271 (அடிக்குறிப்பு: 40).

45. **மேலது.** பக். 301, 302 ( அடிக்குறிப்பு: 210).

46. சக்திவேல், சு. (1983) **நாட்டுப்புற இயல் ஆய்வு,** சிதம்பரம், மணிவாசகர் பதிப்பகம். ப. 254.

47. இராமநாதன்,ஆறு., **மு.கு.நூா.** ப. 271 (அடிக்குறிப்பு: 44).

48. **மேலது.** பக். 74, 75.

49. சண்முகம், குருவிக்கரம்பை, "திருமணப் பரிகாசப் பாடல்கள்," **தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு.** ப. 350.

50. வித்தியானந்தன், சு. (பதிப்பு) (1962) **மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்,** இரண்டாம் பதிப்பு, கொழும்பு. ப.60.

51. வளவன், சா, "செங்கற்பட்டு மாவட்டம்," **தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு.** ப. 210.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம்:

"மாறு கண்ணும் பருத்திப்பைக்
கூறு வயிறும்—கீரை
மத்துப்போல் தலையும் சுரை
வித்துப்போல் பல்லும்
நீறு போல்வெளுத்த வூளை
யூறு நாசியும்—தட்டி
நெரித்தமாங் கொட்டை போல்ச
அரித்த வாயும்
தாறு மாறாய் மீசையில்அஞ்
சாறு மயிரும்—தூங்கற்
சண்ணைக் கடாப் போல்நடையும்
மொண்ணை முகமும்
வேறு கீறி ஒட்டவைத்த
ஏறு காதுமாய்—நேமி
வீர னார்முக் கூடற்பண்ணைக்
கார னார்வந் தார்." (**மு.கூ.ப.** செய்.53)

53. சண்முகானந்தம், சொ., "தஞ்சை மாவட்டம்", **தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு.** ப. 134.

54. **மு.கூ.ப.** செய். 57.

55. எடுத்துக்காட்டாக: **தி.மு.ப.** செய். 29-39; **க.அ.ப.** செய். 61.

56. கைலாசபதி, க. (1979) **சமூகவியலும் இலக்கியமும்,** சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். ப. 159.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. **குருகூர்ப்பள்ளு** (*1932*) வெ.நா. ஸ்ரீநிவாஸய்யங்கார் பதிப்பு, ஆழ்வார் திருநகரி, பக். vi-vii (எஸ்.வையாபுரிப்பிள்ளையின் முன்னுரை).

58. **சிலப்.** அரங்கேற்றுகாதை, அடிநல். உரைவிளக்கம். வரி: 24.

59. **முக்கூடற்பள்ளு**, மு.அருணாசலம் பதிப்பு. ப.*8* (முன்னுரை).

60. **கலைக்களஞ்சியம்** (தொகுதி இரண்டு) ப. *363*.

61. முத்துச்சண்முகன், அசோகன், வீ. (*1981*) **நொண்டி நாடகங்கள்**, மதுரை, முத்துப் பதிப்பகம். ப.*110*.

62. அறிவுநம்பி, அ. (*1981*) "நாட்டுப்புற நாடகங்களில் தெருக்கூத்தின் செல்வாக்கு," **ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு–கருத்தரங்கு ஆய்வுக் கட்டுரைகள், தொகுதி 3,** சென்னை, உலகத் தமிழாராய்ச்சி மன்றம். ப. *166*.

63. வெங்கடராமன், கு., "தத்துவராயர் பாடிய புதுமைப் பிரபந்தங்கள்," **மேலது.** ப. 565.

64. Kulathuran, ***op. cit.*** pp. 314,315.

65. சான்றாகக் காண்க: "முக்கூடல் மாலழகர் பள்ளிசைக்கே" (**மு.கூ.ப.** காப்பு), "திருமலை வேலனை வழுத்து பள்ளிசை யெனும் முறையாலே" (**தி.மு.ப.** செய்.4), "கறை தாவிய கண்டப் பெருமாள்மிசை சீர்பெற வுகந்த பள்ளேசலி னிசைபாட" (**தி.ப.** செய். *3*), "முருகன் பள்ளிசை பாடவே" (**க.ம.ப.** செய். *1*), "பேர்பூத்த சொக்கலிங்கப் பெத்தண்ணல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிசைக்கே" (**பொ.ப.** காப்பு), "செம்பொன் பதமேவிய வேத பள்ளிசை பாட" (**ஞா.ப.** செய். 8), "ஐங்கரன்மேற் பல்வளஞ்சேர் பள்ளினிசை பாடவே" (**ப.வி.ப.** காப்பு), "இனிய பள்ளிசைபாட" (**க.அ.ப.** செய். 4), "செந்தமிழாற் பள்ளினிசை செப்புதற்கு" (**த.க.ப.** காப்பு).

66. கீர்த்தனங்கள் இடம்பெறுவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகச் செங்கோட்டுப்பள்ளு விளங்குகின்றது. காண்க: செய். 283, 627, 930. முக்கூடற்பள்ளு. பொய்கைப்பள்ளு ஆகியவற்றில் இடையிடையே பாடல்கள் இராகம், தாளம் வகுக்கப்பட்டு அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. திருமலை முருகன் பள்ளில் இராகம், தாளம் அமைக்கப்படாமல், இசைப்பாடல் வடிவில் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பகுப்புக்களுடன் பாடல் இடம்பெற்றுள்ளது. செய். 125.

67. பெருமாள், ஏ. என். (1984) **தமிழர் இசை**. சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். ப. 589.

68. கேசவன்,கோ. **மு.கு.நூ.** ப. 59.

79. **ஞானப்பள்ளு**. பக். xxxiii - xxxiv (பள்ளுப் பிரபந்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும்).

UNIVERSITY OF PERADENIYA
2004-11-17
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் இயல்

# பள்ளு இலக்கியத்தின் அமைப்பு

## (அ) பள்ளு பற்றிய பொதுவிளக்கம்

பள் என்ற சொல், பள்ளர் என்னும் மக்கள் சமூகத்தையும், அம்மக்களைப் பாத்திரங்களாகக் கொண்டிருக்கும் நாடகத்தன்மை கொண்ட சிற்றிலக்கியத்தையும் காளி முதலிய தெய்வங்களுக்குப் பலி கொடுக்கும் காலத்திற் பாடப்படுகின்ற பண் வகையையும் குறிப்பிடுகின்றது.[1] பள் என்னும் சொல்லிலிருந்தே, பள்ளர் சமூகத்தைப் பாத்திரங்களாகக் கொண்டமைந்த இலக்கியத்துக்குப் "பள்ளு" என்ற பெயர் அமைந்தது.

பள்ளு இலக்கியத்தின் அமைப்பினை நோக்குவதற்கு முன், பள்ளு எனப் பெயர் கொண்ட பிற ஆக்கங்களையும் பற்றிக் கவனிப்பது இன்றியமையாதது. மலையாளத்திலே தோன்றிய தேவேந்திரப் பள்ளு என்பது, பள்ளு என்னும் பெயரால் விளங்கினும், தமிழ்ப் பள்ளு இலக்கியத்தின் அமைப்பினின்றும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இதுபற்றிக் கலாநிதி ச.வே.சுப்பிரமணியன் பின்வருமாறு விளக்குவர்:

"மலையாளத்தில் பழம்பாடல் வகையில் தேவேந்திரப்பள்ளு என அறியப்படுவது முழு ஒப்புமை காட்டவில்லை. பத்ரகாளி வழிபாட்டுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தொடர்புடையது. பாலக் காட்டில் காளிக்கெடுக்கும் மூன்று நாள் விழாவில் மூன்றாம் நாள் "மலமக்களி"யும் தொடர்ந்து தேவேந்திரப் பள்ளும் நிகழ்த்துகின்றனர். பாடல்களால் அமையும் இதனுடன் இணைந்து மலயன், பள்ளன், சக்கிலியன் என வேடமணிந்தவர் உடன் வருதலும் உண்டு. பள்ளு என்பதற்குத் தேவிக்கு விருப்பமான பலி முதலியன செய்யும்போது பாடும் இசை என்ற விளக்கம் அமைக் கின்றனர். பாடல்கள் தமிழாக அமைகின்றன என்பர். தேவேந்திரனைப் போன்று வெற்றிபெற்ற மன்னன் ஒருவன் பாடியது என்ற நிலையில் இது தோன்றியது என்பர்."[2]

இதுபோன்று, திருவரங்கம் கோயிலில் அரையர் பாடும் பள்ளுப் பாட்டுக்களுக்கும், பள்ளு இலக்கியத்துக்கும் இடையே வேறுபாடு காணப்படுவதை சு.வேங்கடராமன் சுட்டிக்காட்டியுள்ளார்:

"அரையர் பாடும் பள்ளுப்பாட்டு என்பது திருமாலின் புகழ்பாடும் பாடல்களே. இவற்றில் நேரடியான கவிக்கூற்றுப் பாடல்களும், அகப்பொருள் அமைப்பில்–மாந்தர் கூற்று முறையில் உள்ள பாட்டுக்களும் உள்ளன. இப் பாடல்கள் எளிய சொற்களில் உணர்ச்சிக்கூறு மிக்குள்ளன. இப்பாடல்களின் போக்கில் இயைபான நிகழ்ச்சித் தொடர்போ இணைப்பான கதைப்போக்கோ எதுவுமில்லை. பாடல்கள் தனிப்பாடல்களாக அமைந்து உள்ளன. எளிய மக்களான பள்ளர் சேரியில் வாழும் மக்களின் பாட்டு பள்ளு பாட்டு–என்பதே இதன் பொருளாகும். பெயரில் பள்ளு என்ற சொல்லை இப்பாடல்கள் பெற்றுள்ளனவேயன்றி இவற்றிற்கும் பள்ளு இலக்கிய வகைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை."[3]

இவ்வாறு, பள்ளு எனப் பெயர் கொண்டமையால் மாத்திரம், ஓர் ஆக்கம் பள்ளு இலக்கியம் ஆகிவிடாது என்பது குறிப்பிடத் தக்கது. திருநீலகண்டன் பள்ளு, வைத்தியப்பள்ளு முதலானவையும் பள்ளு எனப் பெயர் பெற்று விளங்கினும், அவை பள்ளு இலக்கிய வகையைச் சார்ந்தவை அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளு நூல்களுள் காலத்தால் முந்தியது எது என்பது பற்றி ஆய்வாளர் மத்தியிற் கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன. முதலில் எழுந்த பள்ளு நூல் முக்கூடற்பள்ளு என்று கருதுவோரும்,[4] திருவாரூர்ப் பள்ளே முதலில் தோன்றியது எனக் கருதுவோரும்,[5] ஈழத்துப் பள்ளு நூலான கதிரைமலைப்பள்ளே முதலில் இயற்றப்பட்டது என்று கருதுவோரும்[6] உள்ளனர். எனினும், பள்ளு நூல்களுள் மிகச் சுவையும், சிறப்பும் பொருந்தியதாக விளங்குவது முக்கூடற்பள்ளு ஆகும்.

பிற சிற்றிலக்கியங்களினின்றும் கதையமைப்பில் வேறுபட்டதாகப் பள்ளு இலக்கியம் அமைந்துள்ளது. தொடக்கம் முதல் இறுதிவரை பள்ளருடன் தொடர்பான வாழ்வியல் அம்சங்களை உள்ளடக்கியதாக இவ்விலக்கியம் அமைந்துள்ளது.

பள்ளு இலக்கியத்தின் அமைப்பினை முழுமையாக நோக்குவதற்கு, அதன் கதையமைப்பே ஆதாரமாக உள்ளது. அதன் பொதுவான கதையமைப்பு பின்வருமாறு: பாட்டுடைத் தலைவருக்கு உரிய பண்ணையில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடும் பள்ளனுக்கு இரு மனைவியர் உளர். மூத்த மனைவி அவனது உறவினளாகவும், அவன் வாழும் அதே ஊரைச் சேர்ந்தவளாகவும் இருப்பள். மேலும், அவனது சமயத்தைச் சார்ந்தவளாகவோ, அல்லது அவன் வணங்கும் தெய்வத்தை வழிபடுபவளாகவோ இருப்பாள். இளைய மனைவி வேற்றூரைச் சேர்ந்தவளாக இருப்பதோடு வேறொரு சமயத்தைச் சார்ந்த வளாகவோ, அல்லது பள்ளன் சார்ந்த அதே சமயத்துக்குள்ளேயே வேறொரு தெய்வத்தை வணங்குபவள் ஆகவோ இருப்பள். பள்ளன் இளைய மனைவிமீதே மையல் கொண்டவனாகி, முதல் மனைவியை வெறுத்து ஒதுக்குபவனாக இருப்பன். மழை பெய்து ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டு, வேளாண்மைக்குப் பொருத்தமான காலம் வந்தும்கூட, பள்ளன் தொழிலில் ஆர்வமின்றி, இளைய பள்ளியின் இல்லத்திலேயே தங்கியிருப்பது கண்டு, மூத்தபள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணைக்காரனிடத்து அவனைப்பற்றி முறையிடுவள். பண்ணைக்காரன் இளையபள்ளியிடம் சென்று பள்ளனைப்பற்றி வினவும்போது, அவள் கணவனை மறைத்து வைத்துக்கொண்டு, மூத்தபள்ளி வந்து பண்ணையைக் கவனிக்கச் செல்லுமாறு கூறியதனால், அவன் விடியற்காலையிலேயே எழுந்து சென்றுவிட்டதாகவும், இன்னும் அவன் வந்து சேரவில்லையெனவும் பொய்யு ரைப்பள். அதனையுணர்ந்த பண்ணைக்காரன் அவளைக் கோபிக்க, ஒளிந்திருந்த பள்ளன் வெளியே வந்து, பண்ணைக்காரனின் முன் தோன்றுவன். அச்சமயத்தில் உண்மையை அறியவேண்டி, பண்ணை வேலைகளைப் பற்றி எடுத்து ரைக்குமாறு பண்ணைக்காரன் பள்ளனிடம் கூறுவன். பள்ளன் முன்பின் யோசனையின்றிக் கற்பனையாக நெல்விதைவகை, மாட்டுவகை, உழவுக் கருவிகளின் வகை முதலானவற்றைத் தெரிவிப்பான். மீண்டும் பள்ளன் இளைய மனைவியின் இல்லத்திலேயே மகிழ்ந்திருந்து, பண்ணை வேலைகளில் அக்கறை செலுத்தாமல் இருப்பதை அறிந்த மூத்தபள்ளி, பின்னரும் தன் கணவனைப் பற்றிப் பண்ணைக்காரனிடத்து முறையிட்டு, அவனுக்குத் தண்டனை வழங்க வேண்டுவள். பண்ணைக்காரனும் அவ்வாறே பள்ளனைத் தொழுவில் மாட்டுவன். பின், பள்ளனின் வேண்டுதலுக்கு மூத்தபள்ளி மனமிரங்கி, தன் கணவனைத் தண்டனையினின்றும் விடுவிக்குமாறு கேட்டுக்கொள்வள். பள்ளன் விடுதலை பெற்ற பின்னர், பண்ணை வேலைகள் தொடர்பாகச் சரியான கணக்கைப் பண்ணைக்காரனிடம் ஒப்புவிப்பன். அதனையடுத்து, நல்வேளையிற் பள்ளருடன் இணைந்து உழுதொழிலை ஆரம்பிப்பன். அவன் உழுதொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, அவனை ஒரு மாடு முட்ட, அவன் மயங்கி வீழ, பள்ளியர் இருவரும் வருந்துவர். பின்பு, பள்ளன் புத்துணர்வுடன் எழுந்து, வேளாண்மை வேலைகளைக் கவனிப்பன். பள்ளரும், பள்ளியரும் வேளாண்மையில் ஈடுபடுவர். பயிர் வளர்ந்ததும் அறுவடை செய்வர். பள்ளன் பல்வேறு செலவுகளுக்கும் நெல் அளந்து கொடுப்பதோடு, பள்ளர் பள்ளியருக்கும் பகிர்ந்தளிப்பன். மூத்தபள்ளிக்கு அவன் சரியாக நெல் அளந்து கொடுக்காததனால், அவள் பிற பள்ளியர் முன் அவனைப் பற்றிக் குறை கூறுவள். இதனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அவளுக்கும், இளையபள்ளிக்கும் இடையில் ஏசல் தொடங்கும். இறுதியில் இருவரும் சமாதான முற்றுப் பாட்டுடைத் தலைவரை வாழ்த்தி, பள்ளனுடன் ஒன்றாக வாழ்வதாக உறுதி செய்துகொள்வர். இதனோடு, பள்ளு இலக்கியத்தின் கதைப்போக்கு நிறைவுபெறும்.

பள்ளு நூல்களின் அடிப்படைக் கதையம்சம் ஒரே முறையிலேயே அமைந்திருப்பினும், காலத்திற்கேற்பவும், அவ்வவ் நூலாசிரியரின் மனப்போக்குக்கும், நோக்குக்கும் ஏற்பவும் சிற்சில மாற்றங்கள் அவ்வப்போது ஏற்பட்டு வந்துள்ளன.[7] குறிப்பாக, கி.பி.பதினேழாம் நூற்றாண்டிலே தோன்றிய முக்கூடற் பள்ளினையும், கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தோற்றம் பெற்ற செங்கோட்டுப்பள்ளினையும் ஒப்புநோக்குவதன் வாயிலாக, இத்தகைய மாற்றங்களை இலகுவில் விளங்கிக் கொள்ளலாம். முக்கூடற்பள்ளிற் பள்ளியர் வரவு பற்றி முதலில் அறிமுகப்படுத்தப் படுகின்றது. அதனையடுத்து, பள்ளன் வரவுபற்றிக் கூறப்படுகின்றது. அதன்பின்னர், பள்ளன் தன் பெருமை கூறல், பள்ளியர் தத்தம் குடித்தரம் கூறுதல், பள்ளன் தனது குடித்தரம் கூறுதல் ஆகியவை அமைந்துள்ளன. இவற்றினையடுத்து, பள்ளியர் இருவரினாலும் தத்தம் நாட்டுவளமும், நகர்வளமும் கூறப்படுகின்றன. அதன்பின்பு, குயில் கூவுதல் என்ற பகுதி இடம்பெற்றுள்ளது. அதனைத்தொடர்ந்து, மழை பெய்யவேண்டும் என விரும்பிப் பள்ளர் தெய்வங்களைப் போற்றுதல், மழைக் குறியைத் தெரிவித்தல், மழைபெய்தல், ஆற்றுவரவு, பண்ணைக்காரன் வரவு, பண்ணைக்காரன் செயல், பண்ணைக்காரன் கூறுதல், மூத்தபள்ளி முறையிடுதல், இளையபள்ளியை வினாவுதல், அவள் மறுமொழி கூறுதல், பண்ணைக்காரன் கோபித்தல், பள்ளன் வெளிவருதல், அவன் கணக்குக் கூறுதல், பள்ளனைக் குட்டையில் அடித்தல், இளையபள்ளி வருதல், பள்ளனைக் கண்டு வருந்தல், பள்ளன் ஆறுதல் கூறுதல், மூத்தபள்ளி வருந்திக் கூறுதல், அவள் பண்ணைக்காரனை வேண்டல், பள்ளனை விடுவித்தல், அவன் பண்ணைக் கணக்கு வகை கூறல், நாள்பார்த்தல், பள்ளன் நாற்றுநடச்செல்லுதல், நாற்றுவளர்தல், நாற்றுப்பறித்தல், நடுகை, பயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைதல், அறுவடைசெய்தல், மூத்தபள்ளி சண்டையிடல், பள்ளியர் ஏசல், அவர்கள் சமாதானமாதல், வாழ்த்து ஆகியவை இடம் பெற்றுள்ளன.

ஆனால், காலத்தாற் பிந்திய செங்கோட்டுப்பள்ளில், பள்ளு இலக்கியத்துக்குரிய பொதுவான கதைக்கூறுகள் விரிவாகவும், சில வேறுபாடுகளுடனும் காணப்படுகின்றன. மற்றைய பள்ளு நூல்களின் மரபுக்கு மாறாக, இந்நூலிற் கோலுக்காரனின் வரவே முதன்முதலிற் கூறப்படுகின்றது. பள்ளன் தன் குடிப் பெருமை கூறுவது நூலின் ஆரம்பத்திலும், இடையிலும் அமைந்துள்ளது. நூலின் ஆரம்பத்திலே தானாகவும், இடையிற் பண்ணைக்காரன் கேட்டுக்கொண்டதன் பேரிலும் இவ்வாறு பள்ளன் தன் குடிப் பெருமை கூறுவது இடம்பெற்றுள்ளது. பள்ளியர் இருவரும் தத்தம் குடிப்பெருமை கூறுவதும் மற்றைய பள்ளு நூல்களிற் காணப்படுவது போன்று நூலின் ஆரம்பத்தில் அமையாது, பண்ணைக்காரன் கேட்டுக்கொண்டதற்கேற்ப அவர்கள் கூறுவது போன்று, நூலின் இடையிலேயே அமைந்துள்ளது. இவை போன்றே, பண்ணைக்காரன் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே இரு பள்ளியரும் தத்தமது நாட்டுவளம் கூறல், குயில் கூவுமாறு வேண்டல், பள்ளர் மழை வேண்டித் தெய்வங்களைத் தொழுதல் ஆகியவை நடைபெறுவதாக இப்பள்ளிற் காட்டப்பட்டுள்ளது. பள்ளு நூல்களின் முத்தாய்ப்பு நிகழ்வாக அமையும் மூத்தபள்ளி இளையபள்ளி ஆகியோருக்கு இடையிலான ஏசல், இந்நூலின் முற்பகுதியிலும், இறுதியிலுமாக இரு முறை இடம்பெற்றுள்ளது. இருபள்ளியரும் தத்தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுக்குமாறு தம் கணவனை வேண்டல், மூத்தபள்ளி கண்டித்ததனால் வருத்தமுற்ற இளையபள்ளியைப் பள்ளன் சமாதானம் செய்தல், கணவன் தன்னைக் கண்டித்தமையால் மூத்தபள்ளி தன் பிறந்தகம் செல்லல், இளையபள்ளியுடன் மாத்திரமே தன்னை வந்து சந்தித்த பள்ளனைப் பண்ணைக்காரன் கண்டித்து, மூத்தபள்ளியையும் அழைத்து வருமாறு கட்டளையிடுதல், பள்ளன் மூத்தபள்ளியை, அவளது பிறந்தகத்தினின்றும் அழைத்து வந்து, இரு மனைவியருடனும் இணைந்து பண்ணைக்காரனைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்தல், மழைவேண்டித் தெய்வங்களைத் தொழும்போது, மூத்தபள்ளி "சன்னதம்" கொள்ளுதல், ஆற்றில் வெள்ளம் பாயும்போது அணை கட்டுவதற்குச் சென்ற பள்ளன், இளையபள்ளியை நினைந்து ஓடக்காரனிடம் கூறி வருந்தல், மறு கரையில் இளையபள்ளி கணவனை எண்ணி வருந்துதல், பள்ளனுக்கும், மூத்தபள்ளிக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்திற் பள்ளனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கப்போவதாக மூத்தபள்ளி வஞ்சினம் கூறல், தன் கணவனைத் தண்டனையினின்றும் விடுவிக்குமாறு இளையபள்ளி பண்ணைக்காரனிடம் மன்றாட, அவன் அவளைக் கடிந்து மறுத்தல், பள்ளர் மாடு பிடித்தல், நூலின் முடிவிற் பள்ளியர் கும்மியடித்தல் முதலானவை இந்நூலின் கதையமைப்பிற் சேர்க்கப்பட்ட சிறப்புக்கூறுகளாகக் காணப்படுகின்றன.

செங்கோட்டுப்பள்ளின் கதையமைப்பில் இடம்பெறும் மேற்கண்ட சிறப்புக்கூறுகளை நோக்கும்போது, அதன் ஆசிரியரான பொன்னுச்செல்லையபாரதி, பள்ளு இலக்கியத்துக்குரிய பொதுக்கூறுகளோடு இணைந்தவகையில், குடும்ப வாழ்வுக்கு இன்றியமையாத சில கருத்துக்களையும், சமுதாய நம்பிக்கை களையும், பாமர மக்களின் சுவைக்குரிய செய்திகளையும் கூறுவதற்கு விரும் பியுள்ளமை தெளிவாகின்றது. தாம் கூறவந்த எந்தச் செய்திகளையும் பிற பள்ளு நூல்களை விடவும் விரிவாகவும், பாமர மக்களின் சுவைக்கேற்பவும் கூறவேண்டும் என நூலாசிரியர் விரும்பியுள்ளமையை நூலின் வாயிலாக உணரமுடிகின்றது. நூலாசிரியரின் இம்முயற்சி, நூலின் அமைப்பிலே தளர்ச்சியை ஆங்காங்கே ஏற்படுத்திவிடுகின்றது. அதனால், நூலாசிரியரிடத்துத் திறமை யிருந்தும், முக்கூடற்பள்ளிற் காணத்தகும் பள்ளு இலக்கியத்துக்குரிய கட்டுக் கோப்பையும், சுவையையும் இந்நூலிற் காணமுடியவில்லை.

பள்ளு இலக்கியத்தின் கதைக்கூறுகளின் அடிப்படையில், அதன் பொது அமைப்பினை மூன்று பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.[8] அவற்றில், முதற் பிரிவிற் காப்பு, கடவுள் வணக்கம், அவையடக்கம் முதலானவற்றையும், பள்ளன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியர் ஆகியோரின் தோற்றம், தத்தம் குடிப்பெருமைகளை அவர்கள் குறிப்பிடல் முதலானவற்றையும், பள்ளியர் இருவரும் தத்தம் நாட்டுவளம், நகர்வளம் முதலியன கூறுதல், குயில் கூவுதல் போன்றவற்றையும் அடக்கலாம். இவைய னைத்தும் நூலின் தோற்றுவாயாக அமைந்துள்ளன.

இரண்டாம் பிரிவு நூலின் மைய அமைப்பாக விளங்குகின்றது. மழை வேண்டித் தெய்வத்தைப் போற்றல், மழைபொழிதல், ஆற்றில் வெள்ளம் பாய்தல், பண்ணைக்காரன் அறிமுகம். பண்ணை வேலைகளிற் பள்ளன் அக்கறை செலுத்தாமை, மூத்தபள்ளியின் முறைப்பாடு, பள்ளன் தண்டனை அனுபவித்தல், விடுதலையடைதல், பண்ணையில் வேளாண்மை தொடங்கல் முதலானவற்றை அடக்கிக் கூறலாம்.

மூன்றாவது பிரிவில், பள்ளனை மாடுமுட்டல், அவன் மயக்கம் தீர்ந்து எழுந்து புத்துணர்வுடன் செயலாற்றத் தொடங்கல், வேளாண்மை நிகழ்ச்சிகள், பள்ளன் நெல் அளத்தல், மூத்தபள்ளியின் கோபம், பள்ளியர் ஏசல், அவர்கள் சமாதானமாதல் முதலானவற்றை அடக்கிக் கொள்ளலாம். இப்பிரிவு நூலை நிறைவு செய்வதாக அமைந்துள்ளது.

இவற்றுள், தோற்றுவாயாக அமைந்த முதற்பகுதி, பழந்தமிழ் இலக்கியக் கூறுகளைக் கொண்டும், பெரும்பாலும் செயற்கைத்தன்மை மிகுந்தும் காணப் படுகின்றது. குறிப்பாக, நாட்டுவளம், நகர்வளம் பற்றிக் கூறப்படுவன, பள்ளியர் பற்றிய வருணனைகள் என்பன இவ்வாறு அமைந்துள்ளன.

நூலின் மைய அமைப்பான இரண்டாம் பிரிவில் அடங்கும் கூறுகளை, அவற்றின் இயல்பு கருதி, இரு வகையாகப் பிரித்து நோக்க முடிகிறது. முதலாவது வகையில், மழையோடு தொடர்பான செய்திகள், ஆற்றில் வெள்ளம் பாய்தல் முதலானவற்றை அடக்கலாம். இரண்டாவது வகையில், பண்ணைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரன் பற்றிய அறிமுகம் முதல், பண்ணையில் வேளாண்மைச் செயல்களை ஆரம்பித்தல் வரையிலான செய்திகளை அடக்கலாம். இவற்றில், முதலாவது வகை, பள்ளரின் வேளாண்மைச் செயற்பாடுகளுக்குத் தோற்றுவாயாகவும் விளங்குகிறது. இரண்டாவது வகை, பள்ளரின் வாழ்வியல் பற்றிய உள்ள டக்கமாகவும் அமைந்துள்ளது.

பள்ளு இலக்கியத்தை நிறைவு செய்யும் கூறுகளைக் கொண்ட மூன்றாவது பிரிவையும் மேலும் இரு வகைகளாகப் பிரித்து நோக்கலாம். பள்ளனை மாடுமுட்டி வீழ்த்துவதும், அவன் பின்னர் புத்துணர்வுடன் எழுந்திருந்து பண்ணையில் வேளாண்மை வேலைகளைக் கவனிப்பதும் முதல், அவன் நெல் அளந்து கொடுத்தல் வரையிலான செய்திகளை முதல் வகையில் அடக்க முடிகிறது. இது நூலின் வேளாண்மை தொடர்பான நிகழ்ச்சிகளை முடித்து வைப்பதாக விளங்குகிறது. மூத்தபள்ளி பள்ளனைக் கோபித்தல், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் பள்ளியர் ஏசல், அவர்கள் பின்னர் சமாதானமாதல் ஆகியவை பள்ளரின் குடும்பப் பூசல்களை முடிவுக்குக் கொண்டு வந்து, நூல் நிறைவு பெறுவதற்குத் துணையாக அமைந்துள்ளன.

## (ஆ) பள்ளு இலக்கியமும் பாட்டுடைத் தலைவர்களும்

பள்ளு நூல்களின் அமைப்பை ஆதாரமாகக் கொண்டு, அவற்றின் ஆசிரியர்களது மூல நோக்கத்தைக் கவனத்திற் கொள்ளும்போது, பள்ளர் குடும்பம் ஒன்றின் வாழ்வியற் கூறுகளைச் சித்திரிப்பதன் வாயிலாக, தாம் விழையும் பாட்டுடைத் தலைவரின் பெருமையைப் புலப்படுத்துவதே அவர்களின் கருத்தாக இருந்துள்ளமையை உணரமுடிகின்றது. பள்ளு இலக்கியத்தின் பாட்டுடைத் தலைவர்களாகக் கொள்ளப்படுபவர்கள் கடவுளராகவோ, சமயத் தலைவராகவோ, நிலப்பிரபுக்களாகவோ இருப்பதுண்டு. சான்றாக, முக்கூடற்பள்ளு, திருவாரூர்ப்பள்ளு, கதிரைமலைப்பள்ளு, பறாளைவிநாயகர்பள்ளு, திருமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் பள்ளு, கண்ணுடையம்மன்பள்ளு, செங்கோட்டுப்பள்ளு முதலானவற்றில் கடவுளர் பாட்டுடைத் தலைவராக விளங்குகின்றனர்.[9] குருகூர்ப்பள்ளு, ஞானப்பள்ளு போன்றவற்றிற் சமயத்தலைவர் பாட்டுடைத்தலைவராகக் காணப்படுகின்றனர்.[10] செண்பகராமன் பள்ளு, தண்டிகைக்கனகராயன்பள்ளு, பொய்கைப்பள்ளு முதலியவற்றில் நிலப்பிரபுக்கள் பாட்டுடைத்தலைவராக விளங்குகின்றனர்.[11] சில பள்ளு நூல்களிற் குறிப்பிட்ட ஒரு சாதியினரே பாட்டுடைத் தலைமைக்குரியவராகக் கொள்ளப்படுவதுண்டு. மாந்தைப்பள்ளு, வைசியப் பள்ளு முதலானவை இதற்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. சமயஞான விளக்கங்களைக் கொண்டு விளங்கும் வேதாந்தப்பள்ளு இவற்றினின்றும் வேறுபட்ட அமைப்பைக் கொண்டதாக அமைந்துள்ளது.[12]

பள்ளு நூலாசிரியர்கள் தமது பாட்டுடைத்தலைவரின் பெருமையைப் பல்வேறு உத்திகள் வாயிலாகப் புலப்படுத்துகின்றனர். கதை நிகழிட வருணனையின்போதும், நூலின் கதைப்போக்கினூடாகவும், நிகழ்ச்சிவிளக்கப் பாடல்களின் வாயிலாகவும், கதைப்போக்குக்குத் தொடர்பற்ற வகையிலும் பாட்டுடைத் தலைவர்களின் பெருமை வெளிப்படுத்தப்படுகின்றது.

பள்ளு நூல்களிற் பாட்டுடைத் தலைவரின் பெருமை, கதைநிகழிடமான பண்ணை வயல்களைச் சுட்டும்போது பலவாறாகப் புலப்படுத்தப்படுகின்றது.[13] பாட்டுடைத்தலைவரையும், அவரோடு தொடர்பான செய்திகளையும் பெரும்பாலும் கதைப்போக்கினூடே கூறிச்செல்லும் மரபும் காணப்படுகின்றது. குறிப்பாக, பள்ளன் தன் குடிப்பெருமை கூறுதல், இயற்கை நிகழ்வுகள் பற்றிய வருணனைகள் (மழைபொழிதல், ஆற்றில் வெள்ளம் பாய்தல், பயிர் வளர்தல் முதலானவை), நெல்வகை, மாட்டுவகை, உழுதொழிற்கருவிகள் முதலானவற்றின் கணக்கைப் பள்ளன் ஒப்புவித்தல், பள்ளியர் ஏசல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். கதையில் அடுத்து நிகழவிருக்கும் நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் குறிப்புரையாக அமைந்த நிகழ்ச்சிவிளக்கப் பாடல்களின் மூலமும் பாட்டுடைத் தலைவரின் பெருமை சுட்டப்படுகின்றது. சான்றாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேவாதி தேவர்திரு முக்கூட லின்பெருமை
நாவால் வழுத்திவள நாட்டியல்பு கூறியபின்
பூவா சனைசேர் புரிகுழலார் பூங்குயிலைக்
கூவாயென் றந்தக் குயில்மொழியைக் கொண்டாரே"[14]

என்ற பாடலைக் குறிப்பிடலாம். கதையின் போக்குக்கு எவ்வகையிலும் தொடர்பற்ற முறையிலும் பாட்டுடைத்தலைவரின் பெருமை கூறப்படுகின்றது. இவ்வகையில், நூலின் இடையில் அமையும் துதிப்பாடல்கள், அகத்துறைப்பாடல்கள், அறிவுறுத்தற் பாடல்கள் முதலானவை விளங்குகின்றன.

## (இ) பள்ளு இலக்கியத்திற் பாத்திர அமைப்பு

பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் பாத்திரங்களின் அமைப்புப் பற்றியும் நோக்குவது இன்றியமையாதது. இவ்விலக்கியத்திற் பள்ளன், அவனின் மனைவியரான மூத்தபள்ளி, இளையபள்ளி, அவர்கள் மீது மேலாண்மை செலுத்தும் பண்ணைக்காரன் ஆகிய நான்கு பாத்திரங்கள் முதன்மை யிடத்தைப் பெற்றுள்ளன. அவை ஒவ்வொன்றும் தமக்கெனச் சில சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளன. குடும்பத் தலைவனான பள்ளன் சமயப்பற்றுள்ளவனாக விளங்குவதோடு, பாட்டுடைத் தலைவர்மீது பற்றும், மதிப்பும் மிகுந்தவனாகவும், தனது மனைவியரில் இளையபள்ளிமீது விரும்பம் கொண்டவனாகவும், மூத்தபள்ளியை அலட்சியப்படுத்துபவனாகவும், பண்ணை வேலைகளில் அக்கறையில்லாதவனாகவும், பண்ணைக்காரனாலே தண்டிக்கப்பட்ட பின்னர் தன்தொழிலைச் செவ்வனே செய்பவனாகவும் வார்க்கப்பட்டுள்ளான். மூத்தபள்ளி குணநலன்கள் வாய்க்கப்பெற்றவளாகவும், பண்ணைக்காரனின் நம்பிக்கைக்கு உரியவளாகவும் படைக்கப்பட்டுள்ளாள். அதேவேளை, தன் கணவனால் வஞ்சிக்கப்படும் பரிதாபத்துக்குரிய பாத்திரமாகவும் காணப்படுகின்றாள். இளையபள்ளி தன் கணவனின் அன்பை முழுமையாகப் பெற்றவள் என்ற வகையிலே தற்பெருமை கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டவளாகவும் விளங்குகின்றாள். பள்ளன் பண்ணை வேலைகளில் அக்கறை செலுத்தாமல் இருப்பதற்குக் காரணமானவளாகவும், தன் சக்களத்தியோடு பூசல் இடுபவளாகவும் அவள் வார்க்கப்பட்டுள்ளாள். பண்ணைக்காரன் இம்மூவரின் தொழில், குடும்பம் முதலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்பவனாக விளங்குகின்றான். பரிகசிப்பதற்குரிய தோற்றமும். நடத்தையும் கொண்டவனாகவும் படைக்கப் பட்டுள்ளான். பொதுவாக. ஒவ்வொரு பாத்திரத்தின் குணவியல்பும் பள்ளு நூல்களில் அவ்வவ்வகையிலேயே மாறுபாடின்றி அமைந்துள்ளது.[15] பொதுவாக, பள்ளு இலக்கியத்திற் பாத்திரங்களின் பெயர் சுட்டுவது மரபன்று. பள்ளன் பாட்டுடைத்தலைவரின் பெயரைச் சார்ந்தோ, அல்லது அவரின் ஊரைச்சார்ந்தோ பெயர் பெறுவது வழக்கம். மூத்தபள்ளி பாட்டுடைத்தலைவரின் ஊரைச்சார்ந்து பெயர் பெறுவதுண்டு. ஆயினும், சிலவேளைகளில் பள்ளனின் பெயர் பாட்டுடைத் தலைவரின் பெயரோடு சார்ந்தும், மூத்த பள்ளியின் பெயர் அவரது ஊரோடு சார்ந்தும் அமைவதுண்டு.[16] இளையபள்ளியின் பெயர் எப்போதுமே பாட்டுடைத்தலைவனின் ஊரினின்றும் வேறுபட்ட ஓர் ஊரைச் சார்ந்ததாகவே அமையும். சில பள்ளு நூல்களிற் பள்ளர், பள்ளியரின் இயற்பெயர்களும் இடம் பெறுவதுண்டு. [17]

சில பள்ளு நூல்களில் பள்ளு இலக்கியத்துக்குரிய வழமையான பாத்திரங்களுடன், புதிய சில பாத்திரங்களும் இடம்பெறுவதுண்டு. இடையன், அல்லது ஆயன் என்ற பாத்திரம் முக்கூடற்பள்ளு, பொய்கைப்பள்ளு, கண்ணுடையம்மன் பள்ளு, செங்கோட்டுப் பள்ளு போன்றவற்றில் இடம்பெறுவதைக் காணலாம். குருகூர்ப்பள்ளு, செங்கோட்டுப்பள்ளு முதலியவற்றில் பண்ணைக் காரனுக்கு அடுத்த நிலையிற் செயற்படுவனவாக முறையே முறையம்பிள்ளை, கோலுக்காரன் என்ற பாத்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கண்ணுடையம்மன் பள்ளில் பஞ்சாங்க ஐயர் என்னும் பாத்திரமும், செங்கோட்டுப்பள்ளில் சோதிடன் என்ற பாத்திரமும் இடம்பெற்றுள்ளன. செங்கோட்டுப் பள்ளில் மேலதிகமாக ஓடக்காரன், ஆசாரி ஆகிய பாத்திரங்கள் காணப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஈ) பள்ளு இலக்கியமும் சில தனித்துவக் கூறுகளும்

பள்ளு இலக்கியம் சில தனித்துவக் கூறுகளையும் கொண்டு விளங்குகின்றது. அவற்றுள், குயில் கூவுதல் என்ற பகுதி குறிப்பிடத்தகுந்த ஒரு தனிக்கூறாக விளங்குவதைக் காணலாம். இப்பகுதியில், நூலாசிரியர்கள் தமது சமயச் சார்பினோடு தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்துவதைக் காணலாம். பாட்டுடைத்தலைவரின் பெருமை கூறப்படுவதோடு, சமய நிறுவனங்களாகிய கோயில்கள், மடங்கள், திருச்சபைகள் முதலானவை சிறந்திருக்கவேண்டுமென்ற தமது விருப்பத்தையும் அவர்கள் புலப்படுத்துகின்றனர். தமது சமயத்துக்குச் சார்பாகவும், தமக்குச் சார்பாகவும் நடந்து கொள்ளும் ஆட்சியாளரையும் நூலாசிரியர் வாழ்த்துவதுண்டு. அத்தோடு, பல்வேறு திருப்பணிகள், அறச் செயல்கள் நடைபெறவும். மழைபொழிந்து வேளாண்மை சிறந்தோங்கி, சமயச் சடங்குகள் நடைபெறவும், மக்கள் நல்வாழ்வு பெறவும் வேண்டுமெனவும் தாம் கொண்டிருந்த விழைவினையும் அவர்கள் வெளிப்படுத்துகின்றனர். சில நூலாசிரியர்கள் தமது சமயம், அல்லது சாதியைச் சார்ந்த மக்கள் சிறப்புற்று வாழ வாழ்த்தியுள்ளனர்.[18] இவ்வாறு, குயில் கூவுதல் பகுதி கதையுடன் எந்த வகையிலும் ஒட்டாமல் அமைந்து, நூலாசிரியர்கள் தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படையாகப் புலப்படுத்துவதற்கு மாத்திரம் சந்தர்ப்பம் அளித்துள்ளது.

பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் பள்ளனை மாடுமுட்டல் என்ற நிகழ்ச்சி சிறுசெய்தியாக இடம்பெறினும், இவ்விலக்கியத்தின் நிகழ்ச்சிப்போக்கை மாற்றுவதற்கான ஒரு திருப்புமுனையாக அது அமைந்துள்ளமையைக் காணலாம். மாடுமுட்டிப் பள்ளன் மயங்கி வீழ்ந்து எழுந்த பின்னர், புத்துணர்வுடன் உழைக்கப் புறப்படுவதாகக் காட்டப்படுகின்றது. அவ்வாறு, தான் உற்சாகத்துடன் உழைக்கப்போவதைப் பள்ளன் பண்ணைக்காரனிடம் தெரிவிப்பதாகப் பொய்கைப்பள்ளிற் கூறப்படுகின்றது.[19] இந்நிகழ்ச்சியின் பின்னரே, பள்ளன் முனைப்பாக வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுவதாகப் பள்ளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களில் உணர்த்தப்படுகின்றது. இந்நிகழ்வு முதல், பள்ளன் நெல் அளத்தல் வரை, பள்ளனுக்கும், மூத்தபள்ளிக்கும் இடையே குடும்பப் பூசல்கள் எதுவும் இடம்பெறாமை குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து, கதைப்போக்கினைத் திசை திருப்புவதற்கான ஒரு முயற்சியாகவே பள்ளனை மாடுமுட்டல் என்ற நிகழ்ச்சி பள்ளு நூலாசிரியர்களாற் புகுத்தப்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

பொதுவாக, பள்ளன் பண்ணை வயலை உழுகின்றபோது, மாடுமுட்டி மயங்கி வீழ்வதாகக் கூறப்படும் நிகழ்ச்சி பள்ளு இலக்கிய மரபாகவே அமைந்து விட்டது. சில நூல்களிற் பள்ளன் கலப்பையைப் பூட்டி உழும்போது, அதன் கொழு காலிலே தைத்துவிட்டதாகவும் கூறப்படுவதுண்டு.[20] ஆனால், செங் கோட்டுப்பள்ளில், மாடுகளைத் துரத்திப் பிடிப்பதற்குப் பள்ளர் முனைவது விவரமாகக் கூறப்பட்டு,[21] சதாசிவக்குடும்பன் எருதை முரட்டுத்தனமாகப் பற்ற முயற்சித்தபோது, அது பாய்ந்து குத்தியதனால், அவன் மயங்கி வீழ நேரிட்டதாகக் கூறப்படுகின்றது.[22] இப்பகுதியில், மஞ்சுவிரட்டு என்னும் மாடுபிடித்தல் போட் டியை மனங்கொண்டு நூலாசிரியர் வருணித்துள்ளார் என்றே கருதமுடிகின்றது. திருமலைமுருகன் பள்ளு, கண்ணுடையம்மன் பள்ளு ஆகியவற்றில் பள்ளன் மயங்கி வீழ்வது தொடர்பான செய்திகள் கூறப்படவில்லை.

சில பள்ளு இலக்கியங்களில் வேறு சில தனித்துவக் கூறுகளும் இடம் பெற்றுள்ளமையைக் காணலாம். கண்ணுடையம்மன் பள்ளில் தீர்த்தச் சிறப்பு, காரணக்காரர் பற்றிய சிறப்பு, திருக்குளம் வெட்டுதல், எருது கட்டுச் சிறப்பு, களியாட்ட வீடு அலங்கரித்தல், முளைப்பாட்டு ஆகிய புதிய பகுதிகள் இடம்பெற்றுள்ளன. பொய்கைப்பள்ளில் தோடையம், கப்பற்சிந்து, பள்ளன் கணக்குக் கூறும்போது ஆட்கள் விபரம், பணிகள் பற்றிய செய்திகள் மேல திகமாக இடம்பெற்றுள்ளன. திருமலைமுருகன் பள்ளு, கண்ணுடையம்மன் பள்ளு ஆகியவற்றிற் கும்மிப்பாட்டு இடம்பெற்றுள்ளது. பொய்கைப் பள்ளிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்மிச்சிந்து (கும்மிச்சிந்து) என்ற பகுதி இடம்பெறினும், அது மற்றைய பள்ளு நூல்களில் இடம்பெறும் தெய்வங்கள் தொடர்பான கும்மிப்பாடற் பகுதியைப் போன்று அமையவில்லை. மேலும், கண்ணுடையம்மன் பள்ளில் வெள்ளம் பாய்தல் பற்றிக் கூறப்படுகின்றதாயினும், ஐவகை நிலங்களிலும் பாய்வது பற்றிக் குறிப்பிடப்படவில்லை. செண்பகராமன் பள்ளில் ஆற்றுவெள்ளம் பாய்வதைக் கூறும்போது, திணைமயக்கமும் தனிப்பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கண்ணுடையம்மன் பள்ளில் மூத்தபள்ளி பள்ளனைப் பற்றிப் பண்ணைக்காரனிடம் முறையிடுதல், பள்ளனைப் பண்ணைக்காரன் தண்டித்தல், மூத்தபள்ளி தன் கணவனை விடுவித்தல் ஆகிய செய்திகள் இடம்பெறவில்லை.

## (உ) பள்ளு இலக்கியமும் புலப்பாட்டுத்திறனும்

பள்ளு நூலாசிரியர்கள் தத்தமது ஆளுமைக்கும், புலப்பாட்டுத் திறனுக்கும் ஏற்பப் பல்வேறு யாப்புகளைப் பயன்படுத்தியுள்ளனர். சான்றாக, முக்கூடற்பள்ளிற் கலிப்பாவும், தாழிசையும் முதன்மைபெற, செங்கோட்டுப் பள்ளில் விருத்தம், சிந்து, கலிப்பா, நொண்டிச்சிந்து, கீர்த்தனை, பொய்க்கால்சிந்து, கப்பல்தரு, அகவல், தக்கை, ஏசல், கும்மி ஆகிய பலதிறப்பட்ட யாப்புகள் இடம்பெற் றுள்ளமையைக் கூறலாம். இவ்விரு நூல்களையும் ஒப்பிட்டு நோக்குகையில், குறைந்த யாப்புகள் பயன்படுத்தப்பட்ட முக்கூடற்பள்ளு எளிமையும், சுவையும் நிறைந்து காணப்பட, பல்வேறு யாப்புவகைகள் பயன்படுத்தப்பட்ட செங் கோட்டுப்பள்ளு அளவுகடந்து விரிவுபெற்று விளங்குகின்றது.[23] முக்கூடற்பள்ளின் ஆசிரியர் கதையமைப்பைக் குழப்பமின்றிக் கட்டுக்கோப்புடன் அமைத்துச் செல்லும் நோக்குடன் குறைந்த யாப்புக்களைப் பயன்படுத்தியுள்ளார். ஆனால், செங்கோட்டுப்பள்ளின் ஆசிரியர் பொன்னுச்செல்லைய பாரதி, தமது நூலிற் பல செய்திகளைப் புதிதாக அமைத்து, கதையை விரித்துச்செல்வதற்கேற்பப் பல யாப்புகளைப் பயன்படுத்தவேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டுவிட்டது. ஆயினும், இரு நூல்களிலும் பள்ளு இலக்கியத்துக்கு எடுத்துக்காட்டாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குவது முக்கூடற்பள்ளே என்பதில் ஐயமில்லை. பள்ளு நூல்களிற் சிந்து, விருத்தம், தாழிசை, கலிப்பா, வெண்பா, கலித்துறை, கட்டளைக்கலிப்பா, கலிவிருத்தம், கும்மி, பொய்க்கால்சிந்து, நொண்டிச்சிந்து, அகவல், தரு, கீர்த்தனை முதலான யாப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு, பள்ளு நூல்களில் அடிப்படைக் கதையமைப்பும், பாத்திர வார்ப்பும் மாற்றமின்றி அமைந்திருப்பினும், காலத்துக்கேற்பவும், நூலாசிரியர்களின் ஆளுமை, திறமை ஆகியவற்றுக்கேற்பவும் அவ்வப்போது அமைப்பில் சிற்சில மாறுதல்கள் இடம்பெற்று வந்துள்ளன.

பள்ளு இலக்கியத்திற் காணப்படும் பிறிதொரு தனித்துவ அம்சம், அவ்விலக்கியத்தில் இடம்பெறும் பேச்சுவழக்குப் பயன்பாடாகும். பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் பாத்திர உரையாடல்கள் உயிரோட்டம் உடையனவாக அமைவதற்கு, அவற்றிற் காணப்படும் பேச்சுமொழியை ஒட்டிய வழக்குச் சொற்கள்,[24] பழமொழிகள்[25] முதலானவை காரணமாகின்றன. எளிமையான வழக்கு மொழியில் அமைந்த பாடல்களுக்குச் சான்றாகப் பின்வருவனவற்றைக் காட்டலாம்:

"குச்சுக் குள்ளே பள்ளனையும்
    வைச்சுக்கொண் டதட்டாதே வாய்
தைச்சுப் போடுவேன் மருதூர்
    கச்சற்காய்ப் பள்ளி.[26]

"என்னுடைய நயினாரே கேளீர்–ஆண்டவர்தம்
    இனியபேர் பெற்றபண்ணைக் குடும்பன்
கன்னங்கறே ரெனுமிருட்டில் எழுந்தே–சேல்பாயுங்
    கால்வாயிற் போனான்காண் ஆண்டே"[27]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏறாத வார்த்தை வசை
ஆரோடே இந்தச் சாலம்
பேராசைப் பள்ளனோடே
தீரா யோடி"28

"சொந்தடியாள் வந்து கும்பிடுறேன் பண்ணையாண்டே பள்ளன்
சூதறியீரென்று சொல்லவல்லோ வந்தேனாண்டே
கொந்தளமிட்டல்லோ நண்டுபிடிப்பதே னாண்டே உங்கள்
கொத்தடிமை செய்யுங் கொடுமையைக் கேளுங்காணாண்டே"29

பொதுவாக எல்லாப் பள்ளு நூல்களிலும் வழக்குச் சொற்களின் பயன் பாட்டைக் காணலாம். முக்கூடற்பள்ளு, திருமலைமுருகன்பள்ளு, செண்பக ராமன்பள்ளு, கண்ணுடையம்மன்பள்ளு, பொய்கைப்பள்ளு, செங்கோட்டுப்பள்ளு ஆகியவை இவ்வகையில் விதந்து குறிப்பிடத்தக்கவை. குருகூர்ப்பள்ளும், திருவாரூர்ப்பள்ளும் வழக்குச் சொற்களைப் பயன்படுத்துவதை ஓரளவு கட்டுப் படுத்தியுள்ளமையைக் காணலாம். வழக்குச் சொற்களைப் பயன்படுத்திய பள்ளு நூல்கள் மக்களிடையே வரவேற்பினைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## (ஊ) ஈழத்துப் பள்ளு நூல்களும் இலக்கியப் போக்குகளும்

"ஈழத்திலே தோன்றிய கதிரைமலைப்பள்ளு, ஞானப்பள்ளு, பறாளைவிநாயகர்பள்ளு, தண்டிகைக்கனகராயன் பள்ளு ஆகிய நான்கு பள்ளு நூல்கள் தற்போது நூலுருப் பெற்று விளங்குகின்றன. சில பள்ளு நூல்கள் பெயரளவில் மாத்திரம் தெரியவருகின்றன.[30] இவை மாத்திரமன்றி, மேலும் சில பள்ளு நூல்களும் ஈழத்திலே தோன்றியிருக்கவேண்டும் என ஊகிக்க முடிகிறது. தற்போது கிடைத்துள்ள நான்கு நூல்களிலும் ஞானப்பள்ளு மாத் திரமே குறைவின்றி முழுமையாகக் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துப் பள்ளு நூல்களில் முதன்முதலிலே தோன்றியதாகக் கருதத்தக்கது கதிரைமலைப்பள்ளாகும். இதுபற்றிப் பொதுவாகக் கருத்துவேறுபாடுகள் காணப்படவில்லை. ஈழத்துப் பள்ளு நூல்களிற் செயற்கைத்தன்மை குறைந்ததாகவும், அகப்பொருள்துறை தொடர்பான செய்யுள்கள் அற்றதாகவும் இந்நூல் விளங்குகின்றது. அதனால், இதுவே ஈழத்தின் முதற் பள்ளுநூல் எனக் கொள்ளமுடிகின்றது. எனினும், இந்நூலின் காலம் பற்றிய செய்திகளிற் போதிய தெளிவின்மை காணப்படுகின்றது. 1935இல் கதிரைமலைப்பள்ளைப் பதிப்பித்த வ.குமாரசுவாமி, இந்நூல் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தது என்ற கருத்தைக் கொண்டுள்ளார். கதிரையப்பர் பள்ளு என்ற பெயரிலும் இந்நூல் வழங்கப்பட்டுள்ளது. இப்பள்ளு ஈழத்தில் வன்னிப்பிரதேசத்தைச் சார்ந்த குமிழமுனை, முல்லைத் தீவு, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் நடிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. முல்லைத்தீவில் இது கரையர் பள்ளு என்னும் பெயரில் ஆடப்பட்டதாகவும் அறியமுடிகிறது.[32]

இதனையடுத்து, போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தில் மேலாண்மை செலுத்திய காலத்திலே (கி.பி. 1621–1658) ஞானப்பள்ளு இயற்றப்பட்டது. பறாளைவிநாயகர்பள்ளும், தண்டிகைக்கனகராயன் பள்ளும் ஒல்லாந்தர் காலத்தைச் (கி.பி.1658–1796) சார்ந்தவையாக விளங்குகின்றன.

கதிரைமலைப்பள்ளு, ஞானப்பள்ளு ஆகியவற்றின் ஆசிரியர்களின் பெயர்களை அறியக்கூடுமாறில்லை. நல்லூர் சின்னத்தம்பிப்புலவரால் பறாளை விநாயகர் பள்ளும், மாவை சின்னக்குட்டிப் புலவரால் தண்டிகைக் கனகராயன் பள்ளும் இயற்றப்பட்டன.

சமய அடிப்படையில் நோக்குமிடத்து, ஞானப்பள்ளினைத் தவிர்த்து, மற்றைய அனைத்தும் சைவசமயச் சார்பான நூல்களாகும். ஞானப்பள்ளு கத்தோலிக்க சமயச் சார்பான நூலாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துப்பள்ளு நூல்களில், கதிரைமலைப்பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு ஆகியவற்றின் பாட்டுடைத்தலைவர்கள் கடவுளராக விளங்குகின்றனர். ஞானப் பள்ளு, தண்டிகைக் கனகராயன்பள்ளு ஆகியவற்றின் பாட்டுடைத் தலைவர்கள் முறையே சமயத்தலைவராகவும், நிலப்பிரபுவாகவும் அமைந்துள்ளனர்.

ஈழத்துப் பள்ளு நூல்களின் அமைப்பு, அடிப்படையிலே தமிழகத்துப்பள்ளு நூல்களின் அமைப்பை அடியொற்றியதாகவே விளங்குகின்றது. எனினும், நூலாசிரியர்களின் நோக்குக்கேற்பச் சில மாற்றங்கள் புகுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். ஈழத்துப் பள்ளு நூல்கள் அனைத்திலும் முதன்மையாக ஆயர் வருகையும், அவரது பெருமை கூறலும் தவிர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. இவை நூலின் அமைப்புக்குத் தேவையற்றதென நூலாசிரியர்கள் கருதியிருக்கவேண்டும் எனத் தோன்றுகின்றது. மேலும், இந்நூல்களிற் பள்ளியர் இருவரும் தத்தம் நாட்டுவளம் கூறும் பகுதியையடுத்து, பாட்டுடைத் தலைவரின் பெருமை கூறும் பகுதியொன்று அமைக்கப்பட்டுள்ளது. கதிரைமலைப்பள்ளிற் பள்ளியர் இருவரும் தத்தம் ஆண்டையின் பெருமைகூறல் என்பதாக இப்பகுதி அமைந்துள்ளது. ஞானப்பள்ளில் பள்ளியர் தலைவன் பெருமைகூறல் என அமைந்த பகுதியில், இயேசு கிறித்துவின் பெருமையை மூத்தபள்ளியும், இளையபள்ளியும் ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொள்வதைக் காணலாம். பறாளைவிநாயகர் பள்ளில் குலமுறை கிளத்தல் என்ற பகுதி, நாட்டுவளம் கூறலையடுத்து அமைக்கப்பட்டுள்ளது. இதில் விநாயகரின் வரலாறும், பெருமையும் எடுத்துரைக்கப்படுகின்றன. தண்டிகைக்கனகராயன் பள்ளில் இடம்பெறும் கிளைவளம்கூறல் என்ற பகுதியிற் பிரபஞ்ச உற்பத்தி, வருண உற்பத்தி, காரைக்காட்டு வேளாளர் வளம் கூறல், கனகராயன் கிளைவளம் கூறல் ஆகியன கூறப்படுகின்றன. மேலும், இந்நூலிற் குயில்கூவுதலைத் தொடர்ந்து, நெல்லிப்பழையார் வாழ்த்துக்கூறல், மயிலிட்டியார் வாழ்த்துக்கூறல், இருபாலையார் வாழ்த்துக்கூறல் என்ற பகுதிகளிற் பாட்டுடைத் தலைவரின் உறவினரும் வாழ்த்தப்படுகின்றனர்.[33] இவ்வாறு, சில குறிப்பிடத்தக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் ஈழத்துப் பள்ளு நூல்களின் பொருளமைப்பில் இடம்பெற்றுள்ளன. பாட்டுடைத்தலைவரின் பெருமையைப் புலப்படுத்துவதற்குப் பல்வேறு வாய்ப்புக்கள் பள்ளு இலக்கியத்திற் காணப்படுகின்றன. எனினும், பாட்டுடைத் தலைவரின் பெருமையைச் சிறப்பாகப் புலப்படுத்தவேண்டும் என்ற நோக்கில் ஈழத்துப் பள்ளு நூல்களில் இவ்வாறு புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதமுடிகின்றது.

பாட்டுடைத்தலைவரைப் பொறுத்தவரையில், மற்றைய பள்ளு நூல்களினின்றும் தண்டிகைக்கனகராயன் பள்ளு வேறுபட்டுள்ளது. இந்நூலின் பாட்டுடைத்தலைவராக நூலினுட் குறிப்பிடப்படுபவர், கனகநாயகமுதலியாவர். எனினும், நூலின் பெயர் பாட்டுடைத்தலைவரின் பெயரால் அமையாது, அவரது முற்பரம்பரையைச் சேர்ந்த தண்டிகைக்கனகராயன் என்பவரின் பெயராலேயே குறிப்பிடப்படுகின்றது. நூலிற் கனகநாயகமுதலி பாட்டுத்தலைவராகக் குறிப்பிடப்பட்டு, அவரது பெருமை பல இடங்களிற் கூறப்படுகின்றபோதிலும், அவரது உறவினர்களையும் நூலாசிரியர் நூலிற் குறிப்பிட்டுள்ளார். எனவே, அவர்கள் அனைவருக்கும் பொதுவாக, அவர்களது முன்னோரான தண்டிகைக் கனகராயனின் பெயரை நூலின் பெயராக இடுவது பொருத்தமானதென நூலாசிரியர் கருதியிருக்கவேண்டும்.[34]

பாத்திர அமைப்பைப் பொறுத்தவரையில், குறிப்பிடத்தக்க சில வேறுபாடுகள் ஈழத்துப் பள்ளு நூல்களிடையே காணப்படுகின்றன. கதிரைமலைப்பள்ளு, பறாளைவிநாயகர்பள்ளு ஆகியவற்றில் மூத்தபள்ளியும், பள்ளன், பண்ணைக்காரன் ஆகியோரும் ஈழநாட்டைச் சேர்ந்தவராகவும், இளையபள்ளி மாத்திரம் பாரதநாட்டைச் சேர்ந்தவளாகவும் குறிப்பிடப்படுகின்றனர். இதற்குக் காரணம், இவ்விரு நாடுகளுக்கும் இடையே நெடுங்காலமாக இருந்துவந்த தொடர்புகளேயாகும். இவ்விரு பள்ளு நூல்களிலும் மூத்தபள்ளிகள் முறையே மாவலிகங்கைவயற் பள்ளி, ஈழமண்டலப் பள்ளி எனப் பெயர்பெறுவர். இளைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிகள் முறையே பகீரதாகங்கைவயற் பள்ளி, சோழமண்டலப் பள்ளி எனப் பெயர் பெறுவர். ஞானப்பள்ளு, தண்டிகைக்கனகராயன் பள்ளு ஆகியவற்றிற் கதைநிகழிடங்கள் பிற நாடுகளாக அமைக்கப்பட்டுள்ளன. அதனால், இவ்விரு நூல்களிலும் இடம்பெறும் பாத்திரங்கள் அனைத்தும் பிற நாடுகளைச் சொந்தமாகக் கொண்டவையாகவே விளங்குகின்றன. ஞானப்பள்ளின் கதை நிகழிடம் மேலைப்புலமாகவும், தண்டிகைக் கனகராயன் பள்ளின் கதைநிகழிடம் தமிழகமாகவும் அமைந்துள்ளன. ஆயினும், இவற்றிடையேயும் வேறுபாடு காணப்படுகின்றது. ஞானப்பள்ளிற் பள்ளனும், மூத்தபள்ளியும் செருசலை (Jerusalam) நகரைச் சேர்ந்தவராகவும், இளையபள்ளி உரோமாபுரியைச் (Rome) சார்ந்தவளாகவும் குறிப்பிடப்படுகின்றனர். இப்பள்ளில், மூத்தபள்ளி செருசலைப்பள்ளி எனவும், இளையபள்ளி ரோமைப்பள்ளி எனவும் பெயர் சுட்டப்படுகின்றனர். தண்டிகைக் கனகராயன் பள்ளிற் பள்ளன், மூத்தபள்ளி, பண்ணைக்காரன் ஆகிய மூவரும் வடகாரையைச் சார்ந்தவராகக் காட்டப்படுகின்றனர். மூத்த பள்ளி வடகாரைப்பள்ளி எனவும், இளையள்ளி தென் காரைப்பள்ளி எனவும் பெயர் குறிப்பிடப்படுகின்றனர்.

இந்நூல்களுள், ஞானப்பள்ளின் பாத்திர அமைப்புக் குறித்து மேலும் நோக்கவேண்டியுள்ளது. கதையமைப்பைப் பொறுத்தவரை, இப்பள்ளு பொதுவான பள்ளு இலக்கிய மரபினை ஒட்டிச் செல்லினும், இப்பள்ளின் பாத்திர அமைப்பு, பள்ளு இலக்கியத்தின் பொது மரபினின்றும் வேறுபட்ட தாகவுள்ளது. பள்ளன், மூத்த பள்ளி, பண்ணைக்காரன் மூவரையும் பாட்டுடைத் தலைவன் சார்ந்த ஊரைச் சேர்ந்தவராகவும், இளையபள்ளியை வேற்றூரைச் சார்ந்தவளாகவும் குறிப்பிடுவதே பள்ளு இலக்கிய மரபு. ஆனால், ஞானப்பள்ளில் அவ்வாறன்றி, முதல் மூவரும் செருசலையைச் சேர்ந்தவராகவும், இளையபள்ளி கத்தோலிக்கத் திருச்சபையினதும், போப்பாண்டவரினதும் தலைமைப்பீடமான உரோமாபுரியைச் சார்ந்தவளாகவும் குறிப்பிடப்படுவது, இப்பள்ளை மற்றைய பள்ளு நூல்களினின்றும் வேறுபடுத்திக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இப்பள்ளில் இளையபள்ளியின் பாத்திரம் முற்றிலும் வேறுபட்ட அமைப்பில் வார்க்கப்பட்டுள்ளது. மற்றைய பள்ளுகளிற் போன்று, அவள் சொகுசுக்காரியாகக் காட்டப்படவில்லை. மாறாக, பாட்டுடைத்தலைவரான இயேசுவின்மீது பற்றுக் கொண்டவளாகவும், சமயவாழ்வு வாழ்பவளாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளாள். பிற பள்ளு நூல்களில், இளையபள்ளியின் நடத்தையும், பேச்சும் அவளது குணத்தின் தரத்தைக் குறைத்துவிடுவதுண்டு. ஆனால், இப்பள்ளில் இளையபள்ளியே மூத்த பள்ளியை விடவும் குணநலனிற் சிறந்து விளங்குகின்றாள். வேறுவகையிற் கூறுவதாயின், உரோமாபுரியைச் சேர்ந்த இளைய பள்ளியின் பாத்திரம்மீதே நூலாசிரியரின் முழுக்கவனமும் செலுத்தப்பட்டுள்ளது. இளையபள்ளியின் பாத்திரம் இவ்வாறு படைக்கப் பட்டமைக்கு, உரோமாபுரி போப்பாண்டவரின் உறைவிடமாகவும், கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப்பீடமாகவும் அமைந்துள்ளமையே காரணமாகும். இது தொடர்பாக ஞானப்பள்ளின் பதிப்பாசிரியர் ஆ.சதாசிவம் குறிப்பிடும் கருத்து மனங்கொளத்தக்கது:

> "ஏனைய பள்ளு நூல்களில் இளையபள்ளிக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைக் காட்டிலும் ஞானப் பள்ளில் அதிகமாகக் கொடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது, காரணம் நூலாசிரியர் கத்தோலிக்கரானமையின் அம் மதத்தின் தலைமைப்பீடமான உரோமாபுரியை இழித்துக் கூறுவது பொருந்தாது. எனவே உரோமாபுரியின் பெருமை இளையபள்ளியின் பெருமையாகையின் அவள் காவியத்தின் கதாநாயகியாகிய மூத்தபள்ளிக்குச் சற்றும் இளைத்தவளல்லள் என இக்காவியம் காட்டுகிறது." [35]

பதிப்பாசிரியர் "காவியம்" என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதனைத் தவிர்த்துப் பார்க்கும்போது, அவரது கருத்தும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

இந்நூலில் அமைந்துள்ள மற்றைய மூன்று பாத்திரங்களைப் பொறுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவரையில், அவையும் பிற பள்ளு நூல்களினின்றும் வேறுபட்டவையாகவே விளங்குகின்றன. மூத்த பள்ளி சமய ஒழுக்கம் குன்றிய பரிதாபத்துக்குரிய பாத்திரமாக வார்க்கப்பட்டுள்ளாள். இளையபள்ளி இந்நூலில் முதன்மை பெறு வதனால், மூத்தபள்ளியின் பாத்திரம் இயல்பாகவே தரம் குறைந்தும், முழுமை யற்றும் அமைந்துவிட்டது. சுருங்கக் கூறின், ஞானப்பள்ளில் மூத்தபள்ளியின் பாத்திரம், பள்ளு இலக்கியத்தின் மரபைப் பேணுவதற்காகப் படைக்கப்பட்டுள்ளதே தவிர, வேறு சிறப்பிடம் அதற்கு அளிக்கப்படவில்லை. இப்பள்ளிற் பள்ளன் உண்மையான கிறித்துவ ஊழியனாகச் சித்திரிக்கப்பட்டுள்ளான். அவனுக்கு இடப்பட்ட தன்மகுணப்பள்ளன் என்னும் பெயர், அவனது இயல்பினைச் சுட்டும் வகையில் அமைந்துள்ளது. இவனது தோற்றப்பொலிவும் அவனின் குண நலனைப் புலப்படுத்தும் வகையில் வருணிக்கப்பட்டுள்ளது.[36] பண்ணைக்காரன் குறைகள் அற்றவனாகவும், பிறரின் மதிப்புக்குரியவனாகவும் காட்டப்படுகின்றான்.[37] அவனது பாத்திரத்தை நோக்குமிடத்து, ஒரு கிறித்துவ மதகுருவுக்குரிய இயல்புகள் பொருந்தியவனாகத் தோன்றுகின்றான்.

## (எ) தமிழக–ஈழத்துப் பள்ளு நூல்கள்: பொது ஒப்பீடு

தமிழகமும், ஈழமும் பள்ளு இலக்கியத்தின் வளர்ச்சிக்குத் தம்மளவிலான பங்களிப்பைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இரு நாடுகளிலும் தோன்றிய பள்ளு நூல்களை ஒப்பிடும்போது, பாட்டுடைத்தலைவரின் பெருமையை எடுத்துரைப்பதும், உணர்த்துவதுமே அவற்றின் முதன்மையான நோக்காக அமைந்துள்ளன என்பது தெளிவாகின்றது. இத்தகைய தமது நோக்கினை ஒவ்வொரு நூலாசிரியரும் தத்தம் ஆளுமைக்கும், திறமைக்கும் ஏற்ப நிறைவேற்ற முயற்சித்துள்ளனர்.

பொதுவாகவே, ஈழத்துப் பள்ளு நூலாசிரியர்களை விடவும் தமிழகத்துப் பள்ளு நூலாசிரியர்கள் பள்ளரின் வாழ்வியல் பற்றிய கூறுகளை வெளிப்படுத்துவதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாகவே ஆர்வம் கொண்டோராக விளங்குகின்றனர். ஈழத்துப் பள்ளு நூல்களைப் பொறுத்தவரை, கதிரைமலைப்பள்ளு குறிப்பிடத்தக்க அளவுக்குப் பள்ளரின் வாழ்வியற் கூறுகளைப் புலப்படுத்த முயற்சித்துள்ளது. பள்ளரின் வாழ்வியற் கூறுகளைப் புலப்படுத்துவது தொடர்பாக, இரு நாட்டுப் பள்ளு நூல்களுக்கிடையிலான வேறுபாடுகளுக்கான காரணத்தைப் பின்வருமாறு கருதமுடிகின்றது: தமிழகத்திற் பெரும் பண்ணை நிலங்களில் உழைத்த பள்ளர்களதும், அவர்களை மேலாண்மை செய்துவந்த பண்ணையாளர்களதும் போக்குகளும், ஈழத்திலே சிறு துண்டு நிலங்களில் உழைத்து வந்த பள்ளர் சமூகத்தவரதும், அவர்கள்மீது அதிகாரம் செலுத்தி வந்த சிறு வேளாள நிலப்பிரப்புக்களினதும் நிலைகளும் வேறுபட்டவையாக விளங்கின. இத்தகைய சூழ்நிலை வேறுபாடுகளோடு, நூலாசிரியர்களின் நேரடி அனுபவமும் வேறுபட்டவையாக விளங்குகின்றன. தமிழகத்துப் பள்ளு நூல்களை நோக்குமிடத்து, பெரும்பாலான நூலாசிரியர்கள் பண்ணை வேளாண்மையோடு ஏதோ ஒரு வகையிலே தொடர்புபட்டவர்களாகத் தோன்றுகின்றனர். ஆனால், ஈழத்துப் பள்ளு நூலாசிரியர்களிற் கதிரைமலைப்பள்ளின் ஆசிரியரே வேளாண்மையோடு ஏதாவது வகையிலேனும் தொடர்பு கொண்டவராக இருந்திருக்கவேண்டுமெனத் தோன்றுகின்றது.

கிறித்துவ சமய அடிப்படையைக் கொண்டவையாக விளங்கினும், தமிழகத்திலே தோன்றிய செண்பகராமன் பள்ளும், ஈழத்திலே இயற்றப்பட்ட ஞானப்பள்ளும் தத்தம் நோக்குக்கேற்பத் தனித்துவப் போக்கினைக் கொண்டுள்ளன. செண்பகராமன் பள்ளு நிலப்பிரபுவையும், ஞானப்பள்ளு சமயத்தலைவரையும் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு அமைந்துள்ளன. ஞானப்பள்ளு பாத்திர அமைப்பில் மாத்திரமன்றி, பிறவற்றிலும் தனக்கெனத் தனி இயல்புகளைக் கொண்டு விளங்குகின்றது. இயேசுவின் பெருமையையும், கிறித்துவ சமயக் கருத்துக்களையும் கூற விழையும் நூலாசிரியர், தமது நோக்கத்துக்கேற்ப, மேலைப்புலத்தைக் களமாகக் கொண்டுள்ளார். எனினும், அப்புலத்துக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பான வகையில் இயற்கை வருணனையைச் சித்திரிக்க இயலாத இடர்ப்பாடு அவருக்கு ஏற்பட்டுவிட்டது. அதனால், இயற்கை வருணனைகள் இடம்பெற வேண்டிய பகுதியில், சமயத் தொடர்பான வரலாறுகளைக் கூறி இடத்தை நிரப்பியுள்ளார்.[38] மேலும், மேலைப்புலத்தைக் களமாகக் கொண்டு பள்ளர் பாத்திரங்களை உருவாக்கியதால், பிற பள்ளு நூல்களில் இடம்பெறுவது போன்று, பள்ளரின் வாழ்வியற் கூறுகள் பெரும்பாலும் இயல்பானவையாக அமைய வில்லை. ஆயினும், செண்பகராமன் பள்ளின் ஆசிரியர் சமய அடிப்படையைப் பேணினும், தாம் பாடுவது ஓர் இலக்கியம் என்பதனை மறந்தவரல்லர். தமிழகத்துச் சூழலையே பகைப்புலமாகக் கொண்டு, பள்ளரின் வாழ்வியற் கூறுகளையும் பொருத்தித் தமது இலக்கியத்தை அவர் படைக்க முனைந்தமையால், ஞானப்பள்ளோடு ஒப்பிடுகையில், செண்பகராமன் பள்ளு இலக்கியத் தரத்திற் சிறந்து விளங்குகின்றது.

பள்ளு நூலாசிரியர்கள் சாத்தியமாக அமையக்கூடிய சந்தர்ப்பங்களிலெல்லாம் தமது கற்பனைவளத்தையும் புலப்படுத்தத் தவறவில்லை. சிறப்பாக, பள்ளியர் வருணனை, நாட்டுவளம், மழைபெய்தல், மழைபெய்து ஐவகை நிலங்களில் வெள்ளம் பாய்தல், பள்ளன் பண்ணைக் கணக்குவகை கூறல், பயிர் விளைதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அகத்துறைப் பாடல்கள் பள்ளு இலக்கியக் கதைப்போக்கோடு தொடர்பற்றவையாகக் காணப்படினும், அவையும் நூலாசிரியர்களின் திறமைக்கேற்பச் சுவை பொருந்தியனவாக விளங்குவதுண்டு. பண்ணைக்காரன் பற்றிய வருணனைகளைப் பொறுத்த வரையில், நூலாசிரியர் ஒவ்வொருவரும் தத்தம் நகைச்சுவைத் திறனைப் புலப்படுத்த முயற்சி செய்துள்ளனர். பொதுவாகவே, அனைத்து இலக்கியக் கூறுகளைப் பொறுத்தவரையில், முக்கூடற்பள்ளு சிறந்து விளங்குகின்றது. சிறந்த கற்பனை வளமும், சொல்லாற்றலும், புலப்பாட்டுத்திறனும் மிக்கவராக இப்பள்ளு நூலின் ஆசிரியரே விளங்குகின்றார். நிகழ்ச்சி விளக்கப் பாடல்களிலும் இலக்கியச் சுவை மிகுந்து காணப்படுகின்றமை, இப்பள்ளின் இலக்கியச் சிறப்பினைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலப்படுத்துகின்றது. மற்றைய பள்ளு நூல்கள் இலக்கிய நோக்கைப் பொறுத்தவரையில், ஏதோவொரு வகையில் முக்கூடற்பள்ளுக்குக் கடன் பட்டுள்ளனவாகவே விளங்குகின்றன. பள்ளு இலக்கியத்தின் தனித்துவத்தையும், இலக்கியத் தரத்தினையும் உணர்த்தி நிற்பதில் முக்கூடற்பள்ளின் பங்களிப்பு சிறந்து விளங்குகின்றது.

தமிழகத்துப் பள்ளு நூல்களுடன் ஒப்பிடும்போது, கதிரைமலைப்பள்ளைத் தவிர, மற்றைய ஈழத்துப் பள்ளு நூல்களின் நடை சற்றுக் கடினமானதாகவும், செந்நெறி இலக்கியச்சாயல் கொண்டதாகவும், கற்றறிந்த உயர்குழாத்தினரால் மாத்திரமே பொருளறிந்து சுவைக்கத்தக்கதாகவும் உள்ளது. ஈழத்துப பள்ளு நூல்களுட் கதிரைமலைப்பள்ளு, பள்ளு இலக்கியத்துக்குரிய எளிமையும், இலக்கியச்சுவையும், பேச்சு வழக்குப் பயன்பாடும் கொண்டதாக அமைந்துள்ளது.[39]

ஈழத்துப் பள்ளு நூலாசிரியருள், கவித்துவ ஆற்றலும், இயல்பான புலப்பாட்டுத்திறனும் கொண்டவராகக் கதிரைமலைப் பள்ளின் ஆசிரியரே விளங்குகின்றார். பறாளைவிநாயகர்பள்ளின் ஆசிரியரான சின்னத்தம்பிப்புலவரிடத்துப் பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியோடு இணைந்த புலமை மிகுதியாகக் காணப்படுவதனால், அவரின் நூலிற் செந்நெறி இலக்கியப்போக்கினையே மிகுதியாகக் கண்டுகொள்ள முடிகின்றது. ஞானப்பள்ளின் ஆசிரியரும், தண்டிகைக்கனகராயன் பள்ளின் ஆசிரியரான மாவை சின்னக்குட்டிப்புலவரும் தக்கம் பாட்டுடைத்தலைவர்களின் பெருமைகளை உரைப்பதிலேயே அதிக ஆர்வத்தைச் செலுத்தியுள்ளனர். அதனால், கவித்துவத்தைப் புறக்கணிக்கும் அளவுக்கு, அத்தகைய ஆர்வம் அவர்களைத் திசைதிருப்பி விட்டது. தொகுத்து நோக்குங்கால், ஈழத்துப் பள்ளு நூல்களில் இலக்கியத் தரம் கொண்டவையாகக் கதிரைமலைப்பள்ளினையும், பறாளை விநாயகர்பள்ளினையுமே கூறுவதற்கு இயலும்.

## சான்றாதாரம்

1. **Tamil Lexicon,** (1982) Vol.IV, Part I, Madras, University of Madras. Reprint. p.2551.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ச.வே.சுப்பிரமணியன் (1983) **திராவிடமொழி இலக்கியங்கள்– அறிமுகம்,** சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ப. 212.

3. வேங்கடராமன்,சு. (1981) "அரையர் சேவையில் பள்ளுப்பாட்டு," **பதின்மூன்றாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை (தொகுதி 3),** சிதம்பரம், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு. ப. 390.

4. காண்க: அருணாசலம், மு. (1975) **தமிழ் இலக்கிய வரலாறு (பதினாறாம் நூற்றாண்டு – இரண்டாம் பாகம்,** மாயூரம், காந்தி வித்தியாலயம். ப. 254.

5. காண்க: **குருகூர்ப்பள்ளு.** ப.VI(எஸ்.வையாபுரிப்பிள்ளையின் முன்னுரை).

6. காண்க: **ஞானப்பள்ளு.** பக். xiii, xiv (பள்ளுப்பிரபந்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும்).

பூலோகசிங்கம்,பொ. (1983 மே) "கதிரைமலைப்பள்ளு," அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் முல்லைத்தீவுப் பிரதேச மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரை.

7. இவை பற்றிய விபரங்களுக்குக் காண்க: (அ) செயராமன், ந.வீ. (1980) **பள்ளு இலக்கியம்,** சிதம்பரம், மணிவாசகர் நூலகம். பக். 51–53;
(ஆ) பெருமாள், ஏ.என். (1981) "பள்ளு." **தமிழ் இலக்கியக்கொள்கை 6,** ச.வே. சுப்பிரமணியன், ந.கடிகாசலம் பதிப்பு, சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். பக். 95,96.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஏ.என். பெருமாளும் இவற்றைத் தம் நோக்கிற்கேற்ப வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிப்பர். காண்க: பெருமாள்,ஏ.என்., "பள்ளு," **மு.கு.நூ.** பக். 94,95.

9. முக்கூடற்பள்ளிலே திருமாலும், திருவாரூர்ப்பள்ளு, செங்கோட்டுப்பள்ளு ஆகியவற்றில் சிவனும், கதிரைமலைப் பள்ளு, திருமலைமுருகன்பள்ளு ஆகியவற்றில் முருகனும், பறாளை விநாயகர் பள்ளில் விநாயகரும், கண்ணுடையம்மன் பள்ளில் அம்மனும் பாட்டுடைத்தலைவர்களாக விளங்குகின்றனர்.

10. குருகூர்ப்பள்ளில் நம்மாழ்வாரும், ஞானப்பள்ளில் இயேசுவும் பாட்டுடைத்தலைவர்களாக இடம்பெற்றுள்ளனர்.

11. செண்பகராமன் பள்ளில் செண்பகராமனும், தண்டிகைக் கனகராயன்பள்ளிற் கனகநாயகமுதலியும், பொய்கைப்பள்ளிற் சொக்கலிங்கப் பெத்தண்ணலும் பாட்டுடைத்தலைவர்களாகச் சிறப்புப் பெற்றுள்ளனர்.

12. காண்க: **வேதாந்தப் பள்ளு** (1896), நா. வைத்தியநாத பாரதியார், இராமசாமி தீக்ஷிதர் பதிப்பு, திருவாதி.

13. சான்றாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்: "முக்கூடல் வடிவழகர் வயலில்" (**மு.கூ.ப.** செய்.82), "மாசிலாத கதிரை வேலன் மாவிலி கங்கை வயலிலே" (**க.ம.ப.** செய். 98), "திருமலை முத்தையன் பண்ணைப் புரவில்" (***தி.மு.ப.*** செய். 135), "பரன் பறாளைப் பதியில் வாழ் பவள மேனியன் வயலில்" (**ப.வி.ப.** செய். 117), "பொற் றண்டிகைக் கனகநாயகன் வயலிலே" (**த.க.ப.** செய். 148),"ஆலமாமிடற் றண்ணல் வயலெலாம்" (**செ.கோ.ப.** செய். 826), "கண்ணுடைய தேவி பண்ணை" (**க.அ.ப.** செய். 80), 'சுகமனையார் மால்கொள்மதன் சொக்கலிங்கப் பெத்தண்ணல் மகபதிதன் பண்ணை வயல்கள்" (**பொ.ப.** செய். 109).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. மு.கூ.ப. செய். 27.

15. ஞானப்பள்ளு இதற்கு விதிவிலக்காக அமைந்துள்ளது. ஈழத்துப்பள்ளு நூல்களிற் பாத்திர அமைப்புப் பற்றிய பிரிவில் இதுபற்றி நோக்கப்படுகின்றது.

16. இவை பற்றி ந.வீ. செயராமன் குறிப்பிட்டுள்ளார். காண்க: செயராமன். ந.வீ. மு.கு.நூ. பக். 44–46.

17. செங்கோட்டுப்பள்ளில் சதாசிவக்குடும்பன் எனப் பள்ளனின் பெயர் குறிப்பிடப்படுவதோடு, மூத்தபள்ளி, இளையபள்ளி ஆகியோரின் இயற் பெயர் களும் முறையே சிவகாமி, அபிராமி எனச் சுட்டப்படுகின்றன. செண்ப கராமன் பள்ளில் பகவதிப்பள்ளன் எனப் பள்ளனின் பெயர் சுட்டப்படுகின்றது. தண்டிகைக்கனகராயன் பள்ளில் பள்ளனின் இயற்பெயராக நாகன் என்பது ஒரு செய்யுளிற் குறிப்பிடப்பட்டுள்ளது. செய். 111.

18. சான்றாக, ஞானப்பள்ளில் யாழ்ப்பாணத்துக் கிறித்தவர்களும், கண்ணு டையம்மன் பள்ளில் நாட்டுக்கோட்டை நகர வணிகர்களும், செண்பகராமன் பள்ளில் பரதவர்கள், மேனாட்டினர் ஆகியோரும் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

"தழைவு பெற்ற யாழ்ப்பாண
சத்தியகி றிஸ்தவர்கள்
சந்ததமும் வாழவே
கூவாய் குயிலே"

(ஞா.ப. செய். 85)

"புனிதமுறு சந்நிதிமுன் முகப்புமண்டப முடித்த
புகழ்நகரத்தார் விளங்கக் கூவாய் குயிலே"

(க.அ.ப. செய். 45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்தைபரன் அருளாலே பரதவர்கள் சாதியெல்லாம்
ஈடேறி வாழ்கவே கூவாய் குயிலே"

(**செ.ராப.** செய். 26)

"கடற்றுறையும் மேனாடும் சில்லறையில் லாமல்கற்ப
காலமிக வாழ்கவே கூவாய் குயிலே"

(**மேலது.** செய். 31)

19. **பொ.ப.** செய். 155, 156.

20. சான்றாக, காண்க: **தி.ப.** செய். 54; **கு.ப.** செய். 59.

21. **செ.கோ.ப.** செய். 756–765.

22. **மேலது.** செய். 766.

23. இவ் இரண்டு நூல்களின் பாடல்களது எண்ணிக்கையும் இவ்விடத்து மனங்கொள்ளப்பட வேண்டியதாகும். முக்கூடற்பள்ளின் பாடல் எண்ணிக்கை 175; செங்கோட்டுப் பள்ளின் பாடல் எண்ணிக்கை 931 ஆகும்.

24. தமிழகப் பள்ளு நூல்களில் இடம்பெற்றுள்ள சில பேச்சுவழக்குச் சொற்களும். சொற்றொடர்களும் பின்வருமாறு: நயினார், நயினாத்தை, நாச்சியார், துக்குணி, வக்கணை, வங்கணம், கச்சற்காய், பேய்ப்பண்ணைக்காரன், அசுவை, முடுக, ராசியம், குண்டுணிக்காரி, வெள்ளானம், சதுரி, கைவிரசலாய், மச்சான், மச்சினி, தறுகி, எடுக்கிறாப்போல, கெட்டி, உழப்பி, இம்மட்டும், முண்டை, ஒட்டுச் சாய்ப்பு. ஆண்டை, ராக்குடித்த, வந்தல்லோ, மாய்மாலி, என்னத்தை, கொன்னை, சாவல், எறிக்குது, செம்பட்டை, பொட்டைக்கண், சுண்டல், வசியங்கள், புளிக்கஞ்சி, பொல்லாப்பு, விண்ணாணம், கட்டுமட்டாய்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளச் சனங்கள், ஆறுமாத்தைக்கொருநாள், உழக்கி, மூஞ்சி, கருக்கல், பின்னை, சீவனம், சென்மம், காஞ்ச, சாலக்காரன், சூத்தில், அலக்கழித்தான், தீம்பு, குல்லைத் தனம், சவுங்கினான், சடைப்பட்டேன், தோணாதடி, கண்டியளோ, கரைகட்டுது, பிலுக்கிறாள், ஆணம், பொரிச்சுக் கொண்டாந்த கறி, இடைக்கிடை, கன, உளுக்கும், பூராயக்காரி, சொறித்தலை, சோனிவயிறு, சிங்கி, ஒருக்கால், குள்ளி, கள்ளுத்தண்ணீர், கிறக்கம், தொத்துக்கு வந்த சிறுக்கி, உறும்பிக்கொண்டு, நடுகச்சே, வாங்கிக்கோ, குலுக்கிறாள், லாத்தி நடந்து, உன்னுட, முசுக்கோந்தி, பொரட்டாந்தை, மானம் (வானம்), தாறுமாறாய், சன்னை, பெண்சாதி, கும்பிடுங்கோ, என்றையளே, குஞ்சுதின்னிக்காற்று, வைப்பாட்டி, பொழப்பு. நெளுப்பி, வறத்தோஷி, சீவன், பொடிமாயம், உச்சிதம், ஊதாரி, மூசாம்புக்கள்ளி, பேய்த்தண்ணி, ஓதுறாய், ஆயாசம், இளந்தாரிமார், இளப்பம்.

25. பள்ளு இலக்கியங்களில் இடம்பெறும் பழமொழிகளைத் திரட்டி, ஜி.குளத்தூரரான் தமது கலாநிதிப்பட்ட ஆய்வேட்டின் பின்னிணைப்பிற் கொடுத்துள்ளார். திருமலைமுருகன் பள்ளில் இடம்பெறும் பழமொழிகளை, மு.அருணாசலம் அந்நூலின் பின்னிணைப்பிற் சேர்த்துள்ளார்.

26. மு.கூ.ப. செய். 63.

27. தி.மு.ப. செய். 82.

28. செ.ரா.ப. செய். 77.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. **க.அ.ப.** செய். 122.

30. காண்க: (அ) நடராசா, எப்.எக்ஸ்.சி. (1957) **ஈழமுந் தமிழும்,** மட்டக்களப்பு, கலைமகள் வெளியீடு ப. 21.

(ஆ) சதாசிவம், ஆ. (1966) **ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்,** சுன்னாகம், சாகித்திய மண்டல வெளியீடு. ப. 454.

(இ) கலையரசி வேந்தனார் (1977) "ஈழத்துப் பள்ளுப் பிரபந்தங்கள்," **நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகள்,** க.வித்தியானந்தன் பதிப்பு, கொழும்பு, அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை. பக். 153–168.

நவாலிப்பள்ளு, நவாலியூர் வன்னியசேகரன் பள்ளு ஆகியவை பற்றி இவர்கள் குறிப்பிட்டுள்ளனர். பண்டிப்பள்ளு, குருவிப்பள்ளு, கடல்நாச்சியம்மன் பள்ளு, நரேந்திரசிங்கன் பள்ளு என்பன பள்ளு என்ற பெயரைக் கொண்ட நாட்டார் பாடல்களாக ஈழத்திலே வழங்கிவந்துள்ளன.

31. கதிரைமலைப்பள்ளில் இடையிடையே சில செய்யுட்கள் (62, 90) சிதைந்து விட்டன. பறாளை விநாயகர் பள்ளிலும், தண்டிகைக் கனகராயன் பள்ளிலும் நாற்று நடுகைக்குப் பின்னுள்ள பகுதிகள் சிதைந்துவிட்டன.

32. மௌனகுரு, சி. (1993) **ஈழத்து தமிழ் நாடக அரங்கு,** திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு. ப. 44.

33. இவற்றுக்காக 29–84 வரையுள்ள செய்யுட்களை நூலாசிரியர் ஒதுக்கியுள்ளார். மேலும், இந்நூலிற் பள்ளியர் தம் குடிப்பெருமை கூறுதலை அடுத்து, நாட்டு வளங்கூறல் என்ற பகுதியையும் பாட்டுடைத்தலைவரைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழுமுகமாக நூலாசிரியர் அமைத்துள்ளார் (செய். 11–15). இதனையடுத்து, வடகாரை, தென்காரை நாட்டுச் சிறப்புக்கள் வேறாகக் கூறப்பட்டுள்ளன (செய். 16–27).

34. காண்க: **தண்டிகைக் கனகராயன் பள்ளு** (1932), சே.வெ.ஜம்பு லிங்கம்பிள்ளை பதிப்பு. சென்னை. பக். 5,6 (வ. குமாரசுவாமியின் ஆராய்ச்சிக் குறிப்புக்கள்).

35. **ஞானப்பள்ளு.** பக். XLIV (ஞானப்பள்ளு நூலாராய்ச்சி).

36. "இடையினிலே கயிறுகட்டி இந்திரிய மொடுக்கி
இதமாக எரிசுடரை யிருகரத்தி லேந்தி
உடையவன்றன் வயலான உலகத்தா ரகத்தை
ஒப்பாக மண்வெட்டி யொருதோளிற் சுமந்து
மிடியுங்கன உடமையுஞ்சொல் மீறாத தயவும்
மேற்குருவி னிடமாக மேதினி விளங்கும்
படியேறாமை நகராளும் பாப்புசொல்லுக் கிணங்கும்
பழுதில்லாத் தன்மகுணப் பள்ளனுந் தோற்றினனே."

(**மேலது.** செய். 17)

37. "இடையதனிற் கயிறுகட்டி இந்திரியங் களொடுக்கி
எரிகின்ற தீபமதை யிருகரத்தி லேந்தி
உடையுற்று லோகபண்பு முன்னறிவ தாகவேதான்
உற்றகனல் மீதோடு தேறலுமில் லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையுங்கைக் கோலுமின்றி யடப்பமுந்தா னில்லமல்
அம்பரத்தி லன்னையில்லா னன்றுரைப் படியே
படைவிட் டுடனுலகை பகைதொட்ட லகைதன்னைப்
பண்ணைக்கா ரன்வந்து தோற்றி னானே."

(**மேலது**.செய். 114)

38. **மேலது.** செய். 25–50.

39. ஈழத்துப்பள்ளு நூல்களிற் காணத்தகும் பேச்சுவழக்குச் சொற்கள், சொற்றொடர்களைப் பற்றிய விபரங்களுக்குக் காண்க:

(அ) **ஞானப்பள்ளு** (ஆ. சதாசிவம் பதிப்பு). பக். LIX-LXI

(ஆ) கலையரசி வேந்தனார். **மு.கு.நூ**. பக். 153–168.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் இயல்

# பள்ளரின் சமூகநிலையும் பள்ளு இலக்கியத்தில் அதன் புலப்பாடும்

## (அ) சாதியும் கிராமிய அமைப்பும்

தமிழர் சமுதாயம் காலத்திற்குக்காலம் பல மாறுதல்களைப் பெற்றுவந்துள்ளது. இவ்வாறு, அச்சமுதாயம் பெற்றுவந்த மாற்றங்களுள் முக்கியமானது, சாதியமைப்பினைத் தன்னுள் அடக்கத் தொடங்கியமையாகும். "சாதி என்பது, தனியொரு பண்பாட்டுத் தொகுதியினுள்ளே வேறுபட்ட, பலவாய இனக்குழுக்களும் பிறவகைக் குழுக்களும் ஈண்டிய கூட்டுறவாற் பல்லாயிரவாண்டுக் காலத்தில் வளர்ச்சியடைந்த தொன்றாகும்"[1] என ஏ.எல். பசாம் குறிப்பிடுவர். ரொமிலா தாப்பரின் கருத்துப்படி, சாதி என்பது, மண உறவுகளைக் கட்டுப்படுத்தும் பரம்பரைக் குழுக்களைக் கொண்டதாகும். தொழிலை அடிப்படையாகக் கொண்டு, சாதிகள் கீழ்மேல் அடுக்குகளாக அமைந்துள்ளன. இவ்வாறு, கீழ்மேலாக அமைந்துள்ள அடுக்குமுறையின் அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட சாதியினர் பிற சாதியினருக்குச் செய்யவேண்டிய தொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. இத்தகைய உறவுகள் பொருளாதார உறவுகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. சாதி அடுக்கின் அடிப்படையிலான உயர்வு தாழ்வுகள், அவரவர்கள் செய்கின்ற தொழிலைப் பொறுத்ததாக விளங்குகின்றன.[2] சாதி என்ற சொல், பரந்த அளவில் இந்தியாவின் நெகிழாத சமுதாய அடுககுகளைக் கொண்ட பல்வேறு குழுக்களைச் சிறப்பாகக் குறிக்கின்றது.[3]

சாதியமைப்பு தமிழர் சமுதாயத்திலே தொன்றுதொட்டு இருந்துவந்த ஒன்றன்று, இடையிலே புகுந்த அமைப்பு என்பதனை ஆய்வாளர்கள் எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியுள்ளனர். "பழந்தமிழர் சமுதாயத்திற் பிற்காலத்திலெழுந்தது போலச் சாதிப்பிரிவினை இருந்தமைக்குச் சான்றுகள் இல்லை. மக்கட் பாகுபாடு நில இயற்கையையும் தொழிற்பண்பையும் அடிப்படையாகக் கொண்டே இருந்தது"[4] என சு. வித்தியானந்தன் குறிப்பிடுவர். தமிழகத்திற் சாதியமைப்பின் இயல்பு குறித்து, ஏ.எல்.பசாம் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

> "பழந்தமிழ் இலக்கியத்திற் சாதி பற்றிய சான்றொன்றும் காணப்படவில்லை. ஆயின் ஆரியச் செல்வாக்குப் பெருகியமையாலும், முன்னிருந்ததிலும் சிக்கலானதோர் அரசியல் பொருளாதார அமைப்பு விருத்தியானமையாலும் இங்கேயொரு சாதிப்பகுப்பு முறை உண்டாகிச் சில வழிகளில் வடநாட்டு முறையிலும் காழ்ப்புமிக்கதாய்க் காணப்பட்டது."[5]

இவ்வாறு, காலப்போக்கிற் சாதியமைப்பு தமிழ்ச் சமுதாயத்தில் முக்கியத்துவம் பெற்று, இறுக்கம் பெறத் தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டிலேயே தமிழர் மத்தியிற் சாதியமைப்பு ஓரளவுக்கு நெகிழ்ச்சியடைத் தொடங்கியது. ஆயினும், இதுவரையிற் சாதிப்பாகுபாடு முற்றுமுழுதாகத் தமிழ்ச் சமுதாயத்தினின்றும் அகன்றுவிடவில்லை.

தமிழகக் கிராமங்களை நோக்கும்போது, அவற்றின் அடிப்படையும், ஐக்கியமும் சாதியமைப்பிலேயே தங்கியுள்ளமையால், ஒன்றினின்றும் மற்றொன்றைப் பிரித்து நோக்குவது எளிதன்று. கிராம ஒழுங்கு முறைக்கும், சாதியமைப்பிற்கும் இடையே காணப்படும் நெருங்கிய பிணைப்புப் பற்றி எம்.என்.ஸ்ரீநிவாஸ் தெளிவாக விளக்குகையில், கிராமமானது பல சாதிகளின் செங்குத்து நிலையான ஒருமைப்பாட்டை உணர்த்துவதாகவும், சாதி என்பது கிடைநிலையான ஒருமைப்பாட்டைத் தெரிவிப்பதாகவும் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.[6]

தமிழகத்தை உள்ளடக்கிய இந்தியாவின் சாதியமைப்பில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சாதிகள் இருப்பதாகவும், அவற்றுட் பெரும்பாலன துணைச் சாதிப்பிரிவுகளையும் கொண்டிருப்பதாகவும் ஆய்வாளர் குறிப்பிடுவர்.[7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே கிராமத்திற் பல சாதியினர் இணைந்து வாழ நேரிடுகின்றது. அவ்வாறு வாழும்போது, குறிப்பிட்ட ஒரு சாதியினர் அக்கிராமத்தில் மேலாண்மை செலுத்துவதைக் காணலாம். இதற்கான காரணத்தை நோக்குமிடத்து, ஒரு குறிப்பிட்ட சாதியினர் ஒரு கிராமத்தில் எண்ணிக்கையில் அதிகமானவர்களாகவும், பொருளாதார முறையிலும், கிராமத்தின் பொது விடயங்களைத் தீர்மானிப்பதிலும் மேம்பட்ட செல்வாக்கைக் கொண்டவர்களாகவும் விளங்கும்போது, அச் சாதியினர் அக்கிராமத்தில் மேலாண்மை செலுத்தும் நிலையை அடைய முடிகின்றது[8] என்பது விளங்குகின்றது.

ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள சாதிகள் அனைத்தும் ஒன்றுடனொன்று சார்புத்தன்மை கொண்டவையாக விளங்குகின்றன. நாளாந்த நடைமுறையிலேயே இதனைத் தெளிவாகக் கண்டுகொள்ளலாம். சடங்குகள், மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளின்போது, இத்தகைய சார்புத்தன்மை மேலும் உறுதிப்படுகின்றது. இவ்வாறு, ஒரே கிராமத்திலுள்ள பல்வேறு சாதியினர் ஒருவரை மற்றொருவர் சார்ந்து வாழ்வதற்குப் பொருளாதாரக்கூறு முதன்மையான காரணமாகின்றது.

சாதிகளுக்கிடையிற் சார்புத்தன்மை நிலவுகின்ற அதேவேளையில், ஒரே கிராமத்தில் வாழும் குறிப்பிட்டவொரு சாதியினர் தமக்குள் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி வாழ்வதையும் காணமுடிகின்றது. இவ்வாறு அவர்கள் ஒருமைப்படுவதற்கு, அவர்கள் செய்யும் ஒரேவகையான தொழிலும், அதனாற் கிடைக்கும் வருவாயும் முதன்மையான காரணங்களாகக் குறிப்பிடத்தக்கவை. நிலத்தின் உரிமை தொடர்பாக அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் தகுதியும் இன்னொரு காரணமாகும். இவற்றோடு, அவர்களிடையே காணப்படும் சடங்குகள் பற்றிய நம்பிக்கைகளும், அவர்களுக்கே சிறப்பாக உரிய நடைமுறைகளும் அவர்களது ஒருமைப்பாட்டு உணர்வுக்கு வழிகோலின. மேலும், பிறப்பு இறப்பு தொடர்பான நிகழ்ச்சிகள், திருமணங்கள், முன்னோர் வழிபாடு முதலானவை ஒவ்வொரு சாதியினரும் அகமண உறவு(endogamy) தொடர்பான கட்டுப்பாட்டைப் பேணுவதற்குத் துணைசெய்துள்ளன.[9]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், ஒரு கிராமத்தில் ஒவ்வொரு சாதியினரும் தத்தமது சிறப்பியல்புகளைப் பேணிக்கொள்வதற்கு, அவ்வக் கிராமத்திற் காணப்படும் ஊர், சேரி என்ற அமைப்புகள் துணையாக இருந்தன. "தமிழகத்திலுள்ள பெரும்பாலான கிராம அமைப்பை நோக்கினால் ஒவ்வொரு கிராமமும் ஊர், சேரி என்ற இரு பெரும் பிரிவுகளாகப் பிரிந்திருப்பதைக் காணலாம்." [10]

சேரி என்பது, ஆரம்பத்தில் மக்கள் குழுக்களது குடியிருப்புப் பகுதிகளை உணர்த்திவந்தபோதிலும், காலப்போக்கிலே தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்புப் பகுதிகளையே குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு, காலப்போக்கில் உயர்ந்த சாதியினர் ஊரிலும், தாழ்த்தப்பட்ட சாதியினர் சேரிகளிலும் வாழத்தொடங்கினர். ஊரினின்றும் சற்று இடைவெளி விட்டு அமைந்ததாகச் சேரி காணப்படும். ஒவ்வொரு சாதியினரும் வாழும் சேரிகள் சாதியின் பெயரிட்டுக் குறிப்பிடப்படும். ஊர், சேரி ஆகியவற்றுக்கெனத் தனித்தனிக் கோயில்களும், நீர்நிலைகளும், இடுகாடுகளும் உண்டு. பிராமணரைத் தவிர, ஒவ்வொரு சாதிக்கும் அதன் ஒழுங்கைப் பேணிக் காப்பதற்கெனத் தலைவர்கள் தெரிவுசெய்யப்படுவர். ஒவ்வொரு சாதியினரும் தத்தமக்குரிய தெருக்களில் வாழ்ந்து, தமது சாதி ஒருமைப்பாட்டைப் பேணுவது மரபாக இருந்துவந்துள்ளது.

இவ்வாறு, தமிழகக் கிராமங்களிலே தாழ்த்தப்பட்டோர் வாழும் சேரிகளில் வாழ்பவரிற் பள்ளரும் அடங்குவர். அவர்கள் இன்றும் தமிழகத்திலும், ஈழத்திலும் வாழ்கின்றனர். சென்னைக் குடித்தொகை அறிக்கையை (1891) ஆதாரமாகக் கொண்டு, பள்ளர் பற்றிக் குறிப்பிடும் எட்கார் தேர்ஸ்டன் (Edgar Thurston), பள்ளர் வேளாண்மை உழைப்பாளர் என்பதையும், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் அதிகமாகவும், சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஓரளவுக்கும், பிற தமிழ் மாவட்டங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலும் காணப்படுவதையும் எடுத்துக்காட்டியுள்ளார். [11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஆ) பள்ளர் - பெயர்க்காரணமும் பிரிவுகளும்

பள்ளர் என்ற சாதியினருக்கு அப்பெயர் ஏற்படுவதற்கான காரணம் பற்றிக் குறிப்பிடுவோர் பலரும் பொதுவாகப் பள்ளம் என்ற சொல்லினின்றே அப்பெயர் தோன்றியது எனக் கொள்வர்.[12] தென்னிந்தியாவில் சாதிகளையும் பழங்குடியினரையும் பற்றி ஆராய்ந்த எட்கார் தேர்ஸ்டனும் அவ்வாறே கருதுவர். அவர் இதுபற்றி விளக்குமிடத்து, இப்பெயர் நன்செய் வேளாண்மையுடன் தொடர்புடையதாக இருக்கலாம் எனவும், இவ்வகை வேளாண்மையில் அவர்கள் திறமை மிகுந்தவராக இருந்தனர் எனவும் குறிப்பிடுகின்றார். மேலும், பள்ளமான பகுதியிலேயே இவ்வகை வேளாண்மை எப்போதும் நடைபெற்று வந்துள்ளது என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.[13] மேலும், ஈழத்தின் வட பகுதியில், "பள்ளத்துப் பள்ளன் எங்கேடி போட்டான் பள்ளம் பார்த்துப் பயிர்செய்யப் போட்டான்" என நிலவும் வாய்மொழிப் பாடல் அடிகளும் பள்ளர் சமூகத்தவரின் பெயர்க்காரணம் தொடர்பாக இவ்விடத்து நினைவுகூரத்தக்கன. இம்மக்கள் எப்போதும் பள்ளமான வயல் நிலங்களில் உழைத்து வந்தமையாலும், வேளாண்மையுடன் தொடர்புடையோராகவும் உழுதுவித்துண்ணும் மக்களாகவும் இருந்த பிரிவினர் வேளாளர் எனப் பெயர் பெற்றிருந்தமையாலும், உழுதுண்ண வேண்டிய நிலையிருந்த இச்சமூகத்தினர் பள்ளர் எனப் பெயர் பெறவேண்டியதாயிற்று எனக் கூறுவது பொருந்தும்.[14]

பள்ளர் என்ற இச்சமூகத்தவரிடையே வெவ்வேறு துணைப்பிரிவுகளும் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத் தக்கது. "நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது" என்ற பழமொழி, பள்ளு நூல்களைக் குறிப்பிடவே தோன்றியது என்ற கருத்து பொதுவாக நிலைகொண்டுள்ளது. ஆயினும், இப்பழமொழியைச் சமூகவியற் பார்வையிலேயே நோக்கவேண்டும். பள்ளர் சமூகத்தவரின் துணைப் பிரிவுகளைக் குறிப்பதே இப்பழமொழியின் நோக்கமெனக் கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்கார் தேர்ஸ்டன் இப்பழமொழியை நினைவுகூர்ந்து, பள்ளரிடையே காணப்படும் துணைப் பிரிவுகளுக்குச் சில உதாரணங்களையும் அளித்துள்ளார்.[15]

நிலத்தை அடிப்படையாகக் கொண்டு, கொங்குநாட்டுப் பள்ளர், மங்கநாட்டுப் பள்ளர், சோழியப் பள்ளர், தொண்டை நாட்டுப் பள்ளர், கவிநாட்டுப் பள்ளர், காணாட்டுப் பள்ளர், தென்சிறுவாசல் நாட்டுப் பள்ளர், வடசிறுவாசல் நாட்டுப் பள்ளர் போன்ற பிரிவுகள் காணப்படுகின்றன. இவர்கள் ஒருவருக்கொருவர் உறவுமுறைகளைப் புதுப்பித்துக்கொள்வதாகவும், தமக்கிடையிலான வேறுபாடுகளைப் பாராட்டுவதில்லையென்றும் கூறப்படுகின்றது.[16] இவ்வாறு, நிலத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய பள்ளர் சமூகத்தின் சிறுபிரிவுகள், காலப்போக்கில் உறவு முறைகளை ஆதாரமாகக் கொண்டு வளர்ச்சி பெற்றுள்ளமையையும் கண்டுகொள்ளலாம். இதுபற்றி, வீ.அய்யனார் விளக்கமாகப் பின்வருமாறு குறிப்பிடுவர்:

"உறவு முறைகளின் அடிப்படையில் தோன்றிய பள்ளர் வகைகளில் அய்யாப் பள்ளர், அம்மாப் பள்ளர், அஞ்ஞாப் பள்ளர், ஆத்தாப் பள்ளர், கடையப் பள்ளர் ஆகிய ஐந்தும் முக்கியமானவைகளாகும். இவர்கள் மதுரை, திருநெல் வேலி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் அதிகம் வாழ்கின்றனர். இவர்களுக்கிடையே திருமண உறவுகள் இல்லை. வழிபாட்டு முறையில் தொடர்பில்லை. ஆனால் சடங்கு முறைகளும், பழக்க வழக்கங்களும் பெரும்பாலும் ஒரே மாதிரியாக உள்ளன. மேற்கூறப்பட்டுள்ள ஐந்துவகைப் பள்ளர் இனமும் ஒரே ஊரில் வாழ நேர்ந்தாலும் நவக்கிரகங்கள் ஒன்றையொன்று பார்க்காததைப் போல வேறுபட்டு வாழ்கிறார்கள். மதுரை மாவட்டத்திலுள்ள சின்னமனூர், கண்டமனூர், அம்மச்சியாபுரம் ஆகிய ஊர்களில் இந்தநிலை காணப்படுகிறது."[17]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிலிருந்து பள்ளர் சமூகத்தவரிடையே பல்வேறு துணைப்பிரிவுகளும் இடம்பெற்றுள்ளமை தெளிவாகின்றது.

பள்ளரின் தலைவர்கள் ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு பெயர்களிற் குறிப்பிடப்பட்டனர். சான்றாக, மதுரை மாவட்டத்தில் "குடும்பன்" எனவும், கோயம்புத்தூரில் "பட்டகாரன்" என்றும் அழைக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். இவர்களின் இத்தலைமைப் பதவிகள் பரம்பரை வழியாகவே இவர்களுக்குக் கிடைத்துவந்தன.[18] இவ்வாறு, பள்ளரின் சாதியமைப்பைப் பொறுத்தவரையில், பள்ளர் தலைவர்கள் வெவ்வேறு பெயர்களிற் குறிப்பிடப்படினும், பள்ளு நூல்களிற் பள்ளர் தலைவன் "குடும்பன்" என்ற பெயராலேயே சுட்டப்படுகின்றான்.

பள்ளரின் சமூக அமைப்பிற் பள்ளர் தலைவர்களுக்கு உதவியாகச் சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குக் காலாடி, வாரியன், ஓடும்பிள்ளை போன்ற உதவியாளர் வெவ்வேறு இடங்களுக்கு ஏற்ப, வெவ்வேறு பெயர்களில் இருந்தனர்.[19] எனினும். பள்ளு நூல்களிற் பொதுவாக இவ்வுதவியாளர் பற்றிய குறிப்புகள் இடம்பெறுவதில்லை.[20] பள்ளு இலக்கியத்தின் கதைப்போக்குக்கு இவ்வுதவியாளர் பற்றிய குறிப்பு அவசியமற்றதாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

## (இ) பள்ளரின் தோற்றம் பற்றிய கருத்துகள்

பள்ளரின் தோற்றம் பற்றிப் பல்வேறு கதைகளும், கருத்துகளும் நிலவிவருகின்றன. அவற்றுள், பள்ளர் சூத்திரனுக்கும், பிராமணப் பெண் ஒருத்திக்கும் ஏற்பட்ட உறவின் காரணமாகத் தோன்றினர் என்பது ஒரு கருத்தாகும்.[21] இதேபோன்று, தேவேந்திரனோடு இவ்வகுப்பினரைத் தொடர்பு படுத்திக் கூறும் வழக்கும் உண்டு. வேளாளர் சார்பாக, நிலத்தில் பள்ளர்களை உழைக்க வைக்கும் நோக்குடன் தேவேந்திரன் அவர்களைத் தோற்றுவித்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதே அவ்வழக்காறு ஆகும்.[22] வ.குமாரசுவாமி வேறொரு கருத்தினைப் பள்ளரின் தோற்றத்துக்கு ஆதாரமாகக் காட்டுவர். சிவபிரானின் திருமணத்தின்போது, அகத்தியருடன் தென்னாடு புகுந்து குடியேறிய அருவாளர் மரபினரே பள்ளராவர் என்பது அவரது கருத்தாகும்.[23] பள்ளரின் தோற்றம் பற்றிப் பிறிதொரு கதைமரபும் வழங்கிவருகின்றது. பள்ளனும், வேளாளனும் வேளாண்மைத் தொழில் செய்துவந்த இரு சகோதரர்களாக இருந்தனர் எனவும், காலப்போக்கில் பள்ளனுடைய சொத்துக்கள் அழிந்ததனாலும், அவனது நிலவுரிமைகள் வேளாளனின் மனைவியினால் அபகரிக்கப்பட்டமையாலும் பள்ளன் கீழ்நிலை எய்தி அடிமையானான் எனவும் அக்கதை குறிப்பிடுகின்றது.[24]

இவை தவிர, கோ.கேசவனும் பள்ளரின் தோற்றம் குறித்த தமது கருத்துகளைத் தெரிவித்துள்ளார். நிலவுடைமையாளராக இருந்த வேளாளரின் பண்ணைகளில் உழைத்த பள்ளர், அவ்வேளாளர்களினாற் பாண்டிய மண்டலத்துக்குக் கொண்டுவரப்பட்டுக் குடியமர்த்தப்பட்டனர் என்ற எட்கார் தேர்ஸ்டனின் கருத்தையும், வேளாளருக்குள்ளே இழிநிலை அடைந்த ஒரு பிரிவினரே பள்ளர் என்ற நிலைக்குத் தாழ்ந்தனர் என்ற பெ.தங்கராஜின் கருத்தையும், தொண்டைமண்டலத்தை வேளாளர் தாக்கித் தமது மேலாண்மையை ஏற்படுத்தியபோது, அதனை ஏற்றுக்கொண்ட உயர்வகுப்புப் பல்லவர்கள் சோழர் படையிற் சேர்ந்து படையாச்சி என அழைக்கப்படவே, தாழ்நிலை அடைந்த பல்லவர் அடிமைகளாக ஆகிப் பள்ளர் எனப் பெயர் பெற்றனர் என்ற கே.ஆர்.ஹனுமந்தனின் ஊகத்தையும் கேசவன் தமது நூலில் மறுத்துள்ளார்.[25]

பள்ளரின் தோற்றம் பற்றிய பிறரின் கருத்துகளை மறுத்துரைத்த கேசவன், அது தொடர்பாகத் தமது கருத்தை முன்வைத்துள்ளார். கி.பி.14ஆம் நூற்றாண்டிலே தமிழகம் விஜயநகரப் பேரரசுக்குள் வந்தபின்னர் ஏற்பட்ட புதிய குடியேற்றங்களின் விளைவாக, ஏற்கனவே அந்தந்தத் தொழில்களைச் செய்துவந்த தொழிலாளரிடையே வேலைப்பிரிவினை ஏற்பட்டது. இவ்வாறு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டமையும், அதன் விளைவாக ஏற்பட்ட வேலைப்பிரிவினையுமே பள்ளர் என்ற புதிய வகுப்பாரின் தோற்றத்துக்கு வித்தாக அமைந்தது என்பது அவரது கருத்தாகும். மேலும், இத்தகைய வேலைப்-பிரிவினை, ஆந்திர நாட்டிலிருந்து வந்த தெலுங்குச் சக்கிலியருக்கும், தமிழகப் பறையர் சமூகத்தினருக்கும் இடையே ஏற்பட்டது என்றும், பறையரில் ஒரு பிரிவினர் சக்கிலியரின் குடியேற்றத்துக்குப் பின்னர் தமக்கும், அச்சக்கிலியருக்கும் இடையேயிருந்த பொதுவான தொழில்களைக் கைவிட்டு, இரு சமூகத்தவரையும் வேறுபடுத்தும் தொழிலான பண்ணை அடிமைத் தொழிலில் மட்டுமே ஈடுபடத் தொடங்கினர் எனவும் அவர் கூறுகின்றார்.[26]

கோ.கேசவனின் மேற்கண்ட கருத்து அறிவியல் அடிப்படையைக் கொண்டதாக இருப்பினும், அதனை ஏற்றுக்கொள்வதிற் சில தடைகள் உண்டு. பள்ளரின் தோற்றம் கி.பி.பதினான்காம் நூற்றாண்டின் பின்னரே ஏற்பட்டுள்ளது எனக் கேசவன் கருதுகின்றார். ஆனால், சோழப் பேரரசர் காலத்திற் காணப்பட்ட இடங்கை-வலங்கை என்ற பிரிவுகளிற் பள்ளர் இடங்கைப் பிரிவைச் சேர்ந்தவராக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுபற்றி, கே.கே.பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில், "சக்கிலியரைப் போலவே பள்ளர் சாதியினர் இடங்கையினர் அவரது பெண்கள் வலங்கையினர் ஆவர்"[27] என்று குறிப்பிடுகின்றார். மேலும், அவர் இதுபற்றி விளக்குகையில்,

> "அன்றியும், முதலாம் இராசராசன் இராசேந்திரன் ஆகிய சோழப் பேரரசர்கள் தோல்வியடைந்த மன்னர்களிடமிருந்து கைப்பற்றிய படையினரை இடங்கை வகுப்பினரென அழைத்தமையும் கருதற்குரியது. எடுத்துக்காட்டாகக் கன்னட நாட்டுப் பேடர்கள், பாண்டிய நாட்டுப் பள்ளர்கள், கலிங்கநாட்டு பேடர்கள், மாடிகர்கள், சக்கிலியர்கள் ஆகியோர் சோழப்படையோடு சேர்க்கப்பட்டபின் இடங்கை வகுப்பினராகக் கருதப்பட்டனர்"[28]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறுகின்றார். இப்பிரிவுகள் பற்றி, கி.பி.பதினோராம் நூற்றாண்டிலேயே சாசனங்கள் குறிப்பிடத் தொடங்கிவிட்டன என்பதும் இங்கு கருதத்தக்கது.29

மேலும், மூன்றாம் குலோத்துங்க சோழனின் இருபத்து நான்காவது ஆட்சியாண்டுச் (கி.பி.1199) சாசனம் ஒன்றில் [30] "பள்ளுப்பாடல்" பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. பள்ளுப்பாடல் என்பது, பள்ளு இலக்கியத்தோடு தொடர்புடையதா என்பது பற்றி உறுதிசெய்ய இயலாவிடினும், பள்ளர் சமூகத்தோடு தொடர்புடைய பாடல் வகை என்பதில் ஐயத்துக்கு இடமில்லை.

இவற்றைக் கொண்டு நோக்குமிடத்து, பள்ளர் சோழர் காலத்திலேயே தமிழகத்தில் வாழ்ந்துள்ளமை தெளிவாகின்றது. மேலும், அவர்களது தோற்றம் கி.பி.பதினோராம் நூற்றாண்டுக்கு முன்னரேயே தமிழகத்தில் ஏற்பட்டு விட்டது என்பதும் உறுதியாகின்றது. ஆகவே, கோ.கேசவன் கூறுவது போன்று, கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் பின்னரே பள்ளரின் தோற்றம் தமிழகத்தில் இடம்பெற்றது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமையவில்லை.

## (ஈ) பள்ளரின் சமூகத்தரம்

தமிழகத்தில் வேளாண்மைக்குத் தேவையான மனிதவலு முதன்மையாகப் பள்ளர், பறையர் போன்ற தாழ்த்தப்பட்ட சாதியினராலும், சாதி நீக்கம் செய்யப்பட்டவராலுமே அளிக்கப்பட்டு வந்துள்ளது. நீண்ட காலமாகத் தமிழகத்தில் வேளாண்மைத் தொழில் அவர்களைச் சார்ந்ததாகவே இருந்து வந்துள்ளமையைக் காணலாம். [31] ஆயினும், அவர்களது வாழ்க்கைத்தரம் தாழ்நிலையிலேயே அமைந்திருந்தது. இதற்கு முதன்மையான காரணம், நிலப்பிரபுக்களின் கீழ் பண்ணை அடிமைகளாகவே வாழவேண்டிய நிலை அவர்களுக்கு இருந்தமையாகும். இன்னொரு வகையிற் கூறுவதாயின், நிலத்தோடு தொடர்புடைய நிலமற்ற உழைப்பாளராக அவர்கள் விளங்கினர். தஞ்சாவூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தைச் சார்ந்த கிராமம் ஒன்றின் (கும்பாபேட்டை) சாதியமைப்பை ஆய்வுசெய்த ஆய்வாளர் ஒருவர், அக் கிராமத்திலுள்ள பள்ளரின் குடியிருப்புக்களைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, அச்சமூகத்தவர் ஊருக்கு வெளியே, நெல் வயல்களுக்குக் குறுக்காகத் தமக்கென உரிய இரு தனியான குக்கிராமங்களில், சகதிநிறைந்ததும், கூரையால் வேயப்பட்டதுமான சிறிய குடிசைகளில் நெருக்கமாக ஒன்றிணைந்து வாழ்ந்தமை பற்றிக் கூறியுள்ளார்.[32] இது பள்ளரின் தாழ்ந்த தரத்து வாழ்க்கை நிலையினைத் தெளிவுபடுத்துகின்றது.

வேளாண்மைக்குரிய பண்ணைகளில் உழைத்து வந்த பள்ளர் பொதுவாகக் கொத்தடிமைகளாகவே இருந்துள்ளனர். ஒரு பெண்ணை, அவளது பிள்ளைகளுடன் சேர்த்து விற்பது கொத்தடிமை எனப்படும்.[33] இவ்வாறு, பண்ணைகளிற் கொத்தடிமைகளாக இருந்த பள்ளர் தமது கடமையிலே தவறும்போது கடுந்தண்டனைகளுக்கு ஆளாவதுண்டு.[34]

பள்ளர் முதலான தாழ்த்தப்பட்ட மக்கள், பண்ணைகளில் நிலப்பிரபுக்களின் அடிமைகளாகத் தொழிற்படுவதை, 1843ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அடிமை ஒழிப்புச்சட்டம் (Slavery abolition Act of 1843) விலக்கியது. சட்டமுறையில் இவ்விலக்கு அளிக்கப்பட்டபோதிலும், சமுதாயத்திற் பண்ணையாட்கள் என்ற முறைமையில் இவ்வடிமைகள் நிலப்பிரபுக்களினாலே தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்டனர். பள்ளர் தாம் முன்னர் எந்த நிலப்பிரபுக்களுக்கு அடிமைகளாக இருந்தனரோ, அவர்களுக்கே 1843இன் பின்னரும் 'பண்ணையாள்' என்ற பெயரிற் கட்டுப்பட்டு உழைத்தனர்.[35]

இவ்வாறு, 1843ஆம் ஆண்டில் அடிமை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னரும், வேறு வகையிற் பள்ளர் வேளாண்மைத்தொழிலிலே தொடர்ந்து கட்டுப்பட்டு அடிமைநிலையிலேயே இருந்தமையினாலேயே, இத்தகைய சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் சில பள்ளு நூல்கள் இயற்றப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. இதற்குச் சிறந்தவோர் எடுத்துக்காட்டாக விளங்குவது, செங்கோட்டுப் பள்ளாகும்.[36]

## (உ) ஈழத்திற் பள்ளர் சமூகம்

தமிழகத்துக்கு மிக அருகில் ஈழம் அமைந்திருப்பதால், நீண்டகாலமாகவே இரு நாடுகளிலுமுள்ள தமிழ் மக்களிடையே பண்பாட்டுத் தொடர்புகள் நிலவிவந்துள்ளன. அவ்வப்போது தமிழகத்திலிருந்து ஈழத்திற் குடியேற்றங்களும் நிகழ்ந்துள்ளன. ஆயினும், கி.பி.பதின்மூன்றாம், பதினான்காம் நூற்றாண்டுகளில் தமிழகத்தினின்றும் ஈழத்துக்கு வந்து மக்கள் குடியேற்றங்களை அமைத்தமை குறிப்பிடத்தக்கது. இந்நூற்றாண்டுகளிலே தமிழகத்திற் சோழ, பாண்டியப் பேரரசுகள் வீழ்ச்சியுற்றமையைத் தொடர்ந்து, நாட்டிற் குழப்பநிலையும், சீரழிவும் ஏற்படத் தொடங்கின. தமிழகம் மீதான முஸ்லிம்களின் படையெடுப்பு, விஜயநகரப் பேரரசின் கீழே தமிழகம் வந்தமை, விசுவநாதநாயக்கன் காலத்திலே தெலுங்கு அதிகாரிகளைக் கொண்ட பாளையப்பட்டுக்கள் ஏற்படுத்தப்பட்டமை முதலான காரணங்களால், சோழ பாண்டியப் பேரரசுகளின்போது தமிழகத்திற் பெருமதிப்பும், செல்வாக்கும் பெற்றிருந்த வேளாளர் தலைவர்களின் நிலை பாதிப்புக்குள்ளானது. சமுதாயத்தில் முன்னர் பெற்றிருந்த உயர்நிலையினை அவர்களாலே தொடர்ந்து நிலைநிறுத்த இயலவில்லை. இந்நிலையிற் சமுதாயத்தில் மேன்மை பெற்றிருந்த வேளாளர் பலர் குடும்பம் குடும்பமாக ஈழத்துக்கு வந்து குடியேற்றங்களை அமைத்தனர்.[37] அவர்கள் அவ்வாறு யாழ்ப்பாணத்திற் குடியேறியபோது, தமிழகத்திலே தமது வயல்களிலே தமக்கு வேளாண்மைத்தொழிலில் அடிமைகளாக உதவிய பள்ளர் வகுப்பினரையும் அங்கு அழைத்துச் சென்றனர்.[38] வ.குமாரசுவாமி இதுபற்றிக் குறிப்பிடுமிடத்து, காரைக்காட்டுப் பிரதேசங்களிலிருந்து யாழ்ப்பாணத்தில் வந்து குடியேறிய வேளாண் பிரபுக்களுடன் பள்ளரும் வந்து குடியேறினர்"[39] எனக் கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பகுதியில் ஏறத்தாழ 48 சாதிகள் உள்ளதாகக் கருதப்படுகின்றது.[40] கோவியர், நளவர், துரும்பர், தனக்காரர் ஆகிய சாதிப் பிரிவுகளைத் தவிர்த்து, யாழ்ப்பாணத்திற் காணப்படும் மற்றைய சாதிப்பிரிவுகள் அனைத்தும் பெரும்பாலும் தமிழகத்திற் காணப்படுபவற்றை ஒத்தனவாகவே உள்ளன. சி.இராசநாயகம் கோவியர், தனக்காரர், நளவர் ஆகியோரை, மற்றைய சாதிப்பிரிவுகளினின்றும் தனிப்படுத்தி நோக்குவர்.[41]

யாழ்ப்பாணச் சாதியமைப்பு வேளாளரையே மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. பிராமணர் உட்பட, மற்றைய சாதியினர் பெரும்பாலும் வேளாளரைச் சார்ந்தே இயங்கவேண்டியுள்ளது. மைக்கேல் பாங்ஸ் கூறுவது போன்று, பிராமணரைத் தவிர்த்து, பெரும்பாலும் மற்றைய சாதியினர் வேளாளரின் சொத்துக்களாகவே கருதப்பட்டனர்.[42] அவர்களுட் பள்ளரும் அடங்குவர்.

யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பில் இன்னொரு கூறும் குறிப்பிடத்தக்கது. வேளாளருக்குச் சேவை செய்யும் தாழ்த்தப்பட்ட சாதிப்பிரிவினர் அடிமை, குடிமை என இரு பிரிவினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர். பள்ளர், நளவர், கோவியர் முதலிய சாதியினர் `அடிமை` என்ற பிரிவில் அடங்குவர். பொற்கொல்லர், கொல்லர், தச்சுவேலை செய்வோர், முடித்திருத்துநர், சலவைத்தொழிலாளர், பறையர் முதலியோர் "குடிமை" என்ற பகுப்பினுள் அடங்குவர். இவ்வாறு, குடிமை எனக் குறிக்கப்படும் சாதியினர் அடிமைகளாக இருந்ததில்லை. அடிமைகளைப் போன்று அவர்களை விற்கவோ, வாங்கவோ இயலாது. ஆயினும், தமது எசமானரான வேளாளருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் தமது சேவையை ஆற்றுவதற்கு அவர்கள் கடமைப்பட்டவராக இருந்தனர்.[43]

ஈழத்தில் பெரும்பாலும் யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை முதலான பிரதேசங்களிற் பள்ளர் சமூகத்தினர் வாழ்ந்துவந்துள்ளனர். இந்தியாவிலிருந்து வந்து மலையகப்பகுதிகளிற் குடியேறிய தமிழ் மக்களிடையேயும் பள்ளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தவர் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில், வேளாளர்களே நிலவுடைமையாளராக விளங்கிவந்தனர். அவர்களின் கீழ் உழைத்த வேளாண்மை உழைப்பாளராகப் பள்ளர் விளங்கினர்.

தமிழகத்திற் காணப்பட்டமை போன்று பெரும் பண்ணைகள் ஈழத்திற் காணப்படவில்லை. ஈழத்தின் வடபகுதியில் நிலவுடைமையாளராக விளங்கிய வேளாளர், தமிழகப் பண்ணையாளர்களை விடவும் குறைந்த நிலப்பரப்புடைய காணிகளுக்கே உரிமையுடையவர்களாக விளங்கினர். ஆயினும், அதிகார மனப்பான்மையில், தமிழகப் பண்ணையாளர்களுக்கு அவர்கள் சளைத்தவர்களாகக் காணப்படவில்லை. மேலும், ஈழத்தில் உழுதுவித்துண்ணும் வேளாளர் மாத்திரமன்றி, உழுது உண்ணும் வேளாளரும் இருந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தைப் போன்று, ஈழத்திற் கோயில் சார்ந்த நிலங்கள் பெருமளவு காணப்படவில்லை என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கதொன்றாகும்.

மேலும், தமிழகத்தைப் போன்று, சேரி வாசிகளாகப் பள்ளர் ஈழத்திற் காணப்படவில்லை. ஈழத்துப் பள்ளரின் குடியிருப்புக்கள் வேளாளரின் குடியிருப்புக்களைச் சார்ந்து காணப்பட்டன. பெரும்பாலும், வேளாளரின் நிலங்களிலேயே அவர்கள் குத்தகை முறையிற் குடியமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களது உழைப்பு நிலவுடைமையாளர்களுக்குப் பயன்பட்டது. காலப்போக்கில், பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் கள்ளிறக்கும் தொழிலையும் மேற்கொள்ளத் தொடங்கினர். பெண்கள் வேளாண்மைத் தொழிலிற் கூலியாளராகத் தொழிலாற்றி வந்துள்ளனர். பள்ளரின் சமூகத் தரமும், வாழ்க்கைநிலையும் தமிழகத்தில் அச்சமூகத்தவர் அனுபவித்துவந்த நிலையினின்றும் பெரிதும் மாறுபட்டதாக அமைந்திருக்கவில்லை. கடுமையாக உழைத்து, ஏழ்மையையே தமது நிரந்தர அனுபவமாக்கி அவர்கள் வாழ்ந்துவந்துள்ளனர்.

இந்தியாவில் 1843 ஆம் ஆண்டில் அடிமை ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, ஒரு வருட காலத்தில் (1844) ஈழத்திலும் அவ்வகையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் இத்தகைய சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரும், பள்ளர் வேளாண்மைத் தொழிலில் அடிமைகளாகவே வாழவேண்டியிருந்த நிலையையொத்தே, ஈழத்திலும் அத்தகைய சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரும், குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அவர்கள் வேளாண்மை அடிமை உழைப்பாளராகவே வாழ்ந்துவரநேரிட்டது. இதற்கு, அவர்களது பொருளாதாரப் பலமின்மையே முதன்மையான காரணமாக அமைந்தது.

## (ஊ) பள்ளரின் குடியிருப்புகள்

பள்ளரின் வாழ்விடம் பள்ளர் சேரி எனக் குறிப்பிடப்படும். பள்ளு நூல்களிலும் பள்ளர் சமூகத்தவரின் வாழ்விடம் இவ்வாறே குறிப்பிடப்படுகின்றது. முக்கூடற் பள்ளில், "பட்சேரிப் பள்ளரெல்லாம்,"[44] "சேரிப் புள்ளிப் பள்ளர்,"[45] "பண்ணை மிக்க சேரியில் பள்ளர்,"[46] "சேரி மள்ளர்"[47] எனப் பள்ளரின் வாழ்விடம் குறிப்பிடப்படுகின்றது. திருவாரூர்ப்பள்ளில், "சேரிப்பள்ளிகள்"[48] எனவும், செண்பகராமன் பள்ளில், "பள்ளச்சேரி,"[49] "சேரிப்பள்ளர்"[50] எனவும் கூறப்படுகின்றது. பொய்கைப்பள்ளில், "சேரி மள்ளர்,"[51] "பள்ளச் சேரியும்,"[52] "பள்ளச் சேரிக்கே,"[53] எனவும், செங்கோட்டுப் பள்ளில் "பள்ளர்பட்சேரியில்,"[54] "பட்சேரிப் பள்ளரெல்லாம்"[55] என்றும், கண்ணுடையம்மன் பள்ளில், "சேரிப்பள்ளரெல்லாம்,"[56] "பட்சேரி"[57] எனவும் குறிப்பிடப்படுகின்றது. திருமலைமுருகன் பள்ளிலும், செண்பகராமன் பள்ளிலும் பள்ளனோடு தொடர்புபடுத்தியும் சேரி குறிப்பிடப்படுகின்றது.[58] இவ்வாறு, பள்ளரின் வாழ்விடமான சேரி பற்றிப் பள்ளு நூல்கள் குறிப்பிட்டு, அவர்களின் தாழ்த்தப்பட்ட சமூகநிலையினையும், ஏழ்மை நிரம்பிய வாழ்வினையும் தெளிவுறுத்துகின்றன.

ஈழத்துப் பள்ளு நூல்களைப் பொறுத்தவரையில், தமிழகத்துப் பள்ளு நூல்களில் இடம்பெற்றிருப்பது போன்ற பள்ளர் சேரி பற்றிய குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறவில்லை. ஞானப்பள்ளில் மழை வெள்ளம் பாயும்போது, "கோல வள்வர் சேரியை நாடி"[59] எனப் பொதுவாக மருதநிலத்து உழவர் வாழ்விடம் கூறப்படுகின்றது.

மேலும், பள்ளரின் சேரிகளிற் காணப்படும் அவர்களின் மிக எளிமையானவையும், ஏழ்மை நிரம்பியவையுமான இல்லங்களைப் பற்றியும் பள்ளு நூல்கள் குறிப்பிடுகின்றன. "குடிலிற் கிடந்த பள்ளனை,"[60] "வடிவழகக் குடும்பன் குடிலிலிருந்தே அரை நொடியில் வந்தான்,"[61] "இளையாள் குடிலில்,"[62] "பள்ளிதன் குடிற்கேகிப் போக"[63] என்பன, சிறு குடில்களிற் பள்ளர் சமூகத்தவர் வாழ்ந்தமை பற்றிக் குறிப்பிடுகின்றன. அதே போன்று, குச்சு என்ற சொல்லும் அவர்களது இல்லங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.[64]

பள்ளர் சேரிகளினதும், அவர்களது வாழ்வியற் போக்குகளினதும் சித்திரிப்புக்களும் ஓரளவு பள்ளு நூல்களிற் காணப்படுகின்றன. இத்தகைய சித்திரிப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகச் செண்பகராமன் பள்ளிற் காணப்படும் பின்வரும் பாடற்பகுதி காணப்படுகின்றது. மழை பெய்து வெள்ளம் பாயும்போது பள்ளர் சேரியில்,

"குடத்தி லிருந்த கள்ளையும் - சுட்டுக்
கூட்ட இருந்த சுள்ளையும்
கொத்த எக்கிற நாழியும் - பள்ளன்
கோழி அவித்த தாழியும்
கடத்தும் ஆற்றுத் தோணியும் - கொடிக்
காலில் சாற்றும் ஏணியும்
களத்திற் கிடந்த நெல்லையும் - மாடு
கட்டுந் துறையிற் புல்லையும்"[65]

UNIVERSITY OF PERADENIYA
2003-11-17
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்துச் செல்வது பற்றியும் கூறப்படுகின்றது. இப்பாடற் பகுதி பள்ளர் சேரியின் பொது இயல்பினைத் தெளிவுற எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. மேலும், மழை வெள்ளம் மருதநிலத்திற் பாயும்போது, பள்ளியர் அஞ்சும்படி பள்ளர் சேரியிலுள்ள நெற்பட்டடை, விதை, நெல், தீப்பந்தம், மண்வெட்டி. கலப்பை, நுகம் ஆகியவற்றை அடித்துச் சென்றமை பற்றியும் செண்பகராமன் பள்ளிற் கூறப்பட்டுள்ளது.[66]

இத்தகைய சித்திரிப்புகளின் வாயிலாக, அவர்களின் சேரியின் நிலை உணர்த்தப்படுகின்றது. ஈழத்தைப் பொறுத்த வரையில், பள்ளருக்கெனத் தனியான சேரிகள் காணப்படாமையால், ஈழத்துப் பள்ளு நூல்களிலே தமிழகத்துப் பள்ளு நூல்களிற் காணப்படுவது போன்று, பள்ளர் சேரிகள் பற்றிய குறிப்புகள் இடம்பெறவில்லை.

## (எ) பள்ளரின் அடிமைநிலை

பள்ளர் தமக்கென உரிய சேரிகளில் வாழ்ந்துவந்ததோடு, வேளாண்மைத்தொழில் உழைப்பாளரான அவர்கள், கோயில்களுக்குச் சொந்தமான பண்ணைகளிலோ, அல்லது தனிப்பட்ட நிலவுடைமையாளர்களுக்கு உரிமையான பண்ணைகளிலோ உழைத்துவந்தனர். இவ்வாறு, பண்ணை வயல்களில் உழைத்துவந்த அவர்கள், தாம் சமூகத்தரத்திற் குறைந்திருந்தமையாலும், தம் வாழ்வில் நுழைந்துவிட்ட நித்திய ஏழ்மையினாலும், பொருளாதாரப் பலமின்மையாலும், கல்வியறிவற்ற நிலைமையினாலும் நிலவுடைமையாளரைச் சார்ந்து, அவர்களின்கீழ் கொத்தடிமைகளாக உழைக்கவேண்டிய நிர்ப்பந்தம் காணப்பட்டது.[67] இதனைப் பள்ளு நூல்கள் தெளிவாகக் காட்டுகின்றன. "முத்தமிழ் நாட்டழகர் கொத்தடியானுக்கான முக்கூடல் மூத்தபள்ளி நானேயாண்டே,"[68] "கொத்தடிமைப் பள்ளர்,[69] "கொத்தடியானுடன் இத்தனையேன்,"[70] "ஒருமிக்கக் கூடி வந்த கொத்தடிமைக் குடியில் உள்ளவள்,"[71] "பண்ணைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தடிமைக் குடும்புசெய் பள்ளடியா னானே,"[72] "உங்கள் கொத்தடிமை செய்யுங் கொடுமையைக் கேளுங்கா ணாண்டே"[73] என்பவை, பள்ளர் கொத்தடிமைகளாக வாழ்ந்தமையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

இவை தவிர, பள்ளர் சமூகத்தவரின் அடிமைநிலை பற்றிப் பொதுவாகவும் பள்ளு நூல்கள் குறிப்பிடுகின்றன. "மூப்படியான்,"[74] "பண்ணைவளம் பயிரேற்றித் தொழும்பு செய்யும் மூத்தபள்ளி இளையாள்" "இருமருங்குசூழ திருமலைக்குடும்பன் தோன்றினானே,"[75] "பண்ணைப் பள்ளர் கோத்திரத்திற் பெண்ணடிமை நான்,"[76] "இன்னமுங்கள் அடிமை வரக் காண்கிலேன் நான் ஆண்டேஇ"[77] "உழைத்திடும் அடிமை,"[78] "உமக்கடியான்,"[79] செண்பகராம ராயன் காரணப் பாட்டினிலுள் ளோர்தமக்கே, அருமைப் பெருமைவழி அடிமைத் தொழும்பு-செய்த அந்தக் குடும்பன் வழி வந்தவ னானே,"[80] "பண்ணைக் குடும்புசெய் யடிமையான்,"[81] "தொழும்பு செய்யும் பண்ணைக் குடும்பன்,"[82] "அடிமைப்பள்ளன்,"[83] "அடிமை,"[84] "சொந்தடிமைப் பள்ளன்,"[85] "பள்ளடிமைக் குடும்பா,"[86] வழியடிமைப் பள்ளன்,"[87] "பண்ணை யுழவடிமைக் கண்ணக் குடும்பன் வந்து தோன்றினனே,"[88] "பண்ணை அடிமைக் கண்ணக் குடும்ப னானே யாண்டே"[89] என்பவை பள்ளரின் அடிமைநிலையினைச் சுட்டுவதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

ஈழத்துப் பள்ளு நூல்களிற் பள்ளரின் அடிமைநிலை பற்றிய செய்திகள் காணப்படவில்லை. ஈழத்திற் பள்ளர் வேளாளரின் அடிமைகளாக வாழ்ந்தபோதிலும், தமிழகத்துப் பண்ணை அமைப்புமுறை இங்கு காணப்படாமையால், அடிமைமுறையின் தாக்கம் வெளிப்படையாகத் தோன்றவில்லை. அதனால். ஈழத்துப் பள்ளு நூலாசிரியர்களினாற் பள்ளர் சமூகத்தவரின் அடிமை உணர்வினைப் பூரணமாக விளங்கிக்கொண்டு பாட இயலவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (ஏ) உணவுப் பழக்கங்கள்

பள்ளர் சமூகத்தின் உணவு, குடிவகை முதலானவை தொடர்பான பழக்கங்களைப் பள்ளு நூல்கள் எடுத்துக் காட்டியுள்ளன. அவர்களின் முக்கிய உணவாகச் சோறு, கஞ்சி, கருவாடு, மீன் முதலானவை அடிக்கடி குறிப்பிடப்படுகின்றன. இவை தவிர, மாமிசம், மோர் முதலியவை பற்றியும் இடையிடையே குறிப்பிடப்படுகின்றது. ஆனால், அவர்களது இத்தகைய உணவு வகைகளை எளிதிலே பெறத்தக்க வசதியுடையோராக அவர்கள் வாழ்ந்ததில்லை. இதனைப் பள்ளு நூல்கள் உணர்த்துவதற்குத் தவறவில்லை. "பள்ளர் அங்கலாய்க்குஞ் சோற்றுக்கும்,"[90] "கஞ்சிக்குந் தன்னிலேதான் கெஞ்சிப் புகுந்தவளல்ல"[91] "நீர்வார்த்த கஞ்சி குடித்துக் கிடப்பேன்"[92] "நேற்றிரவு புளிச்சகஞ்சி இவ்வுளவுங் குடித்தான்,"[93] "முந்தாநாள் ராக்குடித்த கஞ்சி"[94] "நீதார அச் சோற்றையும்முண்டு சும்மா கிடப்பேன்,"[95] "உங்கள் தொம்பரச் சோறுண்ட நம்பிக்கை யொன்றுண்டே ஆண்டே"[96] "அவள் பசிக்கு மோருந் தாராளாம்,"[97] "கஞ்சிக்குப் பிறகே–நின்று–கெஞ்சிக் கொண்டிருப்பான்"[98] என்பவை, தமது எளிய உணவைப் பெறுவதற்குக்கூடப் பள்ளர் சமூகத்தவர் வசதி கொண்டவராக வாழவில்லை என்பதை உணர்த்துகின்றன.

அதேவேளை, பள்ளர் தமது உணவினைப் பெறுவதற்காக, அதற்கு மேலான பொருட்களை ஈடாக அளிக்கவேண்டிய நிலை இருந்தமையையும் பள்ளு நூல்கள் குறிப்பிடுகின்றன. "பெட்டிச் சோற்றுக்கும் கள்ளுக்கும் நெல் லெல்லாம் பெட்டியா லள்ளிக் கொட்டினா னாண்டே"[99] எனப் பறாளைவிநாயகர் பள்ளு குறிப்பிடுவது, இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இவை ஒருபுறமிருக்க, சுவையான உணவுக்காக மாத்திரமன்றி, குடி வகைக்காகவும் ஊதாரித்தனமான முறையிற் பள்ளர் செலவு செய்வதையும் பள்ளு நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன. "பெட்டியால் வாரிப் பட்டடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லெல்லாம் பேய்த் தண்ணீருக்குத்–தேய்த்தான் காணாண்டே,"[100] "பரத்திகைச் சுள்ளும்–அக்கரைத் திருத்தினிற் கள்ளும் கொண்டஞ்சு பசுவையும் விற்றான்"[101] "சுள்ளி னோடுறு கள்ளுமருந்திடத் தொண்ணூறு மாட்டையு மெண்ணியே வித்தான்"[102] "கருதியே முட்டைக் கோழிக்கு மாட்டுக் கறிக்கு மீந்தது முப்பது கோட்டை"[103] "ஆட்டுகின்ற நல்லெண் ணெய்க்கும் வேட்ட வரக்குக்கும் விற்ற தன்பது மாடு,"[104] "பணத்தையும் பேய்த்தண்ணீருக் கிறைத்தான்"[105] "கன்று காலியும் விற்றுக் கள்ளுஞ் சுள்ளுங்...... குடித்து"[106] என்பவை இதனை விளக்குகின்றன.

கடும் உழைப்பாளர்களான பள்ளர் சமூகத்தவர் சுவையாக உண்பவர்கள் என்பதையும் பள்ளு நூல்கள் உணர்த்துகின்றன. "கருமுட்டைக் கோழிக் கறியனம் ஒருசட்டி தாழி எதிர்வைப்பேன்,"[107] "ஒரு சட்டி நண்டையும் நொறுக்கிறான்"108 "கள்ளும் நல்ல கொழுத்த மறிக் கறியும் கூட்டி" பள்ளனுக்குச் சோறிட்டாளே"[109] "வெங் கள்ளுஞ் சுள்ளுடன் பள்ளனுக் கிட்டாள்,"[110] "நரிச்சி யென்கிற மூத்தவள் பள்ளப் பெரிச்சி யுண்கிற சோற்றிலே நண்டாணத்தை விட்டுட்டினாள்.... சிரிச்சுக் கொண்டவன் சிறுபள்ளியெலி பொரிச்சுக் கொண்டாந்த கறியெல்லாம் தின்று தந்திட மென்றுதின்கிற சிங்காரம் பாரும் பள்ளீரே"[111] என்பவை, உழைப்பாளரான அம்மக்களின் உணவுச் சுவை விருப்பத்தைப் புலப்படுத்துகின்றன.

மேலும், பள்ளர் சமூக்கத்தவர் உழைப்பின் களைப்பை நீக்குமுகமாக மதுவருந்தும் பழக்கமுடையவர்கள் என்பதைப் பல சந்தர்ப்பங்களிற் பள்ளு நூல்கள் புலப்படுத்துகின்றன. "சாதி முறைமை கள்ளுக்குடித் துரைப்போம் அதைச் சகித்திடும் நயினாரே"[112] எனத் திருமலைமுருகன் பள்ளில் இடம்பெறும் பள்ளனின் கூற்று, அவர்களின் மதுப்பழக்கத்தை உணர்த்துகின்றது. திருமலைமுருகன் பள்ளு, ஞானப்பள்ளு தவிர்ந்த பிற பள்ளு நூல்களிற் பள்ளர் தலைவனான குடும்பன் மதுவெறியுடன் தோன்றுவதாகக் குறிப்பிடப்படுவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கருதத்தக்கது. இவற்றோடு "சேரி மள்ளர் கூட மதுவுண்டான்,"[113] "குடித்திடும் வெறிப்பள்ளன்,"[114] எந்த நாளும் அரக்கும் பனங்கள்ளும் இல்லாவிட்டால் இருக்கவுமாட்டான்,"[115] "ஒழுகுபனை மது பள்ளரோ டுண்டான்"[116] "பள்ளன் பொல்லாத கள்ளுக்குடித்த மதியினாற் போனான்,"[117] "கேளூர் நிருபக் குடும்பனு மவன் கிளையிற் பிறந்த விடும்பனும் கிடைத்த மதுவைக் குடித்து வெறியிற் கிளைச்சி யருகி லோடிப்போய்த் தாளா லுதைத்து விழுத்தினான்,"[118] "போதை மகிழ்ந்து கண்ணக் குடும்பன் புள்ளிப் பள்ளருங் கூட்டிப்போய் பொருந்து கள்ளுடன் சாராயப்படை திருந்து குடந் தொட்டருந்தியே"[119] என்பவையும் பள்ளரின் மதுவருந்தும் பழக்கத்தைத் தெளிவுபடுத்துகின்றன.

பள்ளர் சமூகத்தின் இருபாலாரும் கடும் உழைப்பாளராக விளங்குவதால், ஆண்களைப் போன்றே பெண்களும் மதுவருந்தும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்பதையும் பள்ளு நூல்கள் காட்டுகின்றன. மூத்தபள்ளி தன் கணவன் தண்டனை பெற்றிருக்கும்போது, அவனை விடுவிப்பதற்காகக் கூறும் காரணங்களில் ஒன்றாக, தான் மதுவருந்தியிருந்தமையால் அவன்மீது குற்றம்சாட்டியதாகத் தெரிவிப்பாள். இதன்மூலம், பெண்பாலாரும் மதுவருந்தும் பழக்கமுடையோராக இருந்தமை புலனாகின்றது. "பொல்லாத் தண்ணீர் குடித்த வெறியால் முதல் சொன்னேன் ஆண்டே,"[120] "மோடி பனைநீரைத் தேடியுண்டதனால் மோசம் பள்ளனைப் பேசினேன்,"[121] "சாடி சொன்னேன் கள்ளுத் தண்ணீர் வெறியாலே,"[122] "நானும் புத்தி மயங்கி வெறியினால் சொன்னேன்காண் ஆண்டே"[123] என்பன இதனைத் தெளி வுறுத்துகின்றன. மேலும், பள்ளியரின் மதுவருந்தும் பழக்கம் பற்றி வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் பள்ளு நூல்கள் குறிப்பிடுகின்றன. "சாராயக்காரி,"[124] "வடித்த மதுவைக் குடித்துப் பள்ளியர் மயக்கமும் பெருந் தியக்கமும்,"[125] "ஆமூருப்பள்ளி சடைச்சியும்- பொன்னி சேமூருக்குள்ளி யிடைச்சியும் கூடிக்கூடிப் பேசியே-மது குடித்துமே சண்டை பிடிக்குமே"[126] "துண்டுக் கட்டையன் மகள் சாராயத்தை மண்டி"[127] என்பவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியரின் மதுப்பழக்கத்தைத் தெரிவிக்கின்றன. பள்ளர், பள்ளியரின் மதுமயக்க நிலைபற்றித் தனியாகக் கூறப்படுவதுமுண்டு.[128]

இவற்றைவிட, தாம்பூலம் உண்ணும் அவர்களது பழக்கமும் பள்ளு நூல்களில் இடையிடையே இடம்பெறுவதுண்டு. பொதுவாக உழைப்பாளர்கள் அடிக்கடி தாம்பூலம் உண்ணும் பழக்கம் கொண்டவர்கள் என்பதும் கருதத்தக்கது. முக்கூடற்பள்ளில் மூத்தபள்ளியை வர்ணிக்கும் போது, "கையில் வெற்றிலையும் வாயில் ஒதுக்கிய பாக்கும் ஒரு சுருளுக் கொருக்கால் நீக்கும் இதழும்"[129] எனத் தாம்பூலம் உண்ணும் பழக்கம் குறிப்பிடப்படுகின்றது. திருமலைமுருகன் பள்ளில் நாற்று நடுகையின்போது, "பஞ்சுவெட்டிதன் மகளைத் கறுத்த குஞ்சுமாடன் கெஞ்சியே பாக்கு வெற்றிலை தா வென்றான் அவள் மூக்கைச் சுழித்து வாவென்றாள்"[130] எனக் கூறப்படுகின்றது. பள்ளர் பொழுதுபோக்காகத் தாம்பூலம் உண்ணும் பழக்கத்தைக் கொண்டிருந்தமையை இவை காட்டுகின்றன.

பள்ளர் சமூகத்தவரின் உணவுப் பழக்கங்கள் தனியாக அவர்களுக்கு மாத்திரமே உரியவையென்று கூறுவதற்கில்லை. ஆனால், அவர்களது உணவுப் பழக்கங்கள் தொடர்பாகப் பள்ளு நூல்களிற் கூறப்படுபவற்றை நோக்குமிடத்து, அவர்களது ஏழ்மை நிரம்பிய வாழ்வும், தாம் விரும்பும் உணவைப் பெறுவதற்காகச் சிலவேளைகளில் ஊதாரித்தனமான அவர்களது செலவழிப்பும் உணர்த்தப்படுவதைக் காணலாம். அதேவேளை, ஏழ்மை மிகுந்த அவர்களது வாழ்வும், கடுமையான உழைப்பும் அவர்களை அளவு மீறிய மதுப்பிரியர் களாகவும் ஆக்கிவைத்துவிட்டன என்பதையும் உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

## (ஐ) பள்ளரும் வேளாண்மைத் தொழிலும்

பள்ளு இலக்கியம் அடிப்படையில் வேளாண்மை உழைப்பாளரோடு தொடர்பான நூலாதலின், வேளாண்மையோடு தொடர்புடைய செய்திகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விலக்கியத்தில் விரவிக் காணப்படுகின்றன. வேளாண்மை தொடர்பான செய்திகளுக்குத் தொடக்கமாக அமைவது, மழைக்குறி பற்றிய விபரங்களாகும். வேளாண்மைத்தொழிலுக்கு மழை மிக இன்றியமையாதது என்பதனால், அத்தொழிலுடன் தொடர்புடைய பள்ளர் மழைக்குறி தொடர்பான விபரங்களைத் தெளிவாக அறிந்துவைத்திருந்தனர் என்பதைப் பள்ளு நூல்கள் காட்டுகின்றன. சான்றாக, மலையாளநாட்டு (கேரளநாட்டு)ப் பக்கத்திலிருந்தும், ஈழநாட்டுப் பக்கத்திலிருந்தும் வளைந்து மின்னுதல், மரக்கிளைகளைச் சுழற்றிக் காற்று வீசுதல், தவளை கத்துதல், மழைநீர் விழாதவாறு நண்டு சேற்றினால், தான் வாழும் குழியின் வாயிலை அடைத்தல், மழைத்துளியை எதிர்நோக்கி வானம்பாடிகள் பாடிமகிழ்தல் ஆகியவற்றை மழைக்குறிகளாகப் பள்ளர் கொள்வதை முக்கூடற்பள்ளு காட்டுகின்றது.[131] பிற பள்ளு நூல்களிலும் இவ்வாறு மழைக்குறியின் தோற்றம் பற்றிப் பள்ளர் குறிப்பிடுவதாகக் கூறப்படுகின்றது.[132] இவற்றின் மூலமாக, வேளாண்மைத்தொழிலில் ஈடுபட்ட பள்ளரின் அனுபவத்தினையும், இயற்கையின் போக்கினை ஊகிக்கும் திறனையும் உணரத்தக்கதாக உள்ளது.

முக்கூடற்பள்ளு, திருமலைமுருகன்பள்ளு, செங்கோட்டுப் பள்ளு, கண்ணுடையம்மன் பள்ளு, பொய்கைப்பள்ளு ஆகியவை வேளாண்மைச் செய்திகளை விரிவாகவும், தெளிவாகவும் கூறுகின்றன. உரமிடுதல், நிலத்தைப் பண்படுத்தல், நாற்றுப் பறித்தல், நாற்றுநடுதல், பயிரைப் பேணிக்காத்தல், களைபறித்தல், அறுவடை செய்தல் ஆகிய செயல்கள் பொதுவாகப் பள்ளு நூல்களிற் பள்ளரின் வேளாண்மைச் செயல்களாகக் குறிப்பிடப்படுகின்றன. எல்லா நூல்களுமே நாற்று நடுகைக்குச் சிறப்பிடம் கொடுத்துள்ளன. அறுவடை தொடர்பான செயல்களை முக்கூடற் பள்ளு, திருமலைமுருகன் பள்ளு, செங்கோட்டுப்பள்ளு ஆகியவை சிறப்பாக எடுத்துரைக்கின்றன. பொதுவாகவே, பள்ளரின் வேளாண்மைச் செயல்களை விரிவாகக் கூறுவதற்குச் செங்கோட்டுப்பள்ளு முயன்றிருப்பதனைக் காணமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் பள்ளரின் வேளாண்மைச் செயல்களுக்குச் சான்றாக, முக்கூடற்பள்ளிற் பள்ளன் மாடுமுட்டி மயங்கி வீழ்ந்து எழுந்து வேளாண்மைத் தொழிலில் ஈடுபடத் தொடங்கியதன் பின்னர் நடைபெறும் நிகழ்ச்சிகளை இவ்விடத்துத் திரட்டி நோக்குவது பொருத்தமானது:

"மாட்டை மீளவும் பூட்டியுழத் தரித்தான்."[133]

"உழுத உழவைக் கண்டு களித்தான்–பள்ளர்
உள்ள பேரையெல்லாம் விளித்தான்
தொழுது தெய்வக்கடன் கழித்தான் –அந்தத்
தொளியில் விதைகள் எல்லாந் தெளித்தான்."[134]

"முளைக்குத்தண் ணீரை அடைத் திட்டான்–கொல்லை
முழுவதும் மறுநாள் வெட்டி விட்டான்
வளைத்து வேலிசூழ நட்டான்–நாற்று
வளர்க்க நாளும்ஒருப் பட்டான்."[135]

"வளர்த்த நாற்றை முகங் கண்டான்..... பண்ணை
ஆண்டையைப்போய் அந்தச்செய்தி விண்டான்."[136]

உழுதல், நாற்றுத் தூவுதல், நீர் பாய்ச்சல், ஏரினால் உழமுடியாதவற்றை மண்வெட்டியினால் வெட்டிப் பண்படுத்தல், நாற்றைப் பாதுகாப்பதற்காகச் சுற்றிலும் வேலியடைத்தல், நாற்றினை நாள்தோறும் கவனித்து வளர்த்தல், நாற்று வளர்ந்த செய்தியைப் பண்ணைக்காரனிடத்துத் தெரிவித்தல் ஆகிய செய்திகள் மேற்காட்டிய பகுதிகளிற் கூறப்பட்டுள்ளன.

நாற்றுப்பறித்து, முறைப்படி நாள்நடுகை நடவேண்டிய முறைகள் பற்றிப் பள்ளியொருத்தி தன்னுடன் உழைக்கும் மற்றைய பள்ளியருக்குக் கூறுவதைப் பின்வரும் பாடல் உணர்த்துகின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முந்தித் தரிசை யடித்து மறுத்து
முச்சா லடித்திட் டுழவு நாலும்
முழுதும் உழுது திருந்தப் பரம்பு
மூன்றுந் தடவியே
அந்தத் தொளிக்குச் சமைந்த நாற்றை
அடுத்த வயலிற் பிடுங்கி வேறே
அடுக்கி முடிந்து வட்ட வட்டங்க
ளாய்க் குவித்தபின்
வந்தித் தழகர் பதத்தைத் துதித்து
வைத்த நாற்றை எடுத்து நெற்றியில்
வைத்து நாலு திசையும் நோக்கி
வாழ்த்திக் கும்பிட்டே
பந்திப் படுத்தி நிரையை வகுத்துப்
பரவை யொலிபோல் குரவை எழுப்பி
பயிர்நெருங் காமல் கலந்துபோ காமல்
பதியும் பள்ளீரே."[137]

மேலும், பள்ளியர் நாற்று நடவேண்டிய முறைமையைப் பற்றிக் குறிப்பிடும் பள்ளியொருத்தி, "கலந் தொருவர்க் கொருவர் கைவிரசலாய் நடுகைச் சமர்த்தைக் காட்டும் பள்ளீரே"[138] எனக் கூறுவதும் நோக்கத்தக்கது.

நெற்கதிர்கள் முற்றி விளைந்தமையை அடுத்து, "ஓங்குநாட் கதிர் கொய்தார் உவகை செய்தார் நிறுவி நிரைதெரிந்தார் நெருங்கி அரிந்தார் நிரப்பி அரிகளெங்கும் பரப்பி னாரே"[139] என அறுவடை நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.

அறுவடையின் பின்னர் நடைபெறும் நிகழ்ச்சிகளைத் தொகுத்துப் பின்வரும் பாடல் குறிப்பிடுகின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடிதிற்புரி முறுக்கிக் கதிர்கட்டி யிறுக்கிக்
கட்டின கட்டெடுப்பார் களத்தில் விடுப்பார்
நெடிதிற்க மைகொண் டுய்ப்பார் நிலைப்போ ருயர்ப்பார்
நின்றபோ ரைப்பிரிப்பார் நிலத்தில் விரிப்பார்
பிடியிற் பகட ணைப்பார் பிணையிற் பிணைப்பார்
பிணையல்வி டத்தொடுப்பார் போர்த்துக் கொடுப்பார்
பொடிவைக்கோ லைத்தவிர்ப்பார் பொலியைக் குவிப்பார்
பொலிதூற்றி ஆற்றிப்பொலி பொலியென் றளப்பார்."[140]

இவ்வாறு, பண்ணை அடிமைகளாக இருந்த பள்ளர் சமூகத்தினரின் வேளாண்மை உழைப்பைப் பற்றிப் பள்ளு இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.[141]

ஈழத்துப் பள்ளு நூல்களிற் கதிரைமலைப்பள்ளிலேயே ஓரளவு பள்ளரின் வேளாண்மைச் செயல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.[142] பறாளைவிநாயகர்பள்ளும், தண்டிகைக் கனகராயன்பள்ளும் மிகக் குறைவாகவே அவர்களின் வேளாண்மை உழைப்புப்பற்றித் தெரிவித்துள்ளன.[143]

## (ஓ) பள்ளரின் கூட்டுணர்வு

வேளாண்மையுடன் தொடர்புடைய அனைத்துச் செயல்களிலும் பள்ளர் சமூகத்தவர் அனைவரும் ஒன்றாக இணைந்து உழைப்பதனைப் பள்ளு நூல்கள் குறிப்பிடுகின்றன. "பண்ணை வயலி லின்றே சிறப்பாக நாமெல்லோருங் கூடிச் சென்றே நாளேரிட வாரும் நயினாரே,"[144] "கொத்தடிமைப் பள்ளரெல்லாங் கோவில்வய லத்தனையும் விதைவிதைத்து வந்தாரே,"[145] "பண்ணை வயல் செந்நெல் தனையே விதைத்துச் சேர்ந்திருந்து பள்ளரெல்லாம்" உன்னதமாய் நிலத்தை உண்மை யுடன் பார்த்து வந்தார்,"[146] "எல்லோருங் கூடி நெல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தணியாக வீசி வல்லமையாய் விதைத்து மாதேவரைத் தொழுது இல்லந்தனில் வந்தவர் இருந்து சுகித்தனரே"[147] போன்றவை பள்ளர் சமூகத்தவரின் கூட்டுழைப்பைக் காட்டுகின்றன. மேலும், பண்ணையில் உழைக்கும் பள்ளர், பள்ளியரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டு, அனைவரும் ஒன்றாக உழைப்பதனையும். அவர்களின் கூட்டுணர்வினையும் பள்ளு நூல்கள் உணர்த்துகின்றன. சான்றாக, முக்கூடற்பள்ளில் பள்ளர் அனைவரும் ஒன்றாக இணைந்து செயலாற்றுவதாகக் கூறப்படுவதை நோக்கலாம்:

"சாத்தன் பெரியான் கொன்னைத் தாண்டி அலியான்
சடையான் உடையான் கட்டைச் சங்கன் புங்கன்
போத்தன் அருதன் கோணப்பூவன் மருதன்
பூலான் வயித்தி வேலான் புலியன் கலியன்
காத்தன் வெருகன் கப்புக்காலன் முருகன்
கண்டன் கறுத்த முண்டன் கங்கன் சிங்கன்
கூத்தன் முதலா யுள்ள பள்ள ரெல்லாம்
குரவையிட் டேரைப் பூட்டிக் கூடியுழுதார்."[148]

பள்ளியரின் பெயர்களையும் இதேபோன்று குறிப்பிட்டு, "கலந் தொருவர்க் கொருவர் கைவிரசலாய் நடுகைச் சமர்த்தைக் காட்டும் பள்ளீரே"[149] எனப் பள்ளன் வாயிலாகக் கூறுவதும் கூட்டுணர்வின் இன்றியமையாமையைப் புலப்படுத்துகின்றது.[150] வேளாண்மைத் தொழிலுக்குக் கூட்டுணர்வு இன்றியமையாத ஒன்றாதலின், பள்ளு நூல்களில் இவ்வாறு கூட்டுணர்வுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மையோடு தொடர்புடைய செயல்களில் மாத்திரமன்றி, அதற்கு முந்திய முன்னேற்பாடுகளிலும் பள்ளர் சமூகத்தினர் முழு ஆர்வத்துடன் ஈடுபடுவதைப் பள்ளு நூல்கள் காட்டுகின்றன. ஆறு, குளங்கள் அனைத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை பெய்து நிரம்பிவிடுவதாற் பள்ளர் அணைகள் கட்டுவதற்கு ஆயத்தமாகுவதையும், பின்னர் அனைவரும் ஒன்றிணைந்து அணைகட்டும் செயலில் ஈடுபடுவதையும், குருகூர்ப்பள்ளு குறிப்பிடுகின்றது.[151] திருமலைமுருகன்பள்ளில், மழைக்குறி தோன்றியவுடன் பள்ளரைத் திரட்டி, அணைகள், ஏரிகள், மதகுகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான பள்ளனின் முயற்சி காட்டப்படுகின்றது.[152] முக்கூடற்பள்ளு, செண்பகராமன்பள்ளு, பொய்கைப்பள்ளு, செங்கோட்டுப்பள்ளு ஆகியவற்றில் மழைக்குறி தோன்றியதும், வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு பள்ளன் கட்டளையிட்டு, தனது சமூகத்தவரை உழைக்கத் தூண்டுவது பற்றிக் கூறப்படுகின்றது.[153]

பள்ளரின் கூட்டுணர்வைப் புலப்படுத்தும் வேளாண்மை பற்றிய செய்திகளில், பள்ளு நூலாசிரியர்கள் அதிகமாக ஆர்வம் காட்டுவது நாற்றுநடுகையிலாகும். பண்ணை வயல்களிற் பள்ளரும், பள்ளியரும் நிகழ்த்தும் வேடிக்கை நிகழ்ச்சிகளை இப்பகுதியில் விரிவாகச் சித்திரிப்பர். எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலை நோக்கலாம்:

"பத்துத் தலையும் அரக்கன் புயமும்
தத்தக் கணையொன் றேவிய
பருவப் புயலின் உருவத் தழகர்
பண்ணைக் கண்ணாறு நடச்செய்தே
முத்தக் குடும்பன் பெற்ற பொத்தாணி
மொண்டிச் சோரன் மாறனூர்
மூக்கி தமக்கை காக்கி கறுப்பி
மூவிக் கிளைய நூவிதன்
குத்து முலையும் முத்து நகையும்
குறிக்கி றான்அந்தச் சிறுக்கியும்
கூசிப் பார்க்கிறாள் அதுக்க வன்மெள்ளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிப் பார்க்கும் ஆசையால்

எத்தத் துணிந்து அதட்டிட் டவள்முன்

ஏர்க்கா லைவிட்டு நோக்காலை

எடுக்கி றாப்போல கிட்டக் கிட்டப்போய்

அடுக்கி றான்பாரும் பள்ளீரே.[154]

இப்பகுதி, பள்ளர் சமூகத்தைப் பிரதிபலிக்க வேண்டும் என்பதைவிட, படிப்பவர்க்குச் சுவை பயக்கவேண்டும் என்ற நோக்கில் அமைக்கப்பட்டதாகவே தோன்றுகின்றது. பள்ளர் சமூகத்தினரின் கூட்டுணர்வினை ஆங்காங்கே புலப்படுத்தும் நூலாசிரியர்களே, நாற்றுநடுகைப் பகுதியில், அவர்களது வேடிக்கைகளை ஓரளவு மிகைப்படுத்திக் கூறிவிட்டனர். இதனால், கோ.கேசவன் குறிப்பிடுவது போன்று, பள்ளுப் பாடல்களில் வரும் நாற்றுநடுகைப்பகுதி, பள்ளரின் பால் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தும் ஒன்றாகவே இருப்பதைக் காணலாம்.[155] ஈழத்துப் பள்ளு நூல்களில் இத்தகைய போக்கு ஓரளவு குறைந்து காணப்படுகின்றது.

## (ஓ) பள்ளர் சமூகமும் பாத்திர வருணிப்பும்

பள்ளர் சமூகத்தைப் பிரதிபலிக்கும் பாத்திரங்களைப் பொறுத்தவரையில், பள்ளனைத் தவிர, மற்றைய இரு பாத்திரங்களின் ஆரம்ப வருணிப்பிற் செயற்கைத்தன்மை புகுத்தப்பட்டுள்ளது. பள்ளர் சமூகம் தொடர்பான பல செய்திகளை இயல்போடு தெரிவிக்க முயற்சிக்கும் பள்ளு நூலாசிரியர்கள், பள்ளியர் பற்றிய வருணனையைச் செந்நெறி இலக்கிய மரபுக்கேற்ப அமைத்துவிட்டனர். சான்றாக, முக்கூடற்பள்ளிற் பள்ளியரை வருணிக்குமிடத்து,

"சிற்றிடையும் செம்பொ னிடைக்கிடை

பெற்றிடும் பட்டாங்கு மிலங்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுக்கூடல் வாய்த்த பள்ளி
தோன்றி னாளே"[156]

என மூத்த பள்ளியினதும்,

"வஞ்சிமருங் கணிபூம் பட்டும்
பஞ்சவர்ணத் தழகுந் துலங்க
மருதூர்க்கு வாய்த்த பள்ளி
தோன்றி னாளே"[157]

என இளையபள்ளியினதும் உடையழகு வருணிக்கப்பட்டுள்ளது. ஈழத்துப் பள்ளு நூல்களிலும் இவ்வாறே பள்ளியரின் வருணனை அமைந்துள்ளது. சான்றாக,

"பசும் பொற்பணி தாழ்குழை தூங்கத்
தஞ்ச மில்லா தலம்வரு மிடையிற்
பஞ்ச வர்ணச் சேலையுந் தயங்கத்
தளைத்த பசுங் கழுத்தினிற் செம்பொற்
றாலியும் விளங்க"[158]

மூத்தபள்ளி தோன்றியமையையும்,

"நஞ்செனக் கரியவிழி யஞ்சனக் குறியெழுதி
நத்துமுத் தணிந்து பொன்னி ணணிதாங்கி
விஞ்சுகருங் குழல்வீழ வேயை வென்ற தோளிலங்க
வில்லூர்திப் பட்டினா லுல்காசஞ் சேர்த்து"[159]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையபள்ளி தோன்றியமையையும் முறையே தண்டிகைக் கனகராயன்பள்ளும், கதிரைமலைப்பள்ளும் வருணிப்பதைக் காட்டலாம். பொதுவாகப் பிற பள்ளு நூல்களிலும் இவ்வாறே பள்ளியர் இருவரும் செல்வவளம் உடையவர் போன்று சித்திரிக்கப்படுகின்றனர். ஆயினும், பள்ளர் சமூகத்துப் பெண்களின் நிலை இதற்கு மாறாகவே இருந்தது. அவர்கள் தமது உடை தொடர்பாகச் சுதந்திரமாக இயங்குவதற்கு வாய்ப்பு இருக்கவில்லை. பொதுவாகவே, தாழ்த்தப்பட்ட சமூகத்துப் பெண்கள் உயர் சமூகத்துப் பெண்களைப் போன்று உடை அணிவதற்கு அனுமதிக்கப்படவில்லை. தமிழகத்திலும், ஈழத்திலும் இந்நிலையே காணப்பட்டது. இது ஒருபுறமிருக்க, பள்ளர் சமூகப் பெண்களின் ஏழ்மைநிலையும் தரமான உடைகளை அணிவதற்கு அவர்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. இதனைப் பள்ளு நூலாசிரியர்கள் உள்ளவாறு உணர்த்தத் தவறிவிட்டனர். வேளாண்மைப் பண்ணைகளிற் கொத்தடிமைகளாக ஆண், பெண் ஆகிய இருபாலாரும் சேர்ந்து உழைப்பதனைக் குறிப்பிடும் பள்ளு நூல்களே, பள்ளியரின் அறிமுகத்தின் போது, அவர்களைச் செல்வவளம் மிக்கவராகவும் வருணிக்கின்றன. தமது நூல்களிற் காணப்படும் இத்தகைய முரண்பாட்டினைப் பள்ளு நூலாசிரியர்கள் பொதுவாகக் கருத்திற் கொள்ளவில்லை. இவ்வாறு வருணிப்பதனை ஒரு மரபு போன்றே ஆக்கிவிட்டனர். ஆயினும், செண்பகராமன் பள்ளின் ஆசிரியர் ஓரளவுக்கு இவ்விடயத்தில் மற்றைய நூலாசிரியரிடமிருந்தும் வேறுபடுகின்றார். இப்பள்ளில், மூத்தபள்ளியின் வருணனை பின்வருமாறு அமைந்துள்ளது:

"செஞ்சரத்தோடு சிலையெனு நுதலுஞ்
சிலைநுதலினில் மஞ்சணைப் பொட்டும்
சீப்பிடுங் கருங்கொண்டையுங் கொண்டையில்
வேப்பெண்ணெய் மணமும்
வஞ்சியங்கொடி யிடையுமவ் விடையினில்
வளைந்திறுக்கிய தலைப்பணி உடையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளெனப் பிறங் கியவிழிக் கடையும்
மலரன்ன நடையும்
கஞ்ச மென்மலர் வதனமும் வதனக்
காந்தியு மழல் காந்தளங் கரமும்
கரத்தினிற்கல கலவெனும் இருப்புக்
காப்புநின் றிலங்க
நஞ்சகம் புகழ் திண்டிநல் வடிவேல்
நாயகன் தமிழ்ச் செண்பக ராமன்
நாஞ்சிவளநாட் டில்மூத்த பள்ளி
தோன்றி னாளே.[160]

இவ்வருணனை ஓரளவுக்கு இயல்பாகவே அமைந்துள்ளது. கொண்டையிற் சீப்பு இடுதல், தலைமுடிக்கு வேப்பெண்ணெய் பூசுதல், இடையில் உடை உடுத்தல், கைகளில் இரும்பு வளையல்கள் அணிதல் முதலானவை பண்ணைகளில் அடிமைகளாக உழைக்கும் பள்ளியருக்கு ஓரளவு பொருந்தக் கூடிய வருணனையாக அமைந்துள்ளன. இவ்வாறு, மூத்த பள்ளியை இயல்பாக வருணித்த அதே நூலாசிரியர், இளையபள்ளியை வருணிக்கும்போது, மற்றைய நூலாசிரியரைப் பின்பற்றியே வருணித்து விடுகின்றார்.[161] ஓரளவு இயல்பான வருணனையை அவர் விரும்பியிருப்பினும், மரபுநிலை அவரைப் பாதித்து விட்டது என்பதையே இது காட்டுகின்றது. இத்தகைய பாதிப்பின் காரணமாக, மூத்தபள்ளியைத் தமது விருப்பத்திற்கேற்ப ஓரளவு இயல்பாகவும், இளையபள்ளியை மரபுநிலைக்கு ஏற்றவாறும் வருணித்துள்ளார். ஆயினும், திருமலைமுருகன் பள்ளிற் பள்ளியர் கும்மியடித்தல் நிகழ்ச்சியின்போது, "வாகாக் கொண்டை முடியுங்கடி—முலை மாராப்பைக் கட்டி யிறுக்குங்கடி"[162] எனப் பள்ளியர் தமக்குட் பேசிக்கொள்வது, அவர்களின் இயல்பான உடை பற்றி உணர்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளனின் பாத்திர வருணிப்பைப் பொறுத்தவரையில், ஓரளவு இயல்பான சித்திரிப்பைக் காணமுடிகின்றது. பள்ளர் தலைவன் என்ற வகையில் அவனது கம்பீரமான தோற்றப் பொலிவும், திமிரான நடத்தையும் காட்டப்படுகின்றன. மதுவெறியில் எப்போதும் களித்திருப்பவனாகவும் அவன் வருணிக்கப்படுகின்றான். மேலும், வேளாண்மை உழைப்பாளி என்பது, அத்தொழில் சார்ந்த கருவிகளுடன் அவன் தோன்றுவது மூலமாகப் புலப்படுத்தப்படுகின்றது. இவற்றோடு, சமயப்பற்றுக் கொண்டவனாகவும் சித்திரிக்கப்படுகின்றான். பள்ளன் பற்றிய இத்தகைய வருணனையை நோக்குமிடத்து, பள்ளர் சமூகத்தின் தலைவன் ஒருவனின் இயல்பினையும், பள்ளு இலக்கியத்தின் கதைப்போக்குக்கு ஏற்றதான ஒரு தலைவனின் இயல்பினையும் இரண்டறக் கலந்து இப்பாத்திரம் அமைக்கப்பட்டுள்ளமை புலனாகின்றது. ஞானப்பள்ளு தவிர்ந்த அனைத்துப் பள்ளு நூல்களிலும் பள்ளனின் பாத்திரம் ஒரேவகையிலேயே அமைந்துள்ளது. மூத்தபள்ளி, இளையபள்ளி ஆகியோர் தொடர்பான வருணனையோடு ஒப்பிடுகையில், பள்ளன் பற்றிய வருணனை ஓரளவு நடப்பியலோடு பொருத்தமுற அமைந்துள்ளது.[163]

பள்ளனின் பாத்திரம் பள்ளர் சமூகத்தின் தலைவர்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனைப் "பள்ளர் தலைவனென வளர்குடும்பன்,"[164] "நாட்டுப் பள்ளருக் கெல்லாந் தலைமைப் பள்ளன் னெனவே,"[165] "இந்தக் கள்ளனைச் சேரிக் குடும்பாக வைத்தனர் ஏலவே"[166] எனப்பள்ளு நூல்கள் குறிப்பிடுகின்றன. பள்ளர் சமூகத் தலைவர்களைக் குறிப்பிடும் பெயர்களில் ஒன்றாகிய குடும்பன் என்ற பெயராலேயே பள்ளு நூல்களில் அவன் குறிப்பிடப்படுகின்றான்.[167] மேலும், பள்ளர் தலைவனின் மனைவியைக் குடும்பிச்சி எனக் குறிப்பிடும் வழக்கத்தையும் பள்ளு இலக்கியத்திற் காணமுடிகின்றது.[168]

பள்ளு நூல்களிற் பள்ளர் தலைவனான குடும்பனின் செயற்றிறனும், வேளாண்மை உழைப்புத்திறனும் திறம்படப் புலப்படுத்தப்படுகின்றன. பண்ணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடிமை என்ற வகையில், அவனுக்கு வேளாண்மைத்தொழில் தொடர்பான கடமைகளும், பள்ளர் சமூகத்தின் தலைவன் என்ற முறையிற் பொறுப்புக்களும் இருந்தன. மழை பொய்ப்பின், பள்ளர் அனைவரையும் திரட்டி, தெய்வங்களை வேண்டிச் சடங்குகள் செய்வதும், மழை பெய்து வெள்ளம் பாயும்போது, பிற பள்ளருடன் இணைந்து, அணை கட்டுதல் முதலிய வேலைகளில் ஈடுபடுவதும், புண்ணைக் கணக்கு விபரங்களைப் பண்ணைக்காரனிடத்து எடுத்து ரைப்பதும், நல்வேளையில் உழவுவேலையைத் தொடங்கி முன்னின்று நடத்துவதும், பயிர் அறுவடையின் பின் நெல் அளந்து பல்வேறு அறச் செயல்கள், கோயிற்பணிகள், மடங்கள், பல்வேறு ஊழியர்களின் ஊதியம், நீர்ப்பாசன வேலைகள், பள்ளரின் கூலி போன்றவற்றுக்குப் பகிர்ந்தளிப்பதும் அவனது பொறுப்புக்களாகும்.[169] இவற்றுள், பண்ணைக்காரனுக்குப் பண்ணை தொடர்பான கணக்குகளைப் பள்ளன் ஒப்புவிப்பதைப் பள்ளு நூல்கள் விரிவாக எடுத்துரைக்கின்றன.[170] பண்ணையிலுள்ள நெல்வகை, மாட்டுவகை, உழவு தொடர்பான கருவிகளின் வகை முதலானவை பற்றிய விபரங்களைப் பண்ணைக்காரன் அறிய விரும்பும்போது தெரிவிப்பதும் அவனின் கடமையாகும். அதனால், அவை பற்றிய விபரங்கள் அனைத்தையும் அவன் தெரிந்து வைத்துக்கொள்வது அவனது முதன்மையான பொறுப்பாகும். மேலும், பள்ளன் தன் வாழ்வு முழுவதும் பண்ணை வேளாண்மையோடு தொடர்புடைய பொருட்களோடும், கருவிகளோடும், கால்நடைகளோடும் தொடர்புடையவனாக இருப்பதனால், அவற்றைப் பற்றிய விவரங்களைத் தெளிவாகப் பண்ணைக்காரனுக்குத் தெரிவிப்பதற்கு அவனால் முடிகின்றது.[171]

மேலும், பள்ளரிடம் ஒழுங்காக வேலைவாங்கவேண்டிய நிலையும் அவனுக்கு இருந்தது. அந்நிலை அவனுக்கு ஓரளவு அதிகாரத்தையும் பள்ளரிடையே ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. சான்றாக, செண்பகராமன் பள்ளில், மழைக்குறியைக் கவனித்து, பள்ளர் செய்யவேண்டிய கடமைகளைக் குறிப்பிட்டு, "போயினி விசாரியாமல் சும்மா விருந்தால்–ஆமோ பூம்பொழில் தென் கோவைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரிப் புள்ளிப் பள்ளரே"[172] என அதட்டுவதும், குருகூர்ப்பள்ளில், மழை பெய்து வெள்ளம் ஏற்பட்ட பின்னர், தாம் அனைவரும் செய்யவேண்டிய செயல்களை விபரித்து, முறையம்பிள்ளை வந்து மேற்பார்வையிட இருப்பதனால், பாசாங்கு செய்யாமல் வேலைசெய்யவேண்டும் என வற்புறுத்துவதும்[173] பள்ளனின் அதிகாரநிலையைக் காட்டுகின்றன.

பள்ளன் இயல்பாகவே உழைப்புத்திறன் மிகுந்தவன். ஆயினும், இளையபள்ளிமீது கொண்டிருக்கும் மையலினால், அவன் அவ்வப்போது செயலற்று இருந்துவிடுவதுண்டு. ஆனால், பள்ளர் தலைவனான அவனின் (குடும்பனின்) தலைமைத்துவமின்றி, பண்ணையில் எச்செயலும் நடைபெறுவதற்கு இயலாது. இதனை மூத்தபள்ளி வாயிலாகவும் அவ்வப்போது உணரமுடிகின்றது.[174]

அதேவேளை, பள்ளனின் உழைப்புத்திறன், அவன் வாயிலாகவும் குறிப்பிடப்படுவதுண்டு. சான்றாக, செண்பகராமன் பள்ளிற் பின்வருமாறு கூறப்படுகின்றது:

"ஆண்டே நீரறி வீரின்று நேற்றல்ல
ஆதிநாள்முத லாக அடியேன்
பூண்ட வேலை உழவு வயலில்மண்
போட்டா லுமது பொன்னாய் விளையும்."[175]

பள்ளன் பண்ணையின் உண்மையான ஊழியன் என்பதையும் இது புலப்படுத்துகின்றது. மேலும், பள்ளன் மாடுமுட்டி வீழ்ந்தெழுந்த பின்னர், தான் இனிமேல் தளராமல் உழைக்கப் போவதாகக் குறிப்பிடுவதைப் பொய்கைப்பள்ளு காட்டுகின்றது. "பண்ணை வளரு மொருக்காலு மினித் தளர்விலைக் காணாண்டே"[176] என்ற கூற்றில், உழைப்புத்திறன்மீது அவன் கொண்டிருந்த ஆர்வத்தையும், அவனது புதிய உற்சாகத்தையும் கவனிக்க முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையனைத்தின் மூலமாகவும் பள்ளு நூல்கள் எழுந்த காலத்துப் பள்ளர் சமூகத்தின் தலைவர்களுக்கிருந்த பொறுப்பும், அவர்கள் ஆற்ற வேண்டியிருந்த கடமைகளும் தெளிவாகின்றன.

## (ஔ) பள்ளர் சமூகம் மீதான அனுதாப உணர்வு

பள்ளு நூல்கள் பள்ளர் சமூகத்தவரைப் பிரதிபலிக்கும் பாத்திரங்களைக் கொண்டிருப்பினும். அச்சமூகத்தவர் சமுதாயத்தின் முக்கியமான உறுப்பினர் என்ற உணர்வு பெரும்பாலான பள்ளு நூலாசிரியர்களுக்கு இருக்கவில்லை. இவ்விலக்கியத்தில் இடம்பெறும் குயில்கூவுதல் என்ற பகுதியில், தாம் விரும்புபவரை வாழ்த்திப் பாடக்கூடிய வாய்ப்பு நூலாசிரியர்களுக்கு இருந்தபோதிலும், பள்ளர் சமூகத்தை வாழ்த்துவதற்கு அவர்கள் முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும், முக்கூடற்பள்ளு, பொய்கைப்பள்ளு ஆகியவற்றின் ஆசிரியர்கள், பள்ளன் தன் குடித்தரம் கூறும் பகுதியின் வாயிலாக, அச் சமூகத்தவர்பாலுள்ள தமது அனுதாப உணர்வினைப் புலப்படுத்தியுள்ளனர். முக்கூடற்பள்ளிற் பின்வருமாறு பள்ளர் சமூகத்தவரின் நிலை வடிவழகக் குடும்பனின் வாயிலாகத் தெரிவிக்கப்படுகின்றது:

"பக்கமே தூரப் போயும்
தக்கசோ றென்வெள் ளாண்மை
பள்ளா பள்ளா என்பார் மெய்
கொள்ளா தவர்." 177

இப்பாடலில், பள்ளர் சமூகத்தவரைத் தீண்டத்தகாதவர் என உயர்சாதியினர் ஒதுக்கி வைத்திருப்பினும், அவர்கள் உண்ணும் உணவு பள்ளரின் வேளாண்மை உழைப்பினாலேயே கிடைத்தது என்பதைக் குறிப்பிட்டு, அவ்வாறு தம்மை ஒதுக்குபவர் உண்மையை அறியாதவரே எனப் பள்ளன் தெரிவிக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கூடற்பள்ளினைப் போன்று, பொய்கைப்பள்ளிலும் உயர் சமூகத்தவர் பள்ளர் சமூகத்தவரைத் தீண்டத்தகாதவர் என ஒதுக்கி வைப்பதும், அவர்கள் விளைவித்த பயிரின் விளைவை மாத்திரம் தாம் பெறுவதுமாகிய முரண்பட்ட நிலைகள் கண்டிக்கப்படுகின்றன. பின்வரும் பாடல் இதற்குச் சான்று பகர்கின்றது:

"பள்ளென் பதுகீழென்பார் தீண்டாமை யென்பார் தோஷம்
பழனநெல் லென்கையா னீர்பாய்ச்சி விளைவு
கொள்ளுகி றார்பலருந் தீண்டலிதற் கிலையோ."[178]

மேலும், பள்ளரின் வேளாண்மைத் தொழிலே மக்கள் அனைவரதும் உணவுத் தேவையை நிறைவு செய்கின்றது என்பதை அழுத்திக் கூறுவதற்கும் நூலாசிரியர் விரும்பியுள்ளமை புலனாகின்றது. இதனைப் பின்வரும் பாடல் உறுதிப்படுத்துகின்றது:

"குடும்பனென்ப துயர்ந்தசாதி யானல்ல வென்பர்
குடும்ப னுயர்ச்சியினைக் கூறவெளி தோ
நெடுங்கடற் புவியுள் ளோரவரவர் குலத்துக்கு
நிகழ்த்துந் தலைமையுள் ளோனே குடும்பனாம்."[179]

இவற்றோடு, "பள்ளச் சாதிக் குடும்பனெனைத் தள்ளலரிதே"[180] எனப் பள்ளன் உறுதியுடன் கூறுவதாகவும் நூல் குறிப்பிடுகின்றது. இவ்வாறு, பள்ளர் சமூகத்தவர் தாழ்வாகக் கருதப்படுவதற்கும், ஒதுக்கப்படுவதற்கும் உரியவரல்லர் என்பதை நூலாசிரியர் குடும்பன்றன் வரலாறு கூறல் என்ற பகுதியிற் புலப்படுத்தியுள்ளார்.[181]

முக்கூடற்பள்ளு, பொய்கைப்பள்ளு ஆகியவை போன்று, செண்பகராமன் பள்ளிற் பள்ளர் சமூகத்தவர் குறித்து விபரமாகக் குறிப்பிடப்படாவிடினும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பள்ளில் அவர்களது வேளாண்மை உழைப்பின் இன்றியமையாமை புலப்படுத்தப்படுகின்றது. பள்ளன் தனது குடிப்பெருமையை உரைக்குமிடத்து, "எருவிட் டுழவுழுது நான் பயிரேற்று-நெல்லே இல்லாம லார்பிழைப்பார்"[182] எனக் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இதன்மூலம், சமூகநிலையிலே தான் தாழ்த்தப்பட்டவனாகக் கருதப்பட்டபோதும், தனது தொழில் மனித சமூகத்துக்கு இன்றியமையாதது என்பதைப் பள்ளன் புலப்படுத்துகின்றான். இவ்வாறு, சில பள்ளு நூலாசிரியர்கள் பள்ளர் சமூகத்தவர்கள் பற்றிய அனுதாபத்தை ஓரளவாயினும் தமது நூல்களில் உணர்த்தியுள்ளனர்.

குருகூர்ப்பள்ளில் அமைந்துள்ள தாலாட்டு என்னும் பகுதியும், ஓரளவு பள்ளர் சமூகத்தவரின் உழைப்புத்திறனைப் போற்றுவதாக அமைந்துள்ளது.[183] ஆயினும், முக்கூடற்பள்ளும், பொய்கைப்பள்ளும் பள்ளர் சமூகத்தின்பாற் செலுத்திய அனுதாப உணர்வினைக் குருகூர்ப்பள்ளின் இத்தாலாட்டுப் பகுதியிற் காண இயலவில்லை. இதற்குக் காரணம், குருகூர்ப்பள்ளின் ஆசிரியர் தாலாட்டு என்ற புதிய பகுதியை அறிமுகப்படுத்துவதிலேயே நாட்டமுடையவராக இருந்துள்ளமையேயாகும்.

மேற்குறிப்பிட்டவாறு, சில பள்ளு இலக்கிய ஆசிரியர்கள் ஓரளவே தமது அனுதாப உணர்வினைப் பள்ளர் சமூகம் தொடர்பாகப் புலப்படுத்தியுள்ளனர். இத்தகைய அனுதாப உணர்வு மனிதாபிமான அடிப்படையிலானது எனக் கொள்ளலாம். அதேவேளை, இன்னொன்றையும் இது தொடர்பாகக் கருத்திற் கொள்ளவேண்டும். பள்ளர் ஈடுபட்டு வந்த வேளாண்மைத்தொழில் சமுதாயத்தின் உணவுத்தேவையை நிறைவுசெய்துவந்த தொழிலாகும். வயல்களில் உழைத்து வந்த பள்ளர் சமூகத்தவரின் கடும் உழைப்பே பள்ளு இலக்கிய ஆசிரியர்கள் உட்படப் பலரின் உணவுத்தேவையை நிறைவுசெய்துவந்தது. இதன் காரணமாக ஏற்பட்ட நன்றியுணர்வும், பொதுவான மனிதாபிமான உணர்வுமே சில பள்ளு இலக்கிய ஆசிரியர்களை பள்ளர்பால் அனுதாபம் கொள்ளச் செய்தது எனக் கூறுவது மேலும் பொருத்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சான்றாதாரம்

1. பசாம், A.L. (1963) **வியத்தகு இந்தியா** (தமிழாக்கம்: செ.வேலாயுதபிள்ளை, மகேஸ்வரி பாலகிருட்டிணன்), கொழும்பு. ப.206.

2. தாப்பர், ரொமிலா (1973) **வரலாறும் வக்கிரங்களும்** (தமிழாக்கம்: நா.வானமாமலை), சென்னை. ப.49.

3. சாதி பற்றிய மேலதிக விபரங்களுக்குக் காண்க: **International Encyclopedia of the Social Sciences** (1968) Ed. Sills David L., Vol.2, The United States of America, The Macmillan Company & The Free Press. pp. 333, 344.

4. வித்தியானந்தன், சு. (1954) **தமிழர் சால்பு,** கண்டி. தமிழ் மன்றம், ப.180.

5. பசாம், A.L., **மு.கு.நூ.** ப. 208.

6. Srinivas, M.N. (1978) (ed.) "The Social Structure of a Mysore Village," **India's villages,** Bombay, Media Promoters and Publishers (Reprint).p.27.

7. Ketkar, Shridhar V. (1979) **The History of Caste in India,** New Delhi, p.5.

8. **Ibid.** p.7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. Vide: Gough, Kathleen (1978) "The Social Structure of a Tanjore Village," **India's Villages.** pp.94,95.

10. இராமநாதன், ஆறு. (1982) **நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்,** சிதம்பரம், மணிவாசகர் நூலகம், ப. 33.

11. Thurston, Edgar (1909) **Castes and tribes of Southern India,** Vol.v., Madras, Government Press.pp.472,473.

12. பொய்கைப் பள்ளிலும் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"..........................................பயிருயிர்க்கும்

ஆதார மாகிய நீரனைத் தையுமே

சார்புறத் தாங்குவது பள்ள மதற்குரிய

தன்மையாற் பள்ளனெனச் சாற்றும்பேர் பெற்றேன்."

செய்.[26]

13. Thurston, Edgar, **op.cit.** p.473.

14. பள்ளருக்கு மள்ளர் என்ற பெயரும் பள்ளு நூல்களிற் சில இடங்களிற் பயன்படுத்தப்பட்டுள்ளது. சான்றாகக் காண்க: மு.கூ.ப. செய்.9, 12, 31, 123, 127.

15. Thurston, Edgar, **op.cit.** pp.476, 477.

16. அய்யனார், வீ. (1982) **பள்ளர் குலச் சடங்குகள்,** மதுரை காமராசர் பல்கலைக்கழக எம்பில். பட்ட ஆய்வேடு (நூல் வடிவிற் பிரசுரிக்கப் படவில்லை). ப.18.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. **மேலது.** ப. 18.

18. இவை பற்றிய விபரங்களுக்குக் காண்க: Thurston, Edgar, **op.cit. pp.** 477-486.

19. **Ibid.** pp. 447, 478.

20. பொய்கைப் பள்ளில் பள்ளன் ஒருவனின் பெயராகக் காலாடி என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. செய். 148.

21. எட்கார் தேர்ஸ்டன் இவ்வாறு வழங்கும் கதைமரபை மேற்கோள் மூலமாக எடுத்துக்காட்டியுள்ளார். காண்க:
Thurston, Edgar, **op.cit.** p. 473.

22. முன்னதைப் போன்றே மேற்கோட் கருத்தைத் தேர்ஸ்டன் எடுத்தாண்டுள்ளார். **Ibid.** p. 473. பள்ளு இலக்கியத்திலும் இது பற்றிய குறிப்புகள் உண்டு. சான்றாக, செங்கோட்டுப் பள்ளில் மூத்தபள்ளி தன்னை அறிமுகப் படுத்துமிடத்து, "புரந்தரன் குலம்நான்" (செய். 208) எனத் தேவேந்திரனோடு தன் வகுப்பினரைத் தொடர்புபடுத்திக் கூறுவதைக் காணலாம். இதுபற்றி மேற்குறித்த பள்ளில் இடம்பெற்ற விளக்கக் குறிப்புகளில், "அவர்கள் (பள்ளர்) குலமுதல்வன் 'மூவேந்தரின் வேண்டுகோளுக்கிணங்கி இந்திர உலகத்திலிருந்து நெல்லைக் கொண்டு வந்து இங்கு பயிர் செய்தான்' என்பது பழஞ்செய்தி" என்றும், "பள்ளர் என்னும் பெருங்குடி மக்கள் தங்களைத் தேவேந்திர குலத்தினரெனச் சொல்லிக் கொள்வர்" எனவும் கூறப்படுகின்றது. கட்டிமகிபன் பள்ளில், "அதி தேவேந்திரப் பள்ளனும் நான்" (செய் .13), "இந்திரன் குலத் தோன்றியே வந்தநாள் முதலாகவே இலகுமேழூர்க் குடும்பன் நானேயாண்டே" (செய். 14) எனக் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. **கதிரைமலைப் பள்ளு** (1935), வ. குமாரசுவாமி பதிப்பு. சென்னை. பக். i-iii (பள்ளர் வரலாறு).

24. Vide: Pfaffenberger, Bryan (1982) **Caste in Tamil Culture (The religious foundations of Sudra domination in Tamil Sri Lanka)** New Delhi, Vikas Publishing House. pp.55.

25. கேசவன், கோ. (1981) **பள்ளு இலக்கியம் - ஒரு சமூகவியல் பார்வை,** சிவகங்கை, அன்னம் வெளியீடு. பக். 104-113.

26. **மேலது.** பக். 114-120.

27. பிள்ளை, கே.கே. (1977) **சோழர் வரலாறு,** சென்னை, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம். பக். 523.

28. **மேலது.** பக். 524.

29. காண்க: **மேலது.** பக். 517-525.

30. **S.I.T.I.** (1955) Vol. III, Part I, No. 1190.

31. Vide: Manickam, S. (1982) **Slavery in the Tamil Country: A Historical Overview,** Madras, The Christian Literature Society. p. 48.

32. Gough, Kathleen (1971) "Caste in a Tanjores Village," **Aspects of Caste in South India, Ceylon and North-West Pakistan,** Ed.E.R.Leach, Cambridge, Cambridge University Press. p.19.0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. Manickam, S, **op.cit.** p.43.

34. இவை பற்றிய விளக்கம் இவ்வியலின் "இ" பிரிவிற் கூறப்படுகின்றது.

35. காண்க: (அ) சிவசுப்பிரமணியன், ஆ. (1984) **அடிமை முறையும் தமிழகமும்,** சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட். பக்.37. (ஆ) Gough, E. Kathleen, **op.cit.** p.30.

36. இதன் காலம் ஏறத்தாழ கி.பி.1850 ஆகலாம். இப்பள்ளு தவிர, இராசநகர்ப்பள்ளு, தென்காசைப்பள்ளு, கோட்டூர்ப்பள்ளு, பொய்கைப்பள்ளு, பழனிப்பட்டிச் செட்டிப்பள்ளு போன்றவையும் 1843 இன் பின்னர் இயற்றப்பட்டவையாகும்.

37. Vide: Rasanayagam, C. (1926) **Ancient Jaffna,** Madras, Everyman's Publishers. pp. 335, 336.

38. **Ibid.** p. 383.

39. **கதிரைமலைப்பள்ளு** (1935) வ. குமாரசுவாமி பதிப்பு, பக். iii (பள்ளர்வரலாறு).

40. Banks, Michael,"Caste in Jaffna," **Aspects of Caste in South India, Ceylon and North –West Pakistan.** p.63.

41. Vide. Rasanayagam, C., **op.cit.** p. 384.

42. Banks, Michael, **op.cit.** p.64.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. **Ibid.** p.74

44. **முகூப.** செய். 34.

45. **மேலது.** செய். 35.

46. **மேலது.** செய் 36.

47. **மேலது.** செய். 123.

48. **திப.** செய். 55.

49. **செராப.** செய். 47.

50. **மேலது.** செய். 126.

51. **பொப.** செய். 50.

52. **மேலது.** செய். 121.

53. **மேலது.** செய். 133.

54. **செ.கோப.** செய். 153.

55. **மேலது.** செய். 317.

56. **கஅப.** செய். 63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. **மேலது.** செய். 89.

58. சான்றாகக் காண்க: "சேரிக் குடும்பாக வைத்தனர்" (**தி.மு.ப.** செய்.103), "புள்ளிச் சேரிக் குடும்பன்" (**செ.ரா.ப.**செய். 83)

59. **ஞா.ப.** செய். 106.

60. **மு.கூ.ப.** செய். 59.

61. **மேலது.** செய். 64.

62. **மேலது.** செய். 84.

63. **க.ம.ப.** செய். 77.

64. காண்க: **மு.கூ.ப.** செய். 63, 89; **செ.ரா.ப.** செய். 79, 108; **பொ.ப.** செய். 50; **செ.கோ.ப.** செய். 383, 390

65. **செ.ரா.ப.** செய். 55.

66. **மேலது.** செய். 47.

67. கொத்தடிமைகள் பற்றிய விளக்கத்துக்கு இவ்வியலின் 'அ' பிரிவை நோக்குக.

68. **மு.கூ.ப.** செய். 13.

69. **தி.மு.ப.** செய். 5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. **மேலது.** செய். 125.

71. **செ.ராப.** செய். 15.

72. **பொப.** செய். 23.

73. **க.அப.** செய். 122.

74. **மு.கூ.ப.** செய். 60.

75. **தி.முப.** செய். 9.

76. **மேலது.** செய். 13.

77. **மேலது.** செய். 84.

78. **மேலது.** செய். 125.

79. **மேலது.** அதே செய்யுள்.

80. **செ.ராப.** செய். 13.

81. **பொப.** செய். 19.

82. **மேலது.** செய். 66.

83. **மேலது.** செய். 123.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. **மேலது.** செய். 130.

85. **மேலது.** செய். 138.

86. **மேலது.** செய். 153.

87. **மேலது.** செய். 206.

88. **க.அ.ப.** செய். 12.

89. **மேலது.** செய். 13.

90. **மு.கூ.ப.** செய். 130.

91. **மேலது.** செய். 14.

92. **மேலது.** செய். 101.

93. **தி.மு.ப.** செய். 83.

94. **செ.ரா.ப.** செய். 72.

95. **மேலது.** செய். 111.

96. **மேலது.** செய். 114.

97. **க.ம.ப.** செய். 108.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. **ப.விப.** செய். 96.

99. **மேலது.** செய். 94.

100. **மு.கூ.ப.** செய். 57.

101. **மேலது.** செய். 86.

102. **திப.** செய். 42.

103. **குப** செய். 41.

104. **மேலது.** செய். 42.

105. **செ. கோப.** செய். 495.

106. **கமப.** செய். 78.

107. **பொப.** செய். 116.

108. **தி.முப.** செய்.153.

109. **ப.விப.** செய். 98.

110. **கமப.** செய். 59.

111. **க.அப.** செய். 97.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

112. **திமுப.** செய். 129.

113. **முகூப.** செய். 123.

114. **திமுப.** செய். 125.

115. **செராப.** செய். 63.

116. **மேலது.** செய். 135.

117. **கமப.** செய். 81.

118. **தகப.** செய் 153.

119. **கஅப.** செய். 91.

120. **முகூப.** செய். 106.

121. **குப.** செய். 54.

122. **பொப.** செய். 139.

123. **செராப.** செய். 115.

124. **செ.கோப.** செய். 495.

125. **மேலது.** செய். 808.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

126. **மேலது.** செய். 809.

127. **மேலது.** செய். 810.

128. **மேலது.** செய். 808–811.

129. **மு.கூ.ப.** செய். 6.

130. **தி.மு.ப.** செய். 148.

131. **மு.கூ.ப.** செய். 35.

132. **தி.மு.ப.** செய். 50; **க.அ.ப.** செய். 63; செ.ரா.ப. செய். 36; **பொ.ப.** செய். 49; **செ.கோ.ப.** செய். 318, 319.

133. **மு.கூ.ப.** செய். 120.

134. **மேலது.** செய். 121.

135. **மேலது.** செய். 122.

136. **மேலது.** செய். 123.

137. **மேலது.** செய். 125.

138. **மேலது.** செய். 126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

139. **மேலது.** செய். 137.

140. **மேலது.** செய். 138.

141. பிற தமிழகப் பள்ளு இலக்கியங்களில் இடம்பெறும் பள்ளரின் வேளாண்மை உழைப்புத் தொடர்பான செய்திகளுக்குக் காண்க. **திப.** செய். 58,65; **தி.முப.** செய். 139,143,157,158; **க.அப.** செய். 78,79,85,108,111,112; **செ.ராப** செய். 128,134,135; **செ.கோப.** செய். 779–785, 787–793, 824– 827, 829;835
**குப.** செய். 64; **பொப.** செய். 148,149, 158, 159, 189, 191, 192.
பள்ளு நூல்களில் இடம்பெறும் நாற்றுநடுகை தொடர்பான பாடல்களின் விபரம் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அடிக்குறிப்பு 154ஐ நோக்கவும்.

142. **கமப.** செய். 95, 104, 105, 106, 107.

143. **ப.விப.** செய். 114; **த.கப.** செய். 147.

144. **தி.முப.** செய். 133.

145. **க.அப.** செய். 86.

146. **செ.கோப.** செய். 786.

147. **மேலது.** செய். 785.

148. **மு.கூப.** செய். 114.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

149. **மேலது.** செய். 126.

150. பிற பள்ளு நூல்களிலும் இவ்வாறு பள்ளர் பள்ளியரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுக் கூட்டுணர்வு புலப்படுத்தப்படுகின்றது. காண்க: **செராப.** செய். 128; **பொப.** செய். 148, 149 174; **செ.கோப.** செய்.784, 785, 798–800; **திப.** செய். 61; **தி.முப.** செய். 144.

151. **குப.** செய். 22, 23, 25, 26.

152. **தி.முப.** செய். 51.

153. காண்க: **மு.கூப.** செய். 36; **செராப.** செய். 37; **பொப.** செய். 50; **செ.கோப.** செய். 320, 323.

154. **மு.கூப.** செய். 133.
மேலும் நாற்றுநடுகை தொடர்பான செய்திகளுக்குக் காண்க: **மு.கூப.** செய். 128–134; **தி.முப.** செய். 146–153; **க.அப.** செய். 90–106; **கமப.** செய். 96–102; **ப.விப.** செய். 116–126; **த.கப.** செய். 148–153; **குப.** செய். 67–73; **பொப.** செய். 173.187; **திப.** செய். 60–63; **செ.கோப.** செய்.. 795,807.

155. கேசவன், கோ., **மு.கு. நூ.,** பக். 128.

156. **மு.கூப.** செய். 6.

157. **மேலது.** செய். 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

158. **த.க.ப.** செய். 1

159. **க.ம.ப.** செய். 4

160. **செ.ரா.ப.** செய். 6

161. **மேலது.** செய். 8.

162. **தி.மு.ப.** செய். 34.

163. காண்க: **மு.கூ.ப.** செய். 10; **தி.மு.ப.** செய், 10; **க.ம.ப.** செய். 5; **ப.வி.ப.** செய். 5; **செ.கோ.ப.** செய். 25–26; **த.க.ப.** செய். 4; **செ.ரா.ப.** செய். 10; **பொ.ப.** செய். 14; **க.அ.ப.** செய். 12; **தி.ப.** செய். 7; **கு.ப.** செய்.6.

164. **செ.கோ.ப.** செய். 23.

165. **மேலது.** செய். 35.

166. **தி.மு.ப.** செய். 103.

167. பள்ளு நூல்களில் இடம்பெறும் பள்ளர் தலைவர்களின் பெயர்களுக்குச் சான்றாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். வடிவழகக் குடும்பன் (**மு.கூ.ப.**), திருமலைக் குடும்பன் (**தி.மு.ப.**), கண்ணக் குடும்பன் (**க.அ.ப.**), குடும்பன் (**பொ.ப**), சதாசிவக் குடும்பன் (**செ.கோ.ப.**). இவை தவிர, பெயரின் இறுதி பள்ளன் என அமைந்து, நூலினுள்ளே குடும்பன் எனச் சுட்டப்படுவதுமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

168. காண்க: **தி.முப.** செய். 88, 108.

169. அறுவடையின் பின்னர் நெல்லளந்து பல்வேறு பணிகளுக்கும் பள்ளன் பகிர்ந்தளிப்பதனைப் பற்றிய விடயங்களுக்குக் காண்க: **மு.கூ.ப.** செய். 142–148; **க.அ.ப.** செய். 115–120; **செ.கோ.ப.** செய். 836–839; **பொ.ப.** செய். 194–204.

170. **மு.கூ.ப.** செய். 108–111; **தி.மு.ப.** செய். 131–133; **செ.ரா.ப.** செய். 118–123; **க.அ.ப.** செய். 72–74; **தி.ப.** செய். 49–51; **செ.கோ.ப.** செய். 721–748; **பொ.ப.** செய். 141–145; **கு.ப.** செய். 56–58; **க.ம.ப.** செய். 83–85; ப.வி.ப. செய். 103–105; **த.க.ப.** செய். 134–136.

171. சில வேளைகளிற் பள்ளன் தன்கீழ்ப் பணி செய்யும் பள்ளரின் பெயர்களையும் விபரமாகப் பண்ணைக்காரனுக்கு அடுக்கிக் கூறுவதுண்டு. காண்க: **சிங்காபுரிப் பள்ளு.** செய். 97–100.

172. **செ.ரா.ப.** செய். 37.

173. **கு.ப.** செய். 22, 23.

174. பள்ளன் தொழுவில் மாட்டப்பட்டிருக்கும்போது, மூத்தபள்ளி பண்ணை வேலைகளில் அவனது இன்றியமையாமை பற்றிப் பண்ணைக்காரனிடம் எடுத்துரைப்பவை, பள்ளனின் உழைப்புத்திறனை உணர்த்துகின்றன. இவைபற்றி, இவ்வியலின் 'இ' பிரிவில் நோக்கப்படுகின்றது.

175. **செ.ரா.ப.** செய். 85.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

176. **பொ.ப.** செய். 156.

177. **மு.கூ.ப.** செய். 15.

178. **பொ.ப.** செய். 24.

179. **மேலது.** செய். 25.

180. **மேலது.** செய். 25.

181. காண்க: **மேலது.** செய். 23–27.

182. **செ.ரா.ப.** செய். 13.

183. காண்க: **கு.ப.** செய். 75–80.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-11-17
LIBRARY.

# நான்காம் இயல்

# பண்ணைக்காரர் – பள்ளர் உறவுகள்

## (அ) பண்ணைக்காரரின் பாத்திரச் சித்திரிப்பு

பள்ளு இலக்கியத்திற் பள்ளர் சமூகத்தோடு தொடர்புடைய பாத்திரமாக அமைந்திருப்பது, பண்ணைக்காரனின் பாத்திரமாகும். இப்பண்ணைக்காரன் பொருள்வளம் உள்ளவனாகவும், செல்வாக்கு மிகுந்தவனாகவும், பண்ணையில் அடிமைகளாக உள்ள பள்ளரை மேற்பார்வை செய்யவும், கண்டிக்கவும், தண்டிக்கவும் வல்ல அதிகாரமுடையவனாகவும் பள்ளு இலக்கியத்திற் காட்டப்படுகின்றான். குறிப்பிட்டவொரு பண்ணையில் அடிமைகளாகவிருக்கும் பள்ளர் அனைவரும் பொரளாதார முறையில் அதன் பண்ணைக்காரனைச் சாா்ந்தே வாழவேண்டியிருந்தது. வேறொருவகையிற் கூறுவதாயின், பண்ணையில் அடிமைகளாக இருந்த பள்ளரின் வாழ்வியலைப் பாதிக்குமளவிற்குப் பண்ணைக்காரனின் செல்வாக்கு அவர்கள்மீது பதிந்திருந்தது.

பள்ளு நூல்களிற் பண்ணைக்காரனின் அறிமுகம் ஒரு முக்கிய கட்டமாகும். வேளாண்மை வேலைகளைத் தொடங்குவதற்கு ஏற்றவகையில் மழை பெய்து, பள்ளர்கள் அணைகட்டி முடித்தபின்னர். அவனின் வரவு அமைகின்றது. அவனின் வரவினையடுத்தே பள்ளு இலக்கியத்தின் கதை யமைப்பும் நகரத்தொடங்குகின்றது. வேளாண்மை வேலைகள் நடைபெறாதிருப்பதை மூத்தபள்ளி சுட்டிக்காட்டியவுடன், அதற்குக் காரணமான பள்ளனுக்குத் தண்டனை கிடைக்கின்றது. அதன் பின்னர், பண்ணையில் வேளாண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகள் துரிதமடைகின்றன. இவ்வாறு, பண்ணைக்காரன் என்ற பாத்திரம் பள்ளு இலக்கியத்துக்கு ஒரு முழுமையை அளிக்கின்றது.

பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் பண்ணைக்காரன் குறிப்பிட்டவொரு பண்ணையின் மேற்பார்வையாளனேயன்றி, அதன் உரிமையாளனன்று. பண்ணைகள் கோயில்களுக்கோ, நிலப்பிரபுக்களுக்கோ உரிமையாகவிருந்தன. பண்ணைக்கு உண்மையிலே உரிமையுடையவராகப் பண்ணைக்காரர் விளங்கியிருப்பின், அவர்கள் தம்கீழ் உழைக்கும் மக்களினால் மதிக்கப்பட்டிருப்பர். ஆனால், பள்ளு நூல்களிற் பண்ணைக்காரர் பரிகாசத்துக்குரியவராகவே தம்கீழ் உழைக்கும் பள்ளர் சமூகத்தாற் கருதப்படுகின்றனர். ஆகவே, இத்தகையவர்கள் பண்ணைக்கு உரிமையுடையவர்களாக இருந்திருப்பர் என்பதற்கில்லை. பண்ணையை மேற்பார்வை செய்பவராகவே இருந்துள்ளனர். இதனை, "வீறுதரும் பண்ணை விசாரிப்பான் வந்தானே,"[1] "அண்ணைப் படையான் முத்தையன் திருமலையான் பண்ணைப் பருவம் பலகாலும் பார்க்கவல்ல பண்ணையான்,"[2] "கள்ளம் எதார்த்தம் எல்லாம் கண்டதிகாரம் செய்யும் வெள்ளைமெய் உடையார் பண்ணை விசாரிப்பான் தோன்றினாரே!"[3] என்பவை தெளிவாக உணர்த்துகின்றன.[4] மேலும், கண்ணுடையம்மன் பள்ளில், பண்ணைக்காரனை நகரத்தார்களே நியமித்தார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. "தேவி பண்ணை யுள்ளதெல்லாஞ் சட்டமிட வென்றே தனித்து நகரத்தார்கள் கட்டளையாய் வைத்த பண்ணைக்காரன் வந்து தோன்றினனே"[5] என இதனை அப்பள்ளு குறிப்பிட்டுள்ளது. இதுவும், பண்ணைக்காரர் பண்ணைக்கு உரிமையாளரன்று, பண்ணை வேளாண்மை வேலைகளைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டவரே என்பதை உறுதிப்படுத்துகின்றது.

ஞானப்பள்ளு தவிர்ந்த மற்றைய பள்ளு நூல்களிற் பண்ணைக்காரனின் தோற்றம் பள்ளராற் பரிகசிக்கப்படுகின்றது. எந்த அளவுக்கு அப்பாத்திரத்தைப் பரிகாசமாக வருணிக்க இயலுமோ, அந்த அளவுக்கு ஒவ்வொரு நூலாசிரியரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு போட்டி மனப்பான்மையுடன் தமது எள்ளற் திறமையைப் புலப்படுத்த முயன்றுள்ளனர். ஆசிரியர் கூற்றாகவும், பள்ளரின் கூற்றாகவும் பண்ணைக்காரன் பற்றிய சித்திரிப்பு அமைந்துள்ளது. சான்றாக, திருமலைமுருகன் பள்ளில் ஆசிரியர் கூற்றாக அமைந்த பாடல் பின்வருமாறு:

"வெட்டையாய் மினுமினுத்த
தட்டைத் தலையும் – செம்பட்டை
மீசையும் பச் சோந்திக் கரை
வாசி நடையும்
முட்டிக் காலுஞ் சில்லொலுங்கு
விட்டுப் போகாப் பொட்டைக் கண்ணும்
மூளிக் காது மாய் வளர்ந்த
நாளிப் போழ்வாயும்
ஒட்டகம் இவரால் நல்ல
கட்டழகு பெற்ற தென்றால்
ஒன்றை யொன்றைச் சொல்வதென்ன
நன்றி தென்னவே
வட்ட வாவிக் காவித்திரு
மாமலைக் கந்தர் பண்ணைக்கு
வாய்த்த பண்ணைக் காரர்வந்து
தோன்றி னாரே."[6]

இதே போன்று, பள்ளர் கூற்றாக அமைந்த பாடலொன்று பின்வருமாறு:

"மொட்டைத் தேவாங் கழகரே கும்பிடுகிறேன் – பட்டி
மூஞ்சிக்குல்லா வழகரே கும்பிடுகிறேன்
சட்டித்தலை யழகரே கும்பிடுகிறேன் – ஒட்டைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழிவயிற் றழகரே கும்பிடுகிறேன்
கட்டைக்கை யழகரே கும்பிடுகிறேன் - நெட்டைக்
கழுத்திற்புண் ணழகரே கும்பிடுகிறேன்
அட்டைச் சொறி யழகரே கும்பிடுகிறேன் - பண்ணை
ஆண்டவரே ஆண்டவரே கும்பிடுகிறேன்.[7]

இத்தகைய வருணனைகள் பண்ணைக்காரரின் உறுப்புக் குறை பாடுகளைக் குறிப்பிட்டுப் பரிகசிப்பவையாக அமைந்துள்ளன. பள்ளு நூல்களிற் பண்ணைக்காரரின் வருணிப்புத் தவிர்ந்த எந்தவிடத்திலும், நூலாசிரியர்கள் தமது கூற்றாக அமைந்துள்ள பாடல்களில் இந்த அளவுக்கு எந்தப் பாத்திரத்தையும் பரிகசிக்கும் வகையில் வருணிக்கவில்லை. மேலும், பள்ளர் பண்ணைக்காரருக்கு மரியாதை செலுத்தி வணங்குவதாகக் கூறப்படும் பாடல்களில், பண்ணைக்காரர்மீது அவர்கள் கொண்டிருந்த வெறுப்புணர்வே பிரதிபலிக்கின்றது. இவை பண்ணைக்காரருக்கும், பள்ளர் சமூகத்துக்கு மிடையிலிருந்த முரண்பட்ட உறவினைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாறு, பரிகசிக்கப்படத்தக்க தோற்றம் கொண்டவர்களாகப் பண்ணைக்காரர் பள்ளு நூலாசிரியர்களாற் சித்திரிக்கப்படுவதற்குத் தகுந்த காரணம் இருக்கவேண்டும். பண்ணையின் மேற்பார்வையாளர் என்ற வகையிலே, தமக்கிருந்த செல்வாக்கையும், அதிகாரத்தையும் தவறான வகையிற் பயன்படுத்தி, மோசமான நடத்தையுள்ளவர்களாக அவர்கள் இருந்தனர் என்பதைப் பள்ளு நூல்கள் புலப்படுத்துகின்றன. ஆயினும், அவர்களது தோற்றத்தை மிகக் குரூரமானவகையிற் சித்திரிக்குமளவிற்கு, அக்காலத்துப் பண்ணைக்காரர்மீது பள்ளு நூலாசிரியர்களுக்கு வெறுப்பு ஏற்படுவதற்குத் தகுந்த காரணம் இருந்திருக்க வேண்டும். இதுபற்றி கோ.கேசவனும், அ.மார்க்ஸூம் நோக்கியுள்ளனர். பள்ளு நூல்கள் தோன்றிய காலத்தில், மன்னனாலோ, அல்லது உள்ளூர்ப் பாளையக்காரனினாலோ நியமிக்கப்பட்ட பாருபட்டயக்காரர் என்பவர்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பண்ணைக்காரர் ஆகலாம் என்பது கோ.கேசவனின் கருத்தாகும்.[8] அ.மார்க்ஸ் தமது கருத்தைப் பின்வருமாறு திரட்டிக் கூறுகின்றார்:

"பள்ளுகளில் கேலி செய்யப்படுகின்ற பண்ணை விசாரிப்பான்கள் "நாயக்க வாடிகள்" போன்ற தெலுங்கு அதிகாரிகளாகவோ, கள்ளர், மறவர் போன்ற "புதுப்பெரிய மனிதர்களாகவோ" இருப்பதற்கு இடமுண்டு. பெரும்பாலும் வேளாளர்களின் ஆதரவில் எழுதப்பட்ட இப்பள்ளு இலக்கியங்களில் இத்தகைய தெலுங்கு நிலவுடைமையாளர்களும் சிரிப்புக்குரியவர்களாகக் கேலி செய்யப்படுகிற வாய்ப்புக்கள் மிகுதியாகும்."[9]

இவற்றோடு, பள்ளு நூல்களில் இடம்பெறும் பண்ணைக்காரர் பற்றிய குறிப்புகளின் ஆதாரத்தில் நோக்குமிடத்து, பண்ணைக்காரர் பெரும்பாலும் தெலுங்கு பேசுபவராக இருந்திருக்க வாய்ப்புண்டு. தமிழகத்து மண்வாசனைக்கு அவர்கள் அந்நியராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. விஜயநகர, நாயக்கர் காலத்திலே தெலுங்கு பேசும் அதிகாரிகள் தமிழகத்தில் மேலாண்மை செலுத்தியமையும் தமிழ் மக்களைப் பாதித்திருப்பதற்கு வாய்ப்புண்டு. பள்ளு நூலாசிரியர்கள் அத்தகைய பாதிப்புணர்வுக்கு உருவம் கொடுக்கும் முயற்சியாக, இத்தகைய பரிகசிக்கத்தக்க, குரூரமான தோற்றம் கொண்ட பண்ணைக்காரர் பாத்திரத்தைப் படைத்திருக்க வேண்டும் எனக்கொள்வது பொருத்தமானது.[10] இதனாலேயே பள்ளு நூலாசிரியர்கள் தமது எதிர்ப்புணர்வைக் காட்டும் வகையில் ஆசிரியர் கூற்றாகவும், தமிழகத்து மக்களின் எதிர்ப்புணர்வைப் பிரதிபலிக்கும் வகையிற் பள்ளரின் கூற்றாகவும் பண்ணைக்காரனின் வருணனையை அமைத்துள்ளனர்.

ஞானப்பள்ளு தவிர்ந்த ஈழத்துப் பள்ளு நூல்களிலும் பண்ணைக்காரனின் தோற்றம் பரிகசிப்புக்குட்பட்ட வகையிலேயே வருணிக்கப்பட்டுள்ளது. ஆயினும், பண்ணைக்காரர் தொடர்பான அனைத்துச் செய்திகளும் ஈழத்துக்கும் பொருந்தும் என்பதற்கில்லை. ஈழத்தில் வயல்களை மேற்பார்வை செய்துவந்தோர் பெரும்பாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்பேசும் வேளாள நிலப்பிரபுக்களேயாவர். ஈழத்துப் பள்ளு நூலாசிரியர்களும் இத்தகைய வேளாள நிலப்பிரபுக்களுக்குச் சார்பானவராகவே விளங்கினர். இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர், தண்டிகைக்கனகராயன் பள்ளின் ஆசிரியரான மாவை சின்னக்குட்டிப் புலவராவர். ஆயினும், தமிழகப் பள்ளு நூல்களின் மரபினைப் பின்பற்றி, ஈழத்துப் பள்ளு நூல்களிலும் பண்ணைக்காரன் பாத்திரம் பள்ளர் சமூகத்தாற் பரிகசிக்கப்படுவதாகக் காட்டப்பட்டுள்ளது.

## (ஆ) பண்ணைக்காரரின் கடமைகளும் அதிகாரங்களும்

பண்ணைக்காரரின் முதன்மையான கடமை, தமது பண்ணைகளில் உழைக்கும் பள்ளரின் வேளாண்மை வேலைகளை மேற்பார்வை செய்வதாகும். தமது மேற்பார்வையின் ஓரங்கமாகப் பண்ணைப் பொறுப்புக்களைப் பள்ளர் ஒழுங்காகக் கவனிக்கின்றனரா என்பதைக் கண்காணிப்பதும் அவர்களது பொறுப்பாகும். இதன் பொருட்டு, அவர்களிடம் பண்ணை தொடர்பான விபரங்-களைப் பண்ணைக்காரர் வினவுவதுண்டு. "பள்ளா துள்ளாதே பண்ணைச் செய்தி விள்ளடா,"[11] "இன்ன தென்று கணக்கெனக்குச் சொல்ல இங்கேவா மாவிலி கங்கைநற் பள்ளா,"[12] "நெல் விதைக் கோட்டைமி னீட்டிய பூட்டு நாணுகத் தீட்டமு...... மேழிக் கலப்பை வகையும் மண் வெட்டியும்..... கொழுவின் வகையும்..... பண்ணை மாட்டின் வகையும் இருப்பும் போன செலவு நன்றாய்க் கணக்கேற்றிச் சொல் லீழமண்டலப் பள்ளா"[13] என்பவை, பள்ளர் தலைவர்களிடத்துப் பண்ணையின் கணக்கு விபரங்களை விசாரிக்கும் பண்ணைக்காரரின் பணியினைத் தெளிவுபடுத்துகின்றன.

பண்ணைக்கணக்கு வகைகளைக் கேட்டறிந்துகொள்வது மாத்திரமன்றி, பள்ளர் செய்யவேண்டிய வேளாண்மை வேலைகளைப் பற்றிக் கட்டளையிட்டுச் செய்விப்பவர்களாகவும் பண்ணைக்காரர் விளங்கினர். இத்தகைய கட்டளைகளையும் பள்ளர் தலைவர்களிடமே அவர்கள் கூறுவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பண்ணைக் கேரிட வேணும் பள்ளா,"[14] "ஏரைப்பூட்டி வயல்சேறு செய்தபின் போதவெருத் தழைபோட்டுப் பரம்படித்து... செந்நெல் விதை தெளித்துவிடச் செல்லடா பள்ளா,"[15] "திருத்தி வரம்புகட்டிப் பரம்படித்து நல்ல செந்நெல் விரை தெளித்திடச் செல்லடா பள்ளா,"[16] "பண்ணையி லேர்ப்பூட்டி யுழவே நன்மனத் துடனேபோதி யீழமண்டலத்துப் பள்ளா,"[17] "வயலில் சீர்மருவு வரம்புவாய்க் கால்கள் திருத்திவிளை செந்நெல் விதை தெளித்திடச் சொல்லடா பள்ளா"[18] என்பவை, வேளாண்மைத் தொழிலுக்குப் பள்ளரை ஆற்றுப்படுத்தும் பண்ணைக்காரரின் அதிகார மனப்பாங்கைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன.

மேலும், பண்ணைக்காரர் பண்ணை வேளாண்மையைக் கண்காணிக்கும் பொருட்டு, தேவையேற்படுமிடத்து வயலுக்குச் சென்று பார்வையிடுவதுமுண்டு. அவ்வாறு பார்வையிடுவதற்கு முன்னர், பள்ளரால் முறையாக அவர்கள் அழைக்கப்படுவது வழக்கமாகும். "கண்டிருகண் களிக்கவெங்கள் பணிவிடைக ளெல்லாம் காணவர வேணு மிப்போ பண்ணை யாண்டே"[19] எனப் பொதுவாக அழைக்கப்படுவது மாத்திரமன்றி, தாம் செய்யவிருக்கும் செயல்களைக் குறிப்பிட்டு, அவற்றைப் பண்ணைக்காரர் வந்து கண்காணிக்க வேண்டும் என அவர்களைப் பள்ளர் அழைப்பதுமுண்டு. நாளேரிடல், நாற்று நடுகை, நெற்பங்கீடு முதலான சமயங்களில் அவர்கள் அவ்வாறு அழைக்கப்படுவதனைப் பள்ளு நூல்கள் காட்டுகின்றன. "பண்ணை வயலி லின்றே சிறப்பாக நாமெல் லோருங் கூடிச் சென்றே நாளேரிட வாரும் நயினாரே"[20] எனப் பண்ணைக்காரன் நாளேரிடப் பள்ளரால் அழைக்கப்படுவதனைத் திருமலைமுருகன் பள்ளு காட்டுகின்றது.

"ஆளும் பண்ணையீர் சுபசோப னமுங்கொண்
டடிமை இங்கு வந்தேன்
ஆருங் காணவயல் நாற்றுப் பாவுவதற்கு
வாரும் என் நயினாரே"[21]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும், "களித்தே பறித்துமுடி நடுவ தெல்லாங் காணவர வேண்டும் பண்ணைக் கார னாருமாண்டே,"[22] "நாற்றைத் தொழுது நடும்வடிவு காணவாரும் சொல்லவந்தேன் காணும் பண்ணைக்கார னாண்டே,"[23] "நாங்கள் நாற்று நடுவதெல்லா மிப்போது காணவர வேணும் பண்ணை யாண்டவனே"[24] எனவும் பள்ளு நூல்களில் இடம்பெறும் கூற்றுக்கள், நாற்றுநடுகை தொடர்பான தங்கள் வேலைகளைப் பண்ணைக்காரர் வந்து மேற்பார்வை செய்ய வேண்டும் என்ற பள்ளரின் விழைவினை எடுத்துக்காட்டுகின்றன.

இதேபோன்று, நெல்லளக்கும்போதும் பண்ணைக்காரரின் முன்னிலையிலேயே அவ்வாறு செய்வதுண்டு. "கண்டபொலி தூற்றிமுதற் கண்டளக்கவே கண்காணிக்க வேணும்பண்ணைக் காரனா ராண்டே"[25] எனத் திருவாரூர்ப் பள்ளிலே, தாம் நெல்லளப்பதை வந்து பார்வையிடுமாறு பள்ளர் பண்ணைக் காரனடத்து வேண்டிக்கொள்வது குறிப்பிடத்தக்கது. முக்கூடற் பள்ளில், பண்ணைக்காரனின் முன்னிலையில் நெல்லளப்பது பற்றிக் கூறப்படுவதைப் பின்வரும் பாடல் தெளிவுறுத்துகின்றது:

"தினச்சத் திரத்துக்கென்றும் பெரிய நம்பி
திருமாளிகைக் கென்றுஞ்சில நெல்லுக் கொடுப்பார்
சனக்கட் டளைஏழு திருப்ப திக்கும்
தலத்தார் படிக்குஞ்சில சாலி யளப்பார்
மனத்துக் கினியகாவை வடம லேந்திரன்
மடத்துக்கு வேண்டுஞ் செந்நெல் வாரிக்குப்பள்
கனக்குஞ் சிறப்பமையக் கட்டி யளப்பார்
கங்காணப் படிபண்ணைக் காரனார் முன்னே"[26]

மேலும், எவ்வெக் காரணங்களுக்காக எவ்வெவ்வகை நெல் அளந்து கொடுக்கப்பட்டன என்ற விவரங்களைப் பள்ளர் தலைவர்கள் பண்ணைக் காரருக்குத் தெரிவிக்க வேண்டியதும் இன்றியமையாததாகும்.[27]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளர் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், தம்மை மேலாண்மை செய்யும் பண்ணைக்காரரையே நாடுவதுண்டு. பண்ணைகளில் வாழும் அம்மக்களது குடும்பப் பிரச்சினைகள் உட்பட, அனைத்தையும் பண்ணைக் காரரே அறிவர். அதனால், தங்கள் முறைப்பாடுகளைப் பண்ணைக்காரரிடமே அவர்கள் தெரிவித்து நீதிபெற முயற்சிப்பதுண்டு. இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டாகப் பள்ளு இலக்கியத்தில் மூத்தபள்ளி விளங்குகிறாள். இப்பாத்திரத்தின் மூலமாகப் பள்ளர் சமூகத்தவரிடையே காணப்படும் பிரச்சினைகளின் மைய நிலையையும், அதற்கான தீர்வினை எதிர்நோக்கும் அவர்களின் போக்கினையும் உணர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பள்ளு நூல்களைப் பொறுத்தவரையில், ஆண்–பெண் உறவு தொடர்பான விடயங்களே, அம்மக்களது பிரச்சினைகளின் மையநிலையாகக் காட்டப்படுகின்றன. ஆயினும், மூத்தபள்ளி அத்தகைய மையப்பிரச்சினையையே முற்றுமுழுதாகக் காட்டிக் கொள்ளாது, அதன் விளைவுகளையும் எடுத்துக்காட்டுவதைக் காணலாம். அதாவது, தன்னை மறந்து, இளையபள்ளியுடன் குடும்பம் நடத்தும் பள்ளனின் போக்கே அவளின் மையப் பிரச்சினையாக இருப்பினும், அதனால் பண்ணையில் வேளாண்மைச் செயல்கள் பாதிப்புறுகின்றன என்பதையும் எடுத்துக்காட்ட விழைவதைக் காணலாம். இவ்வாறு தெரிவிப்பதனால், பண்ணைக்காரன் கோபமுற்றுத் தன் கணவனுக்குத் தண்டனை வழங்கக்கூடும் என்பதும், அதன் விளைவாக, அவன் திருந்தி நடப்பதற்கு இடமுண்டு என்பதும் அவளது எதிர்பார்ப்புக்களாகும். இதனைப் பள்ளு நூல்களில் இடம்பெறும் பள்ளனுக்கெதிரான மூத்தபள்ளியின் கூற்றுக்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். பண்ணை தொடர்பாகப் பள்ளன்மீது அவள் சுமத்தும் குற்றச் சாட்டுக்கள் இருவகையானவை:

(அ) பண்ணை வேலைகளை ஒழுங்காகக் கவனிக்காமை.

(ஆ) கால்நடைகள் உட்படப் பண்ணையிலுள்ள பொருட்களை அநியாயமாக விற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணை வேலைகளைப் பள்ளன் ஒழுங்காகக் கவனிக்காமை பற்றிய மூத்தபள்ளியின் குற்றச்சாட்டுக்களைப் பின்வரும் அவளது கூற்றுக்கள் காட்டுகின்றன:

"காக்குங் காலணை – பார்க்கவுஞ் செய்யான்" 28

"கட்டின மாட்டைத் – தொட்டவிழான் ஒருக் காலுந் தான்உழக்
கோலுங்கை தீண்டான்" 29

"படுத்திடும் பள்ளன் – வேலையைக் கெடுத்திடுங்கள்ளன்" 30

"ஆருக்கும் பணியான்" 31

"ஊருக்குள் ஏற்றம் – இவனிந்தச்
சேரிக்குள் நாற்றம் – குடும்புசெய்
தூராருக் குழைத்தான் – அழகர்சொம்
மாறாகப் பிழைத்தான்" 32

"உழச்சற்றே நினைப்பது மில்லை" 33

"காயப்போட்ட வயலுக்குத் தண்ணீரும் பாய்ச்சான்
கட்டுக்கூடு களப்பேறு விட்டதுந் தாரான்
பயிற்கிடை போலக்கள வரப்பிற் கிடப்பான்" 34

"ஏரைப் பூட்டியு மறியான் – பண்ணை மாட்டையுந்
தேரான்.... உங்கள் வயலையும் பாரான்" 35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாற்றுக் கால்பயிர் சாற்றுமெ டுக்கான் – முன்
னாலே போயொரு வேலையுஞ் செய்யான்
சோற்றுக் காளுக்குப் பார்த்துக்கொ டுக்கான்
தொட்டு வேலையொன் றிட்டு மறியான்
போத்து மேல்மழைத் தூற்றல்லுப் பாகப்
பொழப்பைப் போட்டு நெளுப்பித் திரிவான்" 36

"நஞ்சை புஞ்சை விளைந்த தறியான்
நாட்ட மாய்ச்சென்று தோட்டமும் பாரான்
மஞ்ச ளிஞ்சி தழைந்ததுங் காணான்
வைத்த நந்த வனத்தையும் பாரான்
அஞ்ச லால்வேலை யுஞ்சரி கேளான்
ஆலை யுங்கொடிக் காலையும் பாரான்" 37

"வந்த மாட்டைப் பிடித்துக்கட் டான்கட்டி
வைக்கோலும் ஊட்டான் தண்ணீரும் காட்டான்
சிந்தை யோடு தவறின மாட்டையும்
தேடியா ராய்ந்து பார்க்கவு மாட்டான்" 38

"வேண்டும் பண்ணையில் வேலையுஞ் செய்யான்" 39

"செழுங்கன் றுமொருக் காலுங்கை தீண்டான்" 40

•

"பண்ணையைப் பாரான்..... வயல்வெட்டுப் பார்க்கவும் போகான்
ஆட்களைச் சேர்க்கவு மாகான்" 41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆட்டையும் உரத்தை யுங்காணான்..... எருவையுங் கூட்டான்
தொழுவுக்கு வருகவு மாட்டான்"[42]

ஈழத்துப் பள்ளு நூல்களிலும் மூத்தபள்ளியின் இத்தகைய முறைப் பாடுகளைக் காணலாம்:

"அருவிகள் கொய்யான் – அது தொழில்
அடுத்ததும் செய்யான்"[43]

"வயல்தனில் மருவியங் கங்கே நிறைபுனல் தெளியான்
வளர்பண்ணை நிறைகளை கழியான்"[44]

"விளை செந்நெல் வயலையும் பாரான்"[45]

"வயலில் ஏர்தனைப் பிடியான்.... வயல்பண்ணை பட்டியும் பேரான்"[46]

"கட்டு நீர்வயற் செய்கையுந் தீண்டான்... பட்டியின் மாட்டைக்
கிட்டியும் பாரான்"[47]

"இந்த வூருக்கு மிணங்கான் – தலையாரிக்கும் வணங்கான்"[48]

"அந்திநேரம் பண்ணைதன்னில் மாட்டையுந் தேடான்"[49]

இவ்வாறு, உழவுவேலை செய்யாமை, வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சாமை, அணைகளைப் பாதுகாவாமை, நாற்றுநடுகை செய்யாமை, களைபறிக்காமை, பயிர்விளைவிக்காமை, அறுவடை செய்யாமை, கால்நடைகளைக் கவனிக்காமை, பண்ணையில் உழைக்கும் பள்ளருக்கு உணவளிக்காமை முதலான பள்ளனின் குறைகள் மூத்தபள்ளியினாற் பண்ணைக்காரனிடமே முறையிடப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணையிலுள்ள கால்நடைகள், பொருட்கள் போன்றவற்றைப் பள்ளன் தனது தேவைகளுக்காக அநியாயமாக விற்பது தொடர்பான மூத்தபள்ளியின் குற்றச்சாட்டுக்கள் சில பின்வருமாறு அமைந்துள்ளன:

"பரத்திகைச் சுள்ளும் – அக்கரைத்
திருத்திநிற் கள்ளும் – கொண்டஞ்சு
பசுவையும் –விற்றான்" 50
"ஆனைக் குட்டியைப்போல் – எருமையை
ஞானிச் செட்டிகைக்கே " பணம்பதி
னைஞ்சுக்குக் கொடுத்தான்" 51

"கள்ளு வார்த்தநா டானுக்குச் செம்மறைக்
காளை தன்னைவெ ருட்டிக் கொடுத்தான்
சுள்ளு விற்ற நுளைச்சி இரப்பிக்குச்
சோற்றுக் கைங்கலம் நெல்லுக்கொ டுத்தான்
பள்ளி தங்கச்சி பேரிட்ட பிள்ளைக்குப்
பாற்ப சுவிலொர் பசுவைக்கொ டுத்தான்" 52

"பட்டுப் பக்கறை தைச்சுக் கொடுத்தபொய்ப்
பாண னுக்கோர் பசுவைக் கொடுத்தான்
கட்டுக் கச்சை கொடுத்த பணிக்கன்
கறுப்ப னுக்கொரு காளை கொடுத்தான்
எட்டுக் கோழி வளர்த்தே னதைச்செட்டி
இராம னுக்குப் பிடித்துக் கொடுத்தான்" 53

"சாம்பல் மூளிய னைஞ்சான் கடத்துக்கஞ் சாறுமாடெல்லாஞ்
சாட்டிக் கொடுத்தான் 54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையனைத்தின் மூலமாக, பண்ணை தொடர்பான முறைப்பாடுகளைப் பள்ளர் பண்ணைக்காரரிடம் தெரிவிக்க முற்படுவதை உணர்ந்துகொள்ளமுடிகிறது. இதற்கு ஒரு முன்மாதிரியாக, மூத்தபள்ளியின் பாத்திரத்தைப் பள்ளு நூலாசிரியர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

மேலும், முறைப்பாடுகளைத் தெரிவிப்பது போலவே, தண்டனையின் முக்கியத்துவத்தையும் மூத்தபள்ளியே வலியுறுத்துவதுண்டு. "களவுகள் இன்னமும் அறியீர் – அடியாள் சொன்னதுங் குறியீர்,"[55] "அழகருக் குதவும் பள்வேண்டில் – அவனிநிப் பதனங்கா ணாண்டே,"[56] "உம்மையுஞ் சற்றினிக் கெணியான் காண்கினும் முற்றிலும் பணியான்,"[57] "சாலக் காரனிங் கும்மையு மேய்ச்சும்மைச் சாணிகொண்டு தடவுவான்,"[58]

"........................... உமக்கவ
னேற்கவு நடவான் – இங்கே
போச்சுமக் கடிமை – அங்
காச்சினிக் குடிமை – இன்னம்
பொறுத்திடிற் பள்ளன் – களவுக
ளொறுத்திடா னாண்டே" [59]

என்பவை, பள்ளனுக்குப் பண்ணைக்காரன் தண்டனை வழங்கவேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றன.

பண்ணைக்காரரே பண்ணையில் உழைக்கும் பள்ளர் அனைவரினதும் மேற்பார்வையாளராகவும் விளங்குவதால், அத்தகைய அவர்களது உயர்நிலை, தம் பண்ணையின் உழைப்பாளரைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும், செல்வாக்கையும் அவர்களுக்கு அளித்தது. பள்ளர் தவறு செய்யுமிடத்து, அவர்களைத் தண்டிக்கும் அதிகார் பண்ணைக்காரனிடத்து இருந்தது. கசையால், அல்லது தடியினால் அடித்தல். தொழுவில் (குட்டையில்) அடித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலான தண்டனைகள் பள்ளருக்குப் பண்ணைக்காரரால் வழங்கப் பட்டமையைப் பள்ளு நூல்கள் குறிப்பிடுகின்றன. "கசையால் அடிப்பனென்று கண் சிவந்து கூறினனே,"[60] "சவுக்கினில் வைத்திடி ராண்டே,"[61] "தொட்டால் விடாதென்கை நாங்குக்கம்பு கொல்லும் பேயடி,"[62] "இந்தச் சங்காத்தி என்கைத் தடியடிக்கே வசம் ஆவனே,"[63] "எட்டிப் பிடியுங் கைச்சவுக்காற் கட்டி யடிமின்கா ணாண்டே"[64] என்பவை பண்ணைக்காரரின் நேரடியான தண்டனை முறையைச் சுட்டுகின்றன.

பெரும்பாலும், பள்ளு நூல்கள் பண்ணைக்காரரின் கட்டளைப்படி, பள்ளர் தலைவர்களைத் தொழுமரத்தில் அடிப்பதன்மூலம் தண்டனை நிறைவேற்றப் படுவதைத் தெரிவிக்கின்றன. தொழுமரம் என்பது, முற்காலத்திலே தண்டிக் கப்படவேண்டியவரின் கை, கால்களைச் சொருகி வைத்துப் பொருத்தித் தண்டிப்பதற்கெனப் பயன்படுத்தப்பட்ட இரு பிளவாக அமைந்த துளையுள்ள மரச்சட்டமாகும். பள்ளு நூல்களிற் குறிப்பிடுவதையொத்த இத்தண்டனைமுறை இருந்தமையைப் பின்வரும் கூற்று தெளிவுபடுத்துகின்றது:

> "கால்களுக்குக் கிட்டுப்போடும் தண்டனையும் அளித்தார்கள். ரத்தநாளங்கள் விண்விண் என்று நெறிக்க வலி பொறுக்கமாட்டாமல் மரம்வெட்டி சாய்ந்ததுபோல் கீழே விழும் காட்சியைக் கண்டு அந்த நிலப்பிரபுக்கள் வாய்விட்டுச் சிரிப்பார்கள்." [65]

தொழுவில் அடிக்கும் கொடூரமான தண்டனையைப் பண்ணைக்காரர் பள்ளருக்கு விதிப்பதை, "கண்சிவந்து பண்ணைக்காரன் அங்கே வந்த பள்ளன் தன்காலில் மரக்குட்டை சேர்த்தானே," [66] "பண்ணையான் தச்சனைக் கூப்பிட்டே பள்ளன் ஏங்கிடக் குட்டை யடித்தனன் சிக்கனவொர் ஆப்பிட்டே,"[67] "பள்ளனைப் பிடித்தடித்தே மரத்தி லடித்தான்"[68] என்பவை உணர்த்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளு நூல்களிற் பெரும்பாலானவை, பள்ளனின் கால்களையே தொழு மரத்தில் அடிப்பதுபற்றிக் கூறுகின்றன. சான்றாக, "காலிரண்டுந் தொழு விலிருக்கவே,"[69] "நம் பள்ளன் காலிற் றொழுவை விலக்கி விட்டிட வேணுங் காணாண்டே"[70] "பள்ளன் இருகாலிற் பூண்ட தொழுக் கழற்றுமே னாண்டே,"[71] "செறுத்த காவலில் வைத்திடு பள்ளனைச் சேர்த்த காற்றளை மாற்றுவீ ராண்டே,"[72] "அளவுடன் குட்டை சேர்த்தி அவனுட காலில் பூட்டி நளினமாய் வாடா"[73] "பள்ளன்.... இருகாலும் மரத்துளையிற் கொடுத்தான்,"[74] "மரத்தடித் திடுஞ்சிறை விடச் சொல்லுவீரே,"[75] "பள்ளனைப் பிடித்தடித்தே மரத்திலடித்தான்"[76] போன்றவற்றைக் குறிப்பிடலாம். சில பள்ளு நூல்களில், பள்ளனின் கைகளையும் தொழுமரத்தில் அடிப்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது. சான்றாக, முக்கூடற்பள்ளில்,

"கரத்தொடு மரமும் – பசும்புரை
மரத்தொடு கரமும் – சேர்த்திரு
காலினில் விலங்கும் – பருக்கவே
கோலுவீ ராண்டே"[77]

எனப் பள்ளனின் கைகளைத் தொழுமரத்தில் அடித்து, கால்களில் விலங்கும் பூட்டுமாறு மூத்தபள்ளி பண்ணைக்காரனை வேண்டுவதைக் குறிப்பிடலாம். இதுபோன்றே, பொய்கைப் பள்ளில், "அடியானை அங்கைக ளிரண்டுங் குட்டையிட் டாளல னாண்டே"[78] என மூத்தபள்ளி பண்ணைக்காரனை வேண்டு வதாக அமைந்துள்ளது. பறாளைவிநாயகர் பள்ளில், "காய்ச்சுலை யடுத்தே யறத் தோச்சிடு மிரும்பாற்- பண்ணிக் கடுவிலங்கிடவேயினித் தடைசெய்யீ ராண்டே"[79] என இரும்பினாற் காலில் விலங்கிடுவது பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதனை விதிவிலக்காகவே கொள்ளவேண்டும். தொழுமரத்தில் அடிப்பதையே தண்டனை முறையாகப் பெரும்பாலான பள்ளு நூல்கள் குறிப்பிடுகின்றன. பள்ளன் அஞ்சி வேதனைப்படும் அளவுக்கு அவனுக்கு இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டது. இதனை, "அல்லும் பகலு மிதிற் கிடவென்றுள்ளம் அஞ்ச மரத்தில் அடித்தனனே"[80] எனச் செண்பகராமன் பள்ளு குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய கொடூரமான தண்டனைகள் பண்ணைகளில் உழைத்துவந்த பள்ளர்களுக்கு வழங்கப்பட்டமை, பண்ணைக் காரரின் அடக்குமுறையையும், அதிகார மனப்பாங்கையும் உணர்த்துகின்றது. இவ்வாறு தண்டனைகள் வழங்குவதன் மூலமாக, சமூக அந்தஸ்தினாலும், பொருளாதார நிலையினாலும் தாழ்ந்திருந்த அம்மக்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழேயே வைத்திருக்கலாம் என்ற எண்ணம் பண்ணைக்காரரிடம் காணப்பட்டது.

தம்கீழ் உழைக்கும் பள்ளர் சமூகத்தவரைத் தண்டிக்கும் அதிகாரம் பண்ணைக்காரருக்கு இருந்தமையால், அவர்கள் விதிக்கும் தண்டனையினின்றும் தம்மைச் சார்ந்தோரை விடுவித்துக்கொள்வதாயினும், பண்ணைக்காரரின் தயவினையே பள்ளர் பெறவேண்டியிருந்தது. பள்ளு நூல்களிற் பள்ளன் தன்னைத் தண்டனையினின்றும் விடுவித்துக்கொள்வதற்காக மூத்தபள்ளி மூலமாகச் செய்யும் முயற்சிகள் குறிப்பிடப்படுகின்றன. அத்தகைய சமயத்தில், பண்ணைக்காரனின் தயவே அவனுக்கும் தேவையாக இருப்பதுண்டு. இதனை, "கெஞ்சிப் பண்ணை நயினாரை மன்னிப்புக் கேட்டுப் பாரடி முக்கூடற்பள்ளி,"[81] "விக்கல் வாய்ப்பண்ணை யாண்டையைக் கேட்டென்னை மீட்டுக் கொள்ளடி முக்கூடற்பள்ளி"[82] என்னும் கூற்றுக்கள் உணர்த்துகின்றன. மேலும், தான் எதிர்காலத்திற் பண்ணை வேலைகளை ஒழுங்காகக் கவனித்துக் கொள்வதாகவும் மூத்தபள்ளி மூலமாகப் பண்ணைக்காரனுக்கு அவன் உறுதி கூறுவதுண்டு.[83]

அதேவேளை, மூத்தபள்ளியும் தன் கணவனை விடுவிப்பதற்காகப் பண்ணைக்காரனிடம் சென்று முறையிடுவதனையும் பள்ளு நூல்கள் குறிப்பிடுகின்றன. அவ்வாறு முறையிடும்போது, "எல்லாப் பிழையும் பொறுப்பது நாமல்லோ ஆண்டே-பள்ளன் இத்தனை நாளும் மரத்தில் கிடப்பானோ ஆண்டே"[84] எனப் பொதுவாக மன்னிப்புக்கோரி, விடுதலைவேண்டி நிற்பதுமுண்டு. ஆயினும், பெரும்பாலும் வேளாண்மை வேலைகளைக் கவனிப்பதற்குப் பள்ளர் தலைவனான குடும்பனைத் தவிரப் பொருத்தமானவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரில்லை என்பதைத் தெரிவித்தே விடுதலையைக் கோருவதனைக் காணமுடிகின்றது. "ஆடிக்கா லாவதி வெள்ளாமை நாளாச்சே ஆண்டே. பள்ளன் அல்லாம லேபயிர் ஆரிடுவார் பண்ணை ஆண்டே,"[85] "பள்ளனே இல்லாமல் பண்ணை பயிராமோ ஆண்டே,"[86] "பள்ள னேற்ற மொருவர்க்கு மில்லை வராதுகா ணாண்டே"[87] என அமைந்த மூத்தபள்ளியின் கூற்றுக்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.[88]

இவற்றிலிருந்து, பண்ணைக்காரரின் தயவின்றிப் பள்ளரின் வாழ்வில் எவ்வித விமோசனமும் ஏற்படுவதற்கிடமில்லை என்பது தெளிவாகின்றது. பண்ணைக்காரரின் தண்டனைகளையும் ஏற்று. அவர்களின் தயவினையும் கோரி நிற்பதாகவே பள்ளர் சமூகத்தவரின் வாழ்நிலை அமைந்திருந்தது.

மேலும், பண்ணைக்காரராற் பள்ளருக்கு விதிக்கப்பட்ட தண்டனை யினின்றும் அவர்களை விடுவிக்க வேண்டுமாயின், இன்னொருவர் குறிப்பிட்டவருக்குப் பிணையாக நின்றே அவ்வாறு செய்யலாம் என்ற வழமையும் இருந்தமையைப் பள்ளு நூல்கள் காட்டுகின்றன. திருமலைமுருகன் பள்ளிலே தண்டனை அனுபவிக்கும் பள்ளன் தன்னை விடுவிக்க முயற்சிக்குமாறு மூத்தபள்ளியிடம் கூறுமிடத்து, "பற்றிய தொழுமரக் காவலை நீபிணைப் பட்டுக்கொண்டு விடுவிப்பாய் பள்ளி"[89] எனக் குறிப்பிடப்படுகின்றது. இதைப்போன்று, செண்பகராமன் பள்ளிலும், "கொன்னைவாய்ப் பண்ணை யாண்டையு நீ பிணை கொண்டெனை மீண்டு கொள்ளடி பள்ளி"[90] எனப் பள்ளன் தன் மூத்த மனைவியிடம் கூறுவதைக் காணலாம். அதற்கேற்ப, மூத்தபள்ளியும் கணவனுக்காகத் தன்னைப் பிணையாகக் கொண்டு, கணவனைத் தண்டனையினின்றும் விடுவிக்க முயற்சிப்பதனையும் பள்ளு நூல்கள் குறிப்பிடுகின்றன. "நம்பிய குடும்பன்செய் பிழை பொறுப் பீரே நான்பிணை நான்நயினாரே"[91] எனவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆண்டே யவனினி யென்பிணை யேன்சாண்டே
ஆண்டே – இனி
அந்த வழிபோகான் வந்தது வந்துபோச் சாண்டே" [92]

என்றும் மூத்தப்பள்ளி கூறுவன நோக்கத்தக்கன. மேலும், திருவாரூர்ப்பள்ளில் மூத்தபள்ளி தான் பள்ளனுக்குப் பிணையாக நிற்பது மாத்திரமன்றி, பண்ணையில் வேளாண்மை வேலைகள் தொடர்பாக உதவுவதாகவும் பண்ணைக்காரனிடம் உறுதியளிப்பதைக் காணலாம்:

"பாயு மாடும் விதையுந் தந்து
பண்ணை சேரப் பயிர்செய்து தாரோம்
நாய டியேன் பிணையாக வன்மீக
நாதப் பள்ளனை விட்டிடு மாண்டே" [93]

இவை, குறிப்பிட்டவொரு பண்ணையடிமையை விடுவிப்பதற்கு, இன்னொரு பண்ணையடிமை பிணையாக நிற்கவேண்டும் என்ற வழமை இருந்தமையைக் காட்டுகின்றன.

## (இ) பண்ணைக்காரர் மனப்பாங்கும் பண்ணையடிமைகளின் சார்புநிலையும்

பண்ணைக்காரர் தமது பண்ணைகளில் உழைக்கும் அடிமை மக்களைத் தாழ்வாகவே கருதி வந்துள்ளனர். இதனைத் திருமலைமுருகன் பள்ளு தெளிவுபடுத்துகின்றது. பண்ணைக்காரன் இளையபள்ளியைக் கண்டிக்கும்போது, தாழ்ந்த பள்ளர் சாதியினருக்கு அடி கொடுத்தாலன்றித் திருத்தவியலாது எனக் கூறுவதை அப்பள்ளு குறிப்பிடுகின்றது.[94] மேலும், "அச்சமே கீழ்ச்சாதிக் காசாரம் என்பர்கள் ஆருமே–நானும் அவ்வார்த்தை தன்னைப் புதுப்பிக்கிறேனின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருமே[95] எனப் பண்ணைக்காரன் தனக்குள் எண்ணுவதாகக் கூறப்படுகின்றது. இவற்றின் வாயிலாக, பள்ளர் சமூகம் எப்போதும் தமக்கு அடங்கிய அடிமைகளாகவே வாழவேண்டும் என்ற பண்ணைக்காரரின் விருப்பம் புலனாகின்றது. மேலும், அவர்கள் எவ்வகையிலேனும் தமக்கு எதிராகத் தம் கீழ் உழைக்கும் பள்ளர் சமூகத்தினர் கிளர்ந்தெழுவதை அனுமதிப்பதில்லை. குறிப்பாக, பள்ளன் தனக்கு எதிராகச் செயற்பட முயற்சிக்கின்றான் என உணர்ந்த பண்ணைக்காரன், காலத்தின்மீது பழியைச் சுமத்துவதைத் திருமலைமுருகன் பள்ளு குறிப்பிடுகின்றது. நமக்கிரண்டு செயுங் குடும்பன் முளைத்த கலிகாலம்[96] என அவன் கூறுவதன் வாயிலாக இது புலப்படுத்தப்படுகின்றது. பண்ணைக்காரர் பண்ணையில் உழைக்கும் மக்களைவிடத் தாம் பெரியவர் எனக் காட்டிக்கொள்ள முற்படுவதும் உண்டு. இதனை, "பண்ணைக்குரிய வுன் குடும்பனுக்கும் பெரியவ னானே[97] என இளையபள்ளிக்குக் கூறுவதன் வாயிலாக உணரலாம்.

பண்ணைக்காரர் எப்பொழுதும் தமது பண்ணைவேலைகள் தொடர்பாகவே, பள்ளர் சமூகத்தவரின் பிரச்சினைகளில் ஈடுபடுவர். இல்லையெனில், அவற்றினின்றும் தப்பித்துக் கொள்ளவே முயல்வர். வேளாண்மை வேலைகள் தொடங்கும் சமயத்திற் பள்ளன் தவறு செய்யும்போது, பண்ணைக்காரன் மூத்தபள்ளியின் குற்றச்சாட்டுக்களைச் செவிமடுத்து, பள்ளன்மீது நடவடிக்கை எடுத்துத் தண்டனை வழங்குவன். ஆனால், வேளாண்மை வேலைகள் முடிவடைந்து, அறுவடையும் முடிவடைந்து, நெற்பங்கீடும் நடைபெற்ற பின்னர், மூத்தபள்ளியின் முறையீட்டை அவன் செவிமடுத்து, பள்ளன் மீது நடவடிக்கை எதுவும் எடுப்பதில்லை. ஏனெனில், பள்ளனுக்கும் மூத்தபள்ளிக்குமிடையே காணப்படும் பிணக்கு, அப்போதையநிலையிற் பண்ணைவேலைகள் எதனையும் பாதிக்கமாட்டாது. எனவே, இந்தநிலையில், அவர்களது பிரச்சினைக்கும், தனக்கும் தொடர்பு எதுவும் இல்லாததுபோன்று பண்ணைக்காரன் நடந்து கொள்வான். மேலும், நெற்பங்கீட்டின்போது, நெல்லளந்து அளிக்கப்படவேண்டிய அனைத்துப் பிரமுகர்களுக்கும், நிறுவனங்களுக்கும், பிற சமூகசேவைகளுக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர்களுக்கும் சரியாகவே கொடுக்கப்பட்டிருப்பது பண்ணைக்காரனுக்கு மனநிறைவை அளிக்கும். ஆகவே, தனது பண்ணையடிமை ஒருத்திக்குக் குறைவாகவும், தரமற்றதாகவும் நெல்லளந்து கொடுக்கப்பட்டிருப்பது குறித்துத் தான் தலையிட வேண்டிய தேவையில்லையென்று பண்ணைக்காரன் கருதி, நெற்பங்கீடு தொடர்பான மூத்தபள்ளியின் முறையீட்டுக்குச் செவிகொடுப்பதில்லை. இதன்மூலம், பண்ணைக்காரரின் சுயநலப்போக்கு தெளிவாகின்றது.

பள்ளன் - மூத்தபள்ளி தொடர்பான பிணக்கு, பின்னர் பள்ளியர் ஏசலாக மாறி உச்சக்கட்டத்தை அடையும்போது, சிலவேளைகளிற் பண்ணைக்காரன் முன்வந்து அவர்களைச் சமாதானம் செய்துவைப்பதுமுண்டு. அதற்குக் காரணம், பள்ளிடையே பிரச்சினை முற்றி, அதனாற் பள்ளனின் குடும்பம் சிதையவேண்டியேற்படின், பண்ணைவேலைகள் பாதிக்கப்படலாம் என்பதேயாகும். அதிலும், பள்ளன் மூத்தபள்ளியுடன் பிணக்குற்று இளையபள்ளியுடனேயே வாழ்ந்துவருவானாயின், பண்ணை வேலைகள் பாதிக்கப்படும் என்பதைப் பண்ணைக்காரன் அனுபவபூர்வமாக உணர்ந்தவன். எனவே, பள்ளனை, அவனது இரு மனைவியரோடும் ஒற்றுமையாக வாழவைப்பதன் மூலமே, அவனைப் பண்ணைவேலைகளில் ஈடுபடச்செய்யலாம் என்பது பண்ணைக்காரனின் உள்ளக்கிடக்கை எனக் கூறவேண்டும். ஆகவே, அவர்களை ஒற்றுமைப்படுத்தி, அடுத்தபோக நெல்விளைச்சலில் ஈடுபடுத்துவதற்குப் பண்ணைக்காரன் இவ்வாறு முயற்சி செய்யவேண்டியேற்படும். மேலும், பள்ளரின் குடும்பம் கூடிவாழ்ந்தால், அவர்களது பிரச்சினை குறையவும், மூவரும் இணைந்து பண்ணைவேலைகளில் ஈடுபடவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. பண்ணைக்காரன் அவர்களை ஒற்றுமைப்படுத்துவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

எவ்வாறெனினும், பண்ணைக்காரனைச் சார்ந்தே பண்ணையடிமைகளான பள்ளர் சமூகத்தவர் வாழவேண்டியிருந்தது. இதற்கு முதன்மையான காரணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார முறையில் அவர்கள் பண்ணைக்காரரிலேயே தங்கியிருந்தமை ஆகும். "ஆயிரம் பிழை செய்யினு மெங்களை யாண்டையே யன்றி யாரே பொறுப்பார்"[98] என்ற கூற்று, பண்ணைக்காரர் மீதான பண்ணையடிமைகளின் சார்புநிலையைப் புலப்படுத்துகின்றது. பண்ணைக்காரரும் பண்ணையின் நலனுக்குச் சாதகமாக நடந்து கொள்பவருக்கே தமது ஆதரவை வழங்குவது வழக்கமாகும். பள்ளு நூல்களில் மூத்தபள்ளியே அதற்குச் சாதகமாக எப்போதும் நடந்துகொள்வதாகக் காட்டப்படுகின்றது. அதனாற் பண்ணைக்காரன் நெற்பங்கீடு தவிர்ந்த பிற விடயங்களில் அவளுக்குச் சார்பாக நடந்துகொள்வதைக் காணலாம்.

## (ஈ) பண்ணைக்காரரின் முறைகேடுகள்

பண்ணைக்காரரிடத்து அதிகாரமும், செல்வாக்கும் இருப்பதனால், அவற்றை அடிப்படையாகக் கொண்டு பள்ளரைக் கொடுமைப்படுத்திக் கையூட்டு முதலியவை பெறும் பழக்கமும் அவர்களிடம் காணப்பட்டது. இதனைப் பள்ளு நூல்கள் உணர்த்துகின்றன. திருமலைமுருகன்பள்ளில், பள்ளன் வாயிலாகப் பண்ணைக்காரன் பள்ளர் சமூகத்தை வருத்திக் கையூட்டுப் பெறுவது, தனக்குக் கப்பம் கட்டச் செய்வது முதலான முறைகேடுகள் குறிப்பிடப்படுகின்றன.[99] மேலும், தண்டனை அனுபவிக்கும் பள்ளன், பண்ணைக்காரனிடத்துக் கூறித் தன்னை விடுவிக்குமாறு வேண்டுமிடத்தும் பண்ணைக்காரனின் முறைகேடுகள் புலப்படுத்தப்படுகின்றன. சான்றாக "பணங் கண்டாற் சொன்ன சொட்கடவான் அந்தப் பண்ணையானுக்குப் பத்தயிஞ்சு சொல்லிக் குணங்கொண்டே என்னை ரட்சி கண்டாய்"[100] எனக் கையூட்டுப் பெறும் அவனின் இயல்பு புலப்படுத்தப் படுகின்றது. மூத்தபள்ளி, தான் பண்ணைக் காரனுக்குக் கையூட்டுக் கொடுத்தும், அவனுக்கு விருப்பமானவகையில் முகத்துதி செய்தும் பள்ளனைத் தண்டனையினின்றும் விடுவிக்க முயல்வதாகக் கூறுவதும் இதனை உறுதிப்படுத்துகின்றது. இதனைச் செண்பகராமன் பள்ளு பின்வருமாறு தெரிவிக்கின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னத்தை விற்றும்பத் தஞ்சைக் கைக்கூலிக்

கீந்தும் வேண்டிய இச்சகஞ் செய்தும்

கொன்னை வாய்ப்பந்திச் சொல்லாண்டை யைச்சென்று

கும்பிட் டுமவர் காலைப்பிடித்தும்

மன்னிப் பாயுனை மீண்டுன் சிறையையும்

மாற்றுவேன்நீ மலங்காதே பள்ளா." [101]

மேலும், மூத்தபள்ளி பள்ளனை விடுவிப்பதற்காகப் பண்ணைக்காரனிடம் செல்லும்போது, அவனின் பல்லுக்கிதமான நெல்லுப் பொரி, கிழங்குவகைகள், அவல் முதலானவற்றையும் கொண்டுசெல்வதாகச் செண்பகராமன் பள்ளு குறிப்பிடுகின்றது.[102] திருவாரூர்ப்பள்ளில், பள்ளனை விடுவிக்கவேண்டி மாடுகள், விதைவகை ஆகியவற்றைக் கொடுப்பதாக மூத்தபள்ளி பண்ணைக்காரனிடம் கூறுவதும் இங்கு கருதத்தக்கது. [103]

இவை தவிர, பண்ணைக்காரரைப் பள்ளர் சமூகத்தவர் சென்று சந்திக்கும்போது, கையுறையளித்து வணங்கும் வழக்கமும் இருந்துள்ளது. சான்றாக, திருமலை முருகன்பள்ளிலும், குருகூர்ப்பள்ளிலும் பள்ளர் பண்ணைக்காரனை வணங்கும்போது, கோழியும் அவலும் எடுத்துச்சென்று வணங்குவதாகக் குறிப்பிடப்படுவதைக் கூறலாம்.[104] இவற்றின் மூலமாக, பண்ணைக்காரர் பள்ளரை வருத்திக் கையூட்டுப் பெறுவது மாத்திரமன்றி, அவர்கள் அளிக்கும் கையுறைப் பொருட்களையும் பெற்று அனுபவிக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர் என்பது தெளிவாகின்றது.

பண்ணைக்காரரின் இத்தகைய முறைகேடுகள் ஒருபுறமிருக்க, அவர்கள் தத்தம் பண்ணைகளில் அடிமைகளாக உழைத்த பெண்களிடம் நடந்து கொள்ளும் தவறான நடத்தைகள் பற்றியும் பள்ளு நூல்கள் உணர்த்துகின்றன. சான்றாகப் பின்வருவனவற்றை நோக்கலாம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மூத்த பள்ளி முகம் பார்த்து
வார்த்தை சொல்வா ராம்–பெரு
மூச்சுக் கொண் டிளைய பள்ளி
பேச்சுக் கேட்பா ராம்
சாத்தி மகள் காத்தி தன்னைப்
பேத்தி என்பா ராம்–மெள்ளச்
சன்னையாய்க் களத்திலே வா
பின்னை என்பா ராம்." 105

"நாஞ்சிநாட்டுப் பள்ளியர்க்கு
வாஞ்சைசொல் வாராம் – பாண்டி
நாட்டுப்பள்ளி யோடே செய்தி
கேட்டுப்பார்ப் பாராம்
தேய்ஞ்சதடிக் கம்பின்மேலே
சாய்ஞ்சுநிற் பாராம் – ஒரு
சின்னப்பை எடுத்துப் பாக்குத்
தின்னச்செய் வாராம்
பூஞ்சருகு வெற்றிலைக்காம்
பாய்ஞ்செறி வாராம் – அந்தப்
பொட்டைக்கண்ணைக் கொண்டுகுச்சை
எட்டிப்பார்ப் பாராம்
காஞ்சமனக் கல்லில்வந்து
பாய்ஞ்சஅம்பு போல்– பள்ளிக்
கண்ணுக்கஞ்சு வாராங்கோவைப்
பண்ணைக்காரன் னார்" 106

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணைக்காரரின் இத்தகைய இயல்புகளுக்கு, அவர்களிடம் காணப்பட்ட அதிகாரமும், செல்வாக்குமே துணையாக அமைந்தன. பண்ணைக்காரரின் இத்தகைய மோகவுணர்வைப் பள்ளியர் பரிகாசம் செய்வதும் உண்டு. "இளையவள் சொல்லல்லாற் கிழட்டுப் பள்ளி சொல் பண்ணையார்க் காமோ?"[107] "சின்னப் பள்ளியென்றால் நயினார்க்குப் பசஷ்மல்லோடி"[108] என மூத்தபள்ளியின் வாயிலாக, பண்ணைக்காரரின் போக்குப் பரிகசிக்கப்படுகின்றது. மேலும், பொய்கைப்பள்ளில், "பள்ளிமாரி லெவளுமக்கு வேணும்"[109] எனப் பள்ளியரால் பரிகசிக்கப்படுவதனையும் காணமுடிகின்றது. பெண்கள் தொடர்பான பண்ணைக்காரரின் இழிந்த நடத்தைகள், அவர்களின் கீழ் உழைக்கும் பள்ளர் சமூகத்தின் மத்தியில் அவர்களது மதிப்பினைக் குறைத்துவிடுவதைப் பள்ளு நூல்கள் கட்டுகின்றன.

பள்ளு நூல்கள் காட்டும் இத்தகைய விடயங்கள் வாயிலாக, பண்ணைக்காரர் தமக்கிருந்த அதிகாரத்தை எந்த அளவுக்குத் துர்ப்பிரயோகம் செய்தனர் என்பது புலனாகின்றது. பள்ளர் பொருளாதார முறையில் தம்மைச் சார்ந்திருக்க வேண்டியநிலையும், அவர்களது தாழ்ந்த சமூக அந்தஸ்தும் பண்ணைக்காரர் அவர்களை ஏமாற்றிக் கொடுமைப்படுத்த வழிவகுத்தன. அதேவேளை, பண்ணைக்காரரிடத்துக் காணப்பட்ட பொருளாசையும், அவ்வாறு அவர்களைச் செயற்பட வைத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. பண்ணைக்காரர் பண்ணைகளை மேற்பார்வை செய்பவர்களாக இருந்தமையால், தம்கீழ் உழைக்கும் பள்ளரைவிடவும் பொருளாதார வசதி கொண்டோராக விளங்கினர். ஆயினும், ஒரு நிலப்பிரபுவுக்குரிய பொருளாதார மேம்பாடு அவர்களுக்கு இருக்கவில்லை. பண்ணைகளை மேற்பார்வை செய்யும் அதிகாரமே இருந்தமையால், தமது பொருளாதாரநிலையை மேம்படுத்திக் கொள்வதற்காகப் பள்ளரிடமிருந்து கையூட்டு முதலானவற்றைப் பெற்றுவந்தனர். அதேவேளை, தமது மேலாண்மையைப் பயன்படுத்தி, வேளாண்மை உழைப்பில் ஈடுபட்ட பெண்களையும் தமது மோகவுணர்வுக்குப் பயன்படுத்த முயன்றுள்ளனர் என்பதையும் பள்ளு நூல்கள் புலப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (உ) பண்ணையடிமைகளின் எதிர்ப்புணர்வுகள்

பண்ணைகளில் உழைக்கும் பள்ளர் சமூகத்தவர் பண்ணைக்காரரின் ஆதரவிலேயே வாழவேண்டியிருப்பினும், சிலவேளைகளில் அவர்களுக்கு எதிரான தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்துவதுமுண்டு. பள்ளரின் இத்தகைய எதிர்ப் புணர்வைத் திருமலைமுருகன் பள்ளு தெளிவாகக் காட்டுகின்றது. அத்தகைய பாடற்பகுதி பின்வருமாறு :

" .............................. நீரும்
பார்த்தாற் பசுப்போல் இருக்கிறீர் கைக்கூலிப்
பாவையே
பொன்பணங் கள்குடிப் பள்ளச்ச னங்கள்கை
யாடுமோ – கேட்ட
போதுமக் கேகடன் கொண்டுகப் பங்கட்டக்
கூடுமோ.[110]

இதன்மூலம், ஏழை உழைப்பாளரான பண்ணையடிமைகளை வருத்திப் பண்ணைக்காரர் கையூட்டுப் பெறுவது, தமக்குக் கப்பம் கட்டச்செய்வது முதலான முறைகேடுகள் பள்ளனாற் கண்டிக்கப்படுகின்றன. இப்பள்ளில், பண்ணைக்காரனின் இத்தகைய சமுதாய முறைகேடுகள் கண்டிக்கப்படுவது மாத்திரமன்றி, அவன் பள்ளனால் நேரடியாக எதிர்க்கவும்படுகின்றான்.[111]

இளையபள்ளியும் பண்ணைக்காரனை எதிர்ப்பதற்குப் பின்நிற்காதவளாக விளங்குவதைக் காணலாம். ஆயினும், அவளது எதிர்ப்புணர்வு மறைமுகமாகவே அமைவதுண்டு. நேரடியாகப் பண்ணைக்காரனை எதிர்க்கும் சக்தியற்றவளாக அவள் விளங்குகின்றாள். அதற்கு முதன்மையான காரணம், அவள் பண்ணைக்குச் சொந்தமான அவ்வட்டாரத்தைச் சாராதவளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதேயாகும். பள்ளன் தண்டனை அனுபவிக்கும்போதே, பெரும்பாலும் இளையபள்ளி பண்ணைக்காரனை விமர்சிப்பதைக் காணலாம். சான்றாக, திருமலை முருகன் பள்ளில், பண்ணைக்காரனைக் காரியக்காரன் என்றும், திருடன், வம்புக்காரன், கெண்டைமீனுக்காகக் குளத்தை வெட்டி வடிய விடுபவன், கையூட்டுப் பெறும் மோசக்காரன் எனவும் இளையபள்ளி விமரிசிப்பதைக் கூறலாம்.[112]

பொதுவாக, பண்ணைக்காரனுக்குச் சார்பாக நடந்துகொள்ளும் மூத்தபள்ளியும் சிலவேளைகளில் அவனைக் கண்டிக்க நேரிடுகின்றது. பள்ளன் பண்ணைவேலைகளைக் கவனிக்காமலும், தன்மீது அக்கறை செலுத்தாமலும் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டிருக்கும்போது, அவனைக் கண்டிக்காமலும், தண்டிக்காமலும் இருப்பதற்காகப் பண்ணைக்காரனை நொந்துகொள்வள், "இவனையோ அடக்கவும் மாட்டீர் - நம்பண்ணைக் காரியம் பாரீர் - அவன் செய்யும் வீரியந் தீரீர்"[113] என மூத்தபள்ளி கூறுவதை நோக்கலாம். மேலும், பள்ளன் நெல்லளக்கும்போது தனக்குச் செய்யும் மோசடியைப் பண்ணைக்காரன் கண்டுகொள்ளாமல் இருப்பது குறித்துத் தன் வேதனையை அவள் எடுத்துக் கூறுவதுண்டு. "தொள்ளைக்காது பண்ணையாரென் சொற்கேட்டா ரில்லைச் கரிமுகப் பண்ணையர்க் கினஞ் சொன்னா லடிப்பார் தொல்லை"[114] எனவும்,

"முட்டிக்காற் பண்ணையாண்டே
நடுக்கேளாரோ - ஆந்தை
மூக்குமூஞ்சிப் பண்ணையாண்டே
நடுக் கேளாரோ
மட்டிவாய்ப் பண்ணையாண்டே
நடுக்கேளாரோ - கரு
மந்திமுகப் பண்ணையாண்டே
நடுக்கேளாரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டித்தலைப் பண்ணையாண்டே
நடுக்கேளாரோ – தண்ணீர்ச்
' சால்வயிற்றுப் பண்ணையாண்டே
நடுக்கேளாரோ" [115]

என்றும் கூறுவன இது தொடர்பாக நோக்கத்தக்கன. பண்ணைக்காரன் தன் பொறுப்புக்களைச் சரியாக நிறைவேற்றுவதில்லை என்பதே மூத்தபள்ளியின் கண்டனங்களின் மூலம் தொனிக்கின்றது.

பண்ணையில் நடைபெறும் வேளாண்மை வேலைகளைக் கண்காணிக்கவேண்டிய பண்ணைக்காரன், சிலவேளைகளில் அதனின்றும் தவறுவதுண்டு. அச்சமயங்களிற் பள்ளரால் அவன் கண்டிக்கப்படவும் நேரிடுகின்றது. குருகூர்ப்பள்ளில் இதுபற்றிக் கூறப்படுகின்றது. மழைபெய்து ஆற்றுவெள்ளம் எங்கும் பரந்துவிட்டதாகவும், அணைகடந்து வெள்ளம் பாய்வதாகவும் கூறி, "காரியம் பாராம லூரி லிருப்பதென்ன பண்ணை யாண்டவரே" என்றும், "நேரங் கடந்துச்சி நேரங் கடந்ததே பண்ணையாண்டவரே யின்னம் நீங்காத நித்திரை யேன்காணும் கொள்கிறீர் பண்ணையாண்டவரே" எனவும் பண்ணைக்காரனின் முயற்சியின்மை குறைகூறப்படுகின்றது. [116]

இதுவரை நோக்கியவற்றின் அடிப்படையிற் கவனிக்கும்போது, பண்ணைக்கார் பண்ணைகளின் மேற்பார்வையாளர் என்ற போர்வையிலே, தமது அதிகாரம், செல்வாக்கு ஆகியவற்றைப் பயன்படுத்தி, தத்தம் பண்ணைகளில் உழைக்கும் பள்ளர் சமூகத்தவரைக் கட்டுப்படுத்த முனைவதை ஒருபுறத்திற் காணமுடிகின்றது. மறுபுறத்தில், உழைக்கும் ஏழ்மை நிரம்பிய பண்ணையடிமைகளான பள்ளர் மேற்போக்காகப் பண்ணைக்காரர்மீது மரியாதையும், உள்ளூர எதிர்ப்புணர்வும் கொண்டவர்களாக விளங்குவதை அவதானிக்க முடிகின்றது. மேலும், அச்சமூகத்தவர் பண்ணையடிமைகளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தமையால், பண்ணைக்காரரைச் சார்ந்தும், அவர்களது ஆதரவிலுமே வாழவேண்டிய நிலை காணப்பட்டது. அவர்களது வாழ்வின் அனைத்து அம்சங்களும் பண்ணைக்காரருடன் தொடர்புடையவையாகவே அமைந்திருந்தமையால், பண்ணைக்காரர்மீதான அம்மக்களின் எதிர்ப்புணர்வுகளும் பலம் மிக்கவையாக அமைய வாய்ப்பு ஏற்படவில்லை.

## சான்றாதாரம்

1. **மு.கூ.ப.** செய். 52.

2. **தி.மு.ப.** செய். 69.

3. **செ.கோ.ப.** செய். 143.

4. இதே கருத்தை கோ.கேசவனும் கொண்டுள்ளார். காண்க: கேசவன், கோ., **மு.கு.நூ.** பக். 84-86.

5. **க.அ.ப.** செய். 68.

6. **தி.மு.ப.** செய். 70. பிற பள்ளு நூல்களிற் பண்ணைக்காரனின் தோற்றம் பற்றிய வருணனைக்குக் காண்க: **மு.கூ.ப.** செய்.53; **க.ம.ப.** செய். 51; **ப.வி.ப.** செய். 80; **கு.ப.** செய். 33; **செ.கோ.ப.** செய்.144, 145 ; தி.ப. செய். 32; **க.அ.ப.** செய். 69; **பொ.ப.** செய். 67; **செ.ரா.ப.** செய். 59; **த.க.ப.** செய். 107.

7. **கு.ப.** செய். 34. பிற பள்ளு நூல்களிற் பள்ளர் பண்ணைக்காரனைப் பரிகசித்து வணங்குவது பற்றிய வருணனைக்குக் காண்க: தி.மு.ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய். 71; **கமப.** செய். 53; **ப.விப.** செய். 83; **த.கப.** செய். 109; **திப.** செய். 35; **க.அப.** செய். 70.

8. கேசவன், கோ., **மு.கு.நூ.** பக். 83, 84

9. மார்க்ஸ், அ. (1983) **சிற்றிலக்கியங்கள் சில குறிப்புகள்,** குடந்தை, சிலிக்குயில் வெளியீடு. பக். 44, 45.

10. பண்ணைக்காரனை இவ்வாறு பரிகசிப்பது, அக்காலத்து ஆட்சியாளருக்கு எதிரான சமுதாயக் கருத்தைக் காட்டுவதாக ஜி.குளத்தூரான் கருதுவர். காண்க: Kulathuran, G.(1980) **Folk influence in Tamil Literature with special reference to Pallu, Kuravanchi and Nondi Natakam,** Unpublished Ph.D. thesis submitted to the University of Kerala. p. 254.

11. **மு.கூ.ப.** செய். 65.

12. **கமப.** செய். 68.

13. **ப.விப.** செய். 84.

14. **மு.கூ.ப.** செய். 113.

15. **திப.** செய். 53.

16. **கமப.** செய். 86.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. **பவிப.** செய். 107.

18. **த.கப.** செய். 137.

19. **கமப.** செய். 95.

20. **தி.முப.** செய். 133.

21. **மேலது**. செய். 137.

22. **திப.** செய். 58.

23. **ப.விப.** செய். 114.

24. **த.கப.** செய். 147.

25. **திப.** செய். 65.

26. **மு.கூ.ப.** செய். 139.

27. இது பற்றிய விபரங்களுக்குக் காண்க: **மு.கூ.ப.** செய். 142–148; **க.அப.** செய். 115–120; **செ.கோப.** செய். 836–839; **பொப.** செய். 194–204.

28. **மு.கூ.ப.** செய். 56.

29. **மேலது** செய். 57.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. **மேலது.** செய். 85.

31. **மேலது.** செய். 88.

32. **மேலது.** அதே செய்யுள்.

33. **மேலது.** செய். 90.

34. **திப.** செய். 67.

35. **குப.** செய். 47.

36. **செ.கோப.** செய். 359.

37. **மேலது.** செய். 360.

38. **செ.ராப.** செய். 63.

39. **மேலது.** செய். 64.

40. **பொப.** செய். 74

41. **மேலது.** செய். 114.

42. **மேலது.** செய். 115.

43. **கமப.** செய். 73.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. **மேலது**. செய். 74.

45. **மேலது.** செய். 75.

46. **மேலது.** செய். 76.

47. **ப.விய** செய். 94.

48. **மேலது.** செய். 97.

49. **த.க.ப.** செய். 111.

50. **மு.கூ.ப.** செய். 86.

51. **மேலது.** செய். 89.

52. **செ.ரா.ப.** செய். 66.

53. **மேலது**. செய். 67.

54. **மேலது.** செய். 68. பள்ளன் தனது தேவைகளுக்காகப் பண்ணைக்குச் சொந்தமானவற்றை விற்பதைத் திருவாரூர்ப்பள்ளு (செய்.42), குருகூர்ப்பள்ளு (செய்.41,42) ஆகியவையும் குறிப்பிடுகின்றன.

55. **மு.கூ.ப.** செய். 85.

56. **மேலது.** செய். 87.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. **பொ.ப.** செய். 113.

58. **செ.ரா.ப.** செய். 62.

59. **கு.ப.** செய். 48.

60. **மு.கூ.ப.** செய். 61.

61. **மேலது.** செய். 81.

62. **தி.மு.ப.** செய். 87.

63. **மேலது.** செய். 102.

64. **ப.வி.ப.** செய். 96.

65. காண்க: சிவசுப்பிரமணியன், ஆ, (1984) **அடிமை முறையும் தமிழகமும்,** சென்னை, நியூ செஞ்சரி புக் ஹவுஸ். பக். 41, 42. சோ.மு. சுப்பையாவின் மேற்கோள் ப.41.

66. **மு.கூ.ப.** செய். 93.

67. **தி.மு.ப.** செய். 105.

68. **கு.ப.** செய். 50.

69. **தி.ப.** செய். 45.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. தகப. செய். 126.

71. கமப. செய். 82.

72. பவிப. செய். 101.

73. செ.கோப. செய். 541.

74. செராப. செய். 106.

75. திமுப. செய். 125, 2 ஆம் சரணம்.

76. குப. செய். 50.

77. முகூப. செய். 86.

78. பொப. செய். 118.

79. பவிப. செய். 97.

80. செராப. செய். 100.

81. முகூப. செய். 99.

82. மேலது. செய். 101.

83. திப. செய். 46.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. **செ.ராப.** செய். 115.

85. **மு.கூ.ப.** செய். 105.

86. **செ.ராப.** செய். 116.

87. **பொப.** செய். 138.

88. ஈழத்துப் பள்ளு நூல்களிலும் மூத்தபள்ளி தன் கணவனை விடுவிப்பதற்காகச் செய்யும் முயற்சிகள் குறிப்பிடப் படுகின்றன. காண்க: **க.மப.** செய். 81, 82; **ப.விப.** செய். 101; **தகப.** செய். 126.

89. **திமுப.** செய். 122.

90. **செ.ராப.** செய். 111.

91. **தி.முப.** செய். 125, சரணம் 6.

92. **செ.ராப.** செய். 116.

93. **திப.** செய். 47.

94. **தி.முப.** செய். 90.

95. **மேலது** செய். 103.

96. **மேலது.** செய். 75.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. **பொப.** செய். 80.

98. **திப.** செய். 47.

99. **தி.முப.** செய். 106.

100. **மேலது.** செய். 123.

101. **செ.ராப.** செய். 112.

102. **மேலது.** செய். 114.

103. திப. செய். 47.

104. **தி.முப.** செய். 71; **குப.** செய். 27.

105. மு.கூப. செய். 54.

106. **செ.ராப.** செய். 60.

107. **மு.கூப.** செய். 100.

108. **க.அப.** பள்ளிகள் ஏசல் வரி : 15–16.

109. **பொப.** செய். 162.

110. **தி.முப.** செய். 106.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

111. **மேலது.** செய். 107.

112. **மேலது.** செய். 112.

113. **மேலது.** செய். 80.

114. **பொ.ப.** செய். 207.

115. **மு.கூ.ப.** செய். 150.

116. **கு.ப.** செய். 31.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-11-17
LIBRARY.

# ஐந்தாம் இயல்

# பள்ளு இலக்கியத்திற் பள்ளரின் குடும்ப உறவுகள்

## (அ) பள்ளு இலக்கியம் காட்டும் குடும்ப அமைப்பு

பள்ளு இலக்கியத்திற் குடும்ப உறவுகள் பற்றிய விடயங்கள் முதன்மை பெற்றுள்ளன. இவற்றின் அடிப்படையிலேயே பிற விடயங்களையும் நூலாசிரியர்கள் இணைத்துள்ளனர். இத்தகைய குடும்ப உறவுகள் பற்றிய கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக ஒரு பள்ளர் தலைவனின் குடும்பத்தை மாதிரியாகக் கொண்டுள்ளனர். அதன்மூலம், குடும்ப உறவுகளில் ஏற்படும் சிக்கல்களையும், முரண்பாடுகளையும், குடும்ப ஒற்றுமைக்கான கருத்துக் களையும் அவர்கள் புலப்படுத்துகின்றனர்.

குடும்பம் என்பது, கணவனையும், மனைவியையும் அடிப்படை உறுப்பினராகக் கொண்டதாகவும், அவர்களது வழித்தோன்றல்களையும், நெருங்கிய உறவினரையும் உள்ளடக்கியதாகவும் காணப்படும் ஒரு சிறு அமைப்பாக விளங்குகின்றது.

குடும்பம் என்பதற்குச் சம்சாரம், உறவினர், குலம், மனைவி முதலான பொருள்கள் குறிப்பிடப்படுகின்றன.[1] குடும்பம் காலத்துக்குக் காலம் முன்னேற்றகரமான அமைப்பை நோக்கி வளர்ச்சிபெற்றுவந்துள்ளமையைக் காணலாம். இதனை, "குடும்பம் என்பது இயக்கமுள்ள சித்தாந்தத்தையே குறிக்கின்றது. அது என்றைக்கும் இயங்காதிருப்பதில்லை; சமுதாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு முன்னேற, அதுவும் கீழான வடிவத்திலிருந்து மேலான வடிவத்துக்கு முன்னேறிச் செல்கிறது[2] என்ற கூற்று உறுதிப்படுத்துகின்றது.

குடும்பங்களை மூலக்குடும்பம் (Nuclear Family), இணைவுக் குடும்பம் (Compound Family), கூட்டுக் குடும்பம் (Joint Family), விரிவுற்ற குடும்பம் (Extended Family) எனப் பிரிப்பர். இவற்றுள், மூலக்குடும்பம் என்பது, கணவனையும், மனைவியையும், அவர்களது சமூக அங்கீகாரம் பெற்ற பிள்ளைகளையும் உள்ளடக்கியதாக விளங்கும். இதனைத் தனிக்குடும்பம் எனவும் குறிப்பிடலாம். இணைவுக் குடும்பம், ஒரு கணவனையும், அவனது ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரையும், அவர்களது பிள்ளைகளையும் கொண்டதாக அமையும். கூட்டுக் குடும்பத்தில் கணவன், மனைவி, அவர்களது மணமான ஆண்பிள்ளைகள், அவர்களது மனைவியர், பிள்ளைகள் ஆகியோர் அடங்குவர். குடும்ப உறுப்பினர் அனைவரும் ஒரே இல்லத்தில் வாழாமல், நெருக்கமாக வாழ்ந்து, பொது நடவடிக்கைகளில் அவர்கள் அனைவரும் ஒத்துழைப்பதை விரிவுற்ற குடும்பம் குறிக்கும்.[3]

பள்ளு இலக்கியம் காட்டும் பள்ளர் தலைவனின் குடும்ப அமைப்பு இணைவுக் குடும்பத்துக்குப் பொருத்தமான வகையில் அமைந்துள்ளமையைக் காணலாம். பள்ளனும், அவனது இரு மனைவியரும் இணைந்ததாகவே இவ்விலக்கியம் காட்டும் குடும்ப அமைப்பு காணப்படுகின்றது. ஆயினும், அவனது இரு மனைவியரும் ஒரே இல்லத்தில் வாழாமல், வெவ்வேறு இல்லங்களிலேயே வாழ்வதை அவதானிக்கலாம். இதுவே, இணைவுக் குடும்பத்துக்கும், பள்ளர் தலைவனின் குடும்ப அமைப்புக்குமுள்ள சிறு வேறுபாடாகக் காணப்படுகின்றது.

மேலும், குடும்ப அமைப்புக்கு இன்றியமையாத அம்சமாகத் திருமணமுறை விளங்குகின்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற பொதுவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணமுறையோடு, பல்கணவ மணம் (Polyandry), பன்மனைவியர் மணம் (Polygamy) ஆகிய திருமணமுறைகளும் நிலவி வந்துள்ளன. இவற்றுள், பன்மனைவியர் மணம் பொதுவாகப் பொருள்வளம் மிக்கவர்களுக்கே வசதியாகவுள்ள ஒரு மணமுறையாக விளங்குகின்றது. இதனைப்பற்றி பிரடெரிக் எங்கெல்ஸ் குறிப்பிடுமிடத்து, "பலதாரமணம் என்பது பணக்காரர்களுக்கும் பிரபுக்களுக்கும் உரிய சலுகையுரிமையாகும்"[4] எனக் கூறுகின்றார். இந்தியாவிலும் பொருள்வளம் படைத்தவர்கள் தமது சமுதாய அந்தஸ்தையும், பெருமையையும் பறைசாற்றும் வகையிற் பன்மனைவியர் மணத்தையும், பொதுமகளிர் உறவையும் கொண்டிருந்தனர். மன்னர்கள், நிலப்பிரபுக்கள் மாத்திரமன்றி, வசதி படைத்த பொதுமக்களும் பல பெண்களை மணந்துகொண்டதுண்டு. பன்மனைவியர் மணத்துக்கு எதிரான கட்டுப்பாடு அக்காலத்தில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஏ.எல்.பசாமின் பின்வரும் கருத்தும் இதனை உறுதிப் படுத்துகின்றது:

> "உலகின் ஏனைப் பகுதிகள் எங்கணும் வாழ்ந்த சாதாரண மக்களைப் போன்றே இந்தியாவிலும் வாழ்ந்த சாதாரண மக்களும் பொதுவாக ஒரு மனைவியை மணக்கும் வழக்கமுடையவராயிருந்தனர். ஆயினும்.... பன்மனைவியர் மணம் அறியப்படாததொன்றாய் இருக்கவில்லை. அரசரும் தலைமக்களும் பொதுவாக எப்போதுமே மனைவியர் பலரை மணக்கும் வழக்கமுடையவராயிருந்தனர்; இவ்வாறே பார்ப்பனரிற் பலரும் கீழ் வகுப்பாரிற் செல்வம் படைத்தோரும் பன்மனைவியரை மணந்து வாழ்ந்தனர்."[5]

இதிலிருந்து, செல்வம் படைத்த உயர்வகுப்பார் மாத்திரமன்றி, தாழ்த்தப்பட்டோரிற் செல்வம் உடையோரும் பல மனைவியரை மணந்திருந்தமை தெளிவாகின்றது.

பள்ளு நூல்களிலும், பள்ளர் தலைவனான குடும்பன் இரு மனைவியரை மணம் செய்தவனாகவே காட்டப்படுகின்றான். பள்ளர் சமூகத்திற் செல்வாக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவு அதிகாரமும் கொண்டவனாக இருந்தமையால். அவன் தனது அந்தஸ்தை மேம்படுத்திக்காட்டுமுகமாக, இரு மனைவியரை மணந்து கொண்டான் எனக் கருதுதல் பொருந்தும். இதனை, "மருதூா ராளை விருதுக்கே வைத்தான்,"[6] "தன்வெகு மானத்துக் கவளாம்"[6அ] என்று பள்ளனின் மூத்தமனைவி அவனைப்பற்றிக் கூறுவதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம். மூத்தபள்ளி அவனது முதல் மனைவியாகவும், இளையபள்ளி இரண்டாவது மனைவியாகவும் காட்டப்படுகின்றனர். அவன் இரு மனைவியரைக் கொண்டிருப்பது மாத்திரமன்றி, பிற பெண்களுடனும் தொடர்புடையவனாக விளங்குவதுண்டு என்பதையும் பள்ளு நூல்கள் புலப்படுத்துகின்றன. இவ்வாறு, பள்ளர் தலைவனின் தவறான போக்குகள் குடும்பத்தைப் பாதிப்பதனைப் பள்ளு நூல்கள் தெளிவாக உணர்த்துகின்றன.

பள்ளனின் மூத்தமனைவியான மூத்தபள்ளி மூலமாக, அவனது பல குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுக் கண்டிக்கப்படுகின்றன. அவனது ஒழுக்கக் குறைவும், மதுவுக்கும் புலாலுக்கும் அடிமையாக அவன் விளங்குவதும் அடிக்கடி அவனது மனைவியினாற் குறிப்பிடப்படுகின்றன. இதனைத் தெளிவாகப் பின்வரும் மூத்தபள்ளியின் கூற்று புலப்படுத்துகின்றது:

"கன்று காலியும் விற்றுக் கள்ளுஞ் சுள்ளுங்
    கள்ளப் பள்ளியா ரோடு குடித்து
என்றும் பண்ணை வயல்தனில் வாராமல்
    எடுத்துப் பேச்சில் வெருட்டி யுருட்டி
நின்று மிண்டுகள் தான் பண்ணுகின்ற
    நெளிப் பெங்கேசொல் புலைப்பள்ள னாரே."[7]

மேலும், பள்ளனின் ஒழுக்கக் குறைவு தொடர்பாக, மூத்தபள்ளி அவனுக்கு அறிவுரை கூறுவதுண்டு. இதனைத் திருமலைமுருகன் பள்ளில் இடம்பெறும் பாடலொன்று எடுத்துக்காட்டுகின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கள்ளி னாசையொன் றல்லாம லேபெண்கள்
காத லாசையும் ஆருக்கும் ஆகா(து)
உள்ள மீதிரண் டாசையுங் கொண்டிந்த
ஊருக் கும்நயி னாருக்கும் ஆகாய்
பள்ளர் சேரச் சிரிக்க உடம்பு
படைத்து நீபடும் பாடது தன்னை
விள்ள வாயற்றுப் பார்த்துப் பதைக்க
விதிந்த ஊழ்வினை வெல்லவொண் ணாதே."[8]

இதன் மூலம் மது, மாது ஆகியவை தொடர்பான விடயங்களில் ஏற்படும் சபலம் வாழ்வைப் பாதிக்கும் என்பது குறிப்பிடப்படுவதோடு, மக்களும் பண்ணைக்காரனும் வெறுக்கும் வகையில் அவனது நடவடிக்கைகள் உள்ளன என்பதும் மூத்தபள்ளியினாற் சுட்டிக்காட்டப்படுகின்றன. பள்ளர் சமூகத்தின் தலைவன் என்ற வகையில், வெளியிலே அவனுக்குப் புகழ் இருந்தபோதிலும், அவனது ஒழுக்கக் குறைவை அறிந்தோர் அவனை மதிப்பதில்லை என்பதைக் குறிக்குமுகமாக, "ஊருக்குள் ஏற்றம் இவனிந்தச் சேரிக்குள் நாற்றம்"[9] என மூத்தபள்ளி கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

குடும்ப அமைப்பில், எந்தவொரு மனைவியும் தன் கணவன் வேறொருத்தியை நாடுவதையும், பிற பெண்களுடன் வாழ முற்படுவதையும் விரும்புவதில்லை. அதனை அவளால் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. ஒருவனுக்கு ஒருத்தி என்ற அமைப்பிலேயே குடும்பக் கட்டுக்கோப்பு பேணப்படத்தக்க வாய்ப்பு உண்டு. பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் மூத்தபள்ளியிடத்தும் இத்தகைய உணர்வே காணப்படுகின்றது. இளையபள்ளியோடு தன் கணவன் தாம்பத்திய உறவைப் பகிர்ந்து கொள்வதை அவளால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அதன் விளைவாகவே, பண்ணைக்கார னிடத்திலும் தன் கணவன், இளையபள்ளி ஆகியோர் பற்றி முறையிட வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை அவளுக்கு ஏற்படுகின்றது. ஆயினும், இளையபள்ளியை விட்டுப்பிரிய இயலாதவனாகக் கணவன் இருக்கின்றபோது, அவளை விலக்கிவிட்டுத் தனது குடும்பத்தைப் பாதுகாக்கவியலாது என்ற உணர்வு மூத்தபள்ளிக்கு ஏற்படுவதுண்டு. அவள் அவ்வாறு கருதவேண்டிய அளவுக்குப் பள்ளனின் மனப்போக்கும், செயல்களும் அமைந்துவிடுகின்றன. எனவே, காலங்கடந்த பின் அவனைத் திருத்துவதற்கு இயலாது என்ற நிலையில், குடும்பத்தையாவது சிதறாமற் காப்பாற்றவேண்டும் என்ற நோக்கில் அவள் செயற்படத் தொடங்குவதுண்டு.

இவ்வாறு, குடும்பப் பொறுப்புணர்வு மிக்கவளாக மூத்தபள்ளி விளங்குவதற்கு, பள்ளனின் நெருங்கிய உறவினளாக அவள் இருந்தமை ஒரு காரணமாகும். அதனால், இயல்பாகவே அவளிடத்துக் குடும்பநலநாட்டம் காணப்படுகின்றது. தனது நெருங்கிய உறவினனான கணவன், எத்தகைய தவறு செய்யினும், அதனைப் பொறுத்து நடப்பதே குடும்பப் பெருமைக்கு வழிகோலும் என்ற எண்ணம் அவளிடத்துக் காணப்படுகின்றது. மேலும், தன் கணவன் தன்னைவிட்டுப் பிரியின், ஆண்துணையின்றித் தனித்திருக்க நேரிடுவதோடு, தான் உழைப்பாளியாக இருப்பினும், போதிய குடும்ப வருமானம் இன்றியும் தவிக்க நேரிடும் என்பதும் மூத்தபள்ளியின் குடும்பப் பொறுப்புணர்வுக்கு மற்றொரு காரணமாகும். பொதுவாகவே, பள்ளியர் தம் கணவரைச் சார்ந்தே வாழவேண்டியிருந்தமையை, "உன்கை பார்க்கு மெங்களுக்கும் வேறொரு தஞ்ச முன்னையன்றி வேறுமுண்டோ"[10] என்ற கூற்று உணர்த்துகின்றது. இது ஆணாதிக்க சமுதாய அமைப்பின் விளைவு என்பதும் கருதத்தக்கது.

இந்நிலையில், இளையபள்ளியையும் குடும்பத்தின் ஓர் உறுப்பினளாக இணைத்துக்கொள்வதற்கு மூத்தபள்ளி தயங்குவதில்லை. இதனால், ஏதாவது அறிவுரை கூறியேனும், அவளைத் திருத்திக் குடும்பக் கட்டுக்கோப்புக் குலையாது பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கம் மூத்தபள்ளிக்கு இருப்பதுண்டு. அவளின் பின்வரும் கூற்று இதனைத் தெளிவுறுத்துகின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புருஷரவர் என்செய் குவார் பூவை யரினாலே
புகழ்அறம் எல் லாம்குலவும் புகுந்திடமும் விளங்கும்
அரிவையர்தம் மோகமத னால்அவர்தம் சொல்லுக்
கனுகூல மாயிருப்பர் அது! அழகுமல்ல." [11]

ஆயினும், இளையபள்ளி ஒருபோதும் மூத்தபள்ளியின் அறிவுரையைச் செவிமடுத்து நடப்பதில்லை. அவளுக்குக் கணவனின் ஆதரவு எப்பொழுதும் இருப்பதனால், மூத்தபள்ளியை அவள் பொருட்படுத்துவதேயில்லை.மேலும், பாலுறவு தொடர்பான தேவைகளின் அடிப்படையிலேயே வாழ்க்கையின் போக்கையும் அமைத்துக் கொள்பவளாக அவள் விளங்குவதும் கருதத்தக்கது.[12] அத்தகைய எண்ணப்போக்கின் விளைவாகவே, "மூத்தபள்ளி பள்ள நினைக்கண் டாசைகொள்வா னினிச் சொல்லடி"[13] என மூத்தபள்ளியை நோக்கிக் கூறும் தெம்பும் அவளிடம் இருந்தது. தனது பாலுறவுத் தேவைகளையே அவள் பெரிதென மதிப்பதனால், பள்ளனின் சமூகப்பொறுப்புக்கள் பற்றியோ, பண்ணை வேளாண்மை பற்றியோ அக்கறை காட்டுவதில்லை. மேலும், தன் கணவன் வேளாண்மை உழைப்புக்குச் செல்லாவிடின், குடும்பத்துக்கான வருவாய் பெறவியலாமற் போய்விடுமே என்ற உணர்வும், தமது எதிர்காலம் பற்றிய பாதுகாப்பு உணர்வும் அற்றவளாகவே அவள் விளங்குவதைக் காணலாம். சுருங்கக்கூறுவதாயின், தன்மீது பள்ளன் கொண்ட மையலை அடிப்படையாகக் கொண்டதாகவே அவளது வாழ்வு பற்றிய நோக்கு அமைந்திருந்தது. எனவே, பள்ளனின் மையலைப் பயன்படுத்திப் பொருள் பெறவும் அவள் தயங்குவதில்லை. "தின்னநல்ல பாக்குக்கும் சேலைபணிக் கென்றுகையில் எண்ணமுடி யாதபொரு ளெல்லாம் பறித்தனளே"[14] என்று செங்கோட்டுப் பள்ளு இதனைத் தெளிவுறுத்துகின்றது. இத்தகைய காரணங்களால், மூத்தபள்ளி எதிர்பார்த்த குடும்பக் கட்டுக்கோப்புணர்வு வேரூன்றுவதற்குப் பதிலாக, பிரிவுணர்வும் வெறுப்புணர்வும் இருவரிடையேயும் வளரத்தொடங்கின. இவை குடும்பப் பிரச்சினைகள் பெருகுவதற்கே வழிவகுத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளனும், குடும்பக்கட்டுப்கோப்பைப் பேணவேண்டுமென்னும் மூத்தபள்ளியினது நன்னோக்கத்தை விளங்கிக் கொள்பவனாகக் காணப்படவில்லை. இளையப்பள்ளியின் இளமையும், அழகுமே அவனைக் கவர்ந்திருந்தன. குடும்ப அமைப்புச் சீர்குலையக்கூடாதென ஒவ்வொரு முறையும் மூத்தபள்ளி செய்யும் முயற்சிகள், இளையபள்ளி மீது கொண்ட மையலின் காரணமாக அவனால் அலட்சியம் செய்யப்படுகின்றன. தனது இத்தகைய அலட்சியம் எந்தளவுக்குத் தன் குடும்ப உறவுகளைப் பாதிக்கின்றது என்பது பற்றிச் சிறிதேனும் அக்கறையில்லாதவனாக அவன் விளங்குவதைக் காணலாம். மூத்தபள்ளி வேளை வாய்க்குந்தோறும், குடும்பநலனிற் சிறிதாவது அக்கறை செலுத்துமாறு, அவனை வேண்டுவதுண்டு. "ஆறுமாத்தைக்கொரு நாளென் றாலு முன் அருமைக் குஞ்சையும் என்னையும் பாராய்"[15] எனக் கூறுவதன் வாயிலாக, அவளின் உணர்வுகளை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

பள்ளன் மூத்தபள்ளிக்கு எவ்வகையிலும் ஆதரவு காட்டாமல் நடந்து கொள்வது, அவளுக்கு ஏற்பட்ட முதன்மையான குடும்பப் பிரச்சினையாகும். அதனால், பள்ளன் தவறு செய்யும்போதெல்லாம் தனது முறையீடுகளை எடுத்துக் கூறுவதற்கும், பள்ளனைத் திருத்த முயற்சிப்பதற்கும், தனக்கு ஆதரவு காட்டுவதற்கும் பள்ளனைவிட அதிகாரமுள்ள பண்ணைக்காரனைச் சார்ந்து இயங்கவேண்டிய நிலை அவளுக்கு இருப்பதைப் பள்ளு நூல்கள் காட்டுகின்றன. பள்ளனினாலும், இளையபள்ளியினாலும் தனக்கு ஏற்படுகின்ற சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிய தேவை அவளுக்கு இருந்தது.

பண்ணைக்காரர் தமது பண்ணையடிமைகளான பள்ளர் சமூகத்தின் தொழில் மேற்பார்வையாளராக மாத்திரமன்றி, அவர்களது குடும்பப் பிரச்சினைகளிலும் ஈடுபாடுகொண்டோராக விளங்குவது குறிப்பிடத்தக்கது. மேலும், பள்ளர் சமூகம் முற்றுமுழுதாகப் பண்ணைக்காரரைச் சார்ந்தே வாழ வேண்டியிருந்தமையால், அவர்களுக்குப் பள்ளரின் குடும்பப் பிரச்சினைகளில் ஈடுபாடு காட்டுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பும் ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக, மூத்தபள்ளி தனது குடும்பப் பிரச்சினைகளைப் பண்ணைக்காரனிடம் வெளிப்படுத்தி ஆதரவு தேடுவதற்கு முடிகின்றது. மேலும், இவ்வாய்ப்பினை மூத்தபள்ளி பயன்படுத்தும்போது, அறிவுக்கூர்மையுடன் நடந்துகொள்வதுண்டு. தனது குடும்பப் பிரச்சினைகளை மாத்திரம் பண்ணைக்காரனிடம் எடுத்துக்கூறுவதை விடுத்து, பண்ணை வேலைகளிலும் பள்ளன் அக்கறையின்றிக் காணப்படுவதை அவள் குறிப்பிடுவது வழக்கமாகும்.[16] இவ்வாறு அவள் குறிப்பிடுவது, பண்ணைக்காரனின் மனத்தில் அவளைப்பற்றிய நல்லெண்ணத்தை வித்திடுவதற்கு வாய்ப்பளிக்கின்றது. ஏனெனில், மூத்தபள்ளி பண்ணை தொடர்பான விடயங்களிற் போதிய அக்கறையுடையவளாக உள்ளாள் என்ற கருத்து பண்ணைக்காரனுக்கு ஏற்பட இது வழியமைக்கின்றது. எனவே, பண்ணையின் நலனை விரும்பும் மூத்தபள்ளிக்கு ஆதரவளிக்கப் பண்ணைக்காரன் முன்வருவதில் வியப்பதற்கில்லை.

தன் குடும்பத்தைச் செம்மைப்படுத்துவிக்கும் நோக்குடன் மூத்தபள்ளி பள்ளனின் குறைகள் அனைத்தையும் ஒன்று திரட்டிப் பண்ணைக்காரனிடம் அடுக்கடுக்காகக் கூறுவதுண்டு. அவற்றுள், குடும்பம் தொடர்பான பள்ளனின் குறைகளையும் உள்ளடக்கிக் கூறுவதனைக் காணலாம். அவற்றுக்கு எடுத்துக்காட்டாகச் சிலவற்றை நோக்கலாம். முக்கூடற்பள்ளிற் குடும்பப் பிரச்சினைகள் தொடர்பான மூத்தபள்ளியின் முறைப்பாடுகள் பின்வருமாறு அமைந்துள்ளன: பள்ளன் கோபக்காரனாக இருப்பதோடு, மூத்தபள்ளியின் அறிவுரைகளைச் செவிமடுப்பதில்லை; வாக்குவாதம் ஏற்படுத்தினாள் என மூத்தபள்ளியை வைவான்; மூத்தபள்ளி மிகவும் சிரமத்துடன் சமைத்து உணவளித்தாலும், அதனை ஏறிட்டும் நோக்கமாட்டான்; உண்பதற்காகப் பாத்திரத்தில் வாயை வைக்கும் அவன், மறுகணம் அவளைச் சட்டியினால் அடிக்க ஓங்குவான்; அவளைத் தனது அடிமையாகவே வைத்துள்ளான்; இளையபள்ளியைத் தனது பெருமைக்காக மணம் செய்துகொண்டான் அவளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலேயே எப்பொழுதும் இருப்பான்; அவளுக்காக மடலேறத் துணியுமளவிற்கு, அவள்மீது காமமயக்கம் கொண்டவன்; பாம்புக்குத் தலையையும், மீனுக்கு வாலையும் காட்டும் விலாங்கு மீனைப்போன்று, மூத்தபள்ளியிடம் அன்புறவு உள்ளதாகக் காட்டி, ஆசைவலையை வீசி, இளையபள்ளியிடம் முழுமையான உறவு கொண்டவனாக இருக்கின்றான்; தேனோடு பால் கலந்தமைபோன்று, இளையபள்ளியோடு இணைந்திருந்து, அவளது மஞ்சள் மேனியில் மயக்கம் கொண்டு, பணம் எல்லாவற்றையும் செலவழித்துவிட்டான்; மூத்தபள்ளியை நடுத்தெருவில் விட்டுவிட்டான்; அவன் அவளின் வீட்டுக்கு வருவதில்லை; அவளைத்தேடிக் கனைப்பதுமில்லை கனவிலும் இளைய பள்ளியை விட்டுப்பிரிவதில்லை; அவளுக்கு மீனைக்கொண்டு சென்று கொடுப்பான்; மூத்தபள்ளிக்கு கருவாட்டையும் கொடுக்க விரும்பாமல் ஒளித்து வைப்பான்; மூத்தபள்ளி எதுவும் கூறினால், வீம்புகள் பேசுவான்; இளையபள்ளி கூறினால், பாம்பையும் பிடிப்பான்; அவளின் இளமையைப் பற்றியே கருத்திற் கொண்டான்; முதிர்ச்சி பெற்றுவரும் மூத்தபள்ளியின் உடல்வளத்தை, அவளை வேதனைப்படுத்துவதன் மூலம் அழித்து வருகின்றான்; வரவுக்கு மீறிச் செலவு செய்வதனால், குடும்பத்தில் வறுமை அதிகரிக்கின்றது.[17]

செண்பகராமன் பள்ளிற் காணப்படும் மூத்தபள்ளியின் முறையீடுகளைப் பின்வருமாறு திரட்டி நோக்கலாம்: பள்ளன் இளையபள்ளி வந்த நாளிலிருந்து மூத்தபள்ளியின் வீட்டுக்கு வருவதையும் நிறுத்திவிட்டான்; தனது வீடுவாசலை விசாரித்தும் பார்ப்பதில்லை; மூத்தபள்ளியைக் கண்ணெடுத்துப் பார்ப்பதற்கும் அவன் விரும்புவதில்லை; கல்லையும், தேங்காயையும் போன்றே அவளைக் கணிக்கின்றான்; தீயவற்றைச் செய்து, மூத்தபள்ளியின் குடியைக்கெடுத்துக் கூத்தாடிக்கொண்டிருக்கின்றான்; இளையபள்ளியை விட்டு ஒருபோதும் பிரிவதில்லை; உள்ள நெல் முழுவதையும் இளையபள்ளிக்கே அளித்து விட்டான்; இளையபள்ளியின் தங்கையின் குழந்தைக்குப் பெயரிட்டபோது, பாற்பசு ஒன்றைக் கொடுத்தான்; மூத்தபள்ளி வளர்த்த எட்டுக்கோழிகளையும் செட்டியொருவனுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துக் கொடுத்துவிட்டான்; சாராயமும், பனங்கள்ளும் அருந்தாமல் இருக்க மாட்டான்; கொள்ளியைக்கொண்டு தலையைச் சொறிபவனாக அவன் உள்ளான்.[18]

திருமலைமுருகன் பள்ளிற் பின்வருமாறு குடும்பப் பிரச்சினைகள் தொடர்பான மூத்தபள்ளியின் கூற்றுக்கள் காணப்படுகின்றன: பள்ளன் இளையபள்ளியை மணந்திருப்பதை மூத்தபள்ளியாற் பொறுக்கவியலாது; இளையபள்ளியின் பொழுது போக்குக்காக, அவளை மூத்தபள்ளியுடன் போட்டியாகத் தொடுத்துவிட்டான்; அவனிடம் சுயஅறிவு காணப்படவில்லை; பயபக்தியும் அவனிடத்திற் சிறிதும் இல்லை; இளையபள்ளியின் தாய்க்குக் கறுப்புச்சேலையொன்றைக் கொடுத்தான்; ஆனால், அவள் அளித்த விருந்தில் வசியமருந்திட்டிருந்தமையை அவன் அறிந்திருக்கவில்லை.[19]

ஈழத்துப் பள்ளு நூல்களிலும், தனது குடும்பப் பிரச்சினைகள் பற்றிய மூத்தபள்ளியின் முறையீடுகள் காணப்படுகின்றன. கதிரைமலைப்பள்ளில் அவ்வாறு இடம்பெறுவனவற்றைப் பின்வருமாறு திரட்டி நோக்கலாம்: பள்ளன் கூறுபவை அனைத்தும் பொய்யானவை; இவன் குடும்பத்தைக் கெடுப்பவன்; தீயசெயல்களைச் செய்பவன்; வீண்செலவு செய்பவன்; மூத்தபள்ளி சமைத்த உணவைக் காலாலே தட்டியூற்றினான்; எப்போதும் அவளை ஏசுவான்; அவளோடு அன்பாகப் பேசுவதில்லை; அவளுக்கு அருகிலும் வருவதில்லை அவளோடு கொடூரமாக நடந்துகொள்வான்; அவளை நெருப்பெனக் கருதுவான்; அவள், தனக்கு ஏதாவது உதவுமாறு கேட்டால், நாவை அரிந்து விடுவதாகக் கூறுவான் அவளைத் தேடுவதுமில்லை; அவளின் வளவுக்குள்ளும் வருவதில்லை; அவளின் இல்லத்தை எட்டியும் பார்ப்பதில்லை; சிறிது நேரமாயினும் அவளது இல்லத்தில் இருக்கமாட்டான்; இளையபள்ளியைப் பற்றிப் புகழ்மொழிகள் பேசுவான்; அவளோடு விருப்பத்துடன் உறவுகொள்வான்; அவளைக் கண்ணைப் போன்று பாதுகாத்துக்கொண்டு, மூத்தபள்ளியைத் துன்பப்படுத்திக் கைவிட்டுவிட்டான்; இளையபள்ளியைத் தவிர, மூத்தபள்ளியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தும் பார்ப்பதில்லை; இளையபள்ளி இட்ட வசியமருந்தால் மயங்கிவிட்டான்; ஒருபோதும் அவளின் இல்லத்தைவிட்டுப் பிரியமாட்டான்; செந்நெல் முழுவதையும் அவளுக்கே உண்ணக் கொடுத்துவிடுவான்; அவள்மீது மையல் கொண்ட நாள் முதலாக, மூத்தபள்ளிமீதான நேசத்தை மறந்தான்.[20]

பறாளைவிநாயகர்பள்ளில் குடும்பப் பிரச்சினைகள் பின்வருமாறு கூறப்படுகின்றன: மனைவியென்பதற்காக மூத்தபள்ளியின் கழுத்திலே தாலி என்ற சுமையை மாத்திரம் பள்ளன் வைத்துள்ளான்; பழைய மனைவியென்று அவளுடன் அவன் உறவு வைத்துக்கொள்வதில்லை; அவளின் வீட்டிலும் இருப்பதில்லை; அவளின் அறிவுரைகளைக் கேட்டு அவன் நடப்பதில்லை; அதனால். அவளும் அவனுக்கு அறிவுரை கூறுவதை நிறுத்திவிட்டாள்; அவன் வீண்செலவு செய்பவனாகவுள்ளான்; குடும்பத்திற் கலகத்தை ஏற்படுத்தும் இளையபள்ளியின் மோகவலையிற் சிக்கிவிட்டான்; எப்போதும் அவளின்மீதே கண்ணாகவிருப்பான்; அவன் உண்பது, அருந்துவது, மகிழ்ந்திருப்பது, உறங்குவது ஆகிய அனைத்தையும் அவளின் குடிலிலேயே செய்கின்றான்; தனது தேவைகளுக்காக அவளது காலையும் பிடிப்பான்; அவள் சொன்னால் நாகத்தையும் பிடிப்பான்; அவளிடம் கஞ்சிக்காகக் கெஞ்சிக்கொண்டிருப்பான்; வஞ்சனையுடைய அவள் இட்ட வசிய மருந்தினால் உடல் இளைத்துவிட்டான்; அவளின் பிள்ளைக்காக நெல்லை விற்று, பொன்னகை செய்வித்தான்.[21]

குடும்பப் பிரச்சினைகள் மூத்தபள்ளியினாற் கூறப்படுவதைத் தண்டிகைக் கனகராயன் பள்ளு பின்வருமாறு தெரிவிக்கின்றது: பள்ளன் மூத்தபள்ளி கூறும் அறிவுரைகளைக் கேட்பதில்லை; அவளைத் தினமும் அடிப்பான்; அவளோடு சண்டை செய்வான் அவளைப் பலருமறியத் தூற்றுவான்; ஆண்டில் ஒருநாளாயினும் அவளிடம் அவன் வருவதில்லை; நாள்தோறும் அவளுக்குக் கொடுக்கவேண்டிய கூலியையும் அவன் கொடுப்பதில்லை; இளையபள்ளி கூறியவாறு, மூத்தபள்ளியை விட்டுப் பிரிந்துவிட்டான்; அவள் ஊட்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசியமருந்தினால் மூத்தபள்ளியைக் குறைகூறுவான்; இளையபள்ளி தவறாகக் கூறுபவற்றை நிறுத்தி, மூத்தபள்ளிக்கு வாழ்வளிக்கவேண்டுமென அவன் கருதுவதில்லை; இளைய பள்ளிக்கு அஞ்சி, மூத்தபள்ளியின் வீட்டிற் கஞ்சியையும் அவன் உண்ணுவதில்லை; இளையபள்ளியை விட்டுச் சிறிதுநேரமும் அவன் பிரிந்திருப்பதில்லை; அவளின் தங்கையுடனும் அவன் உறவு கொள்வான் மதுவும், புலாலும் உண்டு, குடும்பப்பிரச்சினைகளை ஏற்படுத்துவான்; பணமெல்லாவற்றையும் வீணாகச் செலவு செய்வான்.[22]

இத்தகைய மூத்தபள்ளியின் கூற்றுக்கள், பள்ளனது தவறான நடத்தைகள் எந்தளவுக்குக் குடும்ப வாழ்வைச் சீரழிக்கின்றன என்பதை உணர்த்துகின்றன.[23] இவற்றினை நோக்குமிடத்து, இளையபள்ளிமீது பள்ளன் கொண்ட மையலே குடும்பப் பிரச்சினைக்குக் காரணம் என்பது தெளிவாகின்றது. அத்தகைய மையலினால், தனது முதல் மனைவியான மூத்தபள்ளிக்குக் கொடுமைகள் நிகழ்த்துபவனாகவும், அவளைவிட்டுப் பிரிந்து வாழ்பவனாகவும், அவளுக்கு வாழ்வளிக்க வேண்டிய நிலைப்பாட்டிலிருந்து தவறுபவனாகவும், ஏமாற்றுப் பேர்வழியாகவும், வீண்செலவாளியாகவும் பள்ளன் காட்டப்படுகின்றான்.

பள்ளன் பற்றிய மேற்கூறப்பட்ட விடயங்களைத் தவிர, அவனது பொழுதுபோக்குகள் தனது குடும்பத்தைப் பாதிப்பது தொடர்பாகவும் மூத்தபள்ளியின் முறையீடுகள் அமைவதுண்டு. கூத்து நிகழ்த்துதல், கொட்டுவாத்தியம் ஒலித்தல், வில்லுப்பாட்டு இசைத்தல் முதலான பாமர மக்களை மிகவும் கவர்ந்த கலைகளில் அவனும் ஈடுபாடு காட்டியுள்ளமை, மூத்தபள்ளியின் கூற்றுக்கள் மூலம் புலப்படுத்தப்படுகின்றன. பள்ளனின் பொழுதுபோக்குப் பற்றி மூத்தபள்ளி பண்ணைக்காரனிடத்துக் குறிப்பிடும்போது, "கூத்துக்கும் கொட்டுக்கும் நல்லான்"[24] "வில்லடிப் பாட்டுக்குப் பொறித்தான்"[25] "வில்லென்னும் அரிப்பிட்டுப் போட்டான்"[26] எனக் கூறுவன நோக்கத்தக்கன. கண்ணுடையம்மன் பள்ளில், "மெள்ளவே வலைப்பெரியான் கூத்துடன் மிகுந்த வேஷங்களாடவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருதுகட்டி முன்னையனாற்கெல்லாம் எருதுகட்டினர் குடும்பரே[27] எனக் கூறப்படுவதும், அக்காலத்திற் பள்ளராற் கூத்து ஆடப்பட்டமையைப் புலப்படுத்துகின்றது. இத்தகைய பொழுதுபோக்குகளிற் பள்ளன் அளவுக்கு மீறிய ஆர்வம் காட்டுவதனால், அவனது குடும்ப வாழ்வும், தொழிலும் அவனாற் புறக்கணிக்கப்படுகின்றன. இதனைப் பொறுக்கவியலாத மூத்தபள்ளி, அவை பற்றியும் பண்ணைக்காரனிடம் முறையிட வேண்டிய நிலை காணப்படுகின்றது.

பெரும்பாலும், தாழ்த்தப்பட்ட சமூகத்தவரின் குடும்பச் சச்சரவுகள் வெளியுலகுக்குத் தெரியும்வகையில் இடம்பெறுவதுண்டு. அதற்கு முக்கியமான காரணம், கல்வியறிவு இன்மையும், தமது குறைகளைச் சாதுரியமாக மறைக்கத் தெரியாதமையுமேயாகும். பள்ளு நூல்களில் இடம்பெறும் பள்ளர் தலைவனின் குடும்பப் பிரச்சினைகளும் அத்தகையனவேயாகும். அவர்களின் பிரச்சினைகளும் வெளியுலகுக்குத் தெரிவனவாகவும், பண்ணைக்காரன் வரை அவை எடுத்துச் செல்லப்படுவனவாகவும் காணப்படுகின்றன.

கணவன் தவறு செய்தால், அவனுக்கு அதனை உணரவைக்க வேண்டுமே தவிர, அவனை உதாசீனம் செய்யக்கூடாது என்ற உணர்வு இந்தியப் பண்பாட்டிலும், அதனுடன் தொடர்புள்ள தமிழ்ப்பண்பாட்டிலும் பாரம்பரியமாக இடம்பெறும் ஒரு நிலைப்பாடாகும். "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்பது, இத்தகைய உணர்வைப் பேணுவதற்காக அமைந்த பழமொழியாக விளங்குகின்றது. தமிழ் இலக்கியங்கள் இம்மரபினைப் பெரிதும் போற்றிவந்துள்ளன. ஆயினும், தாழ்த்தப்பட்ட மக்களைப் பாத்திரங்களாகக் கொண்ட பள்ளு இலக்கியத்தில் ஓரளவுக்குக் கணவனை நேரடியாகக் கண்டிப்பதற்கும், அவனைப்பற்றிப் பண்ணைக்காரனிடம் முறையிடுவதற்கும் மூத்தபள்ளிக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. சமூக அந்தஸ்திற் குறைந்தவராகக் கருதப்படுவதனாலேயே மூத்தபள்ளிக்கு இத்தகைய நிலை அளிக்கப்பட்டிருப்பதாகக் கருதவேண்டியுள்ளது. ஆயினும், குடும்பக் கட்டுக்கோப்பை மீறாத வகையிலேயே அவளின் இத்தகைய செயல்களுக்குப் பள்ளு நூல்களில் இடமளிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஆ) குடும்ப உறுப்பினரின் நிலைப்பாடுகள்

மூத்தபள்ளிக்கும், அவளது கணவனுக்குமிடையே குடும்பம் தொடர்பான பல பிரச்சினைகள் இருப்பினும், அவன்மீது அவளிடத்து இயல்பான அன்புணர்வு உண்டு. அத்தகைய அன்புணர்வு குடும்பத்தைச் சிதறவிடாது காப்பாற்றுவதற்கு, இறுதிவரை போராடும் ஊக்கத்தினை அவளிடம் ஏற்படுத்தியது. கணவன் மனைவியருக்கிடையே இயல்பாக இருக்கவேண்டிய இத்தகைய உணர்வு, பள்ளனது குடும்பத்தைப் பொறுத்தவரையில், மூத்தபள்ளியிடமே காணப்பட்டது. இத்தகைய அன்புணர்வின் விளைவாக, அவள் கடமையுணர்வு மிகுந்தவளாகவும் காணப்படுகின்றாள். தனது முறையீட்டினாற் பண்ணைக்காரன் மூலமாகக் கணவன் தண்டனை அனுபவிக்கவேண்டிய நிலை ஏற்பட்டமையையிட்டு உண்மையிலேயே வேதனைப்படுபவளாக இருந்துள்ளாள். தான் தனது கடமையுணர்வினின்றும் தவறிவிட்டாளோ என்ற குற்றவுணர்வு அவளிடம் காணப்பட்டது. இதன்விளைவாகவே பள்ளனை விடுதலை செய்ய அவள் முயற்சிப்பதைக் காணமுடிகின்றது.[28]

மூத்தபள்ளியின் கடமையுணர்வின்பாற்பட்ட இன்னோர் அம்சத்தையும் அவளது செயல்களில் அவதானிக்கமுடிகின்றது. தன் கணவன்மீது அவள் குறை கண்டு, பண்ணைக்காரனிடம் முறையிட்டுத் தண்டனை பெற்றுக் கொடுப்பினும், அவன் கடுமையான தண்டனைக்கு ஆளாகக் கூடாது என்ற அக்கறையை அவளிடத்துக் காணமுடிகின்றது. செங்கோட்டுப் பள்ளில் இடம்பெறும் பின்வரும் பாடல்கள் கடமையுணர்வு சார்ந்த மூத்தபள்ளியின் அக்கறையைத் தெளிவுறுத்துகின்றன:

"பய முறுத்தினால் மிரண்டு மெத்தவும்
பயந்து போவான் என்கணவன்
வயிர மரத்தில் குட்டையில் போட்டால்
வருத்தப் படுவான் என்கணவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடுமை யாகிய காவல் செய்தால் – மனங்
கலங்கிப் போவான் என்கணவன்
அடிய தொன்றவன் மேல்விழுந்தால் – மெத்த
அதிர்ந்து போவான் என்கணவன்

"நலமி லாநாளில் குட்டையில் போட்டால்
நாட்செலு மென தாண்டவனே!
புலன றிந்துநல் வேளையில் குட்டையில்
போட்டிடும் பண்ணை யாண்டவனே!
"வெண்டு மரத்தில் குட்டைகள் சேர்த்து
மெதுவ தாகவே ஆப்பறைந்து
அண்டர் பிரான்அர வாசலர்க் கேற்க
அடித்திடும் பண்ணை யாண்டவனே" [29]

மூத்தபள்ளியின் இக்கூற்றுக்கள் மூலமாக, அவள் கணவன்மீது கொண்ட அன்புணர்வும், குடும்ப அக்கறையும் தெளிவாகின்றன. பள்ளன் திருந்தவேண்டும் என்பதற்காக தண்டனையனுபவிப்பது பொருத்தமானதே என்று அவள் கருதினாலும், அவன் வேதனைப்படும் வகையிலே தண்டனை அமையக்கூடாது என்பதிலும் அக்கறையாக இருந்துள்ளாள்.

மேலும், பள்ளன் தண்டனை அனுபவிக்கும்போது, மூத்தபள்ளி அவனுக்காக உணவு சமைத்து, எடுத்து வருவதைப் பள்ளு நூல்கள் குறிப்பிடுகின்றன. அவர்களது குடும்ப வாழ்வில் எவ்வளவு பிரச்சினைகள் இருப்பினும், மூத்தபள்ளி கணவன் மீது கொண்டிருந்த அன்புணர்வினை அவளது அத்தகைய செயல் சுட்டிக்காட்டுகின்றது.

"தாரமிரண் டானாலுந் தன்கணவன் வாஞ்சையினால்
வாரமுடன் முக்கூடல் வந்தபள்ளி தந்திரமாய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம்வே றொன்றுபண்ணைக்காரனுக்குச் சொல்லிமனச்
சோரமுடன் பள்ளனுக்குச் சோறுகொண்டு வந்தாளே" [30]

என இதனை முக்கூடற்பள்ளு குறிப்பிடுகின்றது. மனைவி என்ற வகையிலே, தனது கடமையைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வு அவளிடம் மிகுந்திருந்தது. அதனால், பிறர் சமைத்த உணவு எனப் பொய் கூறி, பண்ணைக்காரனிடம் அனுமதி பெற்று, கணவனிடம் கொண்டு சென்று கொடுப்பதுண்டு. சிலவேளைகளில், பண்ணைக்காரனுக்குத் தெரியாமற் கள்ளவழியினாலும் உணவு கொண்டு சென்று கொடுப்பதுண்டு. [31]

இளையபள்ளியும் பள்ளன்மீது கணவன் என்ற வகையில் உரிமையும், அன்புணர்வும் கொண்டவளே. ஆயினும், மூத்தபள்ளி போன்று, குடும்பக் கடமைகளை நிறைவேற்றுவதில் அவளுக்கு ஆர்வம் அதிகம் இருப்பதில்லை. பள்ளன் தண்டனை அனுபவிக்கும்போது, இரு மனைவியரும் நடந்துகொள்ளும் முறை, இதனைத் தெளிவாகக் காட்டுகின்றது. இளையபள்ளி, தான் பள்ளனின் மனைவி என்ற முறையில், ஒருபோதும் மூத்தபள்ளி போன்று உணவு சமைத்துக்கொண்டு சென்று, அவனுக்குக் கொடுப்பதில்லை. இளையபள்ளியைப் பொறுத்தவரையில், பள்ளன் தண்டனை அனுபவிப்பதனாலே தனது சுகவாழ்க்கை பாதிக்கப்பட்டுவிட்டது என்பதே அவளது மனக்குறையாகும். அதனால், அதற்குக் காரணமான மூத்தபள்ளியைக் குறைகூறுவதிலேயே அவள் அக்கறை செலுத்துகின்றாள். பள்ளனை விடுவிப்பதற்கும் அவள் முயற்சிப்பதுண்டு. ஆயினும், இளையபள்ளியின் இயல்புகள் பற்றிப் பண்ணைக்காரன் நல்லெண்ணம் கொண்டிராமையின் காரணமாக, அவளது அத்தகைய முயற்சி வெற்றி பெறுவதில்லை. [32]

பள்ளனைத் திருத்துவதற்காக, அவன் தண்டனை அனுபவிக்கும்போதும், மூத்தபள்ளி அவனது குறைகளைச் சுட்டிக்காட்டி, அவனைத் திருத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிப்பதுண்டு. அவ்வாறு, அவனது குறைகளைச் சுட்டும்போது, மூத்தபள்ளியின் குடும்ப நலநாட்டமே முதன்மையாகக் காணப்படுகின்றது. ஆயினும். பள்ளன் அவளது நன்னோக்கத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவே விரும்புவதைக் காணலாம். பொய் வாக்குறுதிகள் அளித்து, அவளது இயல்பான இரக்கவுணர்வைத் தன் சார்பாகத் திருப்புவது அவனது வழக்கமாகும். சான்றாக, தன்மீதும் மூத்தபள்ளிமீதும் அவளது பிள்ளைகள் மீதும் வாக்குறுதி செய்து, தான் திருந்திவிட்டதாகக் கூறுவதை முக்கூடற்பள்ளிற் காணமுடிகின்றது.[33]

பள்ளனின் இத்தகைய இயல்பினை நன்கு தெரிந்துவைத்திருக்கும் மூத்தபள்ளி, "கள்ள னுன்னையும் நம்பப் படாது கருமமாமட்டுங் காலைப் பிடிப்பாய்"[34] எனக் கூறுவதுண்டு. ஆயினும், அத்தகைய வேளைகளிலும் பள்ளன் தந்திரமாகவே நடந்துகொள்வது வழமையாக இருக்கின்றது. அவளைச் சமாதானம் அடையச்செய்து, தான் தண்டனையினின்றும் விடுதலை பெறுவதே அவனது நோக்கமாக இருப்பதுண்டு. "பழுதுதானொரு கோடி செய்தாலும் பாரியானவள் பாராட்டலாமோ"[35] எனக்கூறி, அவன் அவளை ஏமாற்றி, விடுதலை பெறுவதைக் காணலாம். இத்தகைய செயல்கள் ஒரே குடும்ப உறுப்பினர்களாக இருக்கும் மனைவியின் அன்புணர்வையும், கணவனின் தந்திரவுணர்வினையும் காட்டுகின்றன.

இரு பள்ளியரிலும், இளையபள்ளிக்கே கணவன் எப்போதும் ஆதரவாக இருப்பதனால், மூத்தபள்ளி தனிமை நிலைக்கு ஆளாகவேண்டியேற்படுகின்றது. ஆயினும், பண்ணைக்காரனின் ஆதரவு அவளுக்குக் கிடைப்பது, அவளது நிலையை ஓரளவு பாதுகாக்கின்றது. இருவருக்கும் தத்தம் சார்புநிலைகளைக் குறித்து, ஒருவகைப் பெருமித உணர்வு உண்டு. சான்றுக்காக, பொய்கைப்பள்ளில் இரு பள்ளியரும் தத்தம் சார்புநிலைகளைப் புலப்படுத்துவதனை நோக்கலாம். "முற்று முற்றும் பொய்கைப்பள்ளியென்தனைக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசை மொழிகிறாய் பள்ளனைக்கொண்டு மொத்துவேன் விண்டு"[36] என இளையபள்ளி பள்ளனின் ஆதரவு தனக்கிருப்பதை உணர்த்துவள். அதேபோன்று, மூத்தபள்ளியும்," சொற்றவராப் பண்ணையர் முன்னுன்னை விடுவே னெந்தன் சொற்கேளாப் பள்ளனுடன் விலங்கிடுவேன்"[37] எனப் பண்ணைக்காரன் தனக்குச் சார்பாகவுள்ளான் என்பதை உணர்த்துவள். மேலும், இரு பள்ளியரதும் சார்புநிலைகளைக் கவனிக்குமிடத்து, மூத்தபள்ளி குடும்பப் பிரச்சினையாற் பாதிக்கப்படினும், அவளுக்குச் சார்பாக அதிகாரபலம் பொருந்திய பண்ணைக்காரன் இருப்பது சற்றே ஆறுதலையளிப்பதாக இருந்தது. இளையபள்ளி குடும்பப் பிரச்சினையற்றவளாக இருப்பினும், அதிகாரமுள்ள பண்ணைக்காரன், அத்தகைய அதிகார வலுவற்ற பள்ளனைப் பிரச்சினைக்குள்ளாக்கக் கூடும் என்ற நிம்மதியின்மை அவளுக்கு இருந்தது. சுருங்கக்கூறின், பண்ணைக்காரனின் ஆதரவே மூத்தபள்ளிக்குப் பாதுகாப்பாக இருந்தது. இல்லையேல், பள்ளனினாலும் இளையபள்ளியினாலும் அவளுக்கு ஏற்பட்டிருந்த குடும்பப் பிரச்சினைகள் மேலும் பல பாதிப்புக்களை அவளுக்கு ஏற்படுத்தியிருக்கும். பண்ணைக்காரன் அவர்களின் குடும்பப் பிரச்சினைகளில் ஈடுபடுவது, ஓரளவுக்காயினும் பள்ளனும், இளையபள்ளியும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்வதற்கு வழிகோலுகின்றது. பள்ளன் தண்டனை அனுபவித்த பின்னர், பண்ணைக்காரன் பள்ளனுக்கு அறிவுரை கூறுவதுண்டு:

"நல்லதாகட் டுமுன்செய்த தெல்லாம் பொறுத்தேன்– இனி
நன்மையாக வேநடந்துக் கொள்ளடா பள்ளா
மெல்லிமூத்த பள்ளிசொல்ப டிநடந்துக்கோ – மொழி
மீறினால்இவ் வழியாம்தெ ரிந்துக்கோ பள்ளா!"[38]

பண்ணைக்காரனின் அறிவுரைகள் சிறிது காலத்துக்குப் பள்ளனின் குடும்ப வாழ்வுக்குப் பயன்தரக்கூடியவையாக அமைந்துள்ளன. ஆயினும், நெற்பங்கீட்டின்போது மீண்டும் அவன் தவறிழைக்க நேரிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளன் தண்டனை பெற்று விடுதலை அடைந்த பின்னர், சிறிது காலத்துக்கு அவனது குடும்பப் பிரச்சினைகள் குறைந்திருப்பதைக் காணலாம். வேளாண்மை வேலைகள் பண்ணையில் தொடங்கியவுடன், தொழில் ஈடுபாட்டின் காரணமாக, அவர்களது குடும்பப் பிரச்சினைகள் பின்தள்ளப்படுகின்றன. ஆயினும், பள்ளன் மாடுமுட்டியோ, கொழு தைத்தோ வீழ்ந்த பின்னர், பள்ளியர் இருவரும் புலம்பும்போது, ஒருவரையொருவர் குறைகூறுவதைக் காணலாம். இதனை நோக்குமிடத்து, இருவருக்கிடையிலும் காணப்படும் போராட்ட உணர்வும், வெறுப்புணர்வும் தொடர்ந்து நீறுபூத்த நெருப்பாக இருந்து வந்துள்ளமையை உணரலாம்.

பள்ளனைப் பொறுத்தவரையிலும், அவனிடம் எப்பொழுதுமே பக்கச்சார்பு உணர்வு இருப்பதனைக் காணலாம். அவன் மயக்கத்திலிருந்து விழித் தெழுந்ததும், சிலவேளைகளிலே தன் பக்கச்சார்பினைக் காட்டுவதுண்டு. சான்றாக,

"பள்ளனெ ழுந்துகண் விழித்தான் –மூத்த
பள்ளித னைக்கண்டு பழித்தான்
கள்ளியி ளையாளைக் குறித்தான் –கடைக்
கண்ணாலே பார்த்தவன் சிரித்தான்"[39]

எனச் செங்கோட்டுப்பள்ளிற் குறிப்பிடப்படுவதை நோக்கலாம். இதனைத் தொடர்ந்து, அறுவடை முடியும்வரையில், அவர்களுக்கிடையிலான குடும்பப் பிரச்சினைகள் மீண்டும் பின்தள்ளப்படுகின்றன. ஆயினும், அறுவடை முடிந்து நெல்லளக்கும்போது, மனத்துள் அடங்கியிருந்த வெறுப்புணர்வுகள் மீண்டும் தலைகாட்டத் தொடங்குகின்றன. பள்ளன் மூத்த பள்ளிக்குத் தரக்குறைவாகவும், அளவைக் குறைத்தும் நெல்லளந்து கொடுப்பதன் மூலம், அவள்மீதுள்ள தன் வெறுப்புணர்வைக் காட்டுகின்றான். மூத்தபள்ளி அவனது செயலைப் பண்ணைக்காரனுக்கும், பள்ளியருக்கும் எடுத்துக்கூறி, எதிர்க்க வேண்டியநிலை ஏற்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளு நூல்கள் பள்ளரின் குடும்ப உறவுகளைப் பற்றிக் கூறுபவற்றை ஒருங்கு திரட்டி நோக்குமிடத்து, சில செய்திகளை அவை தெரிவிக்க விரும்பு கின்றன என்பதனை உணரலாம். முதன்மையாக, அவை ஒற்றுமையான குடும்பவுணர்வை வளர்க்க முயன்றுள்ளன. குடும்பத்தில் வளரும் ஒற்றுமை யுணர்வு சமுதாய நலனுக்கு வித்திடுகின்றது. ஆகவே, கணவன்–மனைவி யரிடையே வளரும் ஒற்றுமையுணர்வு, அதன் வாயிலாக ஏற்படும் குடும்பக் கட்டுக்கோப்பு ஆகியவற்றின் இன்றியமையாமையைப் பள்ளு நூலாசிரியர்கள் மூத்தபள்ளி மூலமாகப் புலப்படுத்துகின்றனர். அவளது முயற்சிக்கு எப்போதும் பள்ளனும், இளையபள்ளியும் தடையாக இருந்து வருவதைக் காணலாம். ஆயினும், பண்ணைக்காரன் அவள்மீது காட்டும் ஆதரவே அவளுக்கு ஒருவகைப் பலமாக அமைகின்றது. மூத்தபள்ளியைப் பொறுத்தவரையில், தானும் கணவனும் சேர்ந்து வாழும் தனிக்குடும்பத்தையே அடிப்படையில் விரும்புபவளாகக் காணப்படுகின்றாள். ஆயினும், தனது நோக்கம் நிறைவேறாத நிலையில், இளையபள்ளியையும் இணைத்து வாழக்கூடிய இணை வுக்குடும்பத்தை ஏற்கவும் அவள் பின்னிற்கவில்லை. தனது குடும்பத்தைச் சீர்குலையாது பாதுகாக்கவேண்டும் என்ற உணர்வே அவளிடம் முதன்மையாகக் காணப்படுகின்றது. அதற்கென, இளையபள்ளியைப் பள்ளனின் இன்னொரு மனைவியாக ஏற்றுக்கொள்வதற்கும் அவள் தயங்கவில்லை. அவளது முதன்மையான மனக்குறை, பள்ளன் தன்னை அலட்சியப்படுத் துகின்றான் என்பதேயாகும். ஆனால், பண்ணைக்காரனைப் பொறுத்தவரையில், தான் மேற்பார்வை செய்யும் பண்ணை வேலைகளுக்கு எவ்வகையிலும் தடையேற்படக் கூடாது என்பதே அவனது நோக்கமாகும். பள்ளனின் குடும்பத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு அவன் முனைவதற்கும், மூத்தபள்ளிக்கு உதவுவதற்கும் இதுவே காரணமாகும். மறுபுறத்தில், பள்ளனும் இளையபள்ளியும் தாம் மாத்திரம் ஒற்றுமையாகவும், தனிக்குடும்பமாகவும் வாழ்ந்தாற் போதுமென்றும், மூத்தபள்ளி அதிலே தலையிடவேண்டிய தேவை இல்லையெனவும் கருதுபவராகக் காணப்படுகின்றனர். இவ்வாறு, முழுமையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பக் கட்டுக்கோப்பையும், ஒற்றுமை யுணர்வையும் விழைபவர் ஒருபுறமும், தமது சொந்த நலனை மாத்திரம் விரும்புபவர் இன்னொருபுறமுமாக, முரண்பட்ட நிலையில் அவர்கள் காணப்படுகின்றனர். ஆயினும், இறுதியிற் பள்ளனின் இருமனைவியரிடையிலும் ஒற்றுமை ஏற்பட்டு, குடும்பக் கட்டுக்கோப்பும் காப்பாற்றப்படுகின்றது.

பள்ளு நூல்களிற் குடும்ப உறவுகள் முரண்பட்ட வகையிற் காட்டப் படுவதற்கான காரணம், அக்குடும்ப உறவுகளோடு தொடர்புடைய பிரச்சினை களை வெளிக்கொணர வேண்டுமென்ற நூலாசிரியர்களின் நோக்கமே எனலாம். பிரச்சினைகளைப் புலப்படுத்துவதனால், அவற்றுக்கான தீர்வையும் அவர்களே தெரிவிக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனையுணர்ந்து, நூலின் இறுதியில் குடும்ப ஒற்றுமையுணர்வைத் தீர்வாகத் தெரிவிக்கின்றனர். கணவன் மனைவியை அலட்சியம் செய்வது, குடும்பப் பொறுப்புக்களைத் தவிர்த்து நடந்துகொள்வது, தொழிலைப் புறக்கணிப்பது போன்ற செயல்கள் குடும்பக் கட்டுக்கோப்பும், ஒற்றுமையும் குலைவதற்குக் காரணமாக அமைவன என்பதைப் பள்ளு நூல்கள் தெளிவுறப் புலப்படுத்துகின்றன. குடும்ப உறுப்பினர் தம்முள் ஒற்றுமையுணர்வை வலுப்படுத்திக் கொண்டால், குடும்ப உறவுகள் சீர்குலையமாட்டா என்பதை, அவை சிறப்பாக உணர்த்துகின்றன. இவ்வகையில் நோக்குமிடத்து, பள்ளு நூல்கள் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் ஒருதுணை மணத்தைச் (Monogamy) சிறப்பாக வலியுறுத்துவதற்காகத் தோன்றியவை எனக் கொள்வதைவிட, குடும்ப உறவுகளிற் கூட்டுணர்வின் இன்றிய மையாமையை வலியுறுத்துவதை முதல் நோக்காகக் கொண்டவை எனக் கருதுவது பொருத்தமானது.

## (இ) சக்களத்திப் போராட்டம்

மனிதன் நாகரிக நிலையை நெருங்கத் தொடங்கிய காலகட்டத்தில் அறிமுகமாகியது, ஒருதுணை மணமாகும் (Monogamy).[40] இவ்வகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமுறை ஒருவனுக்கு ஒருத்தி என்ற அடிப்படையைக் கொண்டது. ஆயினும், ஆணாதிக்க சமுதாயத்தில், இது பெண்ணுக்கு வலியுறுத்தப்படும் அளவுக்கு ஆணுக்கும் இன்றியமையாதது எனக் கருதப்படுவதில்லை. இதனைப் பிரடெரிக் எங்கெல்சும், குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற தமது நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.[41] இதனாலேயே சி.சுப்பிரமணிய பாரதியும், "கற்பு நிலையென்று சொல்ல வந்தா ரிரு கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்"[42] என்று கூறவேண்டிய தேவை ஏற்பட்டது. இவ்வாறு, இம்மணமுறை ஆணுக்கு ஏற்படுத்திக்கொடுத்திருந்த ஒருவகை வசதி, சிலவேளைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரைக் கொண்டிருக்கவும் அவனுக்கு வாய்ப்பினை அளித்தது. இவ்வாய்ப்பினை ஆடவன் பயன்படுத்தும் போது, சக்களத்திப் போராட்டம் அக்குடும்பத்தில் வித்தூன்றுகின்றது. பள்ளு நூல்களும் பள்ளனின் இரு மனைவியரான மூத்தபள்ளி, இளைபள்ளி ஆகியோரின் வாயிலாகச் சக்களத்திப் போராட்டத்தினைச் சித்திரிக்கின்றன.

பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் பள்ளியர் இருவரும் உறவுமுறையிற் சக்களத்திகளாவர். சககிழத்தி என்பதே சக்களத்தி எனத் திரிபடைந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது. ஒரே குடும்பத்தில் இடம்பெறும் இரு சக்களத்திகளினதும் உறவுமுறையைக் கவனத்திற் கொள்ளுமிடத்து, அது போராட்ட முறையில் அமைந்த உறவாகவே காணப்படுகின்றது. அவர்களுக்கிடையில் அன்பின் அடிப்படையிலான உறவு காணப்படுவதில்லை. ஒவ்வொருவரும் தமது கணவன் தமக்கே உரியவன் எனவும், மற்றவருக்கு அவ்வுரிமை இல்லையென்றும் கருதுவர். இதுவே அவர்களது போராட்ட உறவுக்கு அடிப்படையாகவும் விளங்குகின்றது. பொதுவாக, சக்களத்திகளின் போராட்ட உறவுக்குப் பாலுறவும், பொருளாதாரமும் காரணங்களாக அமைவதைக் காணலாம்.[43]

இரு சக்களத்திகளிலும், மூத்தபள்ளி பள்ளனின் அதே ஊரைச் சேர்ந்தவளாகவும், இளையபள்ளி வேற்றூரைச் சேர்ந்தவளாகவும் இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரின் சமயங்களும் வேறுபடுதலும் உண்டு. அவ்வாறு இல்லையெனில், ஒரே சமயத்துக்குள்ளேயே வெவ்வேறு தெய்வங்களை வழிபடுபவராகவும் இருப்பர். இவ்வாறு, இளையபள்ளி வேற்றுரைச் சார்ந்தவள் என்பதை மூத்தபள்ளி அவளுக்குச் சுட்டிக்காட்டி, அவளது அந்நியத்தன்மையை உணர்த்துவதுண்டு. "மருதூர்ப்பள்ளி–நானும் தன்னூர் விட்டுன் போல ஒட்டுச் சாய்ப்பில் வந்தேனோ"[44] என மூத்தபள்ளி கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது. இவை மாத்திரமன்றி, "நானும் கொள்ள வந்த சக்களத்தி அல்லவோ நீயும்"[45] என மூத்தபள்ளி கூற, "அல்லவோ பள்ளனுனை ஆகாதெனத் தள்ளி வீட்டுக்(கு) அதிபதியென்றெனை வந்தன்புடன் கொண்டான்"[46] என இளையபள்ளி மறுமொழி பகர்வது, இருவரிடையேயும் காணப்படும் போட்டி மனப்பான்மைக்கும், போராட்ட உணர்வுக்கும் சான்றாகும். மேலும், மூத்தபள்ளி பள்ளனின் உறவினளாகவும் இருப்பதுண்டு. "அத்தை மகனவர் மாமன் பெற்ற சுதை நான்"[47] என்றும், "பள்ளன் மாமன் மக ளென்றென்னை மறித்துக் கொண்டான்"[48] எனவும் கூறப்படுவதை நோக்கலாம். இவர்கள் பெரும்பாலும் வெவ்வேறு இல்லங்களில் வாழ்பவராகக் காணப்படுகின்றனர். மூத்தபள்ளி பள்ளனது செயல்களைப் பண்ணைக்காரனுக்கு முறையிடும்போது, "இல்லத்திலுஞ் சற்றுமிரான்.... ஒல்லை பொழுதின்று மவளில்லம் பிரியான்"[49] எனவும், "சென்றவள் வீட்டிலே கிடப்பான்"[50] என்றும் கூறுபவை, சக்களத்திகள் இருவரும் வெவ்வேறு இல்லங்களில் வாழ்ந்தமையை உறுதிப்படுத்துகின்றன.

பள்ளு நூல்களின் ஆரம்பத்தில், இரு சக்களத்திகளினதும் தோற்றப் பொலிவுகள் வருணிக்கப்படுகின்றன. அவற்றை நுனித்து நோக்கினால், இருவரதும் வெவ்வேறு இயல்புகளும் அவற்றின்மூலம் புலப்படுத்தப்படுவதைக் காணலாம். மூத்தபள்ளியின் அமைதியான அழகும், இளையபள்ளியின் கிளர்ச்சி யூட்டும் அழகும் அவற்றின் வாயிலாகக் குறியீடு செய்யப்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக, திருமலைமுருகன் பள்ளில் இடம்பெறும் இரு பள்ளியரதும் வருணனைகளையும் நோக்கலாம். மூத்தபள்ளி பற்றிய வருணனை பின்வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குழல் மணங் கமழ்நறுமலர்த் தோப்போ
பளப ளென்றபித் தளைவளைக் காப்போ
குருக்க ணத்திருமாப்போ முறுவல்செய்
முருக்கிதழ்ச் சேப்போ
மழலையம் பசுங்கிளிமொழிப் பேச்சோ
அழகொழுகிய மஞ்சணைப் பூச்சோ
வண்ணக் கொங்கைகண் டிடைகுடி போச்சோ
என்னக்கை வீச்சோ"[51]

என்ற பகுதியில், அவளது அமைதியான அழகு வருணிக்கப் படுகின்றது. இளையபள்ளி பற்றிய வருணனை இதற்கு மாறாக அமைந்துள்ளது:

"தொண்டிக்கள் ளுண்ட சண்டையுஞ் செருக்கும்
கெண்டைக் கண்துயில் கொண்டையுஞ் சொருக்கும்
துலுக்குடன் முலை குலுங்கிய நடையும்
தலைப்பணி யுடையும்
தண்டிப் பெண்களுக் கிவள்துரைப் பெண்ணெனும்
கன்றிக் கென்றிடும் மொழியிசைப் பண்ணெனும்
சமத்தி கட்கடைச் சிமிட்டுமற் றெவரையும்
அட்டிடும் மட்டும்
கண்டச் சங்கிலி வடத்தொடு குடத்தனம்
மிண்டிக் கொண்டிசைந் தசைவது மதர்த்தெழு
கதக்களிற் றினைச்செழுங் கமுகிடைச் சேர்த்திடுங்
காட்சியும் இலங்க"[52]

அவள் தோன்றியமை கூறப்படுகின்றது. இவ்வருணனைப் பகுதியில், அவளது கிளர்ச்சியூட்டும் அழகும், தற்பெருமை, ஆடம்பரம், ஒழுக்கக்குறைவு முதலான அவளின் இயல்புகளும் உணர்த்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்களத்திகள் பற்றிய சித்திரிப்புக்களின் மூலமாகச் சில விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். மூத்தபள்ளி குடும்பநலனில் அக்கறையுள்ள வளாகவும், பண்ணையின் நன்மையில் ஆர்வமுள்ளவளாகவும், சுயநலம் குறைந்தவளாகவும் விளங்குகின்றாள். இளைபள்ளியோ, கணவன் தன்னைச் சார்ந்து இருக்கவேண்டுமென விரும்புவளாகவும், குடும்பநலனில் அக்கறையற்றவளாகவும், பண்ணையின் நன்மையில் ஆர்வமில்லாதவளாகவும், சுயநலப்போக்கு உள்ளவளாகவும், ஆடவரைக் கவரும் நோக்குக் கொண்ட வளாகவும் விளங்குவதைக் காணலாம். இருவர் பற்றிய இத்தகைய சித்திரிப்பு க்களை நோக்குமிடத்து, அவை முறையே குடும்பப் பெண்ணொருத்தியையும், பொதுமகள் ஒருத்தியையும் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன. இவ்விருவகைப் பெண்களையும் முன்மாதிரியாகக் கொண்டே இரு சக்களத்திகளையும் நூலாசிரியர்கள் படைத்துள்ளனர் எனக்கொள்வதும் தகும். இன்னொரு வகையிற் கூறுவதாயின், இவ்வாறு வேறுபட்ட இயல்புகளைக் கொண்ட பெண்களைச் சமுதாயத்துக்கு இனங்காட்டுமுகமாகவும் நூலாசிரியர்கள் இவ்விரு பாத்திரங்களையும் உருவாக்கியிருக்கவேண்டும் எனக் கருதுவதற்கும் இடமுண்டு. மேலும், பள்ளர் தலைவனின் குடும்பச் சிக்கலைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதற்கு, இத்தகைய இருவேறு தன்மைகள் கொண்ட சக்களத்திகளின் பாத்திர வார்ப்பு பெரிதும் துணைசெய்துள்ளது.

மேலும், மூத்தபள்ளி பற்றிய வருணிப்பில், "பழியெதிர் கொண்ட பொங்க லாய்ப்போ இளைய பள்ளியைப் பார்க்குங் கலாய்ப்போ"[53] எனச் சக்களத்திபால் அவளுக்கு இயல்பாகவுள்ள வெறுப்பு உணர்த்தப்படுகின்றது. இவை மாத்திர மன்றி, "திருமலை முத்தையன் பண்ணைக் குடும்பனுக்கன்புள்ள முதற்குடியாள் பண்ணையிற் பள்ளத்தி முனந் தோன்றினளே"[54] என மூத்தபள்ளியையும், "பண்ணைப் பண்ணைக்கு வாய்த்திடும் பள்ளனுக்கினிய நன்னகப் பள்ளத்தியெனும் இளையாள் தோன்றினளே"[55] என இளையபள்ளியையும் நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். இவை, பள்ளனின் உள்ளத்தில் எந்தநிலையில் இரு மனைவியரும் இடம்பெற்றுள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைக் குறிப்பாகச் சுட்டுகின்றன. மேலும், பள்ளன் கிளர்ச்சியூட்டும் புற அழகில் மாத்திரமே மயங்குபவன் என்பது, பள்ளியர் இருவரதும் வருணை னைகள் மூலம் குறிப்பாகப் புலப்படுத்தப்படுகின்றது. "இளையவள் இளமையைக் குறித்தான் முதிருமென் வளமையைப் பறித்தான்"[56] என மூத்தபள்ளி கூறுவதும் இதனை உணர்த்துகின்றது.

இளையபள்ளியின் கிளர்ச்சியூட்டும் அழகு பள்ளனைக் கவர்ந்துள்ளமையை ஞானப்பள்ளு தவிர்ந்த அனைத்துப் பள்ளு நூல்களும் குறிப்பாகப் புலப்படுத்துவதைக் காணலாம். சான்றாக, கதிரைமலைப்பள்ளிற் பண்ணைக்காரன் வாயிலாகப் பின்வருமாறு அவளின் இயல்புகள் புலப்படுத்தப்படுகின்றன:

"அருக்குவாள் சற்றே விழிக்குமை யெழுதுவாள்
அழகான கூந்தலை யள்ளி முடிவாள்
செருக்குவாள் சற்றே செல்லங்கொண் டாடுவாள்
தேனுடன் கொஞ்சம் பாலுங் கலப்பாள்
உருக்குவா ளூரில் பள்ளரெல் லோரையும்
உச்சியாம் பொழு தூணுக் கழைப்பாள்."[57]

இதன்மூலமாக, இளையபள்ளியின் ஒப்பனையையும், நடத்தையையும் நூலாசிரியர் உணர்த்துகின்றார்.

மேலும், செங்கோட்டுப்பள்ளில், பள்ளியர் இருவரும் தம் கணவனிடம் தமக்குத் தேவையான பொருட்களைக் கேட்குமிடத்தும், இருவரினதும் இயல்புகள் தெளிவாகின்றன. மூத்தபள்ளி பெரும்பாலும் இறைவழிபாட்டுக்குரிய பொருட்களையே கேட்க, இளையபள்ளி தனக்கும், தன் சுற்றத்தார்க்கும் சுகபோக வாழ்க்கைக்குரிய பொருட்களைக் கேட்பதாகக் கூறப்படுகின்றது. இதன்மூலமும், மூத்தபள்ளி நல்லியல்புகள் கொண்ட குடும்பப் பெண்ணாகவும், இளையபள்ளி ஆடம்பர விரும்பியாகவும் விளங்குவது புலனாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்களத்திகளிடையே போட்டி மனப்பான்மையை வளர்ப்பதில், தம் கணவன் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் முன்னுரிமையும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இரு சக்களத்திகளும் கணவனிடத்துத் தமக்குள்ள முன்னுரிமையைக் காட்டிக்கொள்வதில் முனைப்பாக இருப்பர். அதுவே தமது பெருமையைக் காப்பாற்றும் என அவர்கள் கொள்வதுண்டு. இவ்வகையில், கணவனது முதல் மனைவி, தானே முதலில் குறிப்பிட்ட அவனைத் திருமணம் செய்தவள் என்ற தனது உரிமையை வெளிப்படுத்த முயற்சிப்பாள். அதேபோன்று, இரண்டாவது மனைவி, தனக்குரிய முன்னுரிமையை வேறு வகையிற் புலப்படுத்துவள். தனது இளமையும், அழகும் கணவனைக் கவர்ந்தமையாலேயே, அவன் தன்னைத் திருமணம் செய்துகொண்டான் என்று தன்னைப் பெருமைப்படுத்திக்கொள்ள முயல்வள். இது ஒருவகையில், முதல் மனைவியின் முதுமையை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவதாகவும் அமையும். பள்ளு இலக்கியத்திலும், பள்ளியர் இருவரதும் சக்களத்திப் போராட்ட வளர்ச்சியில், இத்தகைய முன்னுரிமை தொடர்பான போட்டி மனப்பான்மை இடம்பெறுவதைக் காணலாம். இவ்விலக்கியத்திற் கதை வளர்ச்சிக்கு முன்னர், சக்களத்திகள் இருவரும் நாடகபாணியிலே தம்மைத்தாமே அறிமுகப்படுத்திக் கொள்வதும் உண்டு. அத்தகையள வேளையில், ஒவ்வொருவரும் பள்ளனுக்குத் தாமே மிகவும் நெருக்கமானவர் எனக் காட்டித் தமது உரிமையை வலியுறுத்துவர். சான்றாக,

“..........................அந்நாளில்
ஒருமிக்கக் கூடி வந்த
கொத்தடி மைக்குடி யில்
உள்ளவள் பள்ளனுக்(கு)
உரிமை பூண்டே”[59]

எனவும், “பத்திலே பதினொன்றாக வைத்தானில்லைக் குடும்பன் பண்டே சரடு கட்டிக் கொண்டான் என்னை”[60] என்றும் மூத்தபள்ளி கூறுவதையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொத்திவந் தவளல்ல நத்திவந் தவளல்ல

தொடர்ந்து தொடர்ந்து பள்ளன் நடந்ததனால்

பெற்றார் பிறந்தவரும் உற்றார் அறிய அவன்

பெண்டெனச் செய்தாரெனையும் கொண்டிவன் வந்தான்"[61]

எனவும், "கஞ்சிக்குந் தன்னிலேதான் கெஞ்சிப் புகுந்தவளல்ல கண்டாசைப் பட்டே கொள்ளும் பெண்டானவள்"[62] என்றும் இளையபள்ளி குறிப்பிடுவதையும் நோக்கலாம். இதன்மூலமாக, இருவரதும் போட்டி மனப்பான்மை புலப்படுத்தப்படுகின்றது. மூத்தபள்ளி தானே முதன்முதலிற் பள்ளனை மணந்தவள் என்ற வகையிலும், இளையவள், பள்ளன் தன்மீது கொண்ட விருப்பத்தினாலேயே தன்னை மணந்தவன் என்ற வகையிலும் தமது உரிமைக்குரல்களை எழுப்புகின்றனர்.

சிலவேளைகளில், மூத்தபள்ளி தானே பள்ளனுடன் திருமண உறவு கொள்ளத்தக்க சாதிக்குழுவைச் சார்ந்தவள் எனக் குறிப்பிட்டு, தனது உரிமையை வலியுறுத்துவது உண்டு. எடுத்துக்காட்டாக, செங்கோட்டுப்பள்ளில் மூத்தபள்ளி கூறுபவற்றை நோக்கலாம். அவள் பள்ளனுக்கும், தனக்குமிடையிலான உரிமைத்தொடர்பு பற்றிக் கூறுமிடத்து, தங்கள் இருவரின் குடும்பங்களிடையே நெடுங்காலமாகத் திருமணத் தொடர்புகள் நிலவிவந்தமையைக் குறிப்பிடுவள். இதன்மூலமாகத் தன் உரிமை இளையபள்ளியினதை விடவும் நெருக்கமானது எனவும் புலப்படுத்துகின்றாள். பின்வரும் பாடல் மூலமாக இதனை உணர்ந்து கொள்ளலாம்:

"குன்றிலு றைசிவனை யென்றும் பணிந் தெங்கட்குள்

கொள்ளக் கொடுக்கவந்த பள்ளரிவர்கள்

அன்றிது நாள்வரைக்கும் நன்றெனவும் சம்மந்தம்

ஆடியே நல்லுறவு கூடியிருப் பார்

அன்று யிவளுரிமை யென்றெனை மாலையிட்டார்."[63]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு, மூத்தபள்ளி கூறுவதன் வாயிலாக, இளையபள்ளி வழிபடும் தெய்வம் வேறாக இருப்பதாலும், பள்ளனுடன் திருமண உறவு கொள்ளத்தக்க சாதிக்குழுவை அவள் சாராது இருப்பதனாலும் பள்ளனுக்கு உரிமையுடையவளன்று என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகின்றாள். அதாவது, இளையபள்ளி பள்ளர் சமூகத்துப் பெண்ணேயெனினும், பள்ளனுடன் திருமண உறவு கொள்ளத்தக்க ஒரே சாதிக்குழுவில் அவள் அடங்கவில்லை என்பது விளங்குகின்றது. மேலும், திருமலைமுருகன் பள்ளில், நீண்டகாலமாகத் திருமலைமுருகனுக்குப் பூசை நிகழ்த்தி வந்த பண்ணைப் பள்ளர் கோத்திரத்திற் பெண்ணடிமையாகத் தான் இருப்பதாக மூத்தபள்ளியும்,[64] தன்தாய், தந்தையின் முன்னோர் நீண்டகாலமாகக் குற்றாலர் பண்ணையில் வாழ்ந்ததாகவும், திரு மலைப்பள்ளன் தானாக வந்து தன்னை மணமுடித்ததாகவும் [65] இளையபள்ளியும் கூறுவதைக் காணலாம். இளையபள்ளியைப் பொறுத்தவரை, தானே பள்ளனுக்குப் பொருத்தமான மனைவி என்ற தற்பெருமை எப்போதும் காணப்பட்டது. இதனை, "அவனுக்கேற்ற பெண்டிளையாளு நானே"[66] எனக் கூறுவதன் வாயிலாக உணரலாம். ஒவ்வொருவரும் தம்மைப் பற்றிய அறிமுகங்களில், பள்ளர் தலைவனான குடும்பனுக்குத் தாமே நீண்டகாலமாக உரிமையுடையவர் எனக் காட்டிக்கொள்ள முற்படுகின்றமை தெளிவாகின்றது.

இவ்வாறு, இரு பள்ளியரதும் உரிமை வலியுறுத்தலில் ஒரு விடயத்தினை அவதானிக்க முடிகின்றது. மூத்தபள்ளி காதல் மணத்தையும், இளையபள்ளி ஏற்பாட்டு மணத்தையும் கண்டிப்பதை, மறைமுகமாக இருவரது உரிமைக் குரல்களும் புலப்படுத்துகின்றன. தமிழ்ச்சமுதாயத்தின் வரலாற்றை நோக்குமிடத்து, இவ்விருவகை மணமுறைகளுக்கும் இடையே ஓர் இடைவெளி இருந்து வந்தமையைக் காணமுடிகின்றது. இலக்கியங்களிற் காதல் மணத்தின் பெருமை கூறப்பட்டிருப்பினும், நடைமுறையில் ஏற்பாட்டு மணமுறைக்கே மதிப்பு அளிக்கப்பட்டிருந்தது. பள்ளு நூலாசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் ஏற்பாட்டு மணமுறையின் ஆதரவாளர்களாக விளங்குவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை, மூத்தபள்ளியின் பாத்திர அமைப்புக்கு அவர்கள் முதன்மை அளித்தி-ருப்பதன் மூலமாக உணரத்தக்கதாகவுள்ளது.

சக்களத்திப் போராட்டத்தில் எப்போதுமே பெரிதும் பாதிப்புக்கு உள்ளாபவள், மூத்த சக்களத்தியேயாவள். கணவன் பெரும்பாலும் இளைய மனைவியின் பக்கமே சார்ந்திருப்பதன் காரணமாக, தனது பெருமையைப் பேணவேண்டிய நிலைப்பாடு மூத்தமனைவிக்கு ஏற்படுவதுண்டு. அதற்கேற்ப, தனது நிலையை உயர்த்திக்காட்ட வேண்டுமென்பதற்காக, தனது இளைய சக்களத்தியை "வைப்பாட்டி" என இழித்துக் காட்டுவதற்கு முயற்சிப்பதுண்டு. சமுதாயமும் எப்போதும் மூத்த மனைவியையே ஒருவனின் சட்டபூர்வமான மனைவியாகக் கருதும். அதன் விளைவாக, அது இளைய மனைவியை இழிந்த நோக்கிலேயே காண்கின்றது. பள்ளு இலக்கியத்திலும் இதே நிலைப்பாட்டினைக் காணலாம்.

சக்களத்திப் போராட்டத்தில் தான் பாதிப்புக்குள்ளாகும் நிலை காணப் படுவதனால், மூத்தபள்ளி தனது நிலையை எவ்வாறேனும் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்ற துடிப்புணர்வு கொண்டவளாகக் காணப்படுகின்றாள். இதன் பயனாக, தன் வாழ்விலும், சொத்திலும் பங்கு கொண்ட இளைய சக்களத்தியை வெறுக்கவேண்டிய தேவை அவளுக்கு ஏற்படுகின்றது. அதனால், இளைபள்ளியை வாய்ப்பு நேரும் போதெல்லாம் பள்ளனின் "வைப்பு" என்றும், தகுதியின்றித் தன் கணவனை மயக்கியவள் எனவும் எடுத்துரைக்கின்றாள். சான்றாக, "வைப்பதாய் வந்த மப்புச் சிறுக்கி,"[67] "மாயக்கள்ளி தென் பாண்டியப் பள்ளியை மையலால் வைப்பு வைத்த பிறகு நாயைக் கண்ட முயலென வென்குச்சை நாடா யென்னை யெங்கேயென்று தேடாய்,"[68] "வைப்புக் கூத்தியான நன்னகரப் பள்ளிக்குப் பங்கிங் கேது"[69] என "வைப்பு" என்ற சொல்லால் இளையபள்ளியைச் சுட்டுவதைக் காணலாம். இளையபள்ளி பள்ளனின் உள்ளம் கவர்ந்த மனைவியாக இருப்பினும், சமுதாயத்தில் அவள் அவனது "வைப்பு" ஆகவே கருதப்பட்டாள். இதனை, "வைப்பாய் நீ வந்த வரலாறுங் கூறு"[70] எனப் பண்ணைக்காரன் கேட்பதன் வாயிலாக உணரமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இளையபள்ளியைக் கணவன் துணைவியாக ஏற்றுக்கொண்டமை, மூத்தபள்ளியிடத்துப் பொறாமையுணர்வினையும், தனது நிலை பற்றிய தாழ்வுச்சிக்கலையும் ஏற்படுத்துகின்றது. அதனால், தனது குணவியல்புகளோ, அல்லது பாலுறவு தொடர்பான காரணங்களோ தன் கணவன் இன்னொருத்தியை நாடுவதற்கு ஏதுவாக அமையவில்லை என்பதை வெளியுலகுக்குத் தெரிவிப்பதில் அவள் குறியாக இருக்கிறாள். தன்மீது குறையெதுவும் இல்லாதிருக்கவும், தன் கணவன் இன்னொருத்தியை நாடியமைக்குக் காரணம், அவள் அவனுக்கிட்ட வசிய மருந்தே என வெளியுலகை நம்பவைக்க முயற்சிக்கின்றாள். சான்றாக, "அவள் இட்ட மருந்தால் மயங்கிவிட்டான் காணாண்டே,"[71] "வசமாக்க வுன்னைப்போல் மருந்தார் வல்லார்,"[72] "மந்திரமுந் தந்திரமும் மருதுார்ப் பள்ளி உன்போல் வகை வந்தால் பள்ளனுமென் வசமாகானோ"[73] என மூத்தபள்ளி கூறுபவற்றை நோக்கலாம். இளையபள்ளி பள்ளனுக்கு ஊட்டிய மருந்து அவனை மிகவும் மாற்றிவிட்டதாகவும் மூத்தபள்ளி குறிப்பிடுவதைக் காணலாம்: பின்வரும் பாடல் இதனைக் காட்டுகின்றது:

"ஊட்டிய மருந்தே–பள்ளனை
வாட்டவே துரும்பா–யிரவினி
லுறக்கமுந் துறந்தான்–சோற்
றிறக்கமும் மறந்தான்–வேண்டுங்
கோட்டியே பிடிப்பான்–ஒன்றைச்
சாட்டியே யடிப்பான்–களப்பொலி
கூட்டியு மறியான்–ஏரைப்
பூட்டியு மறியான்–பண்ணை
மாட்டையுந் தேரான்–நின்ற
சூட்டையுஞ் சாரான்–உங்கள்
வயலையும் பாரான்–என்றன்
மயலையுந் தீரான்–மெல்லக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிலே நடப்பான்–சென்றவள்
வீட்டிலே கிடப்பான்–வெந்த
கரிக்கட்டை யானான்–நிலத்திலுந்
தரிக்கொட்டா தாண்டே." [74]

இவ்வாறு, மருந்து இட்டே தனது கணவனை இளைய பள்ளியினால் மயக்க முடிந்தது என்று மூத்தபள்ளி கூறுவதற்குக் காரணம் உண்டு. பொது–வாக, சமுதாய மரபில், பொதுமகளிரே இவ்வாறு ஆடவருக்கு மருந்திடுபவர் என்ற கருத்து உண்டு.[75] இதனையே மூத்தபள்ளியும் வலியுறுத்த முனைகிறாள். அவளது இத்தகைய எண்ணப்போக்கைப் பிரதிபலிப்பதாகவே, "தேடி வைத்தார் என் கணவர் கைப்பொருளெல்லாம் தேவதாசிபோல் பறித்து செலவு செய்தாய்"[76] என்ற அவளது கூற்றும் அமைந்துள்ளது. இளையபள்ளியை அவள் ஒரு தாசியாகவே கருதுவதை இதன்மூலம் உணரமுடிகின்றது. இவ்வடிப் படையில், மூத்தபள்ளி மருந்து தொடர்பாகக் கூறும் செய்திகளை நோக்குமிடத்து, தனக்குப் போட்டியாக அமைந்த சக்களத்தியைச் சமுதாயத்தின் முன் அவமதிக்க வேண்டும் என்ற ஆவேச உணர்வே அவளை இவ்வாறு குற்றம்சுமத்தச் செய்கின்றது என்பதை இலகுவில் விளங்கிக் கொள்ளலாம்.

இளையபள்ளியே மூத்தபள்ளியின் போராட்ட இலக்கு என்பது, பள்ளனது செயல்கள் குறித்துப் பண்ணைக்காரனிடம் அவள் முறையிடும்போது மேலும் தெளிவாகின்றது. பள்ளன் உண்மையில் மோசமானவன் அல்லன், இளையபள்ளி வந்தபின்னரே அவனது குணமும், செயல்களும் மாற்றமடைந்தன என, பள்ளனின் மாற்றத்திற்கான காரணத்தை விபரிக்கிறாள். "வன்மத்தைப் பார்த்தால் அவன் இலக்கல்லவே ஆண்டே தென் மருதூரிற் பள்ளியால் வந்த பொல்லாப்புக் காண் ஆண்டே,"[77] "மாயக்கள்ளி குள்ளியான சீரங்கப்பள்ளி வந்த வன்றே பள்ளன் மிகச் சிந்தை வேறானான்"[78] "திரட்டுப் புரட்டுக் காளல்ல பள்ளனும் முரட்டுச் சிறுக்கி பொருட்டினால் வந்தது"[79] எனத் தன்னைப் பொறுத்தவரையிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளனின் குற்றமின்மையைப் புலப்படுத்தி, தன் சக்களத்தியைக் குற்றவாளியாக்குகின்றாள். மேலும், பள்ளன் தனது தொழிலைச் செய்யவிடாது தடுப்பவள் இளையபள்ளியே என்பதையும் மூத்தபள்ளி தெளிவாகப் பண்ணைக்காரனிடத்துத் தெரிவிப்பதுண்டு.

"பள்ளனை வேலை கொளவழைத் தாலோ
பாயி னாற்சுற்றி மாயமாய் வைத்தே
கள்ள நாடக மாடியே தேடிநான்
கண்டி லேனிந்த மண்டலத் தென்பாள்"[80]

என்னும் மூத்தபள்ளியின் கூற்று இதனைத் தெளிவுறுத்துகின்றது. இவை, இளையபள்ளியால் அவளுக்கிருந்த வெறுப்புணர்வை மேலும் வெளிப்படுத்துகின்றன. இவற்றோடு, தனது மனம் நொந்த நிலையையும் அவ்வப்போது பண்ணைக்காரனுக்கு முறையிடுவதன் வாயிலாக அவள் தெரிவிப்பள். "பழைய தாரமென் றென்னையுஞ் சேரான் சட்டைக்காரியை விட்டுப் பிரியான்"[81] எனப் பறாளைவிநாயகர் பள்ளிற் குறிப்பிடப்படுவது, அவளது இத் தகைய மனநிலையைத் தெளிவுபடுத்துகின்றது.

மேலும், குடும்பத்தை ஒற்றுமையாக்குவதற்கெனத் தான் செய்த முயற்சியையும் மூத்தபள்ளி புலப்படுத்தி, அது இளையபள்ளியினாலே தோல்வியில் முடிந்தமையையும் எடுத்துரைத்து வருந்துவள்.

"எனதிளை யாள் எனவே-அநுதினம்
இருந்திடு வோமென வருந்தினனே
இனபேத கலிகடம்-செய்துபழி
எடுத்தா ளேசண்டை தொடுத்தாளே"[81அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவள் தனது சக்களத்தி பற்றிக் குறிப்பிட்டு வேதனைப்படுவதிலிருந்து, எந்தளவுக்கு அவளது உள்ளம் பாதிப்படைந்துள்ளது என்பதனை விளங்கிக் கொள்ளலாம். சக்களத்திப் போராட்டத்துக்கே காரணமாக அமைந்தவள் இளையபள்ளியே என்பதனையும் அவளது கூற்று தெளி வுறுத்துகின்றது.

சக்களத்திப் போராட்டம் மூத்தபள்ளியிடத்து உளவியல் முறையில் மிகுந்த பாதிப்பினை ஏற்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது. "எந்நேரம் சக்களத்திப் போராய் இனத்தார் நகைக்க இருக்கவோ பள்ளா!"[82] என்றும், "என்ன விதி யெந்தனுக்குக் காலமுட்டவும் சண்டையே பிடித்திருக்க வெட்க மாகுதெனக்கு"[83] எனவும் மூத்தபள்ளி கூறுவதிலிருந்து, அவளது பாதிப்புணர்வை விளங்கிக்கொள்ளலாம். இவ்வாறு, சக்களத்தியரிடையே காணப்பட்ட பிரச்சினைகளின் தாக்கம், அவளி டத்துப்பழிவாங்கும் உணர்வினைத் தூண்டுவதைக் காணலாம். இத்தகைய அவளது பழிவாங்கும் உணர்வு, பண்ணைக்காரன் மூலமாகக் கணவனுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்கச் செய்கின்றது. மூத்தபள்ளியின் இச்செயலை ஊன்றிக் கவனிக்குமிடத்து, தன்னைப் பிரிந்து வாழும் கணவன், இளையபள் ளியையும் பிரிந்து வாழுமாறு செய்வதற்கான முயற்சியாகவே அது தோன்று கின்றது. இதன் மூலமாகக் கணவனை மட்டுமன்றி, இளையபள்ளியையும் பழிவாங்கி விட்டதாக அவளுக்கு ஒருவகை மனநிறைவு ஏற்படுகின்றது. இவ்வாறு செய்வது, இளையபள்ளியின் செருக்கினை அடக்கும் என்பது அவளது கருத்தாகும். மேலும், தன் கணவன் திருந்துவதற்கு அது வழிய மைக்கும் என அவள் நம்புகிறாள். இதனை, "கோதை யிளையவள் கொட்டமடங்கவும் போதமுறும் பள்ளன் புத்தி வருகவும்.... போட்டிடு மாண்டே -குட்டையில் போட்டிடுமாண்டே!"[84] என்ற மூத்தபள்ளியின் வார்த்தைகள் உறுதிப்படுத்துகின்றன. ஆயினும், கணவன் தண்டனை அனுபவிக்கும்போது ஏற்படும் அவளது குற்றவுணர்வும், கணவனின் வேண்டுதலும், தனக்கு முதன்மை அளிக்கப்படும் என்பதான அவனது உறுதிமொழிகளும் தண்டனை யினின்றும் பள்ளனுக்கு விடுதலை கிடைப்பதற்கு மூத்தபள்ளியை உதவச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றன. அவ்வாறு, அவள் பள்ளனுக்கு உதவுவதற்காகப் பண்ணைக்காரனிடம் சென்று வேண்டும்போதும், சக்களத்திபால் தனக்கிருந்த வெறுப்பைப் புலப்படுத்தத் தவறுவதில்லை. "மேய சீரங்கப் பள்ளியிடத்தில் வெறுப்பினாலன்று விண்ணப்பஞ் செய்தேன்"[85] என்று மூத்தபள்ளி கூறுவதன் வாயிலாக இதனை உணரலாம். இவற்றின் மூலமாக, தனது குடும்ப வாழ்விற் பாதிப்பினை ஏற்படுத்த முயன்ற இளைய சக்களத்தியிடத்து அவள் கொண்டிருந்த வெறுப்புணர்வு புலனாகிறது.

சக்களத்திப் போராட்டத்தில் இளைய சக்களத்தி பெரும்பாலும் பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டிய தேவைகள் இருப்பதில்லை. குடும்பத்தில் அவளின் புதிய வரவு, கணவனுக்கும், மூத்த மனைவிக்குமிடையே சச்சரவுகளை ஏற்படுத்தும். ஆனால், அவளுக்கும் கணவனுக்குமிடையே சுமுகமான இல்லறவாழ்க்கை இடம்பெறும். அதனால், அவர்களிடையே பிரச்சினைகள் தோன்றப் பெரிதும் வாய்ப்பிருப்பதில்லை. கணவன் புதிதாக வேறொரு பெண்ணையும் மனைவியாக்க முயலுமிடத்து, அவர்களுக்குட் பிரச்சினைகள் தோன்றத் தொடங்கும். இது சக்களத்திப் போராட்டத்திற் காணப்படும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இளையபள்ளியைப் பொறுத்தவரையில், பள்ளனது விருப்பு அவள்மீது தொடர்ந்து இருப்பதனால், சக்களத்திப் போராட்டம் அவளைப் பொதுவாகப் பாதிப்பதில்லை. அவளது நோக்குக்கும், போக்குக்கும் ஏற்பப் பள்ளன் நடந்து கொள்வதனால், கணவன் மனைவியரிடையே குடும்பப் பிரச்சினைகள் இடம்பெறுவதில்லை. ஆயினும், பள்ளன் தண்டனை அனுபவிக்கும்போது ஏற்படும் பிரிவுணர்வு அவளுக்குப் பிரச்சினையாகின்றது. இத்தகைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மூத்தபள்ளி பற்றிக் கணவனிடம் கோள் சொல்லி, அவள்மீது அவன் மேலும் வெறுப்படையச் செய்வதற்கு முயற்சிப்பதுண்டு. பின்வரும் அவளது கூற்றுக்கள், அவளின் நோக்கினை எடுத்துக்காட்டுகின்றன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பழிகாரி முக்கூடற் பள்ளி—சரடு செய்த
பள்ள னென்றுமுகம் பாராமல்
வழியே போகுங் களவெல்லாம்—தலையின்மேல்
வலித்திட்டுப் பற்றுக் குறித்தாள்" 86

'................... பண்பைப்
பள்ளி—சரடுசெய்த
கணவனுக்குச் சாடி சொல்லிக்
கண்ணிற் கண்டாள் இக்கோலங்
கள்ளி
தண்ணகையால் உயிர்வதைக்கும்
கொல்லிமலைப் பாவைகுணம்
படித்தாள்—சண்டாளி
தடந்தோளி லிருந்துசெவி
தன்னைக்கடித்தாள் நெஞ்சிற்கொண்டை
முடித்தாள்.87

மேலும், பள்ளனைத் தன் இல்லத்தில் ஒளித்து வைத்துவிட்டு, மூத்தபள்ளிமீது பழிசுமத்த முயற்சிப்பதும், சக்களத்திபால் அவள் கொண்ட வெறுப்புணர்வின் வெளிப்பாடேயாகும். சான்றாக, பின்வரும் பாடலை நோக்கலாம்:

"குடிலிற் கிடந்த பள்ளனை—முக்கூடற்பள்ளி
கூப்பிட் டெழுப்பி முந்தா நாள்
விடியப்போ வேலையிலென்றாள்—அவனும் போனான்
வெள்ளமும் மேல்வரத் தாச்சு
கடினப் பிரவத்தி ஏதோ—திரும்பிவரக்
கண்டிலேன்' இன்று மூன்றுநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைக்கு நேற்றி ராவெல்லாம்–உறக்கமில்லை
அழகர் அறிவார்கா ணாண்டே" [88]

இளையபள்ளியின் இத்தகைய கூற்று, தனது மூத்த சக்களத்திமீது அவள் கொண்டிருந்த வெறுப்புணர்வினை உணர்த்துகின்றது.

இவை மாத்திரமன்றி, பள்ளன் மாடுமுட்டியதாலோ, அல்லது கொழுதைத்ததாலோ வீழ்ந்து மூர்ச்சையாகக் கிடக்கும்போதும் இளையபள்ளியின் கோபத்துக்கு இலக்காக மூத்த சக்களத்தியே விளங்குகின்றாள்.[89] சான்றாக, "முக்கூடல் சதுரி பார்த்துச் சிரிக்கவோ கிடந்தாய்,"[90] "மூத்தபள்ளி சக்களத்தியாகிவிட்ட முறையோ?"[91] என அவள் குறிப்பிடுவதை நோக்கலாம். பொதுவாக, தன் சக்களத்தியை அவமதிப்பதும், கணவனை அவளிடம் அணுகவிடாமற் செய்வதும் அவளது போராட்ட நோக்கை வெளிப்படுத்துகின்றன.

இரு சக்களத்தியருக்கிடையிலான இத்தகைய போராட்ட உணர்வினை அவதானிக்கும் போது, மூத்தபள்ளி இளையபள்ளி மீது வெறுப்புணர்வு கொண்டவளாக இருந்தபோதிலும், ஓர் எல்லைவரையிலேயே அதனைக் கொண்டிருந்தாள். அதாவது, கணவன் பண்ணைக்காரன் மூலமாகத் தண்டனை பெறாதிருப்பின் திருந்தமாட்டான் எனவும், அவனுக்கு அளிக்கப்படும் தண்டனை இளையபள்ளியையும் பாதித்து, அவளும் திருந்துவதற்கு வாய்ப்பு ஏற்படும் எனவும் கருதியிருந்தாள். பிரிவு வாழ்க்கையைத் தன்னைப்போன்று, தன் சக்களத்தியும் உணரவும், அனுபவிக்கவும் வேண்டும் என்ற நோக்கு, மூத்தபள்ளியிடம் காணப்பட்டது. ஆயினும், குடும்பம் சிதையும் அளவுக்குச் சக்களத்திப் போராட்டத்தை நீடிப்பதற்கு அவள் விரும்புவதில்லை. ஓரளவுக்கு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை அவளிடம் உண்டு. ஆனால், இளையபள்ளியின் போராட்ட உணர்வு அத்தகையதன்று. எந்தவொரு கட்டத்திலும், மூத்தபள்ளியையும் இணைத்து வாழவேண்டும் என்ற நோக்கு அவளிடம் சிறிதும் இருந்ததில்லை. பள்ளனின் மோக உணர்வு தன்மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையாது இருப்பதனால், தான் எக்கட்டத்திலும் பாதிக்கப்படப் போவதில்லை என்ற இறுமாப்பு அவளிடம் காணப்பட்டமையே இதற்குக் காரணமாகும். அதனால், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடன் அவள் ஒருபோதும் நடந்துகொண்டதில்லை. இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து, சக்களத்திப் போராட்டத்தினாலே பாதிக்கப்படாது, அதற்குப் பங்களிப்புச் செலுத்துபவளாக இளையபள்ளி விளங்குவதை அவதானிக்க முடிகின்றது.

## (ஈ) சக்களத்திப் போராட்டத்திற் கணவனின் நிலைப்பாடு

பொதுவாக, ஒருவனுக்கு ஒருத்தி என்பதே சமுதாய ஒழுங்கு முறையாக அமைந்துள்ளது. இதற்கு மாறாக, ஆடவன் தனது மோகத்தின் காரணமாக, ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரைக் கொண்டிருக்கும்போது, அவனது எதிர் பார்ப்புக்களை விடவும், பிரச்சினைகளே அதிகமாக இருப்பதுண்டு. "இரண்டு பெண்டாட்டிக்காரன்பாடு திண்டாட்டம்" என்ற பழமொழியும் இதனாலேயே ஏற்பட்டது. ஆயினும், அவனது குடும்ப வாழ்வு பிரச்சினைக்குள்ளாவதற்கும், சக்களத்திகளிடையே போராட்டம் தலைதூக்குவதற்கும் அவனே காரணகர்த்தாவாக விளங்குகின்றான் என்பதைப் பெரும்பாலும் உணர்வதில்லை. தன்னை அறியாமலேயே கணவன் மனைவியர் தொடர்பாகப் பக்கச்சார்பு கொண்டவனாக மாறும்போது, சக்களத்திகளிடையே போராட்ட உணர்வு அதிகரிப்பதுண்டு.

பள்ளு இலக்கியத்தின் தலைமைப் பாத்திரமாகிய பள்ளன், சக்களத்திப் போராட்டத்தின் மையமாக விளங்குகின்றான். பொதுவாக, இரு மனைவியரைக் கொண்ட கணவன் படும்பாட்டினை அவனது நிலை உணர்த்துகின்றது. இதனை, "மள்ளர் குலத்தின் வரினும்இரு பள்ளியர்க்கோர் பள்ளக் கணவனெனின் பாவனைவே றாகாதோ"[92] என முக்கூடற்பள்ளு கூறுகின்றது. மூத்தமனைவியும், இளையமனைவியும் வெவ்வேறு இயல்புகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவராக இருப்பதனால், அவனது நிலையும் பிரச்சினைக்குரியதாகவே விளங்குகின்றது. அதேவேளை, அவனது இயல்பான குறைபாடுகளே சக்களத்திகளிடையே போராட்டம் வளரவும், வலுப்பெறவும் அடிப்படையாகின்றன. முக்கூடற்பள்ளில் மூத்தபள்ளியின் கூற்றாக அமையும் பின்வரும் பாடல், பள்ளனின் இயல்பினைத் தெளிவுபடுத்துகின்றது:

"மீனுக்கு வாலும்–பாம்புக்குத்
தலையையுங் காட்டி–எனக்காசை
வலையையும் பூட்டித்
தேனுக்குள் பாலாய்–அவள் மஞ்சள்
மேனிக்கு மாலாய்ப்–பணமெல்லாம்
சிந்தியே கெட்டான்–எனையின்று
சந்தியில் விட்டான்
ஈனத்துக் கிவளாம்–தன்வெகு
மானத்துக் கவளாம்–காலவன்
இங்ஙகே தரியான்–கனவிலும்
அங்ஙகே பிரியான்"[93]

பள்ளனின் சார்புத்தன்மையே அவனது குடும்பப் பிரச்சினைக்கு மூலகாரணமாகும். எப்போதும் இளையபள்ளியின் சார்பாகவே அவன் நடந்து கொள்வதுண்டு. சிலவேளைகளில், இளையபள்ளி கூறுவதைக் கேட்டு முறை யாக இருக்குமாறும், தான் மாதந்தோறும் படியளப்பதாகவும் மூத்தபள்ளியிடம் பள்ளன் கூறுவதுண்டு.[94] இவ்வாறு, பக்கச்சார்புடன் நடந்து கொள்வதைப் பள்ளன் நிறுத்தவேண்டும் என்பதே மூத்தபள்ளியின் வேண்டுகோளாகும். எடுத்துக்காட்டாக, "சடுத்தம் வருகாம லிருவரையும்–சரியாகத்தான் நடத்திக் கொள்ள மனங் குறியும்"[95] எனப் பள்ளனிடம் மூத்தபள்ளி குறிப்பிடுவதைக் காணலாம். ஆயினும், பல்வேறு சந்தர்ப்பங்களிலும், பள்ளன் தான் இளை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யபள்ளிக்கே சார்பானவன் என்பதைக் காட்டிக்கொள்வன். பிரச்சினை ஏற்படும்போது, சந்தர்ப்பவாதியாகத் தன்னை அவன் இனங்காட்டிக்கொள்வதைக் காணலாம். குறிப்பாக, அவன் தண்டனை அனுபவிக்கும்போது, மூத்தபள்ளி மூலமாகப் பண்ணைக்காரனிடம் தன்னை விடுவிக்க முயல்வதும், விடுதலை பெற்றபின்னர், நன்றி மறந்து நடந்துகொள்வதும் பள்ளனின் சந்தர்ப்பவாத நடத்தையைக் காண்பிக்கின்றன. விடுதலை பெற்றபின்னர், நெற்பங்கீட்டின்போது இது தெளிவாகின்றது. இளையபள்ளிக்கு நல்ல நெல்லையும், மூத்தபள்ளிக்குத் தரமற்றதையும் அளிப்பதை இங்கு குறிப்பிட வேண்டும். "தள்ளு மண்ணுங் கல்லுஞ் சற்றே நெல்லுங் கலந்தே-பங்கு தந்தோ மென் றெனக்கிம்மட்டுந் தந்தான் பள்ளீரே"[96] என மூத்தபள்ளி கூறுவது கருதத்தக்கது. இவ்வாறு, மூத்தபள்ளிக்கு மாறாகப் பள்ளன் நடந்துகொண்டாலும், தன்மீது தவறு ஏதுமில்லை என்று பண்ணைக்காரனிடம் சாதிப்பதற்கும் அவன் முயல்வதுண்டு. இதனை,

"மூத்தபள்ளி யென்னைமெத்த மோசங்கள் சொன்னாள்

அவள்

மோசம்பண்ணி யோசிக்கு மோருந் தாராளம்

வார்த்தை யொன்று சொன்னவுட னொன்பதுஞ் சொல்வாள்

எதிர்

வரும்பொழுது நீட்டிய கால்மடக் காமலிருப்பாள்

பார்த்தபொழு தெல்லாமெனைப் பழுது சொல்வாள்—சின்னப்

பள்ளியைக் கண்டவுடன் துள்ளி விழுவாள்

கோத்திரத்தி லில்லாத குணம்படைத்து வந்தாள்—இவள்

குற்ற மெல்லாம் ஆருடன் கூறுவேனாண்டே"[97]

என்ற பள்ளனின் கூற்று வாயிலாக உணர்ந்து கொள்ளலாம். தன்னைக் குற்றமற்றவனாகக் காட்டிக்கொள்ள அவன் எவ்வளவு முயன்றாலும், அவனது செயல்கள் அவனை இனங்காட்டிவிடுகின்றன. பள்ளனின் நடத்தை எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்குச் சக்களத்திப் போராட்டத்துக்குத் தூண்டுகோலாக அமைந்து விட்டது என்பதைப் பின்வரும் மூத்தபள்ளியின் கூற்று புலப்படுத்துகின்றது:

விந்தைக் காரியை கூட்டியே வந்துஎன்
வீட்டிலே விட்டுப் போட்டிஉண் டாக்கியும்
சொந்தக் காரிஅ வளென்று பட்டமும்
சூட்டியுந் தாளம் போட்டுத் திரிந்தும்
எந்தனைம தியாமல்தி னஞ்சண்டை
இட்டு மேஎன்னை விட்டுத் துரத்தி
இந்த வார்த்தைக்கி டஞ்செய்து கொண்டால்
என்செய் வேன்முழு வஞ்சனை பள்ளா![98]

இளையபள்ளியை அழைத்து வந்து தனக்குப் போட்டியுண்டாக்கியமை, அவளையே முதன்மையாகக் கருதி, அவளுக்கேற்ப நடந்துகொண்டமை, தன்னை மதியாது தினமும் சண்டையிட்டு, மனைவி என்ற நிலையிலிருந்து விரட்ட முனைவது ஆகிய பள்ளனின் தவறான போக்குகள் மூத்தபள்ளியினாற் சுட்டிக்காட்டப்படுகின்றன. இவ்வாறு, பள்ளனின் பக்கச்சார்பான நடத்தையும், சந்தர்ப்பவாதப் போக்குமே சக்களத்திப் போராட்டத்தை மிகுவிக்கின்றன.

பள்ளன் தனது தவறையுணர்ந்து திருந்துவதற்கு முயற்சி செய்திருப்பானாயின், சக்களத்திப் போராட்டம் குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்திருக்கும். குடும்பத்திலும் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால், அவனது பக்கச்சார்பான நடத்தையும், சந்தர்ப்பவாதப் போக்கும் சக்களத்திப் போராட்டத்தைப் பொறுத்தவரையில், எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது போன்று அமைந்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-11-17
LIBRARY

## (உ) சக்களத்திப் போராட்டம்– படிமுறை வளர்ச்சி

சக்களத்திப் போராட்டம் தொடக்கத்திற் பள்ளியர் இருவருக்குமிடையி லான போட்டியாகவும், காலப்போக்கில் இருவராலும் பொறுத்துக்கொள்ள இயலாத அளவுக்குப் போராட்டமாகவும் உருவெடுப்பதைக் காணலாம். அவர்களது போராட்டத்தின் உச்சக்கட்டமாக ஏசல் விளங்குகின்றது. சக்களத்தியரின் போட்டியிலிருந்து, போராட்டம் வரை படிமுறை வளர்ச்சியை அவதானிக்க முடிகின்றது. இப்படிமுறை வளர்ச்சியைப் பின்வருமாறு நோக்கலாம்:

1. சக்களத்தியர் இருவரும் பள்ளன் மீது தமக்கிருக்கும் உரிமையை வலியுறுத்துவதிற் போட்டியிடுதல்.

2. பள்ளன் இளையபள்ளியைச் சார்ந்து இருப்பதையும், வேளாண்மை வேலைகளில் அவனது செயலற்ற தன்மையையும் பற்றி மூத்தபள்ளி பண்ணைக்காரனிடம் முறையிடுவது. அதற்குப் போட்டியாக, இளையபள்ளியும் பள்ளனைத் தன் இல்லத்தில் ஒளித்து வைத்துவிட்டு, அவனை மூத்தபள்ளி வயல் வேலைக்கு அனுப்பி விட்டதாகப் பொய்கூறி முறையிடுவது.

3. பள்ளன் தண்டனை அனுபவிக்கும்போது, கணவன் மீது சற்றும் பற்றில்லாமல் மூத்தபள்ளி நடந்து கொண்டாள் என இளையபள்ளி கணவனிடத்துக் கோள் சொல்லுதல். அதேபோன்று, இளையபள்ளியுடன் கொண்ட தொடர்பினாலேயே பள்ளனுக்கு அத்தகைய நிலை நேர்ந்தது என மூத்தபள்ளி கணவனுக்கு எடுத்துரைப்பது.

4. பள்ளன் மாடு முட்டியதாலோ, அல்லது கொழு காலிலே தைத்தமையாலோ மயங்கி வீழும்போது, இரு பள்ளியரும் உண்மைக் காரணத்தை மறந்து, ஒருவர் மீது மற்றவர் பழி சுமத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. போட்டி மனப்பாங்கும், வெறுப்புணர்வும் முற்றி, சக்களத்திகள் நேருக்கு நேர் ஏசலில் ஈடுபடல்.

இவ்வாறு, போட்டியாக உருவெடுத்து, பல்வேறு சந்தர்ப்பங்களின் வாயிலாகப் போராட்டமாக மாறும் சக்களத்திகள் பிரச்சினையின் உச்சக்கட்டமாக ஏசல் உருவாவதை விளங்கிக்கொள்ளலாம். அறுவடை முடிந்து, பள்ளன் நெல் அளந்து கொடுப்பதிற் காட்டும் பக்கச்சார்பு, பள்ளியரின் ஏசலுக்கு வித்திடுகின்றது. அவனின் செயல் மூத்தபள்ளிக்கு ஆத்திரத்தை ஏற்படுத்த, பண்ணைக்காரனும் பிறரும் அறியுமாறு அவள் தனது கோபத்தை வெளிப்படுத்த, இளையபள்ளி குறுக்கீடு செய்து எதிர்க்க, ஏசல் உருவெடுக்கின்றது. ஏசல் தொடக்கத்தில் சக்களத்திகளது சொந்தப் பிரச்சினைகளைப் பற்றியதாக அமைகின்றது. இதற்குச் சான்றாக, பின்வரும் ஏசற் பகுதிகளைக் குறிப்பிடலாம்:

"பண்ணைக் கடாப் போற் பருத்த
பண்பையிற் பள்ளி–கொண்ட
பள்ளனுக்கு ரெண்டு செய்யும்
பரத்தை நீயடி
கண்ணைக் காட்டிக் காசு தண்டும்
நன்னகாப் பள்ளி–வண்டக்
காளியுனைப் போலு முண்டோ
கந்தலே போடி"[99]

"ஏண்டியொருத் திபுருஷ னுக்கிச்சைப்பட்டே–தொத்தி
யே வந்த வளுக்குப்பின் இத்தனை யென்ன?"

"என்னவுன்னைக் கொண்டவன்வந் தென்னையுங் கொண்டான்– உனக்
கிளப்பமோ என்னையும்நீ யேசிக் காட்டுறாய்?"[100]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், தத்தம் வழிபடு தெய்வங்களைப் பற்றியதாக ஏசல் அமைகின்றது.[101] சிலவேளைகளில், ஏசலின்போது இருவரும் வன்முறைகளைக் கடைப்பிடிக்க முயற்சிப்பதும் உண்டு.[102] இவ்வாறு, ஏசலின் மூலம் தமது கோபம் முற்றும் தணிந்ததும், தாமாகவோ, அல்லது பண்ணைக்காரன் மூலமாகவோ[103] இருவரும் சமாதானமாவது வழக்கமாகும்.

இரு சக்களத்திகளும் இறுதியிலே தாமாகச் சமாதானமடையும்போது, ஒருவருக்கொருவர் அன்புணர்வினைப் பரிமாறிக் கொள்வதைக் காணலாம். அதன்மூலமாக, இருவரது வெறுப்புணர்வும், கோபவுணர்வும் மெதுவாக மறையத் தொடங்குகின்றன.

"முந்தவைதால் வைவேனென்றாய்
மருதூர்ப்பள்ளி—சற்றே
மூப்பிளமை பார்த்துத் தலை
சாய்ப்பாரில் லையோ
இந்தவார்த்தை முந்தச் சொன்னால்
முக்கூடற்பள்ளி—சண்டை
இத்தனையுண் டோஎனக்குப்
புத்தியில் லையோ"[104]

என்ற பாடல், இருவரது போக்கிலும் ஏற்பட்ட மாற்றத்தினைக் காட்டுகின்றது. மூத்த சக்களத்தி, தம் இருவருக்குமிடையேயுள்ள மூப்பிளமையைச் சற்றுக் கருத்திற்கொண்டு பேசியிருக்கலாமேயென இளைய சக்களத்தியிடம் கூற, அதனை முன்னரே தெரிவித்திருப்பின் சண்டையெதுவும் நிகழ்ந்திருக்காதே என இளையவள் தெரிவிப்பதை மேற்கண்ட பாடல் குறிப்பிடுகின்றது. வேறொரு பாடலில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெருமையாய்த் தங்கச்சி யென்றெண்
ணாமற் பேசினாய்—நீயும்
பெற்ற பிள்ளை யானால் சொல்லப்
புத்தி வருமே
அருமையான தாய்த்துணை யல்லோ
துணையென்றே— நீயும்
அன்பு வைத்தாற் சண்டையுண்டோ
தங்கைப் பள்ளத்தி"[105]

என இருவரும் அதுவரையிலே ஒவ்வொருவரிடத்திலும் காணப்பட்ட குறைகளைத் தெரிவித்துக்கொள்கின்றனர். ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டினாற் பிரச்சினைகளுக்கு இடமில்லை என்பதனை இருவரும் உணர்ந்திருப்பதனை இருவரின் கூற்றுக்களும் தெரிவிக்கின்றன.

இவ்வாறு, அன்பின் அடிப்படையிலான புரிந்துணர்வினைக் கொண்டிருப்பதன் இன்றியமையாமையைச் சக்களத்திகள் இருவரும் இறுதியில் விளங்கிக் கொள்வதனைக் காணமுடிகின்றது. மேலும், தாம் ஒற்றுமையுணர்வைப் பேணி, ஒன்றுபட்டு வாழவேண்டுமென்பதை இருவரும் ஏற்றுக் கொண்டு, தமது வாழ்வைச் செப்பனிட முயல்வர். பின்வரும் பாடல்கள், புதிய வாழ்வுக்குச் சக்களத்திகள் ஆயத்தமாவதைத் தெளிவாக்குகின்றன:

"சொன்னா லென்ன நீயும் பொறு
நானும் பொறுத்தேன்—கிளை
சூழ்ந்திருக்க நாமே கூடி
வாழ்ந்திருக்க லாம்."[106]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போன தெல்லாம் போகட்டும்
நாமிரு பேரும்–பள்ளன்
புத்திக் குள்ளாய் வாழ்ந்தி ருப்போம்
சித்திர மாக."[107]

"சிறந்துநா மிருவருங் கூடி யாடியே
சேர்ந்துவாழ வேணுங்காணுஞ் சீரங்கப்பள்ளி"[108]

"தாயும்பிள் ளையும் போலே யிருபேரும் வாழி
தான்மகிழ்ந்து பாடிநன்றா யிருக்க வாடி"[109]

இவ்வாறு, ஏசலின்பின் ஏற்படும் சமாதானவுணர்வு, பள்ளியரின் சக்களத்திப் போராட்டத்துக்கு முத்தாய்ப்பாக அமைகின்றது. மகிழ்ச்சிகரமான புதிய நோக்கோடு புதுவாழ்வைச் சக்களத்திகள் இணைந்து எதிர்நோக்குவதை, இதன்மூலம் பள்ளு நூல்கள் புலப்படுத்துகின்றன.

## (ஊ) சக்களத்திப் போராட்டம் இடம்பெற்றமைக்கான காரணங்கள்

இறுதியாக, பள்ளு இலக்கியத்திற் பள்ளியரின் சக்களத்திப் போராட்டம் இடம்பெற்றமைக்கான காரணங்களை நோக்கலாம். இப்போராட்டம் இவ்விலக்கியத்தின் முதன்மைக் கூறாக அமைவதற்குச் சில தேவைகள் நூலாசிரியர்களுக்கு இருந்திருக்கவேண்டும். பள்ளு நூல்கள் தோன்றிய காலத்தில் நிலவிய சைவ–வைணவ சமயப் பூசல்களைக் குறியீடு செய்து, அவற்றிடையே சமரசத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கு ஒருவகையிற் காரணமாக அமைந்துள்ளது. அதேவேளை, ஒரே சமயப் பிரிவுக்குள்ளேயே வெவ்வேறு தெய்வங்கள் பற்றியும், ஆண்டவன்–பக்தன் பற்றியும் சக்களத்திகளின் ஏசலிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்படுகின்றன.[110] கிறித்துவ சமயத்தினரும் தமது கொள்கைகளைப் பரப்புவதற்குச் சக்களத்திப் போராட்டத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.[111] ஆகவே, இவற்றை ஒருங்கிணைத்துக் கூறுவதாயின், பள்ளு நூல்கள் தோன்றிய காலத்தில் நிலவிய சமய அடிப்படையைச் சக்களத்திப் போராட்டம் விளக்குகின்றது எனலாம். அதாவது, வைதீக சமயங்களிடையேயும், தெய்வங்கள் தொடர்பாகவும் ஒற்றுமையுணர்வு வளரவேண்டும் என்ற நோக்கம் ஒருபுறமும், புதிதாகப் புகுந்த கிறித்துவ சமயத்தைப் பிரசாரம் செய்யவேண்டும் என்ற நோக்கம் மறுபுறமும் காணப்பட்டன. மேலும், இரண்டு பெண்டாட்டிக்காரன் பாடு திண்டாட்டம் என்பது போன்ற தனிமனித ஒழுகலாறு பற்றிய சமுதாய விமரிசனத்தை எடுத்துக்காட்டுவதற்கும் சக்களத்திப் போராட்டம் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். சமுதாயத்திற் பொறுப்புள்ள நிலையிலுள்ளோர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரைக் கொண்டிருப்பதும், தவறான நடத்தை உள்ளவர்களாக இருப்பதும், அவர்கள் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தடையாகவுள்ளன. எனவே, இத்தகைய நடத்தையைக் கண்டிப்பதற்கும் பள்ளர் தலைவனான குடும்பனின் வாழ்வில் இடம்பெறுவதாகச் சில நிகழ்ச்சிகளைக் காட்டிச் சக்களத்திகளின் போராட்டத்தைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். மேலும், பள்ளர் சமூகத்தவர் வேளாண்மை உழைப்பாளராதலால், அவர்களிடையே இத்தகைய குடும்பப் பிரச்சினைகள் இருப்பது, நாட்டுக்கு இன்றியமையாத இத்தொழிலைப் பாதிக்கும் எனக் கருதியும் நூலாசிரியர்கள் இவ்வாறு சக்களத்திப் போராட்டத்தைப் பயன்படுத்தியிருப்பதற்கும் இடமுண்டு. நூலின் இறுதியிற் சக்களத்திகள் இருவரும் சமாதானமாவதாகவோ, சமாதானமாக்கப்படுவதாகவோ காட்டப்படுவதற்காகவும் இப்போராட்டம் புனையப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகின்றது. எவ்வாறாயினும், மேற்கூறிய கூறுகள் அனைத்தும் இணையப்பெற்றதாகவே சக்களத்திப் போராட்டம் பள்ளு இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது என்று கொள்வது பொருத்தமாகத் தோன்றுகின்றது.

## *சான்றாதாரம்*

1. **Tamil Lexicon,** Vol. II, Part I (1982), Madras, University of Madras (Reprint). p. 974.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. லீவிஸ் எச். மோர்கனின் மேற்கோள். காண்க: எங்கெல்ஸ் (தேதி இல்லை) **குடும்பம், தனிச்சொத்து, அரசு_ஆகியவற்றின் தோற்றம்,** மூன்றாம் பதிப்பு, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம். ப.48.

3. Vide: **International Encyclopedia of the Social Sciences,** Vol.5 (1968), United States of America, The Macmillan Company & The Free Press. pp. 303, 304.

4. எங்கெல்ஸ், பி. **மு.கு.நூா.** ப. 98.

5. பசாம், A.L. (1963) **வியத்தகு இந்தியா** (தமிழாக்கம்: செ.வேலாயுதபிள்ளை, மகேசுவரி பாலகிருட்டிணன்), கொழும்பு. ப.243.

6. **மு.கூ.ப.** செய். 57.

6அ. **மேலது.** செய். 87.

7. **கபமப.** செய். 78.

8. **தி.முப.** செய். 118.

9. **மு.கூ.ப.** செய். 88.

10. **திப.** செய். 56.

11. **செ.கோப.** செய். 67.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. இளையபள்ளி பற்றிய குணவியல்புகள் இவ்வியலின் "இ" பிரிவில் நோக்கப்படுகின்றன.

13. **க.அப.** பள்ளிகள் ஏசல். வரி: 25-26.

14. **செ.கோப.** செய். 63.

15. **தி.முப.** செய். 120.

16. இது பற்றி நான்காம் இயலில் நோக்கப்படுகின்றது.

17. **மு.கூ.ப.** செய். 56, 57 . 85-90.

18. **செ.ராப.** செய். 62-68.

19. **தி.முப.** செய். 78-80.

20. **கமப.** செய். 54, 66, 67, 73, 76, 109.

21. **ப.விப** செய். 93-97.

22. **த.கப.** செய். 111- 115.

23. மேலும், மூத்தபள்ளியின் இத்தகைய முறைப்பாடுகளுக்குக் காண்க: **திப.** செய். 42; **குப.** செய். 41-48; **பொப.** செய். 74; 75; **செ.கோப.** செய். **355-369,** 482- 509.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. **முகூப.** செய். 86.

25. **மேலது.** அதே செய்யுள்.

26. **மேலது.** செய். 88.

27. **கஅப.** செய். 53.

28. மூத்தபள்ளி கணவனைத் தண்டனையினின்றும் விடுதலை செய்வதற்காகச் செய்யும் முயற்சிகள் நான்காம் இயலில் நோக்கப்படுகின்றன.

29. **செ.கோப.** செய். 506–509.

30. **முகூப.** செய். 97.

31. "கள்ளவழி யாலீழப் பள்ளிபோந்து
கள்ளும்நல்ல கொழுத்தமறிக் கறியுங் கூட்டித்
துள்ளியுள்ள அகந்தையினாற் காலிற்பூண்ட
தொடுவிலங்குப் பள்ளனுக்குச் சோறிட்டாளே"
(**ப.வி.ப.** செய்.98)

32. **செ.கோப.** செய். 586–599.

33. "மக்க ளாணைஎன் னாணையுன் னாணை நீ
வார்த்த கஞ்சி குடித்துக் கிடப்பேன்
விக்கல் வாய்ப்பண்ணை யாண்டையைக் கேட் டென்னை
மீட்டுக் கொள்ளடி முக்கூடற் பள்ளி"
(**மு.கூ.ப.** செய். 101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. **செ.ரா.ப.** செய். 110.

35. **தி.ப.** செய். 46.

36. **பொ.ப.** செய். 212.

37. **மேலது.** அதே செய்யுள்.

38. **செ.கோ.ப.** செய். 718.

39. **மேலது.** செய். 773.

40. எங்கெல்ஸ், பி. **மு.,கு.,நூ.** ப. 119.

41. **மேலது.** ப. 120.

42. சுப்பிரமணிய பாரதி, சி. (1980) **பாரதியார் கவிதைகள்,** டி.வி.எஸ்.மணி, சீனி.விசுவநாதன் பதிப்பு, சென்னை, வானவில் பிரசுரம் (திருத்திய பதிப்பு) "பெண்கள் விடுதலைக் கும்மி."

43. இராமநாதன், ஆறு. (1982) **நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்,** சிதம்பரம், மணிவாசகர் நூலகம், ப. 126.

44 **மு.கூ.ப.** செய். 154.

45. **செ.கோ.ப.** செய். 86.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. **மேலது.** செய். 87.

47. **மேலது.** செய். 209.

48. **மு.கூ.ப.** செய். 155.

49. **கமப.** செய். 109.

50. **குப.** செய். 47.

51. **திமுப.** செய். 6.

52. **மேலது.** செய். 8.

53. **மேலது.** செய். 6.

54. **மேலது.** அதே செய்யுள்.

55. **மேலது.** செய். 8.

56. **மு.கூ.ப.** செய். 90.

57. **கமப.** செய். 63.

58. **செ.கோப.** செய். 44–48.

59. **செ.ராப.** செய். 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. **மு.கூ.ப.** செய். 13.

61. **செ.கோ.ப.** செய். 214.

62. **மு.கூ.ப.** செய். 13.

63. **செ.கோ.ப.** செய். 209.

64. "மன்னுமூ விரண்டுமுகப்
பன்னிரண்டுகைக் குமரன்
வடிவுடைய திருமலையிற்
குடிபுகுந்த நாள்
பன்னிடுமுக் காலப்பூசை
இன்னமும் நடக்க வைத்த
பண்ணைப் பள்ளர் கோத்திரத்திற்
பெண்ணடிமை நான்"

(**தி.மு.ப.** செய். 13)

65. "முந்துபுடார்ச் சுன புரத்
தெந்தை குற்றாலர் தருவோர்
மூன்றெனுங் குறும் பலாவுந்
தோன்றிய நாளிற்
பைந்தமிழ் நன்னகர் தன்னிற்
சொந்தமாக வைத்த பண்ணைப்
பள்ளர் எங்கள் தாய்வழியும்
தந்தை வழியும்
இந்தத்திரு மலைப் பள்ளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தென்னைச் சரடு செய்தே
இரண்டுடல் உயிரொன் றென்றான்
இன்றை வரைக்கும்"

(**தி.மு.ப.** செய். 14.)

66. **பொ.ப.** செய். 21.

67. **செ.கோ.ப.** செய். 355.

68. **செ.ரா.ப.** செய். 108.

69. **தி.மு.ப.** செய். 159.

70. **செ.கோ.ப.** செய். 212.

71. **க.ம.ப.** செய். 54.

72. **தி.ப.** செய். 62: 3.

73. **மு.கூ.ப.** செய். 160.

74. **கு.ப.** செய். 47.

75. இது பற்றிய விபரத்துக்கு முதலாம் இயலை நோக்குக.

76. **செ.கோ.ப.** செய். 94.

77. **மு.கூ.ப.** செய். 104.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. **திய.** செய். 67.

79. **செ.கோப.** செய். 505.

80. **குப.** செய். 43.

81. **ப.விப.** செய். 94.

"சட்டைக்காரி" என்ற சொல், யாழ்ப்பாணத்துக் கிராமப்புறப் பேச்சு வழக்கில் இடம்பெற்றுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களிற் பழைய தலைமுறையைச் சார்ந்த பெண்கள் "குறுக்குக்கட்டு" என்ற உடையினையும், இளைய தலைமுறையினர் சட்டை அணிந்து சேலை உடுக்கும் முறையினையும் பேணிக்கொள்வதுண்டு. "குறுக்குக் கட்டு" அணியும் முதிய தலைமுறையினர், சட்டை அணியும் இளைய தலைமுறையினரைச் "சட்டைக்காரிகள்" எனக் குறிப்பிடுவது வழக்கம். குறுக்குக்கட்டை விடச் சட்டையணிவது நாகரிகமானது. இதன் மூலம், முதிய தலைமுறை–இளையதலைமுறை வேறுபாட்டினையும் உணர்ந்துகொள்ளலாம். இதுவே பறாளை விநாயகர்பள்ளிலும் மூத்தபள்ளி–இளையபள்ளி ஆகியோருக்கிடையேயான வேறுபாடுகள் மூலமாகப் பிரதிபலிக்கப்படுகின்றது.

81அ. **செ.கோப.** செய். 135.

82. **செ.கோப.** செய். 179.

83. **மேலது.** செய். 847.

84. **மேலது.** செய். 505.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85. **திப. செய்.** 47.

86. **மு.கூ.ப.** செய். 94.

87. **தி.முப.** செய். 110.

88. **மு.கூ.ப.** செய். 59. மேலும் சான்றுகளுக்குக் காண்க: **தி.முப.** செய். 82–85; **செ.கோப.** செய். 372–381; **செ.ராப.** செய். 71–73; **பொப.** செய். 77, 78.

89. இச்சந்தர்ப்பத்தில் மூத்தபள்ளியின் கோபத்துக்கு இலக்காக விளங்குபவள், இளையபள்ளியாவாள்.

90. **மு.கூ.ப.** செய். 118.

91. **செ.கோப.** செய். 769.

92. **மு.கூ.ப.** செய். 12.

93. **மேலது.** செய். 87.

94. **செ.கோப.** செய். 130.

95. **மேலது.** செய். 770.

96. **மு.கூ.ப.** செய். 151.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. **கமப.** செய். 108.

98. **செ.கோப.** செய். 651.

பெரும்பாலும் மூத்தபள்ளியும், இளையபள்ளியும் வெவ்வேறு இல்லங்களில் வாழ்வதையே பள்ளு நூல்கள் காட்டுகின்றன. இப்பாடலில் "விந்தைக் காரியை கூட்டியே வந்துஎன் வீட்டிலே விட்டுப் போட்டியுண் டாக்கியும்" என்ற தொடருக்கு, இளையபள்ளியை அழைத்து வந்து தன் குடும்பத்திலே சேர்த்துச் சக்களத்திகளிடையே போட்டியை ஏற்படுத்தியும் எனக் கொள்வதே பொருத்தமானது.

99. **திமுப.** செய். 161.

100. **செ.கோப.** செய். 862, 863

பள்ளியர் ஏசல் தொடர்பாக மேலும் சில பாடல்கள் பின்வருமாறு:

"முண்டைமுறை யிட்டதென்ன
முக்கூடற்பள்ளி " உங்கள்
மூப்புச்சொம் மெனக்குத் தந்தால்
மூதலியடி
தொண்டைகட்டக் கூப்பிடாதே
கூப்பிட்டு என்னை " வைது
சொன்னபேச்சைப் பண்ணையார்க்குச்
சொல்லுவேனடி

"சொன்னாலெனக் கென்னபயம்
மருதூா ர்ப்பள்ளி—சென்று
சொல்லிலுன்கா சுசெல்லாது
சொல்லடி போடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னாலேயா காததுண்டோ
முக்கூடற்பள்ளி–பள்ளன்
இங்குவந்தால் உன்சலுகை
எல்லாந் தெரியும்.

"சலுகையில் லாமலென்ன
மருதூா ர்ப்பள்ளி–நானும்
தன்னூா ர்விட்டுன் போலஓட்டுச்
சாய்ப்பில் வந்தேனோ
வலுச்சலுகை பேசாதேநீ
முக்கூடற்பள்ளி–உன்போல்
வழக்கிட்டுக் கணக்கிட்டு
வந்தேனோ போடி.

(**மு.கூ.ப.** செய். 152–154)

"சடமீதோ வென்றாயே சீரங்கப் பள்ளி–மன்றிற்
றடியடியா லுன்னைவிழத் தாக்கி நாக்கையே
மடலோடே பிடுங்காவிட்டா லீது சென்மமோ–வன்றி
மார்பிலெழுந் ததுதன பார மல்லவே."

(**கு.ப.** செய். 98)

101. இது பற்றிய விபரங்களுக்கு ஆறாம் இயலை நோக்குக.

102. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் **திருவாரூர்ப் பள்ளு** விளங்குகின்றது. காண்க: செய்.22–28.

103. காண்க: **கு.ப.** செய். 104, 105; **க.ம.ப.** செய். 128, 129.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

104. **முகூப.** செய். 173.

105. **திமுப.** செய். 184.

106. **முகூப.** செய். 174.

107. **திமுப.** செய். 185.

108. **திப.** செய். 70: 13.

109. **கஅப.** பள்ளிகள் ஏசல். வரி :79, 80.

110. சான்றாக, **திருமலைமுருகன் பள்ளில்** முருகனும், சிவபிரானும் குறிப்பிடப்படுவதையும், **கதிரைமலைப் பள்ளில்** முருகனும், விநாயகரும் குறிப்பிடப்படுவதையும், **குருகூர்ப்பள்ளில்** நம்மாழ்வாரும், திருமாலும் குறிப்பிடப்படுவதையும் நோக்கலாம்.

111. இதற்குச் சிறந்த சான்றாக, ஈழத்திலே தோன்றிய **ஞானப்பள்ளு** விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் இயல்

# பள்ளு இலக்கியத்திற் சமய வழிபாடுகளும் சமூக நம்பிக்கைகளும்

## (அ) பள்ளு இலக்கியமும் சமயச்சார்பும்

தமிழ் இலக்கிய வரலாற்று மரபிற் சங்ககாலம், இருபதாம் நூற்றாண்டு ஆகிய காலப்பகுதிகளைத் தவிர்த்து, பிற காலகட்டங்களிற் சமயத்துக்கும், இலக்கியத்துக்கும் இடையே நெருக்கமான தொடர்புகள் இருந்துவந்துள்ளன. மக்களின் வாழ்க்கை முறையிற் சமயம் பெற்றிருந்த முக்கியத்துவமே இதற்கான காரணமாகும். சமயத்துக்கும், இலக்கியத்துக்கும் இடையிலான தொடர்பினைத் தெளிவாகக் கூறுவதாயின், முன்னதன் புலப்பாட்டுக் கருவியாகப் பின்னது தொழிற்பட்டு வந்துள்ளது எனக் குறிப்பிடுவது பொருத்தமானது. பேராசிரியர் கா.சிவத்தம்பி இதுபற்றிய பொருத்தமான விளக்கத்தினை அளித்துள்ளார்.

"மதம் என்பது மூன்று அத்தியாவசிய அம்சங்களைக் கொண்டது. முதலாவது நம்பிக்கை (Faith); இரண்டாவது சடங்குகள் (Rituals); இந்தச் சடங்குகளுக்கு அத்தியாவசியமான ஐதீகங்கள் (Myths) இதற்குள்ளேயே அடங்கும். மூன்றாவது இவை இரண்டும் வளர்க்கும் அல்லது இவையிரண்டினடியாக வளர்த்தெடுக்கப்பெறும் சமூகக் கண்ணோட்டம் அல்லது உலகநோக்கு. இம்மூன்றும் ஒருங்கிணையும் பொழுதே மதம் தொழிற்படும். இம்மூன்றினையும் பண்பாட்டிலிருந்தும் இலக்கியத்திலிருந்தும் பிரித்து நோக்க முடியாது. சற்று ஆழமாக நோக்கினால் இலக்கியத்தின் உந்து சக்தியாகவும் களமாகவும் நம்பிக்கைகள், ஐதீகங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகநோக்கு (இங்கு சமயச் சார்பற்ற விஞ்ஞான ரீதியான உலக நோக்குப் பற்றி நாம் குறிப்பிடவில்லை) விளங்கி வந்துள்ளன என்பது தெரியவரும். சமய இலக்கியங்கள் என நாம் கொள்வனவற்றில் இம்மூன்றும் விறகில் தீயாகவும், பாலிற் படுநெய்யாகவும் கிடப்பதை அவதானிக்கத் தவறமுடியாது. "இதனால் மதத்திற்கு இலக்கியம் அத்தியாவசியமான வெளிப்பாட்டு முறைமை என்பது புலனாகின்றது."[1]

இத்தகைய ஓர் இன்றியமையாத நிலையே தமிழ் இலக்கியங்களிற் பெரும்பாலானவை சமயத் தொடர்புடையவையாக அமைவதற்குக் காரணமாயிற்று. பள்ளு இலக்கியமும் சமயச்சார்பு கொண்ட இலக்கியமாகவே விளங்குவது குறிப்பிடத்தக்கது.

பள்ளு நூல்களைப் பொறுத்தவரையில், அவை யாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொள்கின்றனவோ, அவரின் சமயத்தைச் சார்ந்தவையாகவே அமைவதுண்டு. இவ்வகையில் திருமால், நம்மாழ்வார் ஆகியோரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டவை வைணவ சமயச் சார்பானவையாகவும், சிவன், அம்மன், விநாயகர், முருகன் முதலானோரைக் கொண்டவை சைவசமயச் சார்பானவையாகவும் விளங்குகின்றன. திருமக்காப் பள்ளு என்ற நூல், முகமது நபியைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டுள்ளது. இது இஸ்லாமியச் சார்புடைய பள்ளு நூலாக அமைந்துள்ளது.[1அ] இயேசுவைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட ஞானப்பள்ளு கிறித்தவ சமயச் சார்புடையதாக விளங்குகின்றது. மேலும், நிலப்பிரபுக்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொள்ளும்போது, அவர்களது சமயச்சார்புக்கேற்றவாறு நூல் அமைந்திருக்கும்.[2] பள்ளு நூலாசிரியர்களும் பாட்டுடைத்தலைவரின் சமயத்தைச் சார்ந்தவராகவே இருப்பர். இவை மாத்திரமன்றி, தம்மைக் கவர்ந்த தத்துவக் கருத்துகளை மாத்திரம் எடுத்தோதுவதற்குப் பள்ளு இலக்கிய வடிவத்தைப் பயன்படுத்தியோரும் உளர். வேதாந்தப்பள்ளைப் பாடிய ஆவிடை அம்மாள் இத்தகையவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத் தொடர்பான கூறுகளைப் பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் பாத்திரங்களோடு பொருத்திப் பார்க்கும்போது, சில தெளிவுகள் ஏற்படுகின்றன. பள்ளு நூலாசிரியர்கள் தாம் படைத்த பள்ளர் பாத்திரங்களின் வாயிலாகத் தாம் அறிவு முறையில் நம்பிக்கை கொண்ட சமய உண்மைகளைக் குறிப்பிடுகின்றனர். ஆனால், அதேவேளையில் பள்ளர் சமூக மக்களைப் பாத்திரங்களாகக் கொண்டமையால், அவர்கள் கடைப்பிடிக்கும் சிறுதெய்வ வழிபாட்டுச் சடங்குகளையும் நூலிற் பயன்படுத்த வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு, பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு ஆகிய இரண்டும் இணைத்துக் கூறப்படும் இயல்பினைப் பள்ளு நூல்களிற் காணலாம். இதனால், நூலாசிரியர் வணங்கும் பெருந் தெய்வங்களான சிவன், திருமால், விநாயகர், முருகன் போன்றோரும், பள்ளர் வழிபடும் சிறுதெய்வங்களும் இவ்விலக்கியத்தில் இடம்பெறுகின்றன. இன்னொரு வகையிற் கூறுவதாயின், உயர்ந்தோர் குழாமினராகிய பள்ளு நூலாசிரியர் போற்றும் பெருந்தெய்வங்களும், தாழ்த்தப்பட்ட மக்களான பள்ளர் நம்பிக்கை கொண்டிருக்கும் சிறுதெய்வங்களும் இணைத்துப் போற்றப்பட்டுள்ளன. பள்ளு நூலாசிரியர்களைப் பொறுத்தவரையில், இதுவொரு சமூகத் தேவையாகவே இலக்கியமட்டத்தில் அவர்களாற் கருதப்பட்டுள்ளது. தாம் விரும்பும் பாட்டுடைத்தலைவரைப் போற்றுவதும், தாம் நம்பும் சமய உண்மைகளை வெளிப்படுத்துவதுமே அவர்களது முதல் நோக்கமாக இருப்பினும், அவற்றை வெளிப்படுத்தும் இலக்கிய வடிவத்துக்கு மக்கள் இலக்கியம் என்ற சாயலை அவர்கள் அளிக்க விரும்பினர் எனத் தெரிகிறது. பள்ளு நூலாசிரியர்களால் இதனைச் சாதிக்கவியலாது போயிருக்குமாயின், பள்ளு இலக்கியம் மக்கள் இலக்கியம் என்ற தரத்தை எட்டியிருக்க இயலாது. ஆகவே, நூலாசிரியர்கள் தேவை நோக்கிய குறிக்கோளுடனேயே இத்தகைய தெய்வ இணைப்பை ஏற்படுத்தியுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

பள்ளு நூல்கள் அனைத்திலும், கிடைக்கும் சந்தர்ப்பங்களின்போதெல்லாம் சமயச்சார்பான செய்திகள் இடம்பெறுவதைக் காணலாம். நூல்களின் தொடக்கத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளன், பள்ளியரை நூலாசிரியர்கள் அறிமுகப்படுத்துவது முதல், பள்ளியர் ஏசல் வரையில், சமயச்சார்பான செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில், பொதுவாக நூலாசிரியர்கள் கூறவிரும்பும் சமயச் செய்திகள் முதன்மையான இடத்தினை வகிக்கின்றன. பள்ளர் வாழ்வோடு தொடர்புற்ற நிகழ்ச்சிகள் கூறப்படும்போது, அவர்களது வழிபாட்டு முறைகளையும் நூலாசிரியர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

நூலாசிரியர்கள் தமது சமயக்கருத்துக்களைப் பல வகைகளில் வெளியிடுகின்றனர். அவற்றுள் பள்ளன், பள்ளியரின் அறிமுகத்தின்போது சமயச் செய்திகளைப் புலப்படுத்துவது ஒருவகையாகும். இதற்கு எடுத்துக்காட்டாகத் திருவாரூர்ப்பள்ளினைக் கொள்ளலாம். "வெண்ணீறு தனை முகமீதி லணிந்து"[3] வன்மீகநாதப் பள்ளன் தோன்றுவதாகக் குறிப்பிடுவதும், மூத்தபள்ளியை அறிமுகப்படுத்துமிடத்து,

"கங்கைதனைச் சடையணி பெருமாள்
    காலனைக்கா லாலடர்த்திடு பெருமாள்
கணைவேளுடல் பொடிபடவே செய்த
    கண்ணுதற் பெருமாள்
தென்கமலைப் பதியுறை பெருமாள்
    தேவர கண்டப்பெரு மாள்தம்
திருநாமம் பாடியாடும் பள்ளத்தி தோன்றினாளே"[4]

எனவும், இளையபள்ளியை அறிமுகப்படுத்துமிடத்து,

"கஞ்சமலர் கொடியிடைப் பெருமாள்
    காயாமலர் வண்ணப் பெருமாள்
    காவேரியின் நடுவிணைமிசை கண்டுயில் பெருமாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சிலைவேள் தனையருள் செய்த
திருவரங்கப் பெருமாள் பெருமைத்
திருநாமம் பாடியாடும் பள்ளிநானே[5]

என்றும் கூறுவதும் பாத்திரங்களின் சமயச்சார்பினையும், நூலாசிரியர்களின் சமய உணர்வினையும் புலப்படுத்துவனவாக உள்ளன.

நூலாசிரியர்கள் தமது சமயக் கருத்துக்களை விளக்குவதற்குப் பள்ளனையும், பள்ளியரையும் வெவ்வேறு சந்தர்ப்பங்களிற் பயன்படுத்தியுள்ளனர். பள்ளனைப் பயன்படுத்தியமைக்குச் சான்றாகச் சிலவற்றைக் கூறலாம். அவற்றுள், தனது தெய்வத்தை வணங்காதாரை இன்னது செய்யப்போவதாகப் பள்ளன் சூளுரைப்பதும் ஒன்றாகும். முக்கூடற்பள்ளிலே, திருமால் மீது தனக்கிருக்கும் பக்திமையுணர்வைப் பள்ளன் புலப்படுத்துவன். திருமுக்கூடலில் எழுந்தருளியிருக்கும் திருமாலின் திருவடிகளை நினையாதவரின் மனத்தைத் தரிசு நிலமென்று கருதி, கொழுவினைப் பாய்ச்சி உழப்போவதாகவும், அரிய நூல்களிலுள்ள எட்டெழுத்தின் உண்மைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாத தீயவர்களின் செவிகளை, தரிசு நிலத்திலுள்ள புற்றுக்கள் எனக் கருதி, மண்வெட்டியினால் வெட்டப்போவதாகவும், திருமாலின் நூற்றெட்டுத் திருப்பதிகளையும் வலம்வராதோரின் பயனற்ற கால்களை வடம்பூட்டி ஏர்க்காலிற் சேர்த்து இழுக்கவிருப்பதாகவும், திருவாய்மொழியைக் கல்லாதவர்களை இருகால் மாடுகளாகக் கருதி, அதட்டிக் கோலால் அடிக்கவிருப்பதாகவும் அவன் குறிப்பிடுவன்.[6]

இதேபோன்று, முருகன்மீதான பள்ளனின் பக்திமையுணர்வும் புலப்படுத்தப்படுகின்றது. திருமலைமுருகன் பள்ளில், முருகனை வணங்காதவரின் கைகளை மண்வெட்டிக்குக் கைப்பிடியாக எடுத்துக்கொள்ள இருப்பதாகவும், ஆர்வத்துடன் இறைவனின் கோயிலை வலம்வராதவரின் கால்களை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரவாரத்துடன் ஏர்க்கால்களாகக் கொண்டு கட்டி உழவிருப்பதாகவும், நாவினால் முருகனைப் போற்றாதவர்களின் நாவை, ஏரின் கொழு மாட்டும் ஆணியாக ஆக்கிக்கொள்ளவிருப்பதாகவும் அவன் கூறுகின்றான்.[7]

கண்ணுடையம்மன் பள்ளிலும், அம்மன்மீது தனக்கிருக்கும் பக்திமையுணர்வைப் பள்ளன் புலப்படுத்துவதைக் காணலாம். தேவியின் சந்நிதியை வணங்காதாரை நாட்டிலுள்ள வண்டிகளுக்குக் கடாக்களாகப் பூட்டுமாறு கூறவிருப்பதாகவும், கண்ணுடையம்மனைத் துணையென்று எண்ணாதவரின் மனத்தை மண்வெட்டியினால் வெட்டித் திருத்தவிருப்பதாகவும், அன்னையின் களியாட்டத்தைப் பரிகாசம் செய்தவரின் நாவை, பயிர்களுக்கிடையேயுள்ள களைகளைப் போலப் பறித்து எறியவிருப்பதாகவும், அம்மையின் பொன்னடிகளை வணங்காதாரைச் "சோறுதின்னி மாடு" என்று கூறவிருப்பதாகவும் குறிப்பிடுவதைக் காணலாம்.[8]

இவற்றின் வாயிலாக, நூலாசிரியர்கள் தமது தெய்வங்கள் தொடர்பான பக்திமையுணர்வைப் புலப்படுத்துவதற்குப் பள்ளன் என்ற பாத்திரத்தைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது தெளிவாகின்றது.[9] ஆனால், ஈழத்துப் பள்ளு நூல்களில், நூலாசிரியர்களிடையே இத்தகைய முயற்சியைக் காண இயல வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பண்ணைக்காரன் பள்ளனிடம் பண்ணை தொடர்பான விபரங்களைக் கேட்குமிடத்து, இருமுறை பள்ளன் கணக்குகளை ஒப்புவிப்பதுண்டு. முதன்முறை அவ்வாறு ஒப்புவிக்கின்றபோது, புராணங்களில் இடம்பெறும் கதைக்கூறுகளை இணைத்துக் கூறுவதைப் பள்ளு நூல்கள் காட்டுகின்றன. சான்றாக, முக்கூடற்பள்ளில் ஏர்க்கால் வகை தொடர்பாக இடம்பெறும் பாடற்பகுதி பின்வருமாறு:

"திருமுக் கூடல் அழகர்க் கிளைய
தெரிவை நீலியைத் தேவியாய்க் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-11-17
LIBRARY.

மருதப் பர்கொழு நானூறும் மாணிக்க
வாசகன் கிட்ட வாங்கியே கொண்டார்"[10]

திருமுக்கூடலில் எழுந்தருளியுள்ள திருமாலின் தங்கையாகிய உமாதேவியைத் துணையாகக் கொண்டிருக்கும் சிவபிரான், ஏர்க்காலுக்குத் தேவையான நானூறு கொழுக்களை மாணிக்கவாசகன் என்பவரிடமிருந்து பெற்றுக் கொண்டார் என்ற செய்தி இதிற் கூறப்படுகின்றது. ஆயினும், சிலேடையாக நூலாசிரியர் சமயச்சார்பான விடயமொன்றை உணர்த்துவதைக் காணலாம். மாணிக்கவாசகர் நானூறு கொளுக்களை அமைத்துத் திருச்சிற்றம்பலக் கோவையாரைப் பாடியுள்ளமையும், அதனைச் சிவபிரான் உவந்தேற்றுக் கொண்டமையும் அவ்வடியாரின் வரலாறு குறிப்பிடும் செய்தியாகும். இவ்வரலாற்றினையே சிலேடையாக நூலாசிரியர் மேற்கண்ட பாடற்பகுதியிற் புனைந்து காட்டியுள்ளார்.

திருமலைமுருகன் பள்ளில் மாட்டுவகை கூறுமிடத்து இடம்பெறும் பாடற்பகுதியொன்று பின்வருமாறு அமைந்துள்ளது:

"செய்ய செம்மறைக் காளையை வேலப்பன்
செட்டி யார்அடித் தோட்டி யடைத்தார்
வைய முய்ந்திட மீண்டுந் தனக்கு
மயிலை வேணுமென் றேபற்றிக் கொண்டார்."[11]

சிவந்த மறையையுடைய காளையை வேலப்பன் செட்டியார் என்பவர் அடித்துத் துரத்தி, பட்டியில் அடைத்துவிட்டார்; உலகம் உய்வடைய வேண்டு மென்பதற்காக மயிலைக்காளை தேவையென்று வாங்கிக் கொண்டார் என்பது, இப்பாடற்பகுதி குறிப்பிடும் செய்தியாகும். ஆனால், இப்பகுதியிற் சிலேடை வாயிலாகப் புராண வரலாறொன்று உணர்த்தப்படுகின்றமையைக் காணலாம். வேதங்களை அருளிய பிரமனை முருகன் சிறையில் அடைத்த வரலாறும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலைத் தமக்கு வாகனமாகக் கொண்டிருப்பதும் இதன்மூலம் சிலேடை முறையிற் குறிப்பிடப்படுகின்றது.

பறாளை விநாயகர் பள்ளில் விதைவகை கூறுமிடத்து, "தென்பறாளைப் பரஞ்சோதிநாத தந்தியேறிய வாகனந் தின்று சமைந்த நெற்கோட்டை யாயிரங் காணும்"[12] என்று குறிப்பிடுவதையும் காட்டலாம். இதன்மூலம், விநாயகருக்குப் பெருச்சாளி வாகனமாக அமைந்துள்ளமை பற்றிய புராணக் கதை மரபு உணர்த்தப்படுகின்றது. இவ்வாறு கணக்கு விபரம் கூறுவதுபோன்று, சிலேடையாகப் புராணக்கதைக் கருத்துக்களையும் புனைந்து நூலாசிரியர்கள் கூறிவிடுகின்றனர்.[13]

இவ்வாறு, பள்ளனைப் பயன்படுத்தி, நூலாசிரியர்கள் தாம் கூறவேண்டிய சமயத்தொடர்பான செய்திகளையும், கருத்துக்களையும் கூறிவிடுவது போன்று, சக்களத்தியரான பள்ளியர் வாயிலாகவும், அவ்வத் தெய்வங்கள் சார்ந்த புராணக்கதைகளைக் கூறுவர். சக்களத்தியர் தமக்கிடையே நிகழ்த்தும் ஏசலின்போது, ஒரு கட்டத்தில் ஒருவருக்கொருவர் மற்றவரின் வழிபடு தெய்வத்தைக் குறைகூறுவதுபோன்று, புராணக்கதை மரபுகளைக் கூறி வாதம் செய்வதுண்டு. முக்கூடற்பள்ளில் இடம்பெறும் பின்வரும் பாடல்கள் இதற்குத் தக்க சான்றுகளாக விளங்குகின்றன:

"சுற்றிக்கட்ட நாலுமுழத்
 துண்டு மில்லாமல் – புலித்
தோலைஉடுத்தா னுங்கள்
 சோதி யல்லோடி
கற்றைச்சடை கட்டிமர
 வுரியுஞ் சேலைதான்–பண்டு
கட்டிக்கொண்டான் உங்கள்சங்குக்
 கைய னல்லோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாட்டுக்குள் இரந்தும்பசிக்
காற்றமாட்டாமல்–வாரி
நஞ்சையெல்லாம் உண்டானுங்கள்
நாதனல் லோடி
மாட்டுப்பிற கேதிரிந்துஞ்
சோற்றுக்கில்லாமல்–வெறும்
மண்ணையுண்டான் உங்கள்முகில்
வண்ணனல் லோடி

"ஏறவொரு வாகனமும்
இல்லாமையினால்–மாட்டில்
ஏறியே திரிந்தானுங்கள்
ஈசனல் லோடி
வீறுசொன்ன தென்னமாடு
தானுமில்லாமல்–பட்சி
மீதிலேறிக் கொண்டானுங்கள்
கீதனல் லோடி"[14]

கதிரைமலைப் பள்ளிலே தெய்வங்கள் தொடர்பான ஏசற்பகுதியிலே இடம்பெறும் பாடல்கள் சில பின்வருமாறு அமைந்துள்ளன:

"அவனியறி யத்தக்கன் வேள்விதனிற் றின்னப்போய்
அகப்பட்டுக் கொண்டவனுன் னாண்டையல்ல வோடி
தவனமென வேசொல்லித் தேனுந் தினைமாவும்
சாதித்துத் தின்றவனுன் னாண்டையல்ல வோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆங்கவனுக் கொருபெண்வே றெங்குங் கிடையாமல்
அசுரர்பெண் கொண்டவனுன் னாண்டையல்ல வோடி
வேங்கைமர மாகிநின்று மின்னிடைக் குறமகளை
விரும்பி யணைந்தவனுன் னாண்டையல்ல வோடி"

"அம்புயத்தி னால்மலையை யன்றெடுத்த ராவணனன்றன்
அங்கையாற்குட்டுண்டவனுன் னாண்டையல்ல வோடி
அம்புவியிற் றேவமின்னா ரானசொர்க்க மின்றிமிக
ஆரல்முலை யுண்டதுமுன் னாண்டையல்ல வோடி"[15]

இவற்றினை நோக்குமிடத்து, தெய்வங்களின் பெருமை பேசுவதும், அவற்றிற்கிடையிலான ஒற்றுமையுணர்வைப் பேணுவதும் நூலாசிரியர்களின் முக்கிய நோக்கமாக இருந்துள்ளமை தெளிவாகின்றது. தமது நோக்கினை நிறைவேற்றுவதற்குப் புராணக் கதைகளைத் தகுந்த முறையில் அவர்கள் பயன்படுத்தியுள்ளனர். அவ்வாறு பயன்படுத்தும்போது, நேரடியாகத் தெய்வப் பெருமைகளைக் குறிப்பிடாது, வஞ்சப்புகழ்ச்சியாகவே கூறுவது கவனிக்கத்தக்கது. இவ்வாறு, புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு தெய்வப் பெருமைகளைக் குறிப்பிடுவதோடு, ஈற்றிலே தாம் விரும்பும் சமய ஒற்றுமையுணர்வையும் நூலாசிரியர்கள் உணர்த்துவதைக் காணலாம்.[16]

மேலும், மழைபொழிதல், ஐவகை நிலங்களைக் கடந்து ஆற்று வெள்ளம் பெருகுதல், நாற்று நடுகை, பயிர் விளைவு ஆகியவையும் நூலாசிரியர்கள் தமது பக்திமையுணர்வையும், சமயத் தொடர்பான செய்திகளையும் தெரிவிக்கப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களாக அமைந்துள்ளன.

அனைத்துப் பள்ளு நூல்களும் சமயச்சார்பு உடையவையாக விளங்கும் அதேவேளையில், ஞானப்பள்ளு ஒரு சமயப் பிரசார நூல் போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமளிக்கின்றது. பாத்திரங்களும் பள்ளரின் வாழ்வியலைப் புலப்படுத்துவதனை விடவும் கிறித்துவ சமயப் பிரசாரக் கருவிகளாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன.[17] ஞானப்பள்ளில் இடம்பெறும் பள்ளியரின் ஏசற்பகுதி; மற்றைய அனைத்துப் பள்ளு நூல்களினின்றும் வேறுபட்டுள்ளது. இப்பகுதியில் யெருசலேம், உரோமாபுரி ஆகிய இடங்களோடு தொடர்புடைய இயேசுவின் வரலாற்றையும், கிறித்துவ சமய வரலாற்றையும் பங்கு பிரித்து, இரு பள்ளியரின் ஏசலாக நூலாசிரியர் பயன்படுத்தியுள்ளார்.[18] அதனால், மற்றைய பள்ளு நூல்களிற் காணப்படுவது போன்று, இருவேறு தெய்வங்களைப் பற்றிய ஏசலாக இந்நூலின் ஏசற்பகுதி அமையவில்லை. ஞானப்பள்ளில் இடம்பெறும் பள்ளியர் ஏசலுக்குச் சான்றாகச் சில பாடல்களை நோக்கலாம்:

"சூதாடியுன் மக்கள் முந்தக் கன்னத் தடித்தார்
தூயனார்மு கத்திற் கரங்கட்டி வரிந்தார்
காத லாப்ப ரோசிறை கடத்தி னவருங்
கட்டியிழுத் தேசிலுவை யோடு வதைத்தார்

(மூத்தபள்ளி)

"சுமந்துசெல்ல எவ்வொருபே ருதவக் கண்டதில்லை
யேதமில் சீமானல்லோ தானு தவினான்
என்கு லத்தி லுள்ளவர்கள் ஏக பரனை
ஈனமறக் கொன்றதென்று எல்லாந் தாலமேல்

(மூத்தபள்ளி)

"தாலமெல் லாந்தழைக்க வேணு மென்றல்லோ
தன்சரீர மானதிலே பாடு கள்பட்டார்
சாலஉடல் மேலயதி பாடு கள்பட்டுத்
தார ணிக்கு வேண்டி யாதி துஞ்சி னதாலே

(மூத்தபள்ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேடியதி ஞான நன்மை கூட வேபதில்

தீமைநிறை உள்ளமுடை யோர்க ளாகவே

நாடி யேமெய் யானதுகள் தன்னை மறக்க

நாட்டி னது முங்கள்குலத் தாரடி பள்ளி

(இளையபள்ளி)

"நாட்டினவர் முன்னெழுதி வைத்த படியே

நம்மை யாள வந்தபரன் நன்ம னப்படி

பாட்டைப்பட் டிறந்துயிர்த்தா ரெண்ணாமல் என்மேற்

பழியேன்சு மத்துறாய்நீ பாரி னிற்பள்ளி

(மூத்தபள்ளி)

"பாரழியுங் கால மின்ன மந்த ரத்திலே

பன்னிருவ ரோடுகர்த்தன் வாற துகண்டால்

ஆரடியெதிர்ப் பாயுன் மக்க ளும்நீயும்

அப்பறிவா யிப்பறியாய் தப்ப றைகாறி"[19]

(இளையபள்ளி)

பள்ளியர் இருவரும் உரையாடுமிடத்தும் இயேசுவின் பெருமையே பேசப்படுகின்றது. இயேசுவின் பெருமையையும், கிறித்துவ சமயக் கருத்துக் களையும் கூறுவதே நூலாசிரியரின் நோக்கமாகும்.

பள்ளு நூல்களிற் சமயச்சார்பான செய்திகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களிற் கூறப்படுவது வியப்புக்குரியதொன்றன்று. ஆயினும், நெல்வகை முதலானவற்றின் பெயர்களிலும் நூலாசிரியர்கள் தமது சமயச்சார்புத் தன்மையைப் புலப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனைப்பற்றி ந.வீ.செயராமன் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சைவ வைணவ சமயப் போராட்டங்கள் பள்ளு இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது போன்றே நெல் வகைகளின் பெயர்களிலும் சைவ, வைணவ சமயக் கடவுளர்களின் பெயர்கள் அமைந்துள்ளன. சைவ சமயப்பள்ளு இலக்கியங்களில் தில்லைக்கூத்தன் என்னும் பெயரால் நெல்வகை குறிப்பிடப்பட்டுள்ளதும், வைணவ சமயப் பள்ளு இலக்கியங்களில் திருவரங்கன் என்னும் பெயரால் நெல்வகை குறிப்பிடப்பட்டுள்ளதும் இதனை உணர்த்தும். சைவ சமயச் சார்புடைய திருவாரூர்ப்பள்ளு என்னும் நூல் ஆரூரில் சிறப்புற எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயரால் "வீதிவிடங்கன்" என்று ஒரு நெல் வகையைக் குறிப்பிடுவதும் அறியத்தக்கது" [21]

ஆகவே, மேலே நோக்கிய விபரங்களினின்றும் எந்த அளவுக்குப் பள்ளு நூல்களிற் சமயச் சார்பு இடம் பெற்றுள்ளது என்பதை இலகுவில் விளங்கிக் கொள்ளலாம்.

## (ஆ) பள்ளு நூல்கள் காட்டும் பெருந்தெய்வ – சிறுதெய்வ வழிபாடுகள்

பள்ளு நூல்களில் இடம்பெறும் சமயச் செய்திகளையும், வழிபாடுகளையும் நோக்குமிடத்து, அவற்றிற் பெருந்தெய்வங்கள், சிறுதெய்வங்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளமையைக் காணலாம். இருவகைத் தெய்வங்களின் வழிபாடுகள் பற்றிய அடிப்படைச் செய்திகளை உணர்ந்து கொண்டு, அவை பற்றி விளக்கமாக நோக்கலாம்.

தமிழகத்திற் பெருந்தெய்வ வழிபாடு தோன்றுவதற்கு ஆரியரின் சமய நம்பிக்கைகளும், கோட்பாடுகளும், சடங்குகளும் முக்கிய காரணங்களாக அமைந்தன. சங்ககாலத்தில் ஓரளவுக்கு இவற்றின் செல்வாக்குக் காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய செல்வாக்கும் நகர்ப்புறத்திலேயே காணப்பட்டது.[22] ஆனால், பல்லவர் காலத்திற் சிவன், திருமால் ஆகிய இரு தெய்வங்களும் பெருந்தெய்வங்களாக உயர்நிலையை அடைவதைக் காணமுடிகின்றது. இதற்கான காரணத்தைப் பேராசிரியர் க.கைலாசபதி பின்வருமாறு விளக்குவர்:

"குலங்களாகவும் குடிகளாகவும் (Tribes and Clans) மக்கள் வாழ்ந்த புராதனக் கூட்டுமுறை வாழ்க்கையிலே கொற்றவை, வேலன், வருணன் முதலிய தெய்வங்களே சிறப்புடையனவாய் இருந்தன. பூசாரிகள், குருமார் எவருமின்றி மக்கள் பலியிடுதல், வெறியாடல் முதலிய முறைகளினால் தாமே கூட்டாக வழிபட்ட நிலையிலே சமுதாயக் கடவுளர் தேவையாயிருந்தனர். ஓரளவிற்கு, இந்திரன், பிரஜாபதி முதலிய தெய்வங்கள் வேதகால ஆரியருக்கு உகந்தவராயிருந்ததைப் போல, சமூகத்திலே தனி உடைமையும் ஆட்சி நிலைமையும் தோன்றிய போது தனிப்பட்ட இட்ட தெய்வங்களும் வகுப்புகளுக்கான தனிப்பட்ட தெய்வங்களும் உருப்பெற்றன. அந்த நிலையிலேயே சிவன், விஷ்ணு முதலிய தெய்வங்கள் சிறப்புறத் தொடங்கின. கோயில் வழிபாடும், புறச்சமயங்களின் தாக்குதல் காரணமாக ஏற்பட்ட பக்திமார்க்கமும், சமுதாயத்திலே ஏற்பட்ட வர்க்க முரண்பாடுகளும் தனித்தெய்வங்கள் தோன்றுவதற்கு அனுசரணையாகவிருந்தன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் இப்பண்பு சங்கமருவிய காலத்தில் அதாவது கிறித்துவிற்குப் பின் மூன்றாம் நான்காம் நூற்றாண்டு களில் தோன்றுகிறது."[23]

சிவன், திருமால் ஆகியோர் பெருந்தெய்வங்களாகவும். முழுமுதற் கடவுளராகவும் முதன்மைநிலை பெறுவதனைப் பல்லவர் காலம் முதலாகக் காணமுடிகின்றது.

சங்ககாலத்திலேயே சிறுதெய்வங்களை வழிபடும் வழக்கம் இருந்ததென்பதைச் சங்க இலக்கியங்கள் காட்டி நிற்கின்றன. இதுபற்றிப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் கருத்துத் தெரிவிக்குமிடத்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறுதெய்வங்களை வழிபடும் வழக்கும் அக்காலத்தில் இருந்தது.
மலையிலும், நீரிலும், மரங்களிலும் கடவுள் உறைவதாக மக்கள் நம்பினர்.
மலையைச் சிறப்பிக்குமிடத்து அணங்குடை நெடுங்கோடு, அணங்குசால்
அடுக்கம், அருந்திறற் கடவுள் காக்கும் உயர் சிமையம் என்றிவ்வாறு
புலவர் கூறுவர்"[24]

எனக் குறிப்பிட்டுள்ளார். தமிழகத்துச் சிறுதெய்வ வழிபாட்டின் அடிச்சுவடுகளை நோக்குமிடத்து, சங்க இலக்கியங்களிலும், தொல்காப்பியத்திலும் குறிப்பிடப்படும் நடுகல் வழிபாட்டுடன் தொடர்புடையதாக அது இருந்துள்ளது என்பது புலனாகின்றது. போரில் உயிர்துறந்த வீரர்களின் நினைவாகக் கற்கள் அமைத்து, அவற்றுக்கு மலர், மது, ஊண், சோறு முதலானவற்றைப் படைப்பது வழக்கமாக இருந்துள்ளது.[25] சு.வித்தியானந்தன் குறிப்பிடுவது போன்று, "இன்று தாழ்ந்த சாதியினர் எனக் கருதப்படுவோர் வணங்கும் தெய்வங்களான மதுரைவீரன், இருளன், கறுப்பன், நொண்டி முதலியன நடுகல் வகுப்பைச் சேர்ந்தவை எனக் கருதலாம்."[26]

மேலும், தமிழகத்திற் சிறுதெய்வ வழிபாடு தொடர்பாக நோக்குகையில் பல்லவர் காலத்துச் சமய விடயங்களையும் கவனத்திற் கொள்வது இன்றியமையாததாகும். அக்காலகட்டத்திற் காபாலிகம், பாசுபதம், காளாமுகம், பைரவம், வாமம் முதலான சைவ சமயத்தின் உட்பிரிவுகள் காணப்பட்டன. அவை நரபலி, கட்குடி முதலியவற்றை அனுமதிப்பவையாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயினும், அவற்றின் செல்வாக்கு, தூய சைவ வளர்ச்சியினாலும், சங்கரரின் முயற்சியினாலும் குறைந்துவிட்டது.[27]

ஆயினும், தமிழகத்துப் பாமர மக்களின் வழிபாட்டு முறைகள் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளன. தமிழகத்தின் சிறுதெய்வங்களாக வைரவர், ஐயனார், பூலாவுடையார், உடையாரய்யர், கரையடிச்சாத்தா, புலியூருடையார், வடக்கு

வாய்ச்செல்லி, கொட்டூருடையார், குருந்தூருடையார், சாக்கையன், மதுரைவீரன், இருளன், நொண்டி, பஞ்சமாதேவி, சேவகராயர், நட்டாத்தியம்மன், காளியம்மன், அப்பக்கம்மன், கறுப்பன், அடைக்கறுப்பன், பேச்சியம்மன், ராக்கத்தியம்மன், மேடைக்காரனார், செவிட்டய்யனார், சத்தகன்னிமார், நாகர், ஏரிக்கரை முனியப்பன், கருமலையான், வேங்கையடி வன்னியர், சங்கிலிவீரன், காத்தவராயன், இடும்பன், சடையன், கருக்குவால் ஐயன் முதலானவை விளங்கிவந்துள்ளன.[28]

தமிழகத்தைப் போன்றே ஈழத்திலும் சிறுதெய்வ வழிபாடு காணப்படுகின்றது. தமிழகத்தின் பெருந்தெய்வ வழிபாட்டு முறைகளும், சிறுதெய்வ வழிபாட்டு முறைகளும் ஈழத்தையும் பாதித்துள்ளன. மாரியம்மன், வைரவர், வீரபத்திரர், காத்தவராயர், காளி, ஐயனார், அண்ணமார், கூட்டத்தார், சந்நியாசி, நாச்சிமார், சத்தகன்னியர், கழுவேறி, கண்ணகையம்மன், திரௌபதையம்மன், முதலிகள், பூதராயர், முனியப்பர், குறும்பன், பெரியதம்பிரான், இளந்தாரி, கிங்கிலியர், நாகதம்பிரான், அடுப்புநாச்சி, மதுரைவீரன், கொத்தியாத்தை, சீதையம்மன், விறுமர், கிங்கரர், காடேறி, கல்லெறிமாடன் முதலியவை ஈழத்தில் வழிபடப்படும் சிறு தெய்வங்களாகும்.[29] இவற்றிற் சில தமிழகத்துக்கும் பொதுவானவை; வேறு சில ஈழத்துக்குச் சிறப்பானவையாகும். பிள்ளையார் (விநாயகர்) பெருந்தெய்வப் பகுப்பிற் சேர்க்கப்படத்தக்க தெய்வமாக இருந்தபோதிலும், ஈழத்தில் முறிகண்டிப் பிள்ளையார், தில்லையம்பலப் பிள்ளையார் போன்ற தெய்வங்கள் முறையே பயணிகளின் இன்னல்களைப் போக்குபவராகவும், மாடுகளைப் பாதுகாப்பவராகவும் அமைந்து, சிறுதெய்வங்களாக விளங்குவதைக் காணலாம். ஒவ்வொரு சமூகத்தவரும் வெவ்வேறு சிறுதெய்வங்களை வழிபடுவதுண்டு. சான்றாக, இரும்பு உலோகத் தொழிலாளரின் தெய்வமாகக் காமாட்சி அம்மனும், சலவைத் தொழிலாளரின் தெய்வமாகப் பெரியதம்பிரானும், மரமேறுபவர்களின் தெய்வங்களாக அண்ணமார், கூட்டத்தார் என்பவையும் விளங்குவதைக் குறிப்பிடலாம்.[30] மேலும், மனிதர்கள் தவறு செய்தால் சிறுதெய்வங்கள் தண்டிக்கும் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயவுணர்வும் மக்களிடையே காணப்படுகின்றது. "சூல வைரவர் சுற்றிப் பிடியடா," "வீரபத்திரா வெள்ளிப் பிரம்பு எடுத்தடியடா," "காளி அம்மா கழுத்தை நெரியடியம்மா" போன்ற கூற்றுக்கள் அவர்களின் அத்தகைய உணர்வினைக் காட்டுகின்றன.[31]

பெருந்தெய்வ – சிறுதெய்வ வழிபாடுகளுக்கிடையிற் காணப்படும் வேறுபாடுகளைத் தெரிந்துகொள்வது இன்றியமையாதது. பெருந்தெய்வ வழிபாடு பரவலாகப் பல இடங்களிலும் இடம்பெறுவது. பெருந்தெய்வங்கள் சிலர் முழுமுதற் கடவுளராகவும். வேறு சிலர் அவர்களோடு தொடர்புடைய கடவுளர்களாகவும் கருதப்பட்டு வழிபடப்படுவர். பூசை, திருவிழா முதலானவற்றிலே திட்டவட்டமான வரையறைகளைக் கொண்டவையாகப் பெருந்தெய்வ வழிபாடுகள் விளங்கும். ஆனால், சிறுதெய்வங்கள் பெரும்பாலும் ஒவ்வொரு குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள மக்களால் மட்டும் வழிபடப்படுவனவாக உள்ளதோடு, முழுமுதற் கடவுளராகக் கொள்ளப்படுவதில்லை. மேலும், பூசை, திருவிழா முதலானவற்றிலே திட்டவட்டமான வரையறைகளையும் அவை கொண்டிருப்பதில்லை.[32] மேலும், பிராமணப் பூசகர்கள் பெருந்தெய்வங்களுக்கும், பிராமணரல்லாதவர்கள் சிறுதெய்வங்களுக்கும் பூசைகள் செய்வர். பெருந்தெய்வங்களுக்கு வடமொழி மூலமாகவும், சிறு தெய்வங்களுக்கு உள்ளூர் மொழிகளிலும் பூசைகள் நடைபெறும். தெய்வங்களுக்குப் படைக்கப்படும் உணவு வகைகளைப் பொறுத்தவரையில், பெருந்தெய்வங்களுக்குத் தேங்காய், பழம், பூக்கள் முதலானவை படைக்கப்படுகின்றன. சிறுதெய்வங்களுக்கு முன்னிலையில் ஆடுகள், கோழிகள் முதலானவை பலியிடப்படுகின்றன. பெருந்தெய்வங்கள் கருணையுள்ளனவாகவும், சிறுதெய்வங்கள் பயங்கரமானவையாகவும் கருதப்படுகின்றன[33]

இவைமாத்திரமன்றி, பெருந்தெய்வங்களுக்கு ஆகம வழிபாடும் சிறு தெய்வங்களுக்குச் சாதாரண வழிபாடும் அமைந்துள்ளன. பெருந்தெய்வங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடுவதில் ஆத்மீக நோக்கும், உலகியல் நோக்கும் முதன்மையான அம்சங்களாக விளங்குகின்றன. சிறுதெய்வங்கள் உலகியல் நோக்குக் கருதியே வழிபடப்படுகின்றன. பெருந்தெய்வங்களுக்கு முழுக்காட்டுதல் (அபிஷேகம்) முதன்மையான வழிபாட்டு முறைமையாகும். சிறுதெய்வங்களின் வழிபாட்டினைப் பொறுத்தவரையில், படையலும் மடைவைத்தலும் முக்கிய இடத்தினை வகிக்கின்றன.

இவற்றோடு, பெருந்தெய்வங்கள், சிறுதெய்வங்கள் தொடர்பான இன்னொரு விடயமும் கவனத்துக்கு உரியதாகும். சாதியமைப்புக்கும், தெய்வங்களுக்கு மிடையே தொடர்பு காணப்படுகின்றது. பெருந்தெய்வங்கள் பெரும்பாலும் உயர்சாதியினரால் வழிபடப்பட்டு வந்துள்ளன. சிறுதெய்வங்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களால் வழிபடப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறுதெய்வ வழிபாட்டில், ஒவ்வொரு சாதியினருக்குமுரிய கோயில்களில், அவ்வச் சாதியினரே பூசகர்களாகவும் இருந்துவந்துள்ளனர். ஈழத்திலும் இந்நிலையைக் காணலாம்.

பெருந்தெய்வ வழிபாடும், சிறுதெய்வ வழிபாடும் பல நூற்றாண்டுகளாக அருகருகே நிலைபெற்று வந்துள்ளன. அவையிரண்டும் ஒன்றினின்றும் மற்றொன்று வழிபாட்டு முறைகளைக் கடன்பெற்று வந்துள்ளன. அத்துடன், சிறுதெய்வங்களுடன் தொடர்புடைய பல சடங்குகள் பிராமணப் பூசகர்களினாற் பின்பற்றப்பட்டுள்ளன. மேலும், பெருந்தெய்வ வழிபாடு பழங்குடியினரின் வழிபாட்டு முறைகளினின்றும் பல கருத்துக்கள், வழக்கங்கள், சடங்குகள் முதலானவற்றைப் பின்பற்றியுள்ளது. அதேவேளை, தத்துவத்தை அது நிலைக்களனாகக் கொண்டுள்ளது.[34]

இன்றைய நிலையில், பெருந்தெய்வ-சிறுதெய்வ வழிபாடுகள் தனித்தனியாகப் பேணப்படும் போக்குக் குறைந்து வருகின்றது. இருவகைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வங்களுக்குமிடையில் ஒருவகை வழிபாட்டு இணைப்பு காலப்போக்கில் ஏற்பட்டு வந்துள்ளது. ஈழத்தினை எடுத்துக்கொண்டால், உயர்சாதியினர் சிறுதெய்வங்களை வணங்குவதும், படையல், வடைமாலை முதலியன வைத்து, அவற்றுக்கு வழிபாடு இயற்றுவதும் இன்றைய காலகட்டத்தில் இயல்பாகி விட்டது. இவைமாத்திரமன்றி, சிறு தெய்வங்களுக்குத் திருவிழாக்கள் நடத்துவதும் வழக்காகி வருகின்றது. தாழ்த்தப்பட்ட மக்களும் தற்போது உயர்சாதியினருக்குரியனவாகக் கருதப்படும் பெருந்தெய்வங்களை வழிபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சாதிமுறைமைக்கு எதிரான போராட்டங்களும், சாதியமைப்பில் ஏற்படத் தொடங்கியுள்ள நெகிழ்ச்சித் தன்மையும் இதற்கான முக்கிய காரணங்களாகும்.

இச்சந்தர்ப்பத்தில், தென்னிந்தியக் கிராமியத் தெய்வங்களைப் பற்றி ஆராய்ந்த ஹென்றி வைற்ஹெட் தெரிவிக்கும் தெய்வங்கள் பற்றிய கருத்துக்களைத் திரட்டி நோக்குவதும் பொருத்தமானதாகும். இந்துசமயத் தெய்வங்களைப் பொறுத்த வரையில், பெருந்தெய்வங்கள் ஆண்தெய்வங்களாகவும், சிறுதெய் வங்கள் பெரும்பாலும் பெண்தெய்வங்களாகவும் இருப்பர். மேலும், ஆண்தெய்வங்கள் தரத்திலே தலைமை நிலையினைப் பெறுவதையும், பெண் தெய்வங்கள் துணை நிலையில் அமைவதையும் காணமுடிகின்றது. இதனை, இன்னொரு வகையிலும் விளங்கிக் கொள்ளலாம். ஆண்தெய்வங்கள் பெரும்பாலும் ஆரியத்தொடர்புடையவையாக இருப்பதனால், அவ்வினத்தின் இயல்புக்கேற்பப் போர்க்குணம் உள்ளவையாக விளங்குகின்றன. அதேவேளை, பெண்தெய்வங்கள் திராவிடத் தொடர்பு உடையவையாகவும், வேளாண்மைத்தொழிலில் ஈடுபாடுடையவர்களின் நோக்கங்களை நிறைவு செய்வனவாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு, பெண்தெய்வங்கள் வேளாண்மையோடு தொடர்பு டையவையாக இருப்பதற்குக் காரணம், பழங்காலத்தில் வேளாண்மைத்தொழில் பெண்களுக்கு உரியதாகக் கருதப்பட்டமையாகும். மேலும், வளமை, அல்லது செழிப்பு தொடர்பான விடயங்கள் பெண்களுடன் தொடர்புள்ளவையாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில், பெரும்பாலான பெண்தெய்வங்களுக்கு ஆண் ஏவலாளர் (Male attendants) நிலையிற் சில தெய்வங்கள் இருப்பதுண்டு.[35]

ஹென்றி வைற்ஹெட்டின் மேற்கண்ட கருத்துக்களிற் சில ஏற்றுக்கொள்ளத்தக்கவையன்று. இன்றைய காலகட்டத்திலே, தெய்வங்களை ஆரியத் தெய்வங்கள், திராவிடத் தெய்வங்கள் எனத் தெளிவாக வரையறை செய்ய இயலுமா என்பது கேள்விக்குரியது. ஏனெனில், வேதகாலத் தெய்வங்களும், தமிழர் வழிபட்டுவந்த தெய்வங்களும் இணைவதைச் சங்ககாலத்திலே அவதானிக்க முடிகின்றது. முதன்மையாக முருகனும், கொற்றவையும் தமிழரின் தெய்வங்களாகும். ஆயினும், காலப்போக்கிலே தமிழரின் தெய்வமான முருகனும், ஆரியக் கடவுளான கார்த்திகேயனும் இணைவதைக் காணமுடிகிறது. கொற்றவையும் இவ்வாறே பிற்காலத்தில் ஆரியத்தெய்வமான துர்க்கையோடு இணைத்து வழிபடப்பட்டது. மாயோன், அல்லது திருமாலும் காலப்போக்கில் ஆரியக் கடவுளான விஷ்ணுவோடு இணைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அதைப்போன்றே, செல்வத்தின் தெய்வமாகத் தமிழராற் கருதப்பட்ட திரு என்பதும், ஆரியத் தெய்வமான இலக்குமியோடு தொடர்புபடுத்தப்பட்டமையை அறியமுடிகின்றது.[36] இவற்றைக் கொண்டு நோக்குமிடத்து, ஹென்றி வைற்ஹெட் போதிய ஆதாரங்களின்றி மேலெழுந்தவாரியாக இந்துமதத் தெய்வங்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளார் என்பது தெளிவாகின்றது. ஆண்தெய்வங்கள் பெரும்பாலும் ஆரியத் தொடர்பு உடையவையாக விளங்குகின்றன என்றும், பெண்தெய்வங்கள் திராவிடத் தொடர்பு கொண்டவை எனவும் அவர் கொண்டுள்ள கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள இயலாதவையாகும். இன்றைய நிலையில், இத்தகைய தெளிவற்ற பாகுபாடு தேவையற்றதாகும்.

எட்கார் தேர்ஸ்டன் தென்னிந்தியச் சாதிகளும் பழங்குடிகளும் பற்றிய தமது நூலிற் பள்ளரின் வழிபாட்டு முறைகளைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பொதுவாகச் சைவர்களாயினும், சிறுதெய்வங்களுக்கு வழிபாடு நடத்துவதையும், புலாலும் மதுவகையும் அவர்களின் வழிபாட்டில் இடம்பெறுவதையும் குறிப்பிட்டுள்ளார்.[37] சிறுதெய்வ வழிபாடு தாழ்த்தப்பட்ட மக்களான பள்ளர் முதலான சமூகத்தவருக்கு உரிமையாக இருந்தமையை, "தங்கள் சாதி முறையிலுள்ள சடங்கியற்றி"[38] எனச் செண்பகராமன் பள்ளு குறிப்பிடுவதன் வாயிலாகவும் உணரமுடிகின்றது. அதேவேளை, பெருந்தெய்வ வழிபாடு பள்ளர் சமூகத்தவருக்கு உரிமையானதன்று என்ற குறிப்பைத் திருமலைமுருகன் பள்ளு தெரிவிக்கின்றது:

"பண்ணைப் பள்ளி சொல்ல வாடி
நாயன் பேர்சொல்லல்–பொல்லாப்
பள்ளச் சாதிக் கியல் பல்ல
தள்ளிப் போ போடி."[39]

இதன்மூலம், திருமலைமுருகன் பள்ளின் ஆசிரியர், பள்ளு இலக்கிய அமைப்புக்கு ஏற்ப, பள்ளரின் வழிபாடுகளைத் தமது நூலிற் புகுத்தியிருப்பினும், பெருந்தெய்வ வழிபாட்டுக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் அருகதையற்றவர் என்ற தமது உளப்பாங்கையும் வெளிப்படுத்தியுள்ளார் என்பதையும் உணரமுடிகின்றது.

பள்ளு நூல்களில் மழைபெய்ய வேண்டித் தெய்வங்களைப் பள்ளர் வழிபடுவதாகக் கூறப்படுகின்றது. அவ்வாறு வழிபடும்போது, பெரும்பாலும் சிறுதெய்வ வழிபாட்டு முறைகளும், சிறுபான்மை பெருந்தெய்வ வழிபாட்டுக் கூறுகளும் இணைத்துக் கூறப்படுகின்றன. தெய்வங்களைப் போற்றினால் நிச்சயமாக மழைபெய்யும் என அவர்கள் நம்பினர்.40 அவ்வாறே, பள்ளர் ஒன்றுகூடித் தெய்வத்தை வேண்டுவதனைப் பின்வரும் பாடலொன்று தெளிவுறுத்துகின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வரந்தரு வீரே–மழைபெய்ய
வரந்தரு வீரே– சதவித
மகநா யகரே–மழைபெய்ய
வரந்தரு வீரே
கரந்தசெஞ் சடையார்–அருள்திருக்
காவிவெற் புடையார்–பண்ணைக்
காலமுந் தழைக்க–மழைபெய்யக்
கருணை செய்வீரே."[41]

மேலும், "தோத்திரம் பண்ணும் பண்ணுங் கூத்தாடியே தொழுது தொழுது வேண்டும் மழை பெய்யவே"[42] எனப் பள்ளர் ஒருவருக்கொருவர் கூறித் தூண்டுவதனையும் காணலாம்.

மழை பெய்ய வேண்டித் தெய்வங்களைப் போற்றும்போது, கும்மியடித்து வழிபடுவதும் உண்டு. இவ்வாறு கும்மியடிப்பது ஒரு மழைச் சடங்காகவே கருதப்படுகின்றது.[43] திருமலைமுருகன் பள்ளும், கண்ணுடையம்மன் பள்ளும் மழை வேண்டிப் பள்ளியர் கும்மியடித்துப் பாடுவது பற்றி விரிவாகக் குறிப்பிடுவதைக் காணலாம்.[44]

பள்ளு நூல்களில், மழை வேண்டித் தெய்வங்களுக்குப் படையலிட்டு வழிபடுவது பற்றியும் கூறப்படுகின்றது. இவ்வாறு, தெய்வங்களுக்குப் படையலிடுவதில், மக்களின் மனப்பாங்கே பெரும் பங்காற்றுகிறது. அவர்கள் தாம் விரும்பும் உணவு வகைகளையே நெடுங்காலமாகத் தாம் வழிபடும் தெய்வங்களுக்கும் படைத்து மனநிறைவு பெற்று வந்துள்ளனர். இவ்வாறு தெய்வங்களுக்குப் படையலிடும்போது, பெருந் தெய்வங்கள், சிறுதெய்வங்கள் ஆகிய இருவகைத் தெய்வங் களுக்கான படையல்களும் வேறுபடுகின்றன. பெருந்தெய்வங்களுக்குப் படைக்கப்படும் பொருட்கள் ஒருவகையாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுதெய்வங்களுக்குப் படைக்கப்படுபவை பிறிதொரு வகையாகவும் அமையும். இதனைப் பின்வரும் கூற்று தெளிவுபடுத்துகின்றது:

"பொதுவாகப் பெருந்தெய்வங்களுக்குத் தேங்காய், பழம், அவல், கடலை, எள்ளுருண்டை, இட்டலி, தோசை, பொங்கல், அதிரசம் போன்ற சைவப் பொருட்களும் சிறுதெய்வங்களுக்குக் கருவாடு, சுருட்டு, கஞ்சா, சாராயம் முதலிய அசைவப் பொருட்களோடு தேங்காயும் பழமும் வைத்துப் படைக்கப்படுகின்றன. மக்களின் உணவுப் பழக்கத்தோடு அவர்கள் வணங்கும் தெய்வங்களுக்குப் படைக்கும் பொருட்களின் உணவு வகைகள் தொடர்பு கொண்டுள்ளதை அறியலாம்."[45]

மேலும், சிறுதெய்வங்களுக்கு ஆடுகள், கோழிகள் முதலானவை பலியிடப்படுதலுமுண்டு. இதற்கு முதன்மையான காரணம், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலையாகும். அவர்களால் தமது தரத்துக்கு மேலான வகையிலே தெய்வங்களையோ, அவற்றுக்கான வழிபாட்டு முறைகளையோ கற்பனை செய்வதற்கு இயலுவதில்லை. எனவே, அவர்களது வாழ்வியலோடு இணைந்ததாகவே தெய்வம் பற்றிய அவர்களது கருத்துக்களும், வழிபாடு பற்றிய அவர்களது கொள்கைகளும் அமைந்துள்ளன. பள்ளர் சமூகத்தவரும் இத்தகைய நிலையிலேயே காணப்பட்டமையால், அவர்களது வழிபாட்டு முறைகளும் இம்முறையிலேயே அமைந்திருந்தன.

பள்ளர் சமூகத்தவர் மழை வேண்டித் தெய்வங்களுக்குப் படையலிட்டு வழிபடுவது பற்றிய செய்திகளை, சில பள்ளு நூல்களை ஆதாரமாகக் கொண்டு நோக்கலாம். முக்கூடற்பள்ளிற் பூலாவுடையாருக்குப் பொங்கலிட்டுத் தேங்காய், கரும்பு படைத்தமை பற்றியும், உடையாரய்யருக்குக் குங்குமம், சந்தனம் கலந்து படைத்தல், கரையடிச் சாத்தாவுக்கு ஏழு கடாய்கள் வெட்டுதல், புலியூருடையாருக்குச் சேவல் பலியிடப்படல், வடக்குவாய்ச் செல்லிக்குச் சாராயம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்கள் ஆகியவற்றைக் குடங்களிற் படைத்தல் முதலானவை பற்றியும் கூறப்படுகின்றன.[46] திருமலைமுருகன் பள்ளில், சிறுதெய்வங்களுக்குச் சேவலும், மறியாடும் பலி கொடுப்பது பற்றிக் கூறப்படுகின்றது.[47] மேலும், அவற்றுக்கு மது வகைகளும், கறி சோறும் படைத்துப் பொங்கலிட்டுக் குரவை யொலியெழுப்பி[48] வணங்குவதும் கூறப்படுகின்றது. பின்வரும் பாடல் அதனைத் தெரிவிக்கின்றது:

"தொண்டிக்கள் ளரக்கும்–பனங்கள்ளும்
பண்டியிற் பெரிய–குடந்தனில்
    தொடர்பெற அடைத்தே–கறிசோ(று)
    அடைவுடன் படைத்தே
எண்டலம் புரக்கும்–நரபெலி
கொண்டவள் முனமே–குரவையிட்(டு)
    இங்கித மாக–நாமிடும்
    பொங்கல் பொங்கியதோ."[49]

பொய்கைப்பள்ளில் மழை வேண்டித் தெய்வங்களை வழிபடும்போது, தெய்வங்களுக்கு ஏற்ற வகையிற் படையல் நிகழ்த்தப்படுகின்றது. கற்பக விநாயகர், நட்டாத்தியம்மன், காளியம்மன், அப்பக்கம்மன், ஐயனார், வைரவர், வடக்குவாய்ச் செல்லி, தேவதேவன் ஆகிய தெய்வங்களுக்குத் தோசை, வடை, பொரி, கடலை, அவல், பயறு, பொங்கல், பழம், கரும்பு, தேங்காய், பால், உழுந்து, வடைமாலை, தினைமா விளக்கு முதலானவை படைக்கப்படுகின்றன. துர்க்கையம்மன், கறுப்பன், அடைக்கறுப்பன், பேச்சியம்மன், ராக்கத்தியம்மன், மேடைக்காரனார், செவிட்டையனார் ஆகிய தெய்வங்களுக்கு ஆட்டுக்கடா, சேவல், சோறு, முட்டை, கள், சாராயம் முதலானவை படைக்கப்படுவதைக் காணலாம்.[50] இவ்வாறு செய்வதனால், தெய்வங்கள் மகிழ்ந்து மழையைப் பெய்விக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கோட்டுப் பள்ளிலும் தெய்வங்களின் வழிபாட்டு முறைகள் குறிப்பிடப்படுகின்றன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றை நோக்கலாம். நாகலிங்கேசுவரர், விநாயகர், முருகன் ஆகியோருக்கு ருத்ராபிடேகம் செய்வது, திருமாலுக்கும், தேவியர் இருவருக்கும் ஏகாதசிக் கட்டளை செய்வது, துர்க்கைக்கும் சுற்றுப்பிரகார தெய்வங்களுக்கும் வீரேசுரருக்கும் வெவ்வேறாகப் பாற்பொங்கல் பொங்குவது, வைரவருக்கும் சூரியனுக்கும் வடைமாலை சூட்டுவது, ஏழு கன்னிமார் முதலியோருக்கு இளநீர், நைவேத்தியம் வைப்பது, நாகருக்குச் சேவல் அறுத்துப் பொங்கலிடுவது, நந்திக்கு வெல்லம், கடலை படைப்பது, ஏரிக்கரை முனியப்பனுக்குப் பொங்கலிடுவது போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம்.[51] இத்தகைய நேர்த்திகள் பள்ளரால் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன என்று மூத்தபள்ளி தெய்வங்களாற் பீடிக்கப்பட்ட நிலையிற் (சன்னதம்) கூறுகின்றாள். இவற்றின் வாயிலாகவும் பள்ளரின் வழிபாட்டு முறைகளை அறிந்துகொள்ள முடிகின்றது.

இவ்விடத்து, சன்னதம் பற்றிச் சிறிது நோக்குவது இன்றியமையாதது. தெய்வம் மக்களில் ஒருவரிடத்து வெளிப்பட்டுச் சன்னதம் ஏற்படும் என்ற நம்பிக்கை சங்ககாலம் முதலாகத் தமிழ் மக்களிடத்துக் காணப்பட்டு வந்துள்ளது. இதனை வெறியாட்டு என்பர். இக்கால வழக்கிற் சன்னதம் ஆடுதலை, உருவாடுதல் எனக் குறிப்பிடுவர். இதுபற்றி சு.வித்தியானந்தன் கூறுவன மனங்கொள்ளத்தக்கன:

"இத்தகைய கூத்தாட்டுக்கள் நிகழும்போது முருகன் வழிபடுகின்ற ஒருவரில் வெளிப்படுவான். அவன் எவரிலேனும் இவ்வாறு வெளிப்பட்டுத் தான் கூற வேண்டியவற்றைக் கூறுவான். தமிழ்நாட்டிலும் ஈழத்து வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் இவ்வாறு தெய்வங்கள் வெளிப்பட்டுத் தோன்றும் என்ற நம்பிக்கை மக்களிடையே இன்றும் இருக்கின்றது. பேதி அம்மை முதலிய நோய்கள் நிலவுகின்ற காலங்களில் மக்கள் யாவரும் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து கடவுளைப் பரவி நிற்பார்கள். திடீரென அவர்கள் ஒருவரில் தெய்வம் வெளிப்பட்டுத் தான் கூறவேண்டியதைக் கூறும்.[51அ]

இவ்வாறு, தெய்வம் மக்களிடத்து வெளிப்படும் என்ற நம்பிக்கை நீண்ட காலமாகத் தமிழர் சமுதாயத்திற் காணப்பட்டது. சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரி இதனைத் தெளிவாகக் காட்டுகின்றது. சாலினி என்பவள் தெய்வமுற்றுக் கண்ணகியைப் பற்றிக் குறிப்பிடும் செயல் நினைவுகூரத்தக்கது.[51ஆ] மேலும், கிராமப்புறங்களில் மாரியம்மனுக்காகக் கரகமாடும்போது, சிலவேளைகளில் ஏற்படும் ஆவேசநிலை, பேய் பிசாசுகளை அகற்றுபவன் ஆடும் ஆட்டம், கோயில்களில் மிருகபலி கொள்ளும் ஐயனாருக்கான ஆட்டம் முதலானவையும் சன்னதத்தின் பாற்படும்.

இவை தவிர, பள்ளன் தண்டனை அனுபவிக்கும்போது, மூத்தபள்ளி அவனுக்கு உணவு கொண்டுவருவதுண்டு. அப்போது அவள் பண்ணைக்காரனுக்குக் கூறுபவையும், பள்ளர் சமூகத்தினரின் சிறுதெய்வ வழிபாட்டைக் குறிப்பிடுகின்றன. "ஆலில் நின்றிடும் வீரன் றனக்கிட்ட ஆட்டிறைச்சியு மாக்கிய கள்ளும்," பிற உணவு வகைகளும் கொண்டுவந்ததாகத் திருவாரூர்ப் பள்ளில் மூத்தபள்ளி கூறுவதாகக் குறிப்பிடப்படுகின்றது.[52] "எங்கள் மாமன் தப்புக்காலன் கருமலையர்க் கேதுக்கோ ஆக்கிப் படைத்தானாம்"[53] எனச் செண்பகராமன் பள்ளிற் கூறப்படுகின்றது. குருகூர்ப்பள்ளில், "வெள்ளிக்கிழமை நள்ளிரு-ளூன் காவல்விட வேங்கையடி வன்னியர்க்காங்கே துள்ளுமறி யொன்று வெட்டிப்-பாற் பொங்கலிட்டுச் சுள்ளும் பனங்கள்ளுங் கொணர்ந்தேன்"[54] எனக் குறிப்பிடப்படுகின்றது. முக்கூடற்பள்ளில், "செங்கான் எனக்கு மூத்தவன்-ஏதுக்கோ தெய்வத்துக் காக்கி வைத்தானாம்"[55] என்று கூறப்படுகின்றது. இத்தகைய செய்திகள் மூலம், பள்ளர் சமூகத்தவரின் உணவு வகைகளும், குடிப்பழக்கமும் அவர்கள் வழிபடும் சிறு தெய்வங்களுக்குப் படைக்கப்படும் பொருள்களிலும் பிரதிபலிக்கின்றன என்பதனை உணர்ந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வாழ்க்கையிலே தமது விருப்பங்கள் சிலவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தெய்வங்களிடம் நேர்த்தி வைத்துக்கொள்வதுண்டு. உயர்வு, தாழ்வு இன்றி, எல்லாச் சமூகத்தவரிடத்தும் இத்தகைய வழக்கம் உண்டு. பள்ளர் சமூகத்தவரும் அவ்வாறே தமது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தமது தெய்வங்களிடம் நேர்த்தி வைத்து வேண்டுதல் செய்வதுண்டு. இன்னது தமது வாழ்க்கையில் நிறைவேறினால், இன்னதைத் தாம் செய்வதாக உறுதி செய்து கொள்வர். இவ்வாறு, பள்ளர் நேர்த்தி செய்து கொள்வதைப் பள்ளு நூல்களிற் காணலாம். பள்ளன் தண்டனை அனுபவிக்கும்போது, இளையபள்ளி, "கறுப்பனுக்கும் இடும்பனுக்கும் வேண்டிக் கொண்டே இருபது முப்பதை நேர்ந்து கட்டாய்"[56] என அவனுக்குக் கூறுவதும், பள்ளன் மூத்தபள்ளியிடம், "இணங்கவே நங்கறுப்பன் தனக்கும் இடும்பனுக்கும் நன்றாய் நேர்ந்து கொண்டு வணங்கிற் காரியம் கைப்பலனாகும்"[57] எனக் கூறுவதும் திருமலைமுருகன் பள்ளிற் காணப்படுகின்றன. செங்கோட்டுப் பள்ளில், நாட்டில் மழை பெய்யாமைக்குக் காரணம், பள்ளர் முன்னர் தெய்வங்களுக்கு நேர்ந்திருந்த நேர்த்திகளைச் செய்யாமையேயாகும் என மூத்தபள்ளி சன்னதங் கொண்டு கூறுவதாகக் காட்டப்பட்டுள்ளது.[58] மேலும், தாம் தகுந்த முறையில் நேர்த்தியை நிறைவேற்றித் தெய்வங்களை வழிபாடு செய்யாவிடின், அவை தம்மைத் தண்டிக்கும் என்ற பயம் பாமர மக்களிடையே காணப்படுகின்றது. பள்ளர் சமூகத்திலும் அவ்வித பயவுணர்வு உள்ளதென்பதைப் பள்ளு நூல்கள் புலப்படுத்துகின்றன. பள்ளன் தண்டனை அனுபவிக்கும்போது, மூத்தபள்ளி, "தேவநாயகன் காவித் திருமலைத் தெய்வஞ் செய்த செயலிது பள்ளா"[59] எனக் கூறுவதைக் காட்டலாம். பள்ளன் மயங்கி வீழ்ந்தபோது, அவள், "மன்றினின்ற வீரன் குற்றமோ"[60] எனக் குறிப்பிடுவதும் இங்கு நோக்கத் தக்கது.

மேலும், கன்னிமார் பூசை பற்றிச் செங்கோட்டுப் பள்ளிற் கூறப்பட்டுள்ளது. கன்னிமாருக்குக் கரகம் எடுத்து அவர்களைப் போற்றி வணங்குமாறும், அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மைகள் கிடைக்கும் என்றும் மூத்தபள்ளி பிற பள்ளியருக்குக் கூறுவதையும் இப்பள்ளிற் காணலாம்.[62] தமிழகத்தில் இடம்பெறும் ஏழு கன்னிமார் வழிபாடும், ஈழத்திற் காணப்படும் நாச்சிமார் வழிபாடும் ஒத்த தன்மைகள் உடையனவாகக் காணப்படுகின்றன. பறாளைவிநாயகர் பள்ளில் நாச்சிமார் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.[63]

பள்ளு நூல்களிற் பெருந்தெய்வங்கள் தொடர்பான சமயக்கருத்துக்கள் நூலின் அமைப்போடு இரண்டறக் கலந்தவையாகக் காணப்படுகின்றன. இதற்குப் பொருத்தமான ஓர் எடுத்துக்காட்டாகப் பள்ளு இலக்கியத்தின் பள்ளியர் ஏசற் பகுதியைக் குறிப்பிடலாம். இப்பகுதி பெருந்தெய்வங்கள் தொடர்பான புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.[64] மேலும், இப்பகுதியை நீக்கிவிட்டால், பள்ளு இலக்கியம் அதன் சிறப்பான பகுதிகளில் ஒன்றினை இழந்த தோற்றத்தினை அளிக்கும். இதனைக்கொண்டு நோக்குமிடத்து, பள்ளு நூலாசிரியர்கள் தமது சமயச்சார்புத் தன்மையையும், பெருந்தெய்வங்கள் தொடர்பான செய்திகளையும் நூலினூடே புகுத்தி, அவற்றினின்றும் இவ்விலக்கியத்தினைப் பிரித்து நோக்கவியலாது என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளமை தெளிவாகின்றது.

ஆயினும், பள்ளு பள்ளர்களையே பாத்திரங்களாகக் கொண்டு அமைந்த இலக்கியமாதலால், அவர்களின் வழிபாட்டுடன் தொடர்பான செய்திகளை விலக்கி விட்டு, அதற்குச் சமயச்சார்புத் தன்மையை முற்றாக அளிக்கவும் இயலாது. அவ்வாறு, பள்ளரின் வழிபாட்டுக் கூறுகளை ஒதுக்கிவிட்டு இவ்விலக்கியம் அமைந்திருப்பின், அவர்களது வாழ்வியலைப் பிரதிபலிப்பதாகவும் விளங்கியிருக்கவியலாது. இதனாலேயே, பள்ளு நூலாசிரியர்கள் அடிப்படையிலே தமது சமயச்சார்புத்தன்மையைப் புலப்படுத்தவே விரும்பியிருப்பினும், தவிர்க்கவியலாதவாறு பள்ளரின் வழிபாட்டுக் கூறுகளையும் இணைக்கவேண்டி ஏற்பட்டது. எவ்வாறாயினும், நூலாசிரியர்களின் இத்தகைய முயற்சி, பள்ளு இலக்கியத்துக்குச் சிறப்பினையே சேர்த்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியப் பரப்பிலே, பெருந்தெய்வ-சிறுதெய்வ இணைப்பு பள்ளு இலக்கியத்திலேயே சிறப்பிடம் பெற்றுள்ளது. இதற்கான காரணத்தை நோக்கிய கோ.கேசவன், பள்ளர் சமூகத்தவரைத் தொடர்ந்தும் பண்ணை அடிமைகளாகவே வைத்திருந்து, வேளாண்மைத் தொழிலில் ஈடுபடச் செய்வதற்கான ஒருவகைக் கலாசார ஏமாற்றுதல் முறை (Cultural deception) யாகவே, பள்ளு நூலாசிரியர்கள் இத்தகைய பெருந்தெய்வ-சிறுதெய்வ இணைப்பைப் பயன்படுத்தியுள்ளனர் எனக் கருதுகின்றார்.[65] ஆயினும், இக்கருத்து ஏற்கத்தக்கதன்று. ஏனெனில், கல்வியறிவற்றவராகவும், பண்ணை அடிமைகளாகவும் இருந்த பள்ளர் சமூகத்தைப் பள்ளு நூல்கள் எவ்வகையிலும் பாதித்திருக்க இயலாது. நேரடியாகப் பள்ளர் சமூகத்தைப் பாதிக்கவியலாத இலக்கியமொன்றில், அச்சமூகத்தைக் கலாசார முறையில் ஏமாற்றுவதற்குச் சில வழிமுறைகள் கையாளப்பட்டிருக்கும் என்பது நம்புவதற்கு ஏற்றதன்று.[66] ஆகவே, பள்ளு இலக்கியத்திற் காணப்படும் பெருந்தெய்வ-சிறுதெய்வ இணைப்பு, உண்மையிற் பள்ளர்களைக் கலாசார முறையில் ஏமாற்றும் முயற்சியன்று. பள்ளு நூலாசிரியர்கள் தமது சமயச்சார்பினைப் புலப்படுத்த விழையும் அதேவேளையில், தாம் எந்தச் சமூகத்தினின்றும் பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்தனரோ, அச்சமூகத்தின் வழிபாட்டு முறைகளையும் இவ்விலக்கியத்தில் இணைத்து, ஒரு புதுவகை இலக்கிய முயற்சியினைச் செய்ய முயன்றுள்ளார் எனக் கொள்வதே ஏற்புடையதாகும்.

இதனாலேயே, இந்துசமய தத்துவ நிலைகளைக் கொண்ட பெருந்தெய்வ வழிபாட்டினையும், பள்ளர் போன்ற தாழ்த்தப்பட்ட மக்களின் சிறுதெய்வ வழிபாட்டினையும் தமது இலக்கியத்திற் பயன்படுத்தவேண்டிய தேவையும், விழைவும் நூலாசிரியர்களுக்கு இருந்துள்ளன. முன்னது தனக்கென ஒரு சமய தத்துவ அடிப்படையையும், பின்னது தனக்கெனத் தனியான வழிபாட்டு முறைகளையும் கொண்டவையாக விளங்குகின்றன. இரண்டின் பயனையும் பள்ளு இலக்கியம் மூலமாகத் தமிழ் இலக்கிய உலகம் பெறமுடிந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தைப் போன்றே ஈழத்திலும் பெருந்தெய்வ, சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் அருகருகே வளர்ச்சிபெற்று வந்துள்ளமையைக் காணலாம். ஆயினும், தமிழகப் பள்ளு நூல்களைப் போன்று, ஈழத்துப் பள்ளு நூல்களில் இவற்றின் பிரதிபலிப்பை அதிகமாகக் காணமுடியாமல் உள்ளது. இதற்கான முதன்மையான காரணம், தமிழகப் பள்ளு நூல்களுடன் ஒப்பிடுமிடத்து, ஈழத்துப் பள்ளு நூல்கள் செயற்கைத்தன்மை வாய்ந்தவையாக அமைந்திருப்பதேயாகும். ஈழத்துப் பள்ளு நூல்களில் முதலிலே தோன்றிய கதிரைமலைப் பள்ளிலும் சிறுதெய்வங்கள் தொடர்பான செய்திகள் குறைந்து, பெருந்தெய்வங்கள் பற்றிய விடயங்களே பெருமளவில் இடம்பெற்றுள்ளன. ஞானப்பள்ளு முற்றுமுழுதாகக் கத்தோலிக்க கிறித்துவ சமய விளக்க நூல் போன்று அமைந்து விட்டது. அதனால், பள்ளர் சமூகத்தவரின் வழிபாடுகள் பற்றிய செய்திகள் அந்நூலில் இடம்பெறவில்லை. பறாளை விநாயகர் பள்ளில், பள்ளன் மாட்டினாற் குத்தப்பட்டு வீழ்ந்து கிடக்கும்போது, "நாச்சிமார் தங் குறையோ"[67] என்றும், "கண்ணனுதற் கண்ணனருள் காரியையனார்குறையோ"[68] எனவும் மூத்தபள்ளி கூறுபவையே சிறுதெய்வ வழிபாட்டுடன் தொடர்பான விடயங்களாக அமைந்துள்ளன. பெருந் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய இந்துசமய தத்துவ நிலைக்களனைப் போற்றுவதையே, ஞானப்பள்ளு தவிர்ந்த பிற மூன்று பள்ளு நூல்களும் நோக்காகக் கொண்டுள்ளமையை, அந்நூல்களின் போக்கிலிருந்து உணர்ந்துகொள்ள முடிகின்றது.

## (இ) பள்ளு நூல்கள் காட்டும் சமூக நம்பிக்கைகள்

பள்ளு இலக்கியத்திற் புலப்படுத்தப்படும் பள்ளர் சமூகத்தின் வாழ்வியற் கூறுகளில், அவர்களது நம்பிக்கைகளும் சிறப்பிடம் பெறுகின்றன. நம்பிக்கைகள் மக்களின் வாழ்வியற் பின்னணியையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. நம்பிக் கையின்றி மானுடரால் வாழவே இயலாது. ஆயினும், பாமர மக்களிடத்துக் காணப்படும் நம்பிக்கைகள் பெரும்பாலும் அவர்களது மன அச்சுறுத்தல்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக ஏற்படுவதைக் காணலாம். தீமையைத் தவிர்த்து, நன்மையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற நோக்கினால், அதீத விடயங்களிலும் நம்பிக்கை கொள்பவராக அவர்கள் விளங்குவதைக் காணலாம். பள்ளர் சமூகத்தவரும் இதற்கு விதிவிலக்கானவர் அன்று.

நம்பிக்கைக்கும் (belief), மூட நம்பிக்கைக்கும் (superstition) இடையிலே வேறுபாடு உண்டு. நம்பிக்கை காரண காரியத் தொடர்புகளுக்கு உட்பட்டதாக இருக்கும். அத்தோடு, சான்றுகளின் வாயிலாக நிறுவப்படக்கூடியதாக விளங்கும். ஆனால், மூட நம்பிக்கை இவ்வாறன்றி, காரண காரியத் தொடர்புகளுக்கு உட்படாததாகவும், சான்றுகளின் வாயிலாக விளக்க இயலாததாகவும் இருக்கும்.[69] மேலும், காரணகாரியத் தொடர்புகளின்றி, பகுத்தறிவுக்குப் புறம்பான முறையில் ஒரு நிகழ்ச்சி நிகழும் என நம்புவதும் மூட நம்பிக்கையின் பாற்படும் என்பர்.[70]

நம்பிக்கைகள் இனத்துக்கு இனமும், சமூகத்துக்குச் சமூகமும், காலத்துக்குக் காலமும் வேறுபடுபவையாக உள்ளன. மக்களின் வாழ்வினை அடிப்படையாகக் கொண்டே இலக்கியங்களும் புனையப்பட்டிருப்பதால், அவற்றிலும் நம்பிக்கைகள் பற்றிய செய்திகள் இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.[71] பள்ளு இலக்கியத்திலும் பள்ளரின் நம்பிக்கைகள் விளக்கப்படுகின்றன. ஆயினும், அவர்களது நம்பிக்கைகள் முழுவதுமே இவ்விலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன எனக் கூறுவதற்கில்லை. இலக்கியம் மக்கள் வாழ்வியலின் ஒரு வெட்டுமுகத்தோற்றத்தையே அளிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. மக்களின் நம்பிக்கைகள் இலக்கியத்திற் பெறும் இடத்தினை க.காந்தியின் பின்வரும் கூற்று புலப்படுத்துகின்றது:

"நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்படுகின்றன. அவை வழக்கில் மிகுதியாயும் இலக்கியங்களில் குறைந்தும் காணப்படும். எனவே இலக்கியங்கள் சுட்டும் நம்பிக்கைகள் அச்சமுதாயத்தின் நம்பிக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையும் கூறும் என்று சொல்ல இயலாது. இலக்கியங்களில் இடம்பெறும் நம்பிக்கைகள் பெரும் பாலும் அன்றைய மக்களிடையே சமுதாயச் செல்வாக்குப் பெற்ற குறிப்பிடத்தக்க நம்பிக்கைகளாக அமையும். ஒரு சமுதாயத்தின் நம்பிக்கைகளைக் கொண்டு அச்சமுதாயத்தின் அறிவுத் திறனை அளவிட இயலும். சிந்தனைத் திறன் மிக்க சமுதாயத்தில் நம்பிக்கைகள் குறைவாகவும் சிந்தனைத் திறன் குறைந்த சமுதாயத்தில் மூட நம்பிக்கைகள் மிகுதியாகவும் காணப்படும். இதனை நமது நகர், கிராமப்புற மக்களின் வாழ்வியல் கொண்டு உணரலாம்."[72]

பள்ளர் சமூகத்தவர் பின்தங்கிய கிராமப்புறங்களிலேயே தமது வேளாண்மை உழைப்பினைச் செலுத்திவந்தவர்களாதலால், அவர்களிடையே காணப்படும் நம்பிக்கைகள் அதிகமானவையாகும். அவற்றில், பள்ளு இலக்கியத்துக்குப் பயன்படத்தக்க அளவுக்குப் பள்ளரின் நம்பிக்கைகளை நூலாசிரியர்கள் எடுத்-தாண்டுள்ளனர்.

பள்ளு நூல்களிற் பள்ளரின் தொழில், சமூகம் ஆகியன தொடர்பாகவும், குடும்பம் தொடர்பாகவும், தனிமனிதர் தொடர்பாகவும் நம்பிக்கைகள் இடம்பெறுவதைக் காணலாம்.

முதலிற் பள்ளர் சமூகத்தின் தொழில் தொடர்பான நம்பிக்கைகளை நோக்கலாம். வேளாண்மைத் தொழிலோடு சடங்குகளும் தொடர்பு கொண்டுள்ளன. சடங்குகள், அடிப்படையில் நம்பிக்கை என்ற மூல வேரினையே சார்ந்துள்ளன. தாம் எதிர்பார்க்கும் நன்மைகள் அவற்றின் வாயிலாகத் தமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையே இதற்கு அடிப்படைக் காரணமாகும்.

சடங்குகள் மந்திரத்தோடு தொடர்புடையவையாகவும், சமயத்தோடு தொடர்புடையவையாகவும் இருப்பதுண்டு. மழையைப் பொறுத்தவரையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தூண்டுமுகமாகப் பாவனை முறையிற் சில குறியீட்டுச் சடங்குகளை நடத்துவதுமுண்டு. மேலும், மழை குறிப்பிட்டதொரு தெய்வத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதாகவும் நம்பப் படுகின்றது.[73] அத்தெய்வம் மழையைப் பெய்விக்க வேண்டுமாயின், அதற்கு வழிபாடியற்றி அதனைச் சாந்தப்படுத்த வேண்டும் எனவும் நம்பப்பட்டது.[74] மேலும், சடங்குகளின் மூலமாகவே மழையினைப் பெய்விக்க இயலும் என்ற நம்பிக்கை பாமர மக்களிடையே பரவலாகக் காணப்பட்டது. ஒரு கிராமத்தில் வாழ்வோர் சுயநலமுடையோராகவும், பேராசையுடையோராகவும், கொடூரமானவராகவும் இருந்து, பாவங்கள் அதிகரிக்க நேரிடின், மழைக்குக் காரணமான தெய்வங்கள் அதனைப் பெய்யவிடாது தடுத்துவிடும் என்றும் நம்பப்பட்டது.[75] பள்ளு நூல்களிலும் மழை தொடர்பான வழிபாடுகளும்,[76] சடங்குகளும் கூறப்படுகின்றன.

புபு

முளைப்பாரி என்ற ஒருவகைச் சடங்கு, மழை, வளமை முதலானவற்றோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. இதற்கு முளைப்பாலி, முளைப்பாலிகை என வேறு பெயர்களும் உண்டு. இச்சடங்கு வேளாண்மையுடன் நேரடியான தொடர்பினையும், குழந்தைப்பேற்றுடன் மறைமுகமான தொடர்பினையும் கொண்டுள்ளது.[77] ஏனெனில், வேளாண்மைத் தொழில் செய்துவந்த பழங் குடியினர் பயிர் வளர்ச்சிக்கும், குழந்தைப் பேற்றுக்கும் இடையே தொடர்பு இருந்ததாகக் கருதிவந்துள்ளனர்.

மேலும், "ராவாண்டை" எனப்படும் மகளிரின் நோன்பின் போதும் முளைப்பாரி என்ற சடங்கு நிகழ்த்தப்படுவதுண்டு. ராவாண்டை நோன்பு என்பது, மாசி மாதம் அமாவாசை முடிந்த பின்பு, பிறை தெரியும் நாளிலிருந்து (மூன்றாம் பிறை), அல்லது ஐந்தாம் பிறை முதலாக நிலா நிறைவு (பூரணை) வரை ஏறத்தாழப் பத்து நாட்கள் பெண்களாற் கொண்டாடப்படும் ஒருவகைச் சடங்காகும். இல்லறம் சிறப்பதற்கும், பெண் தாய்மையுறுவதற்கும், மழை வளம் பெருகுவதற்கும், வளங்கள் பொலிவதற்கும் இதனை நிகழ்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளனர்.[78] இச்சடங்கின் ஒரு பகுதியாக முளைப்பாரி, அல்லது முளைப்பாலிகை எடுத்தல் என்ற சடங்கும் நிகழும். இதனைப்பற்றி இராம.பெரியகருப்பன் பின்வருமாறு தெரிவிப்பர்:

"முளைப்பாலிகை (முளைப்பாரி) எடுத்தல் என்பது நல்லமழை பொழிந்து விளைவு பெருக வேண்டும் என்பதைக் கருதி எடுப்பது. வீடுவாசல் சுத்தம் செய்து கழுவி விடுவர். உடைந்த முட்டிகளில் அல்லது கரகத்தில் நெல், பயறு வகைகள் முதலியவற்றைப் போட்டு அவை முளைவிட்டதும் இரவில் மங்கல மகளிர் ஊர்வலமாக அவற்றை எடுத்துச் சென்று நீர்நிலைகளில் விட்டுவருவர். அப்போது பாடும் பாட்டிற்கு முளைப்பாரிப் பாட்டு என்று பெயர். தைப்பிறைக்கு முளைப்பாலிகை எடுத்தல் வழக்கம் என்று கூறுகின்றனர்."[79]

பெண்கள் முளைப்பாலிகை எடுத்துச் செல்லும்போது, மதுக் குடங்களையும் சுமந்து கொண்டு மேளதாளத்துடன் ஊரின் வெவ்வேறு திசைகளினின்றும் புறப்பட்டுச் செல்வர். மதுவுடன், பொங்கற்பானை, பழவகைகள், பலகார வகைகள் ஆகியவற்றையும் எடுத்துச்சென்று ஊர்த் தெய்வத்தை வழிபடுவர். மேலும், கொப்பி கொட்டுதல் என்ற நிகழ்ச்சியையும் நிகழ்த்துவர். அவை தொடர்பான பாடல்களுக்கு மதுக்குடப் பாட்டு, கொப்பிப் பாட்டு என்ற வேறு பெயர்களும் உண்டு.[80] முளைப்பாரி தொடர்பான பாடலொன்றின் ஒரு பகுதி பின்வருமாறு:

"மாரியம்மன் திருவுலாவிலே
குனிந்து கொட்டடி ராக்காயி
ஏலேலோ முளைப்பாரியைத்
தூக்கியே செல்லடி ராக்காயி
அடி செல்லடி ராக்காயி ! ஏலேலோ ஏலேலோ ! !
கரகத்தைத் தூக்கியே
ஆடடி ராக்காயி ! ஏலேலோ ! ஏலேலோ ! !"[81]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முளைப்பாரி அம்மனுடன் தொடர்பான சடங்காக விளங்குகின்றது. எடுத்துக்காட்டாக, மதுரை மாவட்டத்தில் தேனூர் என்னுமிடத்திலுள்ள இரு மாரியம்மன் கோயில்களோடு தொடர்பான திருவிழாக்களிற் பலவயதுப் பெண்களும் முளைப்பாரி எடுத்துச் செல்வது வழக்கமாகும். இவ்வாறு, அதனைச் சுமந்து செல்லும் பெண்கள், இடையிடையே தாம் சுமந்து சென்ற முளைப்பாரிகளை வட்டமாகத் தரையில் இறக்கி வைத்துவிட்டு, அதனைச் சுற்றிக் கும்மியடிப்பர். திருவிழா முடிந்தபின்னர், அவர்கள் தாம் எடுத்துச் சென்ற முளைப்பாரியை ஆற்றில் மூழ்கவிட்டுவிட்டு, தாமும் நீராடி நோன்பினை நிறைவு செய்து கொள்வர். இத்தகைய சடங்கோடு தொடர்பான கும்மிப் பாடல்களில், கடவுள் வாழ்த்து, முளைப்பாரி இடுவதற்கான பயறு தேர்தல், புதுப்பானை எடுத்தல், அதிற் கால்நடைகளின் எரு இடுதல், எட்டு நாட்கள் வரையிலான முளையின் வளர்ச்சியைக் குறிப்பிடல், அவற்றை ஊர்வலமாக எடுத்து வந்து வையை யாற்றில் விடுதல், அம்மனின் சிறப்புக்கள் முதலானவை இடம்பெறும். முளைப்பாரி எடுப்போருக்கு அம்மனின் அருள் கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் காணப்படுகின்றது.[82]

பள்ளு இலக்கியத்தைப் பொறுத்தவரையில், கண்ணுடையம்மன் பள்ளில் விரிவாக இச்சடங்கு பற்றிக் கூறப்படுகின்றது. இச்சடங்கு தொடர்பான பாடல் "முளைப்பாட்டு" என இந்நூலிற் குறிப்பிடப்படுகின்றது. முளைப்பாட்டின் தொடக்கத்திற் காப்புச் செய்யுளும், அதனையடுத்துக் கண்ணுடையம்மனின் பெருமையும் இடம்பெற்றுள்ளன. இதனையடுத்து, அம்மனின் திருவிழா நடைமுறைகள் பற்றிக் கூறப்படுகின்றது. அதனையடுத்து, முளைகள் வளர்ச்சி பெறுவது பற்றிக் கூறப்படுகின்றது. அது பின்வருமாறு:

"நல்லதொரு செவ்வாய்க்கு நாலானாள் வெள்ளிதனில்
மெள்ளவந்து வாரியதை விரைகளெல்லாம் கோட்டைகட்டி
உற்றபெருந் திருக்குளத்தில் உள்ளபடி நனையவைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவெள்ளிக் கைந்தாநாள் வருமிரண்டாஞ் செவ்வாயில்
நனைத்தவிதை தனைச்சொரிந்து நாச்சியார் மண்டபத்தில்
கனத்த புங்கந் தழைமேலே கன்னியர்கள் தெளித்தனரே
உம்பருடன் தெளித்தமுளை உத்தமிகண் உள்ளவளை
நம்பினவர் கிளைபோலே நாளுக்குநாள் வளர்ந்ததுவே."[83]

முளை வளர்ந்த பின்னர், மூன்றாம் செவ்வாயில் முளையை வாரி, வேறொரு தளத்தில் விரிப்பர். பின்னர், செவ்வாய்க்கு நான்காம் நாளாகிய வெள்ளிக்–கிழமையிற் பெண்கள் சேர்ந்து முளைகளை வாரியெடுத்து, திருவிழா நடைபெறும் வாயிலுக்குக் கொண்டுவருவர். அங்கு மாவினை எடுத்து, பானையில் இளநீர் இட்டு, தேனையும் கலந்து, அப்பானையை அடுப்பில் வைத்து மது பொங்கிவரச் செய்வர். இருபத்திரண்டாம் நாளில், நான்காம் செவ்வாயில் பெண்கள் அனைவரும் நீராடி, பட்டு உடுத்து, அணிகலன் பூண்டு, திருவிழாவுக்கென அமைக்கப்பட்ட புதுவீட்டின் முன்பு சென்று, நடுவிலிருக்கும் ஒரு மதுக்குடத்தை நாச்சியார் குடம் எனக் கருதி வழிபடுவர். பின்னர், முதல் மதுவை எடுத்து, வேறு பல மதுக்குடங்களுடனும், மேளதாள வாத்தியங்களுடனும், பிற வகைக் கலைநிகழ்ச்சிகளுடனும் வீதிகளிற் செல்வர். அம்மன் சந்நிதியில் ஆடுகளைப் பலியிட்டும் வழிபாடியற்றுவர். கண்ணுடையம்மனின் மதுக்குடத்தை, அவள் முன்னர் வைத்துப் பெண்கள் போற்றுவர். இறுதியில் வாழ்த்துப் பாடிச் சடங்கினை முடிப்பர்.[84] இவ்வாறான செய்திகள் முளைப்பாட்டிற் காணப்படுகின்றன. அதனையடுத்து, பெண்கள் கும்மியடித்துப் பாடும் நிகழ்ச்சி நூலிற் கூறப்படுகின்றது.[85]

மழை பெய்து வேளாண்மை செழிக்கவேண்டும் என்ற நோக்குடனேயே அம்மனுக்கு இத்தகைய சடங்கு நிகழ்த்தப்படுகின்றது.[86] இதனைப் பள்ளரின் வழிபாட்டிலும் இணைத்துக் கண்ணுடையம்மன் பள்ளு குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துப் பள்ளு நூல் எதிலும் முளைப்பாரி தொடர்பான செய்திகள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முளைப்பாரி தொடர்பான சடங்குகள் சிறப்பாக, ஈழத்தின் மலையகப் பகுதிகளிலுள்ள அம்மன் ஆலயங்களில் இடம்பெறுவதுண்டு. ஆயினும், முளைகளின் வளர்ச்சி வளமையைக் குறிப்பது என்னும் நம்பிக்கை ஈழத்துத் தமிழரிடம் பொதுவாகக் காணப்படுகின்றது. சில நிகழ்ச்சிகளில் இத்தகைய நம்பிக்கையுணர்வைக் காணலாம்.[87]

## (ஈ) வேளாண்மையும் நம்பிக்கையுணர்வும்

வேளாண்மை தொடர்பான நிகழ்ச்சிகளின்போதும் நம்பிக்கையுணர்வினைப் புலப்படுத்தும் வழிபாட்டுச் சடங்குகள் நடைபெறுவதுண்டு. வேளாண்மை சிறப்புற்று, அதன் பயன் காலநிலைகள், பிராணிகள் முதலானவற்றாற் பாதிக்கப்படாமலும், மனிதர்களின் சதிகளினால் அழிவுறாமலும் கிடைக்கவேண்டும் என்ற நோக்கு, இத்தொழிலில் ஈடுபடுவோர்க்கு இருப்பதுண்டு. பள்ளர் சமூகத்தவரே இதிற் பெரும்பாலும் ஈடுபட்டு வந்துள்ளமையால், அவர்களது நம்பிக்கையுணர்வை வேளாண்மை தொடர்பான நிகழ்ச்சிகளின் ஆரம்பத்திற் காணலாம். பள்ளு நூல்களில் இதன் பிரதிபலிப்பினைக் காணமுடிகின்றது.

பள்ளன் நெல் விதைக்கு முன்னர், விதையுள்ள பெட்டியை எடுத்துத் தலையில் வைத்துத் தொட்டு, பின்னர் தெய்வத்தைப் போற்றி விதைக்கத் தொடங்குவன். இதனைத் திருமலைமுருகன் பள்ளு பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

"பெருந் தொழிற் குடும்பன் –உழுதிடுங்
கருந்தொளி கலக்கி–விதையிட்ட
பெட்டியைச் சிரத்தே–வைத்ததைத்
தொட்டுட னெடுத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தயில் வாழி – எனச்சொல்லிப்
பொருந்தும்நெல் விதைத்தான்."[88]

இதேபோன்று, நாற்று நடும்போதும் சில சடங்கு முறைகளைக் கையாள்வர். பள்ளன் தெய்வத்தைத் துதித்து, நாற்றையெடுத்துத் தனது நெற்றியில் வைத்து, நான்கு திசைகளையும் நோக்கி வணங்கிவிட்டு அதனை நடுவன். நாற்றுநடுகையின்போது இடம்பெறும் பள்ளரின் நம்பிக்கையுணர்வுகளை முக்கூடற்பள்ளும், திருமலைமுருகன் பள்ளும் சிறப்புறப் புலப்படுத்துகின்றன.

"வந்தித் தழகர் பதத்தைத் துதித்து
வைத்த நாற்றை எடுத்து நெற்றியில்
வைத்து நாலு திசையும் நோக்கி
வாழ்த்திக் கும்பிட்டே" [89]

என முக்கூடற் பள்ளிலும்,

"பறித்த நாற்றை நாலு திசையுங்
குறித்து நோக்கிக் கும்பிட்டே"[90]

எனத் திருமலைமுருகன் பள்ளிலும் இதுபற்றிக் குறிப்பிடப்படுகின்றன. இத்தகைய வேளைகளில் குரவையொலி எழுப்பி மகிழ்வதும் வழக்கமாக இருந்துள்ளது.[91]

அறுவடை நிகழ்ச்சியின்போது, முதலில் நாட்கதிர் அறுத்துத் தெய்வத்தின் முன்னர் வைத்து வணங்குவர். பின்னரே முறையாக அறுவடை செய்வதுண்டு. இதுபற்றித் திருமலைமுருகன் பள்ளு விரிவாகப் பின்வருமாறு விளக்குகின்றது:

"செந்நெல் விளைந்த செய்தி பண்ணையான்
முன்ன முரைத் திட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலைப் பள்ளன் நாட்கதிர் கொண்டு
சிரத்துச் சுமந்து போயினான்
அன்ன மென்னடை வள்ளி நாயகன்
திரு மலைவாழ் முத்
தையன் சன்னிதி முன்னம் வைத்துநின்
றனைவருங் கும்பிட்டே
இன்னம் பலம்பெற வயலில் மீண்டுபோய்க்
கூனி ரும்பு கை
எடுத்துக் கதிர்கொய் தரிகள் பரப்பித்
தொடுத்துச் சுமை யாய்
மன்னுங் களத்திற் கொணர்ந்து போர்வைத்தே
மற்றை நாள் அந்த
வளமைப் போரைச் சரித்துப் பகட்டின்
பிணையல் பிணைக்கின்றார்."[92]

அறுவடையின் பின்னர், விநாயகருக்கு என, முதலில் உள்ளங்கை அளவில் நெல்லையளந்து அடையாளமிட்டு வைப்பர். இவ்வாறு வைக்கப்படும் நெல் "பிள்ளையாரடி" எனப்படும்.

இவ்வாறு, வேளாண்மை தொடர்பான செயல்களைச் செய்யும்போது, பள்ளர் வழிபாட்டுச் சடங்குகளையும் நம்பிக்கை தொடர்பாக நிகழ்த்துவர் என்பதனைப் பின்வரும் கூற்றும் உறுதிப்படுத்துகின்றது:

"வேளாண்மைச் சமுதாயத்தில் உழவுத்தொழில் தொடங்குமுன், உழவு விழா நடைபெறுகின்றது. கோயமுத்தூர் மாவட்டத்தில் பேரூருக்கு அருகில் உள்ள பள்ளர் சாதி.... மக்கள் உழவுப் பணிகள் தொடங்கும் முன் உழவு, நடவு, களையெடுப்பு, அறுவடையெனப் பத்து நாட்களுக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கவிழா எடுக்கின்றனர். விழாவில் அவ்வச் செயல்கள் நடிக்கப்படுகின்றன என்பதே சாலச்சிறந்த கூற்றாகக் கொள்ளலாம்."[93]

இவற்றின் வாயிலாக, வேளாண்மை தொடர்பான நம்பிக்கையுணர்வு கொண்டவர்களாக அம்மக்கள் விளங்குவதை அறியமுடிகிறது.

பள்ளின் வேளாண்மைத் தொழிலோடு தொடர்புடையவையாகக் காணப்படும் நம்பிக்கைகளில், நல்வேளை அறிந்து வேளாண்மைச் செயல்களைத் தொடங்கலும், நிமித்தம் பார்த்து எதிர்கால நிகழ்ச்சிகளை அமைத்துக் கொள்ளலும் குறிப்பிடத்தக்கவையாகும்.

வேளாண்மை வேலைகள் தொடங்குவதற்கு முன்னதாக நல்வேளை (சுபமுகூர்த்தம்) அறியப்படும். இதனை ஒரு சோதிடர் வாயிலாக அறிந்து கொள்வர். அவ்வாறு அவர் கூறும் நல்வேளையை அடிப்படையாகக் கொண்டு நாளேரிட ஏற்பாடுகள் செய்வர். இதனைப் பற்றிப் பள்ளு நூல்கள் குறிப்பிடுகின்றன.

"சத்தமி புதன்சோதி தைதுலக் கரணம்
தவறாத சுபயோகந் தகுபஞ்சாங்கம்
மெத்தநன் றெனப்பார்த்து மேலான வேதியர்கள்
மிக்க துலாமுகிழ்த்தம் விதித்தா ரின்று"[94]

எனவும்,

"திங்கள் வார மின்றுமூல நட்சத்ரம்
செய்ய பஞ்சமிப் பக்கஞ்
சிங்கக் கரணஞ்சுப யோகமின் றைக்கென்னச்
செப்பி னார்கள் குடும்பா"[95]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், "மேவும் வெள்ளி நற்பஞ்சமி மூலம் மிதுனலக்கின வேளை நல்வேளை"[96] எனவும் சோதிடர் விதித்த நல்வேளைகள் பற்றிக் கூறப்படுவதைக் காணலாம்.

செண்பகராமன் பள்ளு கிறித்துவ சமயச் சார்பான நூலாக இருந்தபோதிலும், மற்றைய இந்துசமயச் சார்பான பள்ளு நூல்களில் இடம்பெறுவது போன்று, இதிலும் நல்வேளை அறிந்து வேளாண்மை வேலைகள் தொடங்குவதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு, நல்வேளை அறிந்து கூறும் சோதிடரும் பிற பள்ளு நூல்களைப் போன்று வேதியராகவே குறிப்பிடப்படுகின்றார்.[97]

ஈழத்துத் தமிழ் மக்களிடத்தும் நல்வேளை நோக்கிச் செயல்களை நிகழ்த்தும் வழக்கம் இருந்துள்ளது. இதனை ஈழத்துப் பள்ளு நூல்களும் பிரதிபலிக்கின்றன. நல்வேளையைப் பற்றிப் பெரியோர் வாயிலாக அறிந்து கொண்டு, அதற்கேற்ப, வேளாண்மை வேலைகளைத் தொடங்குமாறு பள்ளர் தலைவனுக்குப் பண்ணைக்காரன் கட்டளையிடுவதைப் பறாளை விநாயகர் பள்ளிலுள்ள பின்வரும் பாடல் காட்டுகின்றது:

"செம்பருதி வாரமதிற் பூரணை யென்றார்
   தேட்கடை யென்றார் சித்த யோகமு மென்றார்
கும்ப முகூர்த்த மென்றார் செம்பொ னோரை யென்றார்
   குஞ்சரக் கரணமென்றார் கூடிப் பெரியோர்
நம்பு கலப்பைச் சக்ரம் நன்றாய்ப் பொருந்து மென்றார்
   நாயக ரெமைப்புரக்கு நாதனார் நாட்டில்
வம்பவிழ்பூம் பண்ணையி லேர்பூட்டி யுழவே
   நன்மனத் துடனேபோதி யீழமண் டலத்துப்பள்ளா."[98]

இதேபோன்று, கதிரைமலைப்பள்ளு, தண்டிகைக்கனகராயன் பள்ளு ஆகியவற்றிலும் நல்வேளைகள் பற்றிக் கூறப்படுவதைக் காணலாம்.[99]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிடர் கூறிய நல்வேளை தவறாகக் கணிக்கப்பட்டிருந்தால், அதனாலே தீமையே விளையும் எனக் கருதினர். ஆகவே, மிகச் சரியாக நல்வேளை கணிக்கப்படவேண்டும் என்பது பள்ளர் சமூகத்தவர் உட்பட அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பாகும். பள்ளு நூல்களைப் பொறுத்தவரையில், நல்வேளையில் நாளேரிட்ட பின்பு, பள்ளன் உழுவதற்குச் செல்லும்போது, மாடு முட்டியதாலோ, அல்லது கொழு காலிலே தைத்ததாலோ மயங்கி வீழ்ந்துவிடுவதுண்டு. இந்நிலையிற் சிலவேளை, சோதிடரால் நல்வேளை தவறாகக் கணிக்கப்பட்டிருக்கலாம் எனப் பள்ளியர் கருதுவதுண்டு. எடுத்துக்காட்டாக, "செந்தமிழ்க் கணிதர் கூடியே வழுவாமற் செப்பு முகூர்த்தம் பிழைத்ததோ"[100] எனக் கூறுவதனை இங்கு குறிப்பிடலாம். இதன்மூலம், நல்வேளை தொடர்பாகப் பள்ளர் சமூகத்தினர் கொண்டிருந்த மனப்பாங்கு தெளிவாகின்றது.

"நிமித்தம் என்பது வாழ்வில் பின் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக முன்னுணர்த்துவதாகும்."[101] நிமித்தம் நன்மை, தீமை என்ற அதன் விளைவுகளைக் கொண்டு, நன்னிமித்தம், தீநிமித்தம் எனப் பகுக்கப்படும்.

மக்கள் தமது அனுபவத்தைக் கொண்டு, சிலவற்றை நன்னிமித்தங்களாகவும், வேறு சிலவற்றைத் தீநிமித்தங்களாகவும் கொண்டுள்ளனர். திருமணமாகிய பெண், கன்னிப்பெண், பொதுமகள், இரு அந்தணர், இசை மீட்டல், இசைக் கருவிகளை ஒருவர் தாங்கிச் செல்லல். பணம், பழங்கள், மலர்கள், ஒளி, அல்லது பிரகாசித்து எரியும் தீ, குடை, சமைத்த உணவு, பால், தயிர், பசு, மான், பிணம், இரு மீன்கள், வேதமோதல், எருது, ஆட்டிறைச்சி, இரத்தினக்கற்கள், தோற்கருவி, அல்லது கொம்பு வாத்தியத்தின் ஒலி, சந்தனக்கட்டை, சோறு, யானை, குதிரை, நீர் நிறைந்த குடம், நீர்நிலையினின்றும் நீர்க்குடம் தாங்கிவரும் திருமணமான பெண், கட்குடம், கருங்குரங்கு, நாய், கருடன், கிளி, தேன், இனிய சொற்களைச் செவிமடுத்தல் முதலானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னிமித்தங்களாகக் கருதப்படுகின்றன. விதவை, மின்னல், விறகு, புகைத்து எரியும் தீ, முயல், வலமிருந்து இடமாகக் காகம் பறத்தல், பாம்பு, புதிய குடம், குருடன், மூடவன், நோயாளி, உப்பு, புலி, எண்ணெய்க்குடம், தோல், நாய் குரைத்தல், குச்சிகளின் கட்டு, மோர், வெறும் பாத்திரம், சண்டை, தலைவிரிகோலமான மனிதன்(பெண்), எண்ணெய் வியாபாரி, குட்டரோகி, ஆண்டி முதலியவை தீநிமித்தங்களாகக் கொள்ளப்படுகின்றன.[102]

பள்ளு நூல்கள் சிலவற்றில், பள்ளர் நாளேரிடச் செல்லும்போது நிகழும் நிமித்தங்கள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றன. கருடனும், காடையும் இடம் வந்ததாகவும், இரட்டைப் பிராமணரும், பாற்குடமும் நிரையாக வந்தமையும் பற்றியும் பள்ளன் குறிப்பிடுவதாக கண்ணுடையம்மன் பள்ளு கூறுகின்றது.[103] திருமலைமுருகன் பள்ளிற் பின்வருமாறு பள்ளனுக்கு நேர்ந்த நிமித்தங்கள் பற்றிக் கூறப்படுகின்றன:

"ஆக்கமாய்க் குடும்பன் விதையுங் கொண்டுவயல்
அணுகச் செல்லும் போதில்
ஆவின் பாற்குடமும் நிறைநீர்க் குடமுங்கொண்டு
அரிவையர் எதிர்தோன்றக்
காக்கை நாரை வலஞ்செய்யவே உபய
கருடன் வட்ட மிடவே
கண்ட குடும்பன் நாளேரிட்டு நாள்வித்துங்
களிப்புடன் பிடித்து வந்தான்.

"மீளும் போதினிற் காக்கை இடம்புகுத
வேத னொருவன் வரவே
வீரன் திருமலையில் வேலன் கருணையிது
வேறிலை யெனம கிழ்ந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளும் பண்ணையீர் சுபசோப னமுங்கொண்
டடிமை இங்கு வந்தேன்
ஆருங் காணவயல் நாற்றுப் பாவுதற்கு
வாரும் என் நயினாரே.[104]

செங்கோட்டுப் பள்ளில், "கருடன் இடத்தே போக நந்தியிட வனும் நீர்வாத் தாக்கஞ் செய்ய நல்ல சகுனங்களென் றன்னோர் மகிழ்ந்தார்"[105] என்று கூறப்படுவதனைக் காணலாம்.

இவ்வாறு, தமக்கு நேர்ந்த நன்னிமித்தங்களை அடிப்படையாகக் கொண்டு, பள்ளர் தமது தொழில் தொடர்பான செயல்களில் ஆர்வம் காட்டி உழைக்கத் தொடங்கியமையைப் பள்ளு நூல்கள் காட்டுகின்றன. நல்வேளை அறிதல், நிமித்தம் பார்த்தல் ஆகியவை அவர்களுக்குத் தொழிலிலும், வாழ்விலும் பற்றுறுதியை ஏற்படுத்திச் செயலாற்றலுக்கும், மனமகிழ்வுக்கும் வித்திட்டன.

இத்தகைய நிமித்தம் பார்க்கும் வழக்கம் பழங்குடி மக்களிடத்திலிருந்து வந்துள்ளது. எதிர்கால நிகழ்ச்சிகளை நிமித்தங்கள் அறிவுறுத்தும் என அவர்கள் நம்பினர். சமுதாயம் நிலையற்ற அமைப்புடையதாக இருந்தமையும், மக்களின் தனிப்பட்ட வாழ்வினை இயற்கைச் சக்திகளோடு போராடி நிலைநிறுத்த வேண்டியிருந்தமையும், எதிர்காலம் பற்றிய அச்சவுணர்வும், குறைந்த கல்வி நிலை, அல்லது கல்வியறிவின்மை முதலானவை, நிமித்தங்கள் மக்களின் வாழ்வில் நீண்டகாலமாகத் தொடர்ந்து நிலைபெற்றுவந்தமைக்குக் காரணங்களாகும். பழந்தமிழ் இலக்கியங்களிலும் நிமித்தங்கள் பற்றிய குறிப்புக்கள் இடம்பெறுவதனைக் காணலாம். சங்க இலக்கியங்களில் இவற்றைப் புள் எனக் குறிப்பிட்டனர். ஏனெனில், தொடக்கத்திற் பறவைகளை அடிப்படையாகக் கொண்டே நிமித்தம் பார்க்கும் வழக்கம் இருந்துள்ளது. காலப்போக்கிற் பல்வேறு நிமித்தங்களையும் புள் என்னும் பெயராலேயே குறிப்பிட்டனர்.[106] சமுதாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபேறு உடையதாகவும், மனிதனின் தனிப்பட்ட வாழ்வு பொருளாதார பலம் வாய்ந்ததாகவும், மக்களிடத்துக் கல்வியறிவு மிகுந்துவரும் நிலை ஏற்படுவதும் நிமித்தங்கள் பற்றிய உணர்வுகள் குறைவதற்குக் தூண்டுகோலாக அமைகின்றன.

## (உ) குடும்பம் தொடர்பான நம்பிக்கைகள்

குடும்பம் தொடர்பான பள்ளர் சமூகத்தின் நம்பிக்கைகள் பற்றி நோக்குவதும் இன்றியமையாததாகும். இவற்றுட் குறிப்பிடத்தக்கதாக விளங்குவது, வசிய மருந்து இடுவது தொடர்பான நம்பிக்கையாகும். பள்ளு நூல்களில் வசியமருந்து இடுவது தொடர்பாகப் பல இடங்களிற் கூறப்படுகின்றது. இளையபள்ளி தனது கணவனுக்கு வசியமருந்து இட்டு, அவனை மயக்கி விட்டதாக மூத்தபள்ளி கருதுவதனை இந்நூல்களிலே தெளிவுறக் காணலாம்.[107] கணவனுக்கும், மனைவிக்கும் இடையிலான குடும்ப உறவுகளில் இன்னொரு பெண்ணும் பங்கேற்க நேரும்போது, புதியவள் தன் கணவனுக்கு வசியமருந்திட்டு மயக்கிக் குடும்பப் பிரச்சினைக்குக் காரணமாகி விட்டாள் எனப் பழையவள் அவளை அவமானப்படுத்த முயற்சிப்பதுண்டு. பள்ளு இலக்கியத்திலும் இதே நிலையினைக் காணமுடிகின்றது. வசியமருந்திட்டுப் பிறரைக் கவர இயலும் என்ற நம்பிக்கை பாமர மக்களிடத்துக் காணப்படுகின்றது.

இளையபள்ளி பற்றி மூத்தபள்ளி குறைகூறுமிடத்து. அவள் தன் கணவனுக்கு மருந்து இட்ட முறையை விளக்குவதுண்டு. பள்ளன் கள் அருந்தும் பழக்கமுள்ளவன் ஆதலால், இளையபள்ளி மருந்திடும்போது, அதனைக் கள்ளிலிட்டே அவனுக்குக் கொடுத்தாள் எனச் சிலவேளை தெரிவிப் பதைக் காணலாம். சான்றாக, "உனக்கும் பிரிவினா லூட்டிய கள்ளில் இட்ட மருந்தா லுனக்கு வந்த பொல்லாப்போ"[108] எனக் கதிரைமலைப் பள்ளிற் குறிப்பிடப்படுவதை நோக்கலாம். மேலும், இளையபள்ளி பள்ளனுக்கு விருந்தாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த உணவில், அவன் அறியாதவாறு மருந்திட்டாள் எனக் கூறுவதும் முண்டு.[109]

மேலும், பள்ளு நூல்கள் சிலவற்றில் வசிய மருந்து செய்யும் முறைகள் பற்றி மூத்தபள்ளியும், இளையபள்ளியும் கூறுவதைக் காணலாம். எடுத்துக் காட்டாக, கதிரைமலைப் பள்ளினை இங்கு நோக்கலாம். இப்பள்ளில், இரு பள்ளியரும் ஒருவரையொருவர் குறைகூறுமிடத்து, ஒருத்தி மருந்து செய்யும் முறைபற்றி மற்றவள் விபரமாகத் தெரிவிப்பதைக் காணலாம். இளையபள்ளி மருந்து செய்யும் முறைபற்றி மூத்தபள்ளி குறிப்பிடுகையில், யானையின் மதம், வாய்க்கரிசி, தேள், வெள்ளைக் குன்றிமணிவேர், நார், இலை, கன்னித்தென்னை முதன்முதல் ஈன்ற தேங்காய், கள்ளிப்பால், வேர், கருங்காக்கணம், கொவ்வை ஆகியவற்றின் விரை, காக்கை நாக்கு முதலானவற்றைச் சேர்த்து மருந்து செய்வதாகக் கூறுகின்றாள்.[110] மேலும், கழுகின் கொழுப்பு, கையின் அழுக்கு, உடல் வியர்வை, நாகமரத்தின் பூ, தொட்டாற் சிணுங்கியின் கொழுந்து, அழுங்கின் தசை, வேட்டை வாளிக் குளவியின் கூடு ஆகியவற்றைப் பாதிரிக்கொடிச் சாற்றில் அரைத்து ஊட்டும் முறை பற்றியும் குறிப்பிடப்படுகின்றது.[111] இளையபள்ளியும் மருந்து செய்யும் முறைபற்றித் தனக்குத் தெரிந்த விபரங்களை, மூத்தபள்ளியைக் குற்றம் சாட்டும் வகையிலே தெரிவிக்கின்றாள். தேரையின் கண், தேவாங்கின் ஈரல், நச்சுப்பல்லியின் வால், நெல்லிக் கொழுந்து, சாரையின் கொழுப்பு ஆகியவற்றை உருக்கிக் கூட்டியுலர்த்தி மண்டையோட்டில் மை செய்யும் முறைபற்றிக் குறிப்பிடுகின்றாள்.[112] அத்துடன், புனுகுப் பூனையின் காது அழுக்கு, புலிப்பல், தேவாங்கின் ஈரல், பாம்பின் மூளை, பன்றி முள், உள்ளி ஆகியவற்றைச் சேர்த்துக் கையினால் அரைத்து உருண்டை செய்து, கள்ளும் கருவாடும் சேர்த்து இடுவதைப் பற்றியும் குறிப்பிடுவள்.[113] குருகூர்ப் பள்ளிலும் சற்று விரிவாக வசிய மருந்து செய்வது தொடர்பான செய்திகள் மூத்தபள்ளியின் வாயிலாகக் கூறப்படுகின்றன.[114]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியறிவற்ற கிராமிய மக்களிடையிலேயே இவ்வாறு வசிய மருந்து தொடர்பான நம்பிக்கை காணப்படுகின்றது. வசிய மருந்து இடுவதன் மூலமாகத் தமக்கு வேண்டியவரைத் தம்வசம் கவர்ந்து கொள்ளலாம் என்ற நம்பிக்கை அவர்களிடத்து உண்டு. பள்ளர் சமூகத்திலும் இத்தகைய நம்பிக்கை இருந்தமையைப் பள்ளு நூல்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு, மருந்திடப் பட்டவர், யாராலே தமக்கு மருந்திடப்பட்டதோ, அவர் கூறியவாறே நடந்து கொள்வர் என்ற நம்பிக்கையும் மக்களிடத்துக் காணப்பட்டது. பள்ளு நூல்களிலும், இளையபள்ளி தான் விரும்பியவாறு பள்ளனை ஆட்டி வைப்பதற்கு, அவள் இட்ட மருந்தே காரணம் என்பதை மூத்தபள்ளி தெரிவிப்பதாகக் கூறப்படுவதைக் காணலாம். "சொந்தமாகக் கொண்டவனைச் சொக்குப் பொடியால்—நீயுஞ் சொன்னபடி ஆட்டி வைத்தாய்"[115] என மூத்தபள்ளி கூறுவதை இவ்விடத்துக் குறிப்பிடலாம்.

இவ்வாறு பள்ளு நூல்களைப் பொறுத்தவரையில், வசியமருந்து இடுவது பற்றிய நம்பிக்கை, பள்ளனின் பிரச்சினைகளோடு தொடர்புற்றதாக விளங்குவதைக் காணலாம்.

## (ஊ) தனிமனிதர் தொடர்பான நம்பிக்கைகள்

பள்ளு நூல்களிலே தனிமனிதர் தொடர்பான நம்பிக்கைகளும் காணப்படுகின்றன. கண்ணூறு, கனவு காணுதல், தும்மல், பல்லி சொல்லல், தீவினை, பேய் பற்றிய நம்பிக்கைகள் ஆகியவை இவ்வாறு தனிமனிதர் தொடர்பான நம்பிக்கைகளாக இடம்பெறுகின்றன. பள்ளனை அடிப்படையாகக் கொண்டே இத்தகைய நம்பிக்கைகள் இரு பள்ளியராலும் புலப்படுத்தப் படுகின்றன.

ஒருவரின் அழகான தோற்றம், சிறப்பான செயல்கள், அதனாற் கிடைக்கும் பாராட்டுக்கள் முதலானவை பிறரைப் பொறாமைக்குள்ளாக்கும் என்ற நம்பிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடத்துக் காணப்படுகின்றது. இத்தகைய பொறாமையுணர்வு குறிப்பிட்ட மனிதர்களின் கண்வழியாகக் குறிப்பிட்ட ஒருவரைப் பாதிப்புக்குள்ளாக்கும் என மக்கள் நம்பிவந்துள்ளனர். இத்தகைய பாதிப்பினைக் கண்ணூறு எனக் குறிப்பிடுவர். சங்ககாலத்திலும் கண்ணூறு தொடர்பான நம்பிக்கைகளும், அதற்கான பரிகாரங்களும் காணப்பட்டன.[116] இது பற்றிய நம்பிக்கை தமிழகத்திலும், ஈழத்திலும் மக்களிடத்து உண்டு. நகரப்புறத்தில் வாழ்வோரை விடவும், கிராமப்புறங்களில் வாழ்வோரிடம் இத்தகைய நம்பிக்கை அதிகமாகவுள்ளது. அதற்கான பரிகார முறைகளையும் அவர்கள் கையாள்வதுண்டு.[117] பள்ளு நூல்களிலும் இத்தகைய நம்பிக்கையுணர்வினைக் காணமுடிகிறது. பள்ளன் மயங்கி வீழ்ந்திருக்கும்போதே கண்ணூறு பற்றிய தமது கருத்தினைப் பள்ளனின் மனைவியர் தெரிவிப்பதனைக் காணலாம். பிற பள்ளியர் தம் கணவனைக் கண்டு விரும்பியதனாலேயே, அவனுக்கு அத்தகைய கதி நேர்ந்தது என அவர்கள் கருதுவர். "சென்றபோது சேரிப்பள்ளிகள் உன்னழகைச் சேரவே கண்ணூறு கொண்டதோ"[118] எனவும், "கோலமுறு முந்தனழகைப் பள்ளியர்கள் கூடியே கண்ணேறு கொண்டனரோ"[119] என்றும் மூத்தபள்ளி குறிப்பிடுவதும், "உண்டான வினையிது கண்ணூறோ"[120] என இளையபள்ளி கூறுவதும் இதனை உணர்த்துகின்றது. மேலும், நல்ல செயலுக்குப் புறப்படும்போது விரும்பத்தகாதவரின் முகத்தில் விழிப்பதனாற் கெடுதி ஏற்படும் என்ற நம்பிக்கையும் அவர்களிடத்துக் காணப்பட்டது.[121]

கனவுகள் பற்றிய பள்ளரின் நம்பிக்கைகளும் பள்ளு நூல்களில் இடம் பெற்றுள்ளன. நற்கனவுகள் நன்மையையும், தீய கனவுகள் தீமையையும் கொணரும் என்பது உலகம் முழுவதிலும் காணப்படும் பொதுவான நம்பிக்கையாகும். உலகின் பல்வேறு இலக்கியங்களிலும் கனவுகள் பற்றிய செய்திகள் இடம்பெறுவதனைக் காணலாம்.[122] பள்ளு இலக்கியமும் இதற்கு விதிவிலக்கன்று. திருமலைமுருகன் பள்ளில், தண்டனை அனுபவிக்கும் போது இளையபள்ளி தெரிவிக்கும் கருத்து, கனவு பற்றிய பள்ளரின் நம்பிக்கையைத் தெரிவிக்கின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேற்றிரவு கொடிய கனாத்
தோற்றியது பலித்தது பார்
குடும்பா-கறுப்பனுக்கு
நேர்ந்து வைத்த உருமாலை
நீயெடுத்தாய்"[123]

